தமிழ்க்கலை

தமிழியல் காலாண்டு ஆய்விதழ்

தமிழ் 5 கலை 3,4. செப்தம்பர், திசம்பர் 1987.

பொருளடக்கம்

இலங்கையில் தமிழ்மொழி - எம். ஏ. நுஃமான் 1

மலேசியாவில் தமிழ் - கி. கருணாகரன் 15

மேற்கு மலேசியாவில் தமிழ் - ரெ. இராஜு 23

சிங்கப்பூரில் தமிழ் – தி. முருகரத்தனம் 30

பர்மாவில் தமிழ் - எஸ். நாகராஜன் 39

ஆப்பிரிக்காவில் தமிழ் - க. ப. அறவாணன் 58

தென்னாப்பிரிக்காவில் தமிழ் - ஆ. கார்த்திகேயன் 67

பிரிட்டனில் தமிழ் – பொற்கோ 76

பிரித்தானிய நாட்டில் தமிழ் - அரங்க முருகையன் 84

மொரீசியசில் தமிழ் - சு. இராசாராம் 92

இந்தோனேசியாவில் தமிழரும் தமிழ்ப் பண்பாடும் –ஈ. ச. விசுவநாதன் 115

சேசெல் தமிழர்கள் - ஈ. ச. விசுவநாதன் 128

சீசெல்சு நாட்டில் தமிழர் - க. சச்சிதானந்தன் 143

பீஜித்தீவில் தமிழ் - எஸ். நாகராஜன் 150

கயானாவில் தமிழர்கள் - ஈ. ச. விசுவநாதன் 160

அறிமுக ஆய்வு

ராபர்ட் பென் வாரன், அமெரிக்க அரசவைக் கவிஞர் -த. கிருஷ்ணராஜ் 185

மதிப்புரை

சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் (முதலிரு தொகுதிகள்) –இலா. குளோறியா சுந்தரமதி. 192

சிறப்பாசிரியர் குழு:

திரு.கா.மீனாட்சிசுந்தரம் (கோவை) திரு.கி.வா.ஜகந்நாதன் (சென்னை).
திரு.க.வெள்ளைவாரணன் (சிதம்பரம்), திரு.க.ஆறுமுகம் (புதுதில்லி)
திரு.என்.பாலுசாமி (தஞ்சாவூர்), கவிஞர்.சுரதா (சென்னை)

ஆசிரியர் குழு:

து.சீனிச்சாமி
சு.இராசாராம்
மு.இராமசாமி

செயற்படுத்து ஆசிரியர்:

இயக்குநர், பதிப்புத்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

தமிழ்க்கலை என்னும் இக்காலாண்டு ஆய்விதழில் மொழியியல், கலையியல், இலக்கியவியல், சமூகவியல், உளவியல், மானிடவியல், மருத்துவ வியல், தொழில்நுட்பவியல் மற்றும் பல்வேறு அறிவியல் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெறும்.

ஆய்வாளர்களிடமிருந்து கட்டுரைகள், மதிப்புரைகள் மற்றும் குறிப்புகள் இவ்விதழில் வெளியிடுவதற்கு வரவேற்கப்படுகின்றன. இடம் பெறும் கட்டுரையின் 50 மறுபதிப்புப் படிகள் தமிழ்க் கலை இதழ் ஒன்றுடன் அனுப்பி வைக்கப்படும்.

மதிப்புரைக்கு நூல் அனுப்ப விரும்புவோர் இரண்டு படிகளை அனுப்புதல் வேண்டும். மதிப்புரையின் மறுபதிப்புப் படிகளின் 25 படிகள் மதிப்புரையாளருக்கும் 25 படிகள் நூலாசிரியருக்கும் அனுப்பி வைக்கப்படும்.

கட்டுரைகள், மதிப்புரைகள் மற்றும் குறிப்புகள் இவ்விதழில் வெளி யிடுவதற்கு இரு வரி இடைவெளியிட்டுத் தட்டச்சுச் செய்யப் பெற்று இரண்டு படிகளை, ஆசிரியர் குழு, தமிழ்க்கலை, பதிபபுத் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்—613 001 என்ற முகவரிக்கு அனுப்பப் பெறுதல் வேண்டும்.

தமிழ்க்கலை

தமிழியல் காலாண்டு ஆய்விதழ்

தமிழ் 5, கலை 3, 4 செப்தம்பர், திசம்பர் 1987

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்—613 001
தமிழ்நாடு—இந்தியா

எழுதியோர் :

அரங்க முருகையன், 3, ஹேஸ்டிங்க்ஸ் சாலை, ஏஸிங், இலண்டன்.

அறவாணன், க. ப., பேராசிரியர், தமிழியல் துறை,
புதுவை மையப் பல்கலைக்கழகம், புதுச்சேரி.

இராசாராம், சு., இணைப்பேராசிரியர், அயல் நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

இராஜு, ரெ., இணைப்பேராசிரியர், இந்தியத்துறை,
மலேயாப் பல்கலைக்கழகம், கோலாலம்பூர்.

கருணாகரன், கி., பேராசிரியர், மொழியியல் துறை,
பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

கார்த்திகேயன், ஆ., விரிவுரையாளர், அயல் நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

குளோறியா சுந்தரமதி – இலா இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.

சச்சிதானந்தன், க., மறவன்புலவு, சாவகச்சேரி, ஈழம்.

நாகராஜன், எஸ்., பேராசிரியர், அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

நுஃமான், எம். ஏ., ஆய்வாளர், மொழியியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

பொற்கோ, பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை.

முருகரத்தனம், தி., பேராசிரியர், திருக்குறள் ஆய்வகம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

விசுவநாதன், ஈ.ச. இணைப்பேராசிரியர், வரலாற்றியல் துறை,
கயானா பல்கலைக்கழகம், கயானா, தென் அமெரிக்கா.

இலங்கையில் தமிழ் மொழி

எம். ஏ. நுஃமான்

இலங்கையின் மொழிகள் 1981 - ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின் படி இலங்கையின் மொத்தச் சனத்தொகை 14.85 மில்லியன் ஆகும். இதில் 74 சத வீதத்தினர் சிங்களத்தையும் 25.6 சத வீதத்தினர் தமிழையும் தாய்மொழி யாகப் பேசுகின்றனர் ஆங்கில மொழி, கற்றறிந்த உயர்குழாத்தினரின் பொதுத் தொடர்பு மொழியாக இருப்பதோடு, பள்ளிகளில் இரண்டாம் மொழியாகவும் கற்பிக்கப்படுகின்றது. இலங்கையில் ஆங்கிலம் மட்டும் அறிந்தோர் தொகை மிகவும் குறைவாகும். 1953-ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின்படி சிங்களம் அல்லது தமிழோடு ஆங்கிலம் பேசுவோர் தொகை 9.4% ஆக இருந்தது. இவ்வகையில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்றுமே இலங்கையில் வழங்கும் பிரதான மொழிகளாகும்.

இலங்கையின் மொத்தச் சனத் தொகையில் ஒரு சதவீதத்துக்கும் குறைந்தவர்களான சிறுபான்மை மொழிச் சமூகத்தினர் பலர் இங்கு உள்ளனர். இவர்களுள் மலாயரும் பறங்கியரும் கணிசமான தொகையினராவர். இவர்களின் எண்ணிக்கை சுமார் ஓர் இலட்சமாகும். மலாயர் மலாய் மொழியும் பறங்கியர் போத்துகீஸ் கிறியோலும் பேசுகின்றனர். இவர்களைத் தவிர வட இந்திய வம்சாவழியினரான போறா, மேமன் இனங்களைச் சேர்ந்தவர்கள் குஜராத்தி, உருது ஆகிய மொழிகளைப் பேசுகின்றனர். நாடோடிகளான ஜிப்சிகளும் நகரசுத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள அருந்ததியர் சமூகத்தினரும் ஒரு வகையான தெலுங்கு பேசுகின்றனர். இச் சிறுபான்மைச் சமூகத்தினரின் மொழிகளெல்லாம் வீட்டு மொழிகளாகவே பேசப்படுகின்றன. தமது வெளிச் சமூகத் தொடர்புகளுக்கு இவர்கள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றுள் ஏதாவது ஒன்றை அல்லது இரண்டை அல்லது மூன்றையுமே பயன்படுத்துகின்றனர்.

இலங்கையில் பன்மொழிச் சூழ்ல் (Multilingual Situation) நிலவியபோதிலும் பெரும்பான்மையான இலங்கை மக்கள் - சுமார் ஐந்தில் நாலு பகுதியினர்-ஒரு மொழியாளர்களாவர் (Monolingual). 1953-ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின்படி மூன்று வயதுக்கு மேற்பட்டோரால் பேசப்பட்ட மொழிகளும் பேசியோரின் நூற்று வீதமும் கீழ்வரும் அட்டவணையில் தரப் படுகின்றது (றெபேட் என். கேணி. 1978).

மொழி	%
சிங்களம் மட்டும்	58.9
தமிழ் மட்டும்	21.6
ஆங்கிலம் மட்டும்	0.2
சிங்களமும் தமிழும்	9.9
சிங்களமும் ஆங்கிலமும்	4.2
தமிழும் ஆங்கிலமும்	2.0
சிங்களமும் தமிழும் ஆங்கிலமும்	3.2

இலங்கையின் பிந்திய குடிசன மதிப்பீடுகளில் இத்தகையவிவரங்கள்கிடைக்கவில்லை எனினும் இந்த வீதாசாரத்தில் அதிக மாற்றம் ஏற்படவில்லை என்றே கருதலாம்.

இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் இலங்கையில் சுமார் 38 இலட்சம் பேர் தமிழைத் தாய்மொழியாகப் பேசுகின்றனர். இந்தியாவுக்கு வெளியே இலங்கையிலேயே தமிழ் மொழி இவ்வளவு பெருந்தொகையினரால் பேசப்படுகின்றது. இலங்கையில் தமிழ் பேசும் மக்கள், இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர் முஸ்லீம்கள் என மூன்று இனக் குழுக்களாகப் (Ethnic Community) பிரிக்கப் படுகின்றனர். இவர்களின் எண்ணிக்கையும் நூற்று வீதமும் கீழ்வரும் அட்டவணையில் தரப்படுகின்றன.

இனக்குழு	எண்ணிக்கை	வீதம்
இலங்கைத் தமிழர்	18,71,100	12.6%
இந்தியத் தமிழர்	8,31,600	5.6%
முஸ்லீம்கள்	10,98,900	7.4%
மொத்தம்	38,01,600	25.6%

இலங்கைத் தமிழர் இலங்கைத் தமிழர், இலங்கையின் வரலாற்றுத் தொடக்கக் காலத்தில் இருந்தே இங்கு வாழ்ந்து வருகின்றனர். கிறிஸ்துவுக்கு முந்திய நூற்றாண்டுகளுக்குரிய பிராமிக் கல்வெட்டுகள் வரலாற்றின் மிக ஆரம்ப காலத்தில் இருந்தே இலங்கையில் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்தமைக்குச் சான்று பகர்கின்றன. (சேனக பண்டாரநாயக்க-1985). திராவிடருக்குரிய சங்ககால பெருங்கற் பண்பாட்டுச் (Megalithic Culture) சின்னங்கள் பல இலங்கையில் பரவலாகவும் குறிப்பாக, இன்று இலங்கையில் தமிழர் செறிந்து வாழும் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும் கண்டு எடுக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணக் குடா நாட்டில் மட்டும் இதுவரை கந்தரோடை, காரைநகர், ஆனைக் கோட்டை ஆகிய இடங்களில் இப்பண்பாடு நிலவியமை கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது (ரகுபதி. 1986). கிழக்கு மாகாணத்தில் கதிரை வெளி, உகந்தை ஆகிய இடங்களிலும் இப்பண்பாடு காணப் பட்டுள்ளது. புத்தளம் மாவட்டத்தி லுள்ள பொன் பரிப்பிலும் வடமத்திய மாகாணத்தில் அனுராதபுரம் உட்பட

வேறு சில இடங்களிலும் இப்பண்பாடு காணப்பட்டுள்ளது. தமிழகத்தில் சங்க காலப் பண்பாடு நிலவிய அதேகாலப் பகுதியில் அப்பண்பாட்டுக்குரிய மக்கள் தொகுதியினர் இலங்கையிலும் பரவலாக வாழ்ந்தமையை இவை காட்டுகின்றன. இவர்கள் வரலாற்றுத் தொடக்கத்திலேயே தென் இந்தியாவில் இருந்து வந்து குடியேறியவர்களாக அல்லது தென் இந்தியப்பண்பாட்டைத் தழுவிக் கொண்ட சுதேச பழங்குடியினராகக் கருதப்படலாம்.

கிறிஸ்துவுக்கு முந்திய முதல் மூன்று நூற்றாண்டுகளில் இலங்கையில் மூன்று முறை சுமார் எண்பது ஆண்டுகள் தமிழராட்சி நிலவியதாக மகாவம்சம் கூறுகின்றது. இவர்கள் தமிழகத்தில் இருந்து வந்த ஆட்சியாளர்களாவர். 10-ஆம் 11-ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையில் சோழராட்சி சுமார் எண்பது ஆண்டுகள் நிலவியது. இக்காலப்பகுதியில் இங்குப் பெருமளவில் தமிழர் குடியமர்வுகள் நிகழ்ந்தன. தமிழகத்தில் சோழ சாம்ராச்சியத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து 13-ஆம் நூற்றாண்டில் இலங்கையின் வடபகுதியில் உருவாகிய யாழ்ப்பாண ராச்சியம் 17-ஆம் நூற்றாண்டு வரை நிலைத்திருந்தது. 13-ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டு வரை இலங்கையின் வடகில் உள்ள வன்னிப் பகுதியில் தமிழர்களான வன்னிக் குறுநில மன்னர்களின் ஆட்சியும் நிலை பெற்றிருந்தது. இவ்வாறு மிக நீண்ட கால வரலாற்றுப் பாரம்பரியத்தையுடைய இலங்கையின் சுதேச தமிழ்க் குடியினரே இலங்கைத்தமிழர் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் மிக நெடுங்காலமாக இலங்கையில் தமிழ் மொழியைப் பேணி வந்து உள்ளனர்.

இந்தியத் தமிழர் 19-ஆம் நூற்றாண்டிலும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்திலும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் இலங்கையின் பெருந் தோட்டங்களில் கூலிவேலை செய்வதற்காகத் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் கொண்டுவரப் பட்டு இலங்கையின் மலைப் பகுதிகளில் குடியமர்த்தப்பட்ட தோட்டத் தொழிலாளர்களும் அவர்களின் வம்சாவழியினரும் பொதுவாக இந்தியத் தமிழர் என அழைக்கப் படுகின்றனர். இவர்கள் பெரும்பாலும் தமிழ் நாட்டின் தஞ்சாவூர், திருச்சி, ஆர்க்காடு, மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் இருந்து குடியேறியவர்களாவர். குடியுரிமை இழந்தவர்களான இவர்கள் வாழ்க்கைத் தரத்தில் கீழ் நிலையில் உள்ளனர். இவர்களில் ஒரு சிறு பகுதியினர் கல்வி வாய்ப்புப் பெற்று தோட்டத்துக்கு உள்ளும் வெளியிலும் அரச அலுவலகங்களிலும் வேறுசில தனியார் வர்த்தக, தொழில் நிறுவனங்களிலும் பணிபுரிகின்றனர்.

தோட்டத்துறை சாராத ஒரு சிறு தொகை இந்தியத் தமிழர்களும் இலங்கையில் குடியேறி வாழ்கின்றனர். வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள நாட்டுக் கோட்டைச் செட்டிமார் இவர்களுள் பொருள்வளம் மிக்கவர்களாவர். இவர்களுள் பெரும்பாலோர் தமிழ் நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து குடியேறியவர்களாவர்(தேவராஜ்1985). இலங்கையின் மேற்குக்கரையில் குடியமர்ந்துள்ள பரவர் அல்லது பரதவர் எனப்படும் மீனவ சமூகத்ினரும் நகர சுத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள அருந்ததியிர் சமூகத்தினரும் இந்திய வம்சா வழியினர் என்ற பிரிவுள்

அடங்கும் சிறு சமூகப் பிரிவினராவர். இலங்கையில் வாழும் இந்தியத்தமிழர்கள் தாங்கள் பேசும் தமிழில் இந்தியத் தமிழின் பல கூறுகளை இன்னும் பேணி வருகின்றனர்.

முஸ்லீம்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட முஸ்லீம்கள் இலங்கையின் இரண்டாவது சிறுபான்மையினராவர். இலங்கையில் முஸ்லீம்களில் சுமார் மூன்றில் ஒரு பகுதியினர் தமிழ் பேசும் கிழக்கு, வடக்கு மாகாணங்களில் செறிவாகவும் ஏனையோர் சிங்களம் பேசும் இலங்கையின் பிற ஏழு மாகாணங்களிலும் பரவலாகவும் வாழ்கின்றனர். இலங்கை முஸ்லீம்கள் தங்களை அராபியரின் வழித் தோன்றல்கள் எனக் கருதுகின்றனர்.

கிறிஸ்துவுக்கு முந்திய நூற்றாண்டுகளில் இருந்தே இந்தியாவுடனும் இலங்கையுடனும் அராபியர் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்தனர். இலங்கையின் துறைமுகப் பகுதிகளில் அராபியர் குடியேற்றங்கள் இருந்தமைக்கு சான்றுகள் உண்டு. அரேபியாவில் இஸ்லாம் பரவி நிலை கொண்ட பிறகு இலங்கையில் இருந்த அராபியர்களும் இஸ்லாத்தைத் தழுவினர். தமிழர்களுடன் இவர்கள் மண உறவு கொண்டு வாழ்ந்ததன் விளைவாகவே தமிழ் பேசும் முஸ்லீம்கள் தோற்றம் பெற்றனர் என்று கருத இடம் உண்டு. இஸ்லாம் மதத்தைத் தழுவிக் கொண்ட தமிழர்களும் தமிழ் பேசும் முஸ்லீம்களின் மூதாதையர் ஆகலாம். கி.பி. 9-ஆம் 10-ஆம் நூற்றாண்டுகளில் மலபாரில் இருந்தும், தமிழ் நாட்டில் இருந்தும் முஸ்லீம்கள் இலங்கையில் வந்து குடியமர்ந்தமைக்கு இலக்கிய, கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. 13 - ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் இலங்கையில் துறைமுக நகரங்களும் நகரக்குடியிருப்புகளும் வளர்ச்சியடைவதில் வர்த்தகர்களான முஸ்லீம்கள் முக்கியப்பாத்திரம் வகித்துள்ளனர் (சேனக பண்டார நாயக்கா. 1985). 16 - ஆம் 17 - ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையின் கரையோரப் பகுதிகளை ஆட்சி புரிந்த போத்துக்கேயர் வர்த்தகப் போட்டி காரணமாக இலங்கை முஸ்லீம்களுக்கு எதிராகச் செயற்பட்டபோது சிங்கள மன்னர்களால் ஆளப்பட்ட கண்டி ராச்சியத்தின் கீழ் இருந்த மட்டக்களப்புப் பகுதியிலும் பிற சிங்களப் பகுதிகளிலும் முஸ்லீம்கள் பெருமளவில் குடியமர்த்தப்பட்டனர். 19 - ஆம் நூற்றாண்டிலும் 20 - ஆம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்பதங்களிலும் பிரித்தானியர் ஆட்சியின் கீழ்இலங்கையில் நிலவிய சமூக, அரசியல் வரலாற்றுக் காரணிகள், இலங்கை முஸ்லீம்கள் ஒரு தனி இனக்குழுவாக உருவாகுவதில் பெரும்பங்கு வகித்துள்ளன. பன்னெடுங்காலமாகவே இலங்கை முஸ்லீம்கள் சில சிறப்புக் கூறுகளுடன் தமிழைத் தங்கள் தாய்மொழியாகப் பேணி வருகின்றனர்.

இலங்கைத் தமிழ் இலங்கைத் தமிழ் மொழியின் எல்லா நிலைகளிலும் இந்தியத் தமிழில் இருந்து பெருமளவு வேறுபட்ட ஒரு முக்கியமான பிரதேசக் கிளைமொழியாக இனங் காணப்படுகின்றது. இலங்கைத் தமிழரின் பேச்சைக் கேட்க நேரும் பல இந்தியத் தமிழர்கள் அதனை மலையாளம் என மயங்கியுள்ளனர். தமிழகத்து வெகுஜன பத்திரிகையொன்று இலங்கைத் தமிழை 'கேரளீய சிங்களீயம்' எனச்சில

காலத்துக்கு முன்பு கிண்டலாகக் குறிப்பிட்டது. ஈழத்து நாவலாசிரியர் கணேசலிங்கனின் நீண்ட பயணம் என்னும் நாவலுக்கு முன்னுரை எழுதிய அகிலன் அதன் மொழிபற்றிக் குறிப்பிடுகையில் “தமிழ் நாட்டு வாசகர்களாகிய நமக்கு இந்த நாவலை வேகமாகப் படித்துக் கொண்டு போய் விட முடியாது . . . இதில் யாழ்ப்பாணத்தின் தனித்தன்மை, அந்தத் தமிழின் தனித்தன்மை, அந்த மக்களின் தனித் தன்மை, ஆசிரியரின் தனித்தன்மை இவ்வளவும் இருக்கின்றன என்று எழுதினார். பல ஆண்டுகளுக்கு முன்பு ‘ஈழத்துப்படைப்புகளுக்கு அடிக்குறிப்பு வேண்டும்’ என கி.வா. ஜகந்நாதன் கூறியதையும் நாம் இங்கு நினைவு கூரலாம். ஈழத்துப் படைப்புகளின் மொழித்தொடர்பாகவே அவர் அவ்வாறு கூறினார். இவையெல்லாம் இந்தியத் தமிழில் இருந்து இலங்கைத் தமிழ் பேச்சிலும் எழுத்திலும் பெருமளவு வேறுபட்டிருக்கின்றதுஎன்பதையே உணர்த்துகின்றன எனினும் இலங்கைப் பேச்சுத் தமிழுக்கும் இந்தியப் பேச்சுத் தமிழுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைவிட இலங்கை எழுத்துத் தமிழுக்கும் இந்திய எழுத்துத் தமிழுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் ஒப்பீட்டளவில்மிகக்குறைவாகும் காணப்படும் வேறுபாடுகள் பெருமளவு சொற்றொகுதி சார்ந்தவையாகும். தமிழகத்தில் தற்போது அமுலில் இருக்கும் எழுத்துச் சீர்திருத்தம் இலங்கைத் தமிழில் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. இலங்கைத் தமிழுக்கும் இந்தியத் தமிழுக்கும் இடையே உள்ள இந்த வேறுபாடுகள் இனனும் விரிவான முரண்நிலை ஆய்வுகளுக்கு (Contrastive Study) உட்படுத்தப்படவில்லை எனினும் விபுலானந்தர் (1973), சுசீந்திரராஜா (1973), ஏசுதாசன் (1979) ஆகியோரின் கட்டுரைகள் இவ்விரு கிளைமொழிகளிலும் காணப்படும் சில முரண்நிலைக் கூறுகளை (Contrastive features) எடுத்துக் காட்டியுள்ளன.

இலங்கைத் தமிழ் ஒரு தனிக்கிளை மொழியாக இனங்காணப்பட்ட போதிலும் அது தன்னுள் பல துணைக்கிளை மொழிகளையும் கொண்டுள்ளது. இலங்கையில் பரந்த அடிப்படையில் கிளைமொழி ஆய்வுகள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை எனினும் கிடைத்துள்ள தரவுகளின் அடிப்படையில் இலங்கைப் பேச்சுத் தமிழை, (1) யாழ்ப்பாணத் தமிழ் (2) மட்டக்களப்புத் தமிழ் (3) மலையகத் தமிழ் (4) முஸ்லீம் தமிழ் என நான்கு பிரதான துணைக் கிளை மொழிகளாகப் பாகுபடுத்தலாம்.

யாழ்ப்பாணத் தமிழ் என்பது யாழ்ப்பாண மாவட்டத்தில் வழங்கும் தமிழையே சிறப்பாகக் குறிக்கும். எனினும் வவுனியா, மன்னார் முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் வழங்கும் தமிழையும் அதில்உள்ளடக்கலாம். இலங்கைக் கிளை மொழிகளில் இதுவரை யாழ்ப்பாணத் தமிழ் பற்றியே அதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. பழந் தமிழ்க் கூறுகள் பலவற்றை அது பேணிவருவதனை இவ்வாய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன. (சுசீந்திரராஜா 1974)

கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் பேசப்படும் தமிழ் பொதுவாக மட்டக்களப்புத் தமிழ் என்படுகின்றது. யாழ்ப்பாணத் தமிழில் இருந்து இது

பெருமளவு வேறுபட்ட ஒரு கிளை மொழியாகும். கிழக்கிலங்கையின் திருகோணமலை மாவட்டத்தில் பேசப்படும் தமிழ் மட்டக்களப்புத் தமிழில் இருந்து சில அம்சங்களில் வேறுபடினும் ஒரு பரந்த அடிப்படையில் அதனையும் மட்டக்களப்புத் தமிழில் அடக்கலாம். மட்டக்களப்புத் தமிழ் பற்றி இதுவரை மிகச் சில ஆய்வுகளே மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இலங்கையின் மத்திய மலை நாட்டில், தேயிலை, இரப்பர் தோட்டங்களில் வாழும் இந்திய வம்சாவழித் தமிழர்களால் பேசப்படும் தமிழ் மலையகத் தமிழ் எனப்படுகின்றது. நான் ஏற்கனவே குறிப்பிட்டது போலஇந்தியத் தமிழின் செல்வாக்கினை இதில் பெருமளவு காணலாம். மலையகத் தமிழ் பற்றி இதுவரை விரிவான ஆய்வுகள் ஏதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

இலங்கை முஸ்லீம்களின் பேச்சு வழக்கே முஸ்லீம் தமிழ் எனப்படுகின்றது. இது இலங்கைத் தமிழின் ஒரு பிரதான சமூகக் கிளை மொழியாகும். அரபுக் கடன் சொற்கள் அதிகம்பயின்று வருவது இக்கிளைமொழியின் ஒரு தனிப் பண்பாகும். இக்கிளை மொழியில் பெருமளவு பிரதேச வேறுபாடுகளைக்காண முடிகின்றது. இலங்கையின் கிழக்கு வடக்கு மாகாணங்களில் வாழும்முஸ்லீம்களின் பேச்சு வழக்குக்கும் ஏனையபகுதிகளில் வாழும் முஸ்லீம்களின் பேச்சு வழக்குக்கும் இடையே காணப்படும் பிரதேசரீதியிலான வேறுபாடுகளின் அடிப்படையில் இக்கிளை மொழியை (1) கிழககு வடக்கு வகை (2) தென், மேல், மத்திய வகை என இரண்டு துணைக் கிளை மொழிகளாக வகைப்படுத்தலாம். தென், மேல், மத்திய வகையில் சிங்கள மொழியின் செல்வாக்கு அதிகம் காணப் படுகின்றது. முஸ்லீம் தமிழ் பற்றியும் இதுவரை மிகக் குறைவான ஆய்வுகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கைத் தமிழ் பல பிரதேச, சமூகக் கிளைமொழிகளைக் கொண்டிருப்பினும் கற்றோரின் பேச்சு வழக்கில் இப்பிரதேச, சமூகக் கிளைமொழி வேறுபாடுகள் குறைந்தும் பொதுக்கூறுகள் அதிகமாகவும் இருப்பதை அவதானிக்கலாம். இது இன்னும் ஒரு திட்டமான வடிவத்தைப் பெறாதிருப்பினும் உருவாகிவரும் இக்கற்றோர் வழக்கினை இலங்கைப் பொதுப் பேச்சுத் தமிழ் என்று நாம் கூறலாம்.

பிறமொழித் தொடர்பு இலங்கைத் தமிழ் இந்தியத் தமிழ் தொடர்பு கொள்ள நேராத சில பிறமொழிகளுடன் தொடர்பு கொண்டு வந்திருக்கின்றது. மிக நெடுங்காலமாக இலங்கையில் தமிழும் சிங்களமும் நெருங்கித்தொடர்பு கொண்டு வந்திருக்கின்றன. இம் மொழித் தொடர்பினால் தமிழின் செல்வாக்கு சிங்களத்தில் ஏற்பட்டுள்ள அளவுக்கு சிங்களத்தின் செல்வாக்கு தமிழில் ஏற்படாவிட்டாலும் சிங்களக் கடன் சொற்கள் பல இலங்கைத் தமிழில் புகுந்திருப்பதைக் காணலாம். போயா, வெசாக், பொசன், சலுசலா, மகாபொல பெரகரா, கனு போன்ற சொற்கள் இன்று இலங்கைத் தமிழில் அன்றாட வழக்குச் சொற்களாகியுள்ளன. சிங்களப் பிரதேசங்களில் வாழும் முஸ்லீம்களின் பேச்சுத் தமிழில் சிங்களச் சொற்கள் பெருமளவில் பயின்று வரக்காணலாம்.,

16-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் போத்துக்கேயர் இலங்கையின்

கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றி சுமார் நூற்றிஐம்பது ஆண்கள்டு ஆட்சி செய்தனர். அவர்களைத் தொடர்ந்து டச்சுக்காரர் சுமார் நூற்றி ஐம்பது ஆண்டுகள் ஆட்சி செய்தனர். இவ்வாறு ஏற்பட்ட போத்துக்கேய டச்சு மொழித் தொடர்புகள் மூலம் இலங்கைத் தமிழில் அநேக போத்துக்கேய டச்சுமொழிச் சொற்கள் கலந்துள்ளன. அலவாங்கு, கதிரை, கரத்தை, குசினி, கோவா, சப்பாத்து, துவாய், தோம்பு போன்ற போத்துக்கேயச் சொற்களையும் அறுத் தாப்பு, பக்கூஸ், தாச்சி, பேச்சி, போஞ்சி, லாச்சி, றக்கை, துட்டு போன்ற டச்சு மொழிச் சொற்களையும் இதற்குச் சில உதாரணங்களாகக் காட்ட லாம். போத்துக்கேய டச்சுத் தொடர் பினால் சில மலாய் மொழிச் சொற் களும் இலங்கைத் தமிழில் கலந்து உள்ளன. சம்பல், சாறன், றம்புட்டான், மங்குஸ்தான்போன்றவை இத்தகையன.

ஆங்கில மொழித் தொடர்பு இந்தியத் தமிழ் போல் இலங்கைத் தமிழையும் பெருமளவு பாதித்துள்ளது. ஆயினும் ஆங்கிலக் கடன் சொற்களைத் தன்மயமாக்கும் முறைமையில் இலங்கைத் தமிழுக்கும் இந்தியத் தமிழுக்கும் இடையே அதிக வேறுபாடு களைக் காணலாம். உதாரணமாக இந்தியத் தமிழில் காப்பி, லாறி, சார் என வழங்கும் சொற்கள் இலங்கைத் தமிழில் கோப்பி, லொறி, சேர் என வழங்குவதைக் குறிப்பிடலாம்.

மொழிக்கொள்கையும் மொழிப்பிரச்சினை யும் சிங்கள மன்னர்களின் அரசவையில் நெடுங்காலமாகத் தமிழ் முக்கிய இடம் பெற்றிருந்தமைக்கு வரலாற்றுச் சான்று கள் உள்ளன. தமிழ் நாட்டில் பௌத்தம் நிலை பெற்றிருந்த காலத்தில் சிங்கள மும் தமிழும் மிக நெருங்கிய உறவு கொண்டிருந்தன. 13-ஆம் 14-ஆம் நூற்றாண்டுகளில், குறிப்பாக 6-ஆம் பராக்கிரமபாகுவின் அரசவையில் தமிழ் நன்கு மதிக்கப்பட்டது. சரசோதிமாலை என்ற தமிழ்ச் சோதிட நூல் இவனது அரசவையிலேயே அரங்கேறியது. இக் காலத்தில் சிங்கள மக்கள் மத்தியில் தமிழ்க் கவிதைகள் பிரபலம் பெற்றிருந் தன. முதலாவது சிங்கள அகராதியாகிய 'நாமாவளிய' வைத் தொகுத்தவன் பராக்கிரமபாகுவின் மகளை மணந்த தமிழ் இளவரசனான நன்னுருத்தன் என்பவனாவான். கண்டி மன்னர் ஆட்சிக் காலத்தில் பல தமிழ் நூல்கள் சிங்களத்தில் மொழிபெயர்க்கப் பட்ட தாகத் தெரிகின்றது. கண்டி ராச்சியத் தின் அதிகாரிகள் பலர் கைஎழுத்திடு வதற்குத் தமிழைப் பயன் படுத்தியதாக வும் அறிய முடிகின்றது (குணவர்த்தன. 1985).

பிரித்தானிய ஆட்சிக்காலத்திலேயே சுதேச மொழிகளான சிங்களமும் தமிழும் ஆட்சித் துறையில் இருந்து ஒதுக்கப்பட்டு ஆங்கிலம் ஆட்சி மொழி யாக மாறியது. ஆட்சித்துறை நிருவாகம் ஆங்கிலம் கற்றோர் வசமாகியாது. இக் காலனித்துவச் சூழலிலேயே சிங்கள, தமிழ் உரிமைச்கான போராட்டம் ஆரம்பமாகியது. இந்த நூற்றாண்டின் நடுப்பகுதிவரை இலங்கையின் இடது சாரிகளும் தேசிய வாதிகளும் சிங்கள மும் தமிழும் இலங்கையின் ஆட்சி மொழியாக வேண்டும் என்று கோரி வந்தனர் (குமாரி ஜயவர்த்தன 1984). ஆயினும் சுதந்திர இலங்கையில் அரசியல் அதிகாரத்துக்காக பல்வேறு அரசியல் சக்திகள் முட்டி மோதிக்

கொண்டபோது சிங்கள அரசியல்வாதிகள் அரசியல் லாபம் கருதி தம் மொழிக் கொள்கையை மாற்றிக் கொண்டனர். 1956-இல் நடைபெற்ற பொதுத்தேர்தல் சிங்களம் மட்டும் ஆட்சிமொழி என்ற கொள்கையின் அடிப்படையிலேயே நிகழ்ந்தது. அதிகாரத்துக்கு வந்த் இருபத்தி நாலு மணி நேரத்தில் சிங்களத்தை ஆட்சி மொழியாக்குவேன் என்று கூறிய பண்டாரநாயக்காவின் கட்சி தேர்தலில் அமோக வெற்றியீட்டியது. 1956 ஜூன் மாதத்தில் சிங்களம் மட்டும் ஆட்சி மொழிச் சட்டம் தமிழ் மக்களினதும் இடது சாரிகளனதும் எதிர்ப்பைப் புறக்கணித்து நிறைவேற்றப்பட்டது.

இலங்கைத் தமிழர் மத்தியில் மொழி உணர்வும் மொழி உரிமைக்கான போராட்டமும் இக்காலப் பகுதியிலேயே தீவிரம் பெற்றது. 1958 - இல் நடைபெற்ற இனக்கலவரம் மொழி உரிமைக் கான தமிழரின் போரட்டாத்தின் விளைவாகும். கலவரத்தின் விளைவாக அரசாங்கத்தின் மொழிக் கொள்கையில் ஒரு சிறு மாற்றம் ஏற்பட்டது. 1958-இல் ஒரு சட்டத் திருத்தம் கொன்டுவரப் பட்டது. இதன்மூலம் நாடெங்கிலும் சிங்களம் ஆட்சிமொழியாக இருக்கும் அதே வேளை இலங்கையின் வடக்குக் கிழக்காக மாகாணங்களில் தமிழ் மொழிக்கு நியாயமான உபயோக உரிமை, சட்ட ரீதியாக வழங்கப்பட்து. இதைத் தொடர்ந்து இருபது ஆண்டுகளில் இலங்கை அரசின் மொழிக் கொள்கையில் பெரிய மாற்றங்கள் எதுவும் இருக்கவில்லை. 1978-இல் உருவாக்கப்பட்ட புதிய அரசியல், அமைப்புச் சட்டத்தில் முதல் முதலாக தமிழுக்குத் தேசிய மொழி என்ற அந்தஸ்து வழங்கப்பட்டது. எனினும் தொடர்ந்தும் சிங்களம் மட்டும் ஆட்சி மொழியாக இருந்து வரும் நிலையில் தேசிய மொழி என்ற இந்தப் பெயர் மாற்றம் தமிழ் மொழிக்கு நடைமுறை ரீதியிலான புதிய அரசியல் அந்தஸ்து எதையும் ஏற்படுத்திவிடவில்லை என்றே கூற வேண்டும்.

கல்விமொழிக் கொள்கை 1956-இல் இலங்கையில் நடந்த அரசியல் மாற்றமும் மொழிக்கொள்கையும் கல்விமொழி பற்றிய கொள்கையிலும் மாற்றத்தைக் கொண்டுவந்தன. 1958-ல் பல்கலைக் கழகம் வரை தாய் மொழிக் கல்வி அறிமுகம் செய்யப்பட்டது. அதற்கு முன் ஆங்கிலமே பல்கலைக் கழகக் கல்வி மொழியாக இருந்தது. ஆரம்ப, இடை நிலைக் கல்வி மட்டும் தாய்மொழியில் கற்பிக்கப்பட்டது. ஆயினும் உயர் வர்க்கத்தினர் தங்கள் பிள்ளைகளுக்கு ஆரம்ப நிலையில் இருந்து ஆங்கிலமூலமே கல்வி பயிற்றினர். புதிய கல்வி மொழிக் கொள்கை இந்நிலையை மாற்றியது. சிங்களமும் தமிழும் எல்லா நிலைகளிலும் கல்வி மொழி யாக்கப்பட்டன. கலைப் பாடங்கள் மட்டுமன்றி விஞ்ஞானப் பாடங்களும் பட்டப் படிப்பு வரை தமிழ் மொழியில் கற்கும் நிலை தோன்றியது. ஆங்கிலம் இரண்டாம் மொழி என்ற நிலைக்கு இறங்கியது. இதனால் கிராமப் புறங்களில் இருந்தும் சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த பெருந் தொகையான தமிழ் மாணவர்களுக்குப் பல்கலைக்கழகக் கல்வி பெறும் வாய்ப்புக்கிடைத்தது. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இலங்கையில் தமிழ் மொழி வளர்ச்சிக்கு இக்கல்வி மொழிக்கொள்கை மிகவும் அனுசரணையாக இருந்து வந்துள்ளது. சமூக விஞ்

ஞானத்துறையிலும் இயற்கை விஞ்ஞானத்துறையிலும் ஏராளமான பாட நூல்கள் தமிழில் சுயமாக எழுதப்படுவதற்கும் மொழிபெயர்க்கப்படுவதற்கும் இது வழிகோலியது. கலைச் சொல்லாக்க வளர்ச்சிக்கும் இது வழிவகுத்தது. சமூக விஞ்ஞான, இயற்கை விஞ்ஞானத் துறைகள் சார்ந்த அநேக கலைச்சொல் அகராதிகள் தமிழில் வெளிவந்து உள்ளதையும் இங்குசுட்டிக் காட்டலாம்.

மொழிப்பற்றும் மொழி பேணலும் 19-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில்தோன்றிய தமிழரின் சமூக, பண்பாட்டு மறுமலர்ச்சிக் காலத்தில் இருந்தே இலங்கைத் தமிழர் தங்கள் தமிழ் உணர்வை வெளிப்படுத்தி வந்து இருக்கின்றனர். ஆறுமுக நாவலர் (1822-1879), சி. வை. தாமோதரம் பிள்ளை (1832-1901), சபாபதி நாவலர் (1874-1907), ஆனந்த குமாரசுவாமி (1877-1947), பொன்னம்பலம் ராமநாதன் ஆகியோரின்தமிழாபிமானம் தமிழ் உலகு நன்கு அறிந்த ஒன்றாகும். ஈழத்தவரின் தமிழாபிமானம் காரணமாக 1898 இலேயே யாழ்ப்பாணத்தில் தமிழ் வளர்ச்சிக்காக ஒரு **தமிழ்ச் சங்கம்** நிறுவப்பட்டது. இதற்கு மூன்றுஆண்டுகளுக்குப் பின்னரே **மதுரைத் தமிழ்ச் சங்கம்** தொடங்கப்பட்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. 1922-இல் ஆரிய திராவிட பிஷாபிவிருததிச் சங்கம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டது. எனினும் இக்காலத்து ஈழத்தவரின் தமிழாபிமானம் தமிழகத்திலும் ஈழத்திலும் அன்று நிலவிய பொதுவான தமிழ்ப் பண்பாட்டு உணர்வின் ஒரு கூறாகவே அமைந்தது. ஆனால் சுதந்திரத்துக்குப் பிந்திய இலங்கையிலே தோன்றி சமூக, அரசியல் நிலைமைகளும் சிங்கள மொழியின் மேலாதிக்கமும் காரணமாகத் தமிழ்மொழி இலங்கைத் தமிழரின் இனத் தனித்துவத்தின் அடிப்படைச் சின்னமாக மாறிற்று. தமிழ், தமிழர் பண்பாட்டின் ஒரு கூறு என்பது மட்டுமன்றி அது அவர்களின் ஜீவாதார உரிமை என்ற நிலை தோன்றிற்று. 1950 இதற்குப் பிந்திய இலங்கைத் தமிழரின் சமூக, அரசியல் இயக்கத்தில் தமிழ் உணர்ச்சி ஒரு முக்கிய உந்து சக்தியாக உள்ளது.

இந்தியத் தமிழர்களையும் இலங்கை முஸ்லீம்களையும் பொறுத்தவரை தமிழ் மொழி உணர்வும் மொழிப் பற்றும் இவர்களது சமூக, அரசியல் இயக்கத்தின் அடிப்படையாக அமையவில்லை என்றே கூறவேண்டும். இவ்விரு சமூகக் குழுவினரும் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிருந்த போதிலும் பல்வேறு சமூக வரலாற்றுக் காரணிகளால் மொழி, இவர்களது இனத் தனித்துவத்தின் அடிப்படைக் கூறாக அமையாது போனதே இதற்குரிய காரணம் எனலாம். இந்தியத் தமிழர்களில் எழுபது சதவீதத்துக்கு அதிகமானோர் ஏனைய தமிழ்ப் பேசும் சமூகத்தில் இருந்து தனிமைப்படுத்தப்பட்ட பெருந்தோட்டங்களில் கூலித் தொழிலாளர்களாகவே உள்ளனர். கல்வியிலும் வாழ்க்கைத் தரத்திலும் இவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். இவர்களது தொழில் வாய்ப்புக்கும், தொழில் முன்னேற்றத்துக்கும், இலங்கைத் தமிழருக்கு, குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழருக்கு இருப்பதுபோல் கல்வியும் மொழியும் அத்தியாவசியமானவையல்ல. இப் பின்னணியில் மொழி உணர்வும் மொழிப்பற்றும் அவர்களைப் பிரக்ஞைபூர்வமாக ஆட்கொள்ளாதிருப்பதை

நாம் புரிந்துகொள்ளமுடியும். 1956-ஆம் ஆண்டுக்குப் பிறகு இலங்கையில் தீவிரமாக நடைபெற்று வந்த தமிழ் உரிமைப் போராட்டங்களில் அவர்கள் செயல்பூர்வமாகப் பங்கு கொள்ளா திருந்ததற்கும் இதுவே காரணமாகும். ஆயினும், அவர்கள் தம் சமூக உறவு களுக்குத் தமிழ் மொழியையே தொடர்ந்தும் பேணி வருகின்றனர். அந்நிய மொழிச் சமூகத்தில் இருந்து இவர்கள் தனித்து வாழ்வதும் எண்ணிக்கையில் ஒரு பெரிய சமூகத் தொகுதியினராக ஒரு குறிப்பிட்ட பிர தேசத்தில் செறிந்து வாழ்வதும் இதற்குக் காரணம் எனலாம். ஒரு குறிப் பிட்ட மொழிச் சமூகத்தின் மொழி உணர்வும், மொழிப் பேணுதலும் (**Language Maintenance**) அவர்களது சமூக, அரசியல் தேவைகளினாலேயே நிர்ணயிக்கப்படுகின்றது என்பதை இது காட்டுகின்றது. 16 –ஆம் நூற்றாண்டில் அல்லது அதன் பின்னர், தமிழ் நாட்டில் இருந்து வந்து இலங்கையின் மேற்குக் கரையில் நீர்கொழும்பைச் சுற்றி சிங்கள மீனவர் மத்தியில் குடியேறிய பரதவர் அல்லது பரவர் என்னும் தமிழ் பேசும் மீனவ சமூகத்தினரில் ஒரு பகுதியினர் படிப்படியாகச் சிங்களச் சமூகத்துடன் கலந்து மொழிமாற்றத்துக் குள்ளாகி இருப்பதையும் இது தொடர்பாக இங்குச் சுட்டிக் காட்டவேண்டும்.

இலங்கை முஸ்லீம்களின் தாய் மொழி தமிழே எனினும், நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளது போல் சில சமூக, அரசியல், வரலாற்றுக் காரணிகளால் மதத்தையே அவர்கள் தம் இனத் தனித்துவத்தின் அடிப் படைக் கூறாகக் கருதுகின்றனர். இதனாலேயே கடந்த காலங்களில் இலங்கைத் தமிழர் நடத்திவந்த மொழியுரிமைப் போராட்டங்களில் இந்தியத் தமிழர் போல் இலங்கை முஸ்லீம்களும் உணர்வு பூர்வமாகப் பங்கு கொள்ளாதிருந்தனர். எனினும் சிங்களம் மட்டும் ஆட்சி மொழி என்ற சட்டத்தை முஸ்லீம்களும் எதிர்த்தனர். இச்சட்டம் செனட் சபையில் நிறை வேற்றப்பட்ட போது முஸ்லீம் உறுப் பினரான ஏ. எம். ஏ. அஸீஸ் தன் செனட்டர் பதவியை ராஜினாமாச் செய்தமை இங்குக் குறிப்பிடத் தக்கது.

இலங்கையின் கிழக்கு, வடக்குப் பகுதிகளில் வாழும் முஸ்லீம்களில் மிகப் பெரும்பாலோர் தமிழ் மட்டும் அறிந்த ஒரு மொழியாளராவர். இலங்கையின் ஏனைய சிங்களப் பிரதேசங்களில் வாழும் முஸ்லீம்களில் பெரும்பாலோர் தமிழும் சிங்களமும் பேசும் இரு மொழியாளர்களாவர். இவ்விரு மொழி நிலைமை இவர்களது மொழிசார் மனப்பாங்கைத் தீர்மானிப்பதில் முக்கியப் பங்காற்றுகின்றது எனலாம். சிங்களப் பகுதிகளில் வாழும் முஸ்லீம் களில் ஒரு குறிப்பிடத்தக்க தொகை யினர் சிங்களத்தைத் தங்கள் கல்வி மொழியாகவும் தேர்ந்துள்ளனர். ஆயி னும் இவர்களது மதச் சடங்குகளில் சிங்கள மொழி இடம் பெறுவதில்லை. மதச் சடங்குகளில் அரபு மொழியும் மதபோதனைக்கும் பிரச்சாரத்துக்கும் தமிழ் மொழியுமே பயன்படுத்தப்படு கின்றது. சிங்கள மொழியில் குறிப்பிடத் தக்க இஸ்லாமிய மதசம்பந்தமான நூல்கள் எதுவும் எழுதப்படவில்லை. சிங்களப் பகுதிகளில் வாழும் முஸ்லீம்கள் மத்தியில் சிங்களத்தை முதல் மொழியாகத் தேர்ந்து கொள்ளும் ஒருபோக்கு காணப்படுவதாக றெபேட்

கேணி (1978) குறிப்பிட்டுள்ளார். எனினும், இதுவரை இலங்கை முஸ்லீம்களில் எப்பிரிவினரும் மொழி மாற்றத்துக்கு ஆளானமைக்குச் சான்றுகள் எதுவும் இல்லை. இவ்வாறு மொழி மாறுவது இலங்கை முஸ்லீம்களின் ஒருமைப்பாட்டைக் குலைக்கும் என்றும் தமிழ் நாட்டு முஸ்லீம்களுடன் உள்ள நீண்ட காலப் பண்பாட்டுத் தொடர்புக்கு அது ஊறாக அமையும் என்றும் முஸ்லீம்களின் மத உணர்வைப் பாதிக்கும் என்றும் முஸ்லீம்கள் கருதுகின்றனர். இன்று இலங்கையில் சிங்களம் பேசும் பிரதேசங்களில் உள்ள குக்கிராமங்களிலும் இலங்கை முஸ்லீம்களாலேயே தமிழ் மொழி பேணப்பட்டு வருகின்றது.

இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி

இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாறு சங்க காலத்தில் இருந்தே தொடங்குகின்றது. குறுந்தொகை, அகநானூறு ஆகிய தொகை நூல்களில் ஈழத்துப் பூதன் தேவனார், மதுரை ஈழத்துப் பூதன் தேவனார் என்ற பெயர்களில் ஏழு கவிதைகள் இடம் பெற்றுள்ளன. பூதன் தேவனார் ஈழத்தவர்தானா என்பதில் ஈழத்து ஆயவாளர் மத்தியில் கருத்து வேறுபாடுகள் உண்டு (பூலோகசிங்கம் 1974 நடராசா 1982, வேலுப்பிள்ளை 1986). எனினும் சங்ககாலப் பெருங்கற் பண்பாட்டுச் சின்னங்கள் ஈழத்திலும் பெருமளவில் காணப்படுவதன் அடிப்படையில் பூதந்தேவனார் மட்டுமன்றி அவரையொத்த வேறு பல புலவர்களும் அக்காலத்தில் ஈழத்தில் வாழ்ந்திருக்கலாம் என்று கருதுவது தவறாகாது.

பூதந்தேவனார் காலத்துக்குப் பிறகு 14-ஆம் நூற்றாண்டு வரை ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஒரு நீண்ட இடைவெளி காணப்படுகின்றது. இக்காலப் பகுதியில் இலக்கிய நூல்கள் தோன்றியமைக்கான சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. எனினும் 9 - ஆம் நூற்றாண்டுமுதல் 14-ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதிக்குரிய, நன்கு திருந்திய செய்யுள் வடிவிலமைந்த தமிழ்க் கல்வெட்டுக்கள் பல இலங்கையின் பல பகுதிகளிலும் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இவற்றைக் கொண்டு இடைக் கால ஈழத்துத் தமிழ்ப் புலமையை நாம் ஓரளவு மதிப்பிட முடியும்.

14-ஆம் நூற்றாண்டில் இருந்து ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு தொடர்ச்சியாகக் காணப்படுகின்றது. 14-ஆம் நூற்றாண்டில் பல சோதிட, வைத்திய நூல்கள் இங்குத் தமிழில் தோன்றின. இரகுவம்சத்தின் மொழிபெயர்ப்பொன்றும் இக்காலத்தில் எழுந்தது. 19-ஆம் நூற்றாண்டு வரையிலான ஈழத்துத் தமிழ் இலக்கியம் இந்தியத் தமிழ் இலக்கியம் போன்றே பெரிதும் சமயச் சார்பானதாகக் காணப் படுகின்றது. இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதத்தவர்களின் இலக்கிய வெளிப்பாடுகள் இக்காலப் பகுதியின் ஈழத்து இலக்கியத்தை வளப்படுத்தியுள்ளன. 19-ஆம் நூற்றாண்டின் தமிழ்ப்பண்பாட்டு மறுமலர்ச்சி இயக்கம் ஈழத்திலே பல முக்கியமான மரபுவழித் தமிழ் அறிஞர்களைத் தோற்றுவித்தது. இவர்கள் தமிழ் இலக்கண, இலக்கிய வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றினர். ஆறுமுக நாவலர் நவீன தமிழ் உரைநடையை உருவாக்கி வளர்த்தவர்களில் முக்கியமானவர். தமிழ் இலக்கணத் துறையிலும் பதிப்புத் துறையிலும் அவரது பணி

குறிப்பிடத்தக்கது. சி.வை. தாமோதரம் பிள்ளை, உ.வே. சாமிநாதையர் போல் பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்து, தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றினார் 19-ஆம்நூற்றாண்டின் பிற்பகுதியில் ஈழத்துத் தமிழ் அறிஞர்களின் இலக்கிய இலக்கணப் பணி தமிழகம் வரை வியாபித்திருந்தது. ''உண்மையில் நாவலர் காலத்திலும் அதற்கு மூன்று த்சாப்தங்கள் பின்னரும் சென்னை இலக்கிய உலகை யாழ்ப் பாணக் குழாத்தினரே ஆக்கிரமித் திருந் தனர்'' எனக் கைலாசபதி (1985) கூறு கிறார். நாவலர் தொடக்கி வைத்த ஈழத்து மரபு வழித் தமிழ்ப் புலமை வித்துவான் சி. கணேசையர் வழியாக, கடந்தஆண்டு காலஞ்சென்ற பண்டித மணி சி. கணபதிப்பிள்ளை வரை தொடர்ந்து வந்திருக்கின்றது.

19-ஆம் நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டின் தொடக்கக்காலத்திலும் ஈழத்துத் தமிழ் அறிஞர் தமிழ் அகராதிக் கலைக்கும் தமிழ் ஆராய்ச்சிக்கும் ஆற்றிய தொண்டும் இங்குக் குறிப்பிடத் தக்கது. 1842-இல் யாழ்ப்பாண அகராதி வெளிவந்தது. ரெவரெண்ட் ஸ்பால்டிங் என்பவரால் வெளியிடப்பட்ட இவ் வகராதியைத் தொகுத்தவர் யாழ்ப் பாணத்துச் சந்திரசேகர பண்டித ராவார். இது மாணிப்பாய் அகராதி என்றும் அழைக்கப்படுகின்றது. சுமார் 58,500 சொற்களைக் கொண்ட இவ் வகராதியே தமிழ் மொழியில் உள்ள எல்லாச்சொற்களையும் அடக்க முயன்ற முதலாவது அகராதி என வையாபுரிப் பிள்ளை (1956) கூறுகின்றார். 1862-இல் உவின்ஸ்லோ பதிப்பித்த அகராதியும் யாழ்ப்பாணத்து அமெரிக்க மிஷன் சார்பிலேயே தொகுக்கப் பட்டது. 1910-இல் வெளிவந்த கதிரவேற் பிள்ளை அகராதி ஒரு பெரு முயற்சி யாகும். இதில் 63,900 சொற்கள் இடம் பெற்றுள்ளன. சொற்பொருள் விளக்க மேற்கோள்களும் கொடுக்கப்பட்டுள்ளன. 1914ல் அ. குமாரசாமிப்பிள்ளை என்பவர் இலக்கியச் சொல் அகராதி ஒன்றினை வெளியிட்டார்.இது 1500 சொற்களைக் கொண்ட சிறு அகராதி எனினும் ஏனைய அகராதிகளில் காணப்படாத சொற்கள் இதில் இடம் பெற்றுள்ளன. சுவாமி ஞானப்பிரகாச ரின் சொற்பிறப்பு ஆராய்ச்சி முயற்சி களும் இங்குக் குறிப்பிடத்தக்கது. இவரது ஆய்வுகளில் விஞ்ஞான முறை முற்றிலும் கடைப்பிடிக்கப் படாவிடி னும் 1938-இல் வெளிவந்த அவரது தமிழ்ச் சொற்பிறப்பு அகராதி ஒரு குறிப்பிடத் தகுந்த முயற்சியாகும்.

ஈழத்து நவீன தமிழ் இலக்கிய வரலாறு 19 - ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியில் இருந்து தொடங்குகின்றது. தமிழின் முதல் நாவலான வேதநாயகம் பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரம் வெளிவந்து பதினைந்து ஆண்டுகளில் ஈழத்து முதலாவது தமிழ் நாவலான சித்தி லெப்பையின் 'அசன்பே கதை' 1895-இல் வெளிவந்தது. இன்று வரை பல நூற்றுக்கணக்கான தமிழ் நாவல்கள் இலங்கையில் வெளி வந்துள்ளன. 1930களில் இருந்து ஈழத்தில் சிறுகதை இலக்கியம் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இன்று குறிப்பிடத் தகுந்த சிறு கதையாளர் பலர் ஈழத்தில் உள்ளனர். ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் வரலாறு 1940களில் இருந்து தொடங்குகின்றது. இன்று தமிழகத்தை விட ஈழத்திலேயே நவீன தமிழ்க்கவிதை முதிர்ச்சி பெற்றிருக்

கின்றது என்பதைத் தமிழக விமர்சகர் பலர் ஒப்புக் கொண்டிருக்கின்றனர். நவீன தமிழ் இலக்கிய விமர்சனத்தின் வளர்ச்சியிலும் ஈழத்தவர்களின் பங்களிப்பு முக்கியமானது. தமிழகத்தில் வையாபுரிப் பிள்ளை தொடக்கிவைத்த அறிவியல் ரீதியிலான இலக்கிய நோக்கு 1960-களில் இருந்து இலங்கையிலேயே உயர்நிலை அடைந்தது எனலாம். இவ்வகையில் கைலாசபதி, சிவத்தம்பி, தளையசிங்கம் போன்றோரின் நவீன விமர்சன முயற்சிகள் தமிழக விமர்சனப் பார்வையிலும் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தி இருப்பதை அவதானிக்க முடிகின்றது. தமிழகத்தைப் போல் ஈழத்தில் தமிழ் இலக்கியம் இன்னும் வர்த்தக மயமாகாமல் இருப்பது ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் ஒரு குறிப்பிடத் தக்க அம்சமாகும். கால உணர்வும் சமூகப் பிரக்ஞையும் இன்றைய ஈழத்து இலக்கியத்தின் பிரதான பண்பாக இருப்பதற்கு வர்த்தகமயமாகாமல் இருப்பது ஒரு முக்கியக் காரணம் என லாம். ஈழத்து நவீன தமிழ் இலக்கியம் தற்காலத்திய தமிழ் மொழியை வளப் படுத்தி இருக்கின்றது என்பதில் ஐயம் இல்லை.

உசாத்துணை

1. ஏசுதாசன், சி. (1979). ''பேச்சுத்தமிழ்: இலங்கையிலும் தமிழகத்திலும்'' மொழி யியல். தொகு. 2. எண். 4. பக். 65-88.

2. கணேசலிங்கன், செ. (1965). நீண்ட பயணம் சென்னை : பாரி புத்தக நிலையம்.

3. குணவர்த்தன, ஆர். ஏ. எல். எச். (1985) ''சிங்கத்தின் வழிவந்தோர்; வரலாற்றிலும் வரலாற்றியலிலும் சிங்கள உணர்வு'' இலங்கையில் இனத்துவமும் சமூக மாற்றமும் தொகுப்புநூல். சமூக விஞ் ஞானிகள் சங்கம். கொழும்பு, பக்.62-118.

4. கைலாசபதி, க. (1985) ''தமிழரிடையே மொழி, பண்பாடு பற்றிய உணர்வு'' இலங்கையில் இனத்துவமும் சமூக மாற்றமும்- பக். 181-195,

5 சேனக பண்டார நாயக்க (1985) ''இலங்கை மக்கள் வசிப்பிடமாதல்: தேசியப் பிரச்சினை, வரலாறு, இனம் தொடர்பான சில கேள்விகள்'' இலங்கையில் இனத் துவமும் சமூக மாற்றமும்- பக்.1-23.

6. தேவராஜ், பி. (1985) ''இலங்கையின் இந்தியத் தமிழர் : தனித்துவ உறுதிப் பாடும் இனங்களுக்கிடையிலான பரஸ்பரச் செயற்பாடும்'' இலங்கையில் இனத் துவமும் சமூக மாற்றமும் - பக். 223-246.

7. நடராசா, க. செ. (1982) ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி கொழும்பு: கொழும்புத் தமிழ்ச்சங்கம்.

8. நுஃமான், எம்.ஏ (1979). மட்டக்களப்பு முஸ்லீம் தமிழ்: ஒரு சொற் தொகை ஆய்வு வெளியிடப்படாத முதுமாணிப் பட்டத்துக்கான ஆய்வுக் கட்டுரை. யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணப் பல் கலைக் கழகம்.

9. ———(1984). மட்டக்களப்பு முஸ்லீம் தமிழில் அரபுக் கடன் சொற்கள் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் குறுகிய கால ஆய்வு உதவித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளபட்ட ஆய்வு. : தமிழ்ப்பல்கலைக் கழகம். தஞ்சாவூர்.

10. பூலோக சிங்கம் பொ. (1974). ''ஈழத்துத் தமிழ்இலக்கியம் '18ஆம் நூற்றாண்டு வரை' நான்காவது அனைத்துலகத் தமிழா ராய்ச்சி மகாநாட்டு நினைவு மலர், யாழ்ப்பாணம்.

11. விபுலானந்தர், சுவாமி, (1973), "ஈழ மண்டலத் தமிழும் சோழமண்டலத் தமிழும்" இலக்கியக் கட்டுரைகள், கொழும்பு : கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

12. வேலுப்பிள்ளை, ஆ. (1986). தொடக்க கால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும்" தொடக்கப் பேருரை, யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

13. வையாபுரிப் பிள்ளை, எஸ். (1956). இலக்கியச் சிந்தனைகள். சென்னை: பாரிநிலையம்.

14. Kearney, Robert N. (1978) *"Language and the Rise of Tamil Separatism in Sri Lanka"* in Asian Survey vol. VIII No. 5. pp. 521-534.

15. Kumari Jayawardena (*1984*). *"Ethnic consciousness in Sri Lanka: continuity and change" in* Sri Lanka The Ethnic conflict (Myths, Realities and perspectives) Committee for Rational Development New Delhi: Navrang Publishers.

16. Ragupathy, P. (*1986*) *Tamil Social Formation in Sri Lanka A Historical Outline* Madras: Institute of Research and Development.

17. Sanmugadas A. (*1976*). *"Some features of Batticuloa Dialect of Tamil"* a paper read at the Batticuloa Tamil Conference Seminar organized by IATR Sri Lanka unit.

18. ——(*1979*) *"some Aspects of the Tamil Spoken in Sri Lanka* in proceedings of the Fourth International Tamil Conference Seminar Vol. II, Jaffna.

19. Suseendira rajah, S. (*1967*) *A Descriptive Study of Ceylon Tamil* (with special Reference to Jaffna Tamil) Unpublished Ph D thesis, Annamalai University.

20. ——(*1973*) *"Phonology of Sri Lanka Tamil and Indian Tamil contrasted in* Indian Linguistics vol. 34. No 3.

21. ——(*1974*) *"Some Archaisma and peculiarities in Sri Lanka Tamil", in* Proceedings of the Fourth International Tamil Conference Seminar vol. II Jaffna.

தமிழ்க் கலை
தமிழ் 5, கலை 3,4

மலேசியாவில் தமிழ்

கி. கருணாகரன்

மலை நாடு என்று பெருமையாக அழைக்கப்படும் நாடு மலேசியா. இந்நாடு பல மொழிகளைக் கொண்ட பல இன மக்கள் சேர்ந்து வாழும் நாடு. ஒரு கோடியே நாற்பது லட்சம் மக்கள் தொகை கொண்டது இந்நாடு. இதில் ஐம்பது விழுக்காட்டினர் மலாய் இனத்தவர்; முப்பத்தாறு விழுக் காட்டினர் சீனர்கள்; பதினொரு விழுக் காட்டினர் இந்தியர்கள்; மீதி விழுக் காட்டினர் பிற இனத்தவர். இந்திய வமிசா வழியினருள் எண்பத்தைந்து விழுக்காட்டினர் தமிழ் மக்கள் ஆவர். ஏறக்குறைய பதினொருலட்சம் தமிழ் மக்கள் இந்நாட்டின் பல்வேறு பகுதி களில் வாழ்ந்து வருகின்றனர். மலேசிய நாடு இரண்டு பெரும் பிரிவுகளைக் கொண்டது. அவற்றில் ஒன்று தீபகற்ப மலேசியா எனப்படும் மேற்கு மலேசியப் பகுதி ; மற்றொன்று கிழக்கு மலேசியப் பகுதி. மேற்கு மலேசியப் பகுதியில் தான் தமிழர்கள் அதிக எண்ணிக்கையில் வாழ்கின்றனர். கிழக்கு மலேசியப் பகுதி யில் அரசாங்க அலுவல்களுக்காகச் சென்றுள்ள ஒரு சில தமிழர்களே வாழ்ந்து வருகின்றனர்.

மலேசிய நாட்டின் பல இனச்சூழல். மலாய் இனத்தவர் பெரும்பான்மைப் பிரிவினர் தற்போது பூமிபுத்திரர் (Bumi Putras) என்று குறிப்பிடப்படுபவர்கள். மற்றை யோர் பூமிபுத்திரர் அல்லாதவர் (Non-Bumi Putras) இப்பிரிவில் சீனர்களும், இந்தியர்களும் பிறரும் அடங்குவர். பூமிபுத்திரர்களுக்கு நாட்டின் பல நிலை களிலும் குறிப்பிடத்தக்க அளவிற்குச் சலுகைகள் தரப்படுகின்றன. இதனால் மலாய் இனத்தவருடைய பொருளாதார, கல்வி மற்றும் சமுதாய அமைப்பில் மிக விரைவான மாற்றமும், முன்னேற்றமும் ஏற்பட்டு வருகிறது. இஸ்லாம் தற் போது பரவலாக அன்றடாச் சமுதாய அளவிலேயே இடம் பெற்று வருவதால் பிற சமுதாயங்களும் தங்கள் தங்கள் மத ஈடுபாட்டினைப் பெருக்கி வரு கின்றன. அரசாங்க அளவில் இத்தகைய மத ஈடுபாட்டிற்குச் சலுகைகளும் உதவி களும் கொடுக்கப்படுகின்றன. ஓரள விற்கு அரசின் தற்போதைய கொள்கை கள், பல இனச்சூழல்களுக்குத் தகுந்தாற் போல் சில தொடர்புகளை உருவாக்கத் துணை புரிந்து வருவதைப் பார்க்க முடிகிறது.

மலேசிய நாட்டின் பன்மொழிச் சூழல்

ஆஸ்ட்ரோ - ஏசியாடிக் மற்றும் ஆஸ்ட்ரோனேசியன் ஆகிய மொழிக் குடும்பங்களைச் சார்ந்த மொழிகள் இந் நாட்டின் பல்வேறு இனப் பிரிவினரால் பேசப்பட்டு வருகின்றன (ஆஸ்மா, 1981). இவற்றுள் பெரும்பாலான மொழிகள் எழுத்து வழக்கில்லாதவை; பழங்குடி மக்களால் பேசப்பட்டு வருபவை. பழங்குடி மொழிகள் கிழக்கு மலேசியாவில்தான் அதிக அளவில் வழக்கிலுள்ளன. பல மொழிகளின் பயன்பாட்டால் **இருமொழி வழக்கு (Bilingualism)** மற்றும் **பலமொழி வழக்கு (Multilingualism)** நடைமுறையில் இருந்து வருகின்றன. குறிப்பாக, மலாய், சீனம், தமிழ் ஆகிய மொழிகளுக்கிடையே இருமொழி மற்றும் மும்மொழி வழக்கு நடைமுறையில் இருந்து வருகின்றது.

'பஹாஷா மலேசியா' **(Bahasa Malaysia)** எனப்படும் மலாய் மொழிதான் இந்நாட்டின் பெரும்பான்மை மொழி; ஆட்சி மொழி; கல்விமொழி. ஆகவே, அனைத்துப் பிரிவு மக்களும் பெருமளவில் பல்வேறு சமுதாயப்பணி களுக்குப் பயன்படுத்தும் மொழியும் மலாய் மொழியே. சீனமொழி அப் பிரிவினரிடையேயும் பள்ளிகளிலும், பல் கலைக்கழகங்களிலும் மட்டுமே பயன் பாட்டில் உள்ளது. இந்தியரிடையே பரவல் செய்தித்தொடர்புக்கான பெரும் பான்மை மொழி தமிழ் மொழியே. இந்திய வமிசா வழியினருள் பல்வேறு பிரிவினர் இருந்தாலும் அனைவரும் தமிழ் மொழியைப் பயன்படுத்தியே வருகின்றனர். எனினும் இந்திய ரிடையே ஆங்கில மொழியின் பயன் பாடும் செல்வாக்குப் பெற்ற நிலை யிலேயே உள்ளது.

இன்று மலாய் மொழி கல்வித்துறை, ஆட்சித்துறை, பரவல் செய்தித் தொடர்புத்துறை, சட்டத்துறை என அனைத்துத்துறைகளிலும் பயன்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டு மிகச் சிறப்பான முறையிலே செயல்படுத்தப்பட்டும் வருகிறது. இம்மொழி நடைமுறைக்கு ஏற்ற, ஆற்றல் மிக்க மொழியாக ஆக்கப்பட்டுள்ளது. பயிற்று மொழியாக எல்லா நிலைகளிலும் இம்மொழி ஈடு படுத்தப்பட்டுள்ளது. பரவல் செய்தித் தொடர்பில் தமிழ், சீனம், ஆங்கிலம் ஆகியமொழிகளும் மலாய் மொழியோடு இணைந்து செயல்படுகின்றன. மலாய் மொழியில் வெளிவரும் நாளிதழ்கள், வார, மாத இதழ்கள் அதிக எண்ணிக்கை யுடையவையாகும். மலாய் மொழியே அதிக நேரம் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் பயன்படுத்தப் படுகிறது. எனினும் தமிழ், ஆங்கிலம், சீனம் ஆகிய மொழிகளிலும் ஒலி பரப்புகள் இடம் பெறுகின்றன. எனினும் மலாய் மொழிக்குத் தரப்படும் கால அளவு இம்மொழிகளுக்குக் கொடுக்கப்படுவதில்லை. தொலைக் காட்சியிலும் இது போன்ற நிலை யினையே காணமுடிகிறது. இதிலும் மலாய் மொழியை அடுத்துப்பரவல் செய்தித் தொடர்பில் இடம் பெறுவது சீனமொழிதான். அதனை அடுத்தே தமிழ்மொழி அமைகிறது. பிற இந்திய மொழிகளான தெலுங்கு, இந்தி, மலை யாளம் போன்ற மொழிகளின் மூலமும் அவ்வப்போது (குறிப்பாக முக்கியமான பண்டிகைகள், நிகழ்ச்சிகள் போன்ற வற்றின் போது) நிகழ்ச்சிகள் வானொலி மற்றும் தொலைக்காட்சியில் ஒலி-ஒளி பரப்பப்படுகின்றன. இரு மொழி மற்றும் பலமொழி வழக்கில் அதிகம் இடம்பெறுவது மலாய் மொழி; இந்தி

யருக்கிடையே இது போன்ற சூழலில் பயன்படுத்தப்படுவது தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளாகும்.

அரசாங்க அறிவிப்புகள், அறிக்கைகள், தகவல்கள் போன்றவை அனைத்தும் ஆட்சி மொழியான மலாய் மூலமே வெளியிடப்படுகின்றன. பிற மொழிகளில் அவை வெளியிடப்படுவதில்லை. எனினும் உலகமொழியாகக் கருதப்படும் ஆங்கில மொழியின் மூலம் வெளிநாட்டுத்தொடர்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆங்கிலம் பள்ளிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் கற்பிக்கப்பட்டு வருகிறது.

தமிழ் மொழியின் பயன்பாடு பதினொரு லட்சம் பேருக்குத் தாய்மொழியாகத் தமிழ் மொழி அமைந்திருந்தாலும அதனுடைய வெளிப்பயன்பாடு மற்றும் அதிகாரபூர்வமான பயன்பாடு குறைந்த அளவினதேயாகும். தொடக்கக் காலத்தில் தமிழ் மொழி பேசப்பட்டு வந்ததோடு தமிழ்ப் பத்திரிகைகள் போன்றவற்றைத் தமிழ் மக்கள் அனைவரும் வாங்கிப் படித்து வந்துள்ளனர். தொடக்கத்தில் தமிழர்கள் பெரும்பாலும் மலேசியாவின் நாட்டுப்புறங்களில் குறிப்பாக, இரப்பர் தோட்டங்களில் பணியாற்றி வந்தனர். அத்தோட்டங்களில் பணியாற்றியவர்கள் பெரும்பாலானோர் தமிழர்களாக / இந்தியர்களாகவே இருந்தனர். இதனால் அவர்களுக்கிடையே தமிழ் மொழியின் பயன்பாடு பெருகியிருந்தது. காலப்போக்கில் ஓரளவு படித்த இளைஞர்கள் நகர்ப்புறங்களுக்குச் சென்று அரசாங்க வேலை, தனியார் துறை வேலை ஆகியவற்றில் பணியாற்றத் தொடங்கினர். இதனால் தமிழர்களின் நகர்ப்புறக் குடியேற்றம் ஓரளவு அதிகரித்தது. நாட்டுப்புறக் குடியிருப்பும் குறைந்தது. நகர்ப்புறங்களில் குடியேறிய தமிழர்கள், ஓரளவு கல்வியறிவு பெற்றோர், பல்வேறு அரசுத் துறைகளில் பணிக்கு அமர்ந்தோர் இவர்களனைவரும் தேசிய மொழியான (National Language) பஹாஸா மலேசியாவைக் கற்றுக் கொண்டு அன்றாடச் செய்திப் பரிமாற்றத்தில் இம்மொழியையே அதிகம் பயன்படுத்தத் தொடங்கினர். மேலும், தொடக்கக் காலத்தில் ஆங்கிலக் கல்வியறிவு அதிகமாகக் கிடைத்தது. பெரும்பாலான இந்தியர்களுக்கு நகர்ப் புறங்களுக்கு வந்த பின் ஆங்கில மொழியைப் பள்ளிகளில் நன்கு கற்றுக்கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டது. கோலாலம்பூர் போன்ற பல நகரங்களிலும் அரசு அலுவல் மற்றும் பிறதுறை அலுவல்களில் இருப்போர் (தமிழர்கள்) அன்றாடச் செய்திப் பரிமாற்றத்திற்கு வீட்டிற்கு உள்ளேயேயும் வீட்டிற்கு வெளியேயும் (Inside and outside home) ஆங்கிலத்தையே பெருமளவில் பயன்படுத்தலாயினர். இவர்களுக்கு மலாய் மொழி நாட்டு மொழியாயிற்று; ஆங்கிலம் வீட்டு மொழியாக அமைந்த நிலையைப் பார்க்கலாம். இதனால் இவர்களிடையே தமிழ்மொழியின் பயன்பாடு மிகக் குறைந்த அளவிலேயே இருக்கக் கூடிய சமுதாய மொழியியல் சூழல் ஏற்பட்டது. அதுவும் குறிப்பாக இளைய தலைமுறையினர் தமிழ் பேசுவது குறைந்தது. பள்ளிகளில் தமிழ் மொழி கற்றுத்தரப்பட்டாலும் பல்வேறு சமுதாயக் காரணங்களால் அதனைப் படிக்க வருவோரின் எண்ணிக்கை குறையத் தொடங்கியுள்ளது. இன்று மலேசியாவில் 'தமிழ்ப்பள்ளிகள்' ஆயிரத்து ஐந்நூற்றுக்கு மேல் இயங்குகின்றன. இப்பள்ளிகளில் தமிழ்க்

குழந்தைகளே படிக்கின்றனர். இவர்களுக்குத் தமிழ் மொழி கற்றுத்தரப்படுகிறது. எனினும் இப்பள்ளிக்கு வந்து சேரும் மாணவர்கள் எண்ணிக்கை ஆண்டு தோறும் குறைந்து வருவதை அந்நாட்டுக் கல்வித்துறையின் புள்ளி விவரம் காட்டுகிறது. அதே நேரத்தில் தேசியப் பள்ளிகளில் சேரும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை கூடி வருவதையும் இப்புள்ளி விவரம் தெரிவிக்கின்றது. மலாய் மொழியையும் மலாய் மொழியில் கற்பதையும் இன்றைய தமிழ் இளைஞர்கள் விரும்பி வரவேற்பதைப் பார்க்க முடிகிறது. வேலை வாய்ப்புப் போன்ற சில சமுதாயப் பிரச்சனைகளால் இது போன்ற மனப்பான்மை (attitudes) இவர்களிடையே அதிகமாகி வருகிறது என்றால் அது மிகையாகாது. மேலும் தேசிய மொழியின் மூலமே உயர் கல்வியானது பல்கலைக்கழகங்களிலும் தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் கற்பிக்கப்படுவதால் தொடக்கத்தில் தமிழ்ப் பள்ளிகளில் படித்துவிட்டு, பிறகு மலாய் மொழியில் இரண்டாம் நிலைக்கல்வியையும், உயர் கல்வியையும் கற்பது என்பது தமிழ்க் குழந்தைகளுக்கு அவ்வளவு எளிதாக அமையாது என்பதால் தொடக்கக் கல்வியையே மலாய் மொழியில் படிப்பது எதிர் காலத்திற்கு நல்லது என்ற எண்ணத்தில் பெற்றோர்களும், மாணவர்களும் இது போன்ற கல்விச் சூழலை வரவேற்கின்றார்கள்- ஏற்றுக் கொள்கின்றார்கள். ஆகவே தான் தேசியப்பள்ளிகளில் படிக்க விழையும்-வந்துசேரும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை கூடி வருகிறது.

தொடக்கப் பள்ளிகளில் குறிப்பாகத் தமிழ்ப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் கிராமப்புறத்து மாணவர்களாகவே இருக்கின்றனர். உயர்நிலைப் பள்ளிகளில் மலாய் மொழியே பயிற்று மொழி. தமிழ்மொழி விருப்பப்பாடமாகவே அங்குக் கற்பிக்கப்படுகிறது. அதுவும் ஒரு பள்ளியில் தமிழ் படிக்க விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையானது குறைந்த அளவு பதினைந்து இருபது பேர் இருந்தால் மட்டுமே அவர்களுக்குத் தமிழ் மொழி கற்றுத் தரப்படும் சூழல் உள்ளது. இது கல்வித் துறை விதி. அவ்வாறு இல்லாத நிலையில் அப்பள்ளியில் தமிழ்மொழி கற்றுத் தரப்படுவதில்லை. ஆகவே தமிழைப் படிக்க விரும்பும் மாணவர்களுக்கு உயர்நிலைப் பள்ளிகளில் வாய்ப்பு மேன் மேலும் குறைந்து வருகிறது. மேலும், இது போன்ற பள்ளிகளில் தமிழ் மொழியைக் கற்பிக்கத் தமிழில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதில்லை. அதுபோன்ற பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் அங்குக் கிடைப்பதில்லை. ஆகவே, இப்பள்ளிகளில் சேரும் மாணவர்கட்குத் தமிழ்மொழியைக் கற்பிப்பவர்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட பிற துறை ஆசிரியர்களே. ஏதோ அவர்களுக்குத் தெரிந்த அளவில் மட்டுமே அவர்களால் தமிழ் மொழியைக் கற்பிக்க முடிகிறது. இதனால் இப்பள்ளிகளில் தமிழ் கற்கும் மாணவர்களுக்கு முறையான சீரான தமிழ்க் கல்வி கிடைப்பதில்லை. இது போன்ற குறைகள் நீக்கப்பட சில தனியார் சேவை நிறுவனங்களும், தனி நபர்களும், தமிழ் ஆர்வலர்களும் ஓரளவுக்கு முன்னின்று தனிப்பட்ட முறையில் தமிழ் வகுப்புகளை நடத்தி இறுதியாண்டுத்தேர்வு எழுதும் மாணவர்களுக்குக் கற்பிக்கிறார்கள். இதில் சேர்ந்து பயிற்சி பெறும்

மாணவர்களில் ஒரு சிலரே தேர்ச்சி பெறுகிறார்கள். இத் தேர்வில் பயிற்சி பெற்றால்தான் அவர்கள் பல்கலைக் கழகங்களில் சேரும்போது தமிழை ஒரு பாடமாக எடுத்துக் கொள்ளத் தகுதி பெற்றவர்களாவார்கள். உயர்கல்வி நிலையங்களில் அதாவது பல்கலைக் கழகத்தில் (மலேசியப் பல்கலைக்கழகத்தில் மட்டுமே) தமிழ் மொழி கற்றுத் தரப்படுகிறது. பி. ஏ. படிக்கும் மாணவர்கள் இந்தியவியல் துறையில் சேர்ந்து தமிழைச் சிறப்புப் பாடமாகப் படிக்க வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது. பி. ஏ. முதலாண்டில் நான்கு பாடங்களும், இரண்டாம் ஆண்டில் ஐந்து பாடங்களும், மூன்றாம் ஆண்டில் ஆறு பாடங்களும் அவர்கள் படிக்க வேண்டும். பாடத்திட்டம் மிகப் பரந்த நோக்கில் (broad based) கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், படிக்க வரும் மாணவர்கள் பெற்றுள்ள தமிழ் அறிவைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது இப்பாடத்திட்டம் அவர்களது தகுதிக்கு அதிகமானது என்றே தோன்கிறது. தமிழ் மொழியமைப்பையும், இலக்கணத்தையும் கற்றுத்தரும் ஆசிரியர் தொடக்க நிலை இலக்கணத்திலிருந்தே அவர்களுக்குக் கற்பித்து ஆக வேண்டிய கட்டாயச் சூழ்நிலை ஏற்படுகிறது. தமிழ் இலக்கியப்பாடங்களைப் பொறுத்தவரை, குறிப்பாக சமய இலக்கியம், தற்கால இலக்கியம் ஆகியவற்றில் ஓரளவிற்கு மாணவர்களிடையே ஈடுபாடு இருப்பதைப் பார்க்க முடிகிறது. இதற்கான முக்கியக் காரணம் சமுதாயச் சூழ்நிலையே ஆகும். அந் நாட்டில் சமீப காலமாக ஏற்பட்டு வருகின்ற சமய ஈடுபாடு - குறிப்பாக இஸ்லாமியம் மற்றும் முகம்மதியர்களிடையே உச்சத்திற்கு வந்துள்ள நிலையில் - இந்தியர்களிடையேயும் இந்து சமய உணர்ச்சி அதிகரிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தி வருகிறது. இதனால் உந்தப்பட்ட தமிழ் மக்கள்/ இந்தியர்கள் நகர்ப்புறங்களிலும், தோட்டப் புறங்களிலும், மாரியம்மன், முருகன் போன்ற கடவுள்களுக்குக் கோயில்களைக் கட்டி, அக்கோயில்களில் பல்வேறு சமயங்களில் சமயச் சொற்பொழிவுகள் போன்றபல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றனர். இதனால் தமிழ்மக்களிடையே தற்போது இந்துமத ஈடுபாடு அதிகரித்து வருகிறது. சமய ஈடுபாட்டால் தேவாரம், திருவாசகம், திருமந்திரம் போன்ற பல்வேறு திருமுறைகள் பற்றிய கருத்துக்கள் இச்சமயச் சொற்பொழிவுகளின் மூலம் பரப்பப்பட்டு வருகிறது. இதனால் பல்கலைக்கழகத்துக்கு வரும் மாணவர்கள் சமய இலக்கியத்தில் அதிக ஈடுபாடு கொள்கின்றனர். அவற்றை விரும்பியும் படிக்கின்றனர். சிறப்பாகத் தேர்ச்சியும் பெறுகின்றனர். தற்கால இலக்கியத்திலும் ஓரளவு இளைஞர்களிடையேயும் எழுத்தாளர்களிடையேயும், மாணவர்களிடையேயும் ஈடுபாடு காணப்படுகிறது. இன்றைய சமுதாயப்பிரச்சினைகள் பலவற்றை இளம் எழுத்தாளர்கள், சமுதாய மற்றும் அரசியல் வாதிகள் தமிழில் எழுதி வெளியிட்டு வருகின்றனர். இந்த முயற்சி தமிழ்ப் பத்திரிகைகளால் (நாளிதழ்கள் – மூன்று வார, மாத இதழ்கள் -6) ஊக்கப் படுத்தப்பட்டு இது போன்ற இளைஞர்களது எழுத்தோவியங்கள் வெளிவருகின்றன: சிலரது இலக்கியப் படைப்புகள் சிறு சிறு நூல்களாகவும் வெளியிடப்படுகின்றன. ஆகவே, தமிழ் இலக்கியப்பாதையில் தமிழ் மக்களது, குறிப்பாக இளைஞர்களது முயற்சி

பயன் அளிப்பதாக உள்ளதைக் காண முடிகிறது. பத்திரிகைகள் மற்றும் சேவை நிறுவனங்கள் அவ்வப்போது எழுத்தாளர் பட்டறை, இக்கால இலக்கியம் ஆக்கம், சிறுகதைப் போட்டி, சமய இலக்கியப் போட்டி போன்ற பல்வேறு பயிற்சி வகுப்புகளையும், போட்டிகளையும் நாடு முழுவதும் நடத்தி வருகின்றன. இது போன்ற பட்டறைகளிலும் போட்டிகளிலும் இளையோர் முதல் முதியோர் வரை அனைத்துப் பிரிவினரும் பங்கேற்க முடிகிறது. இவ்வகையிலும் அவர்களது தற்கால இலக்கிய ஈடுபாடு மேலோங்கி வருகிறது எனலாம். தமிழ்க் கலைகள் தமிழ் இசை, மற்றும் தமிழ் நாடகம் ஆகியவற்றிலும் ஈடுபாடு ஓரளவிற்குத் தமிழ் மக்களிடையே அதிகமாகி வருகிறது. இளைஞர்கள் வானொலி, தொலைக் காட்சி ஆகியவற்றின் மூலம் தமது படைப்புகளை வெளிக்கொணரும் சூழ்நிலை அவ்வப்போது காணப்படுகிறது. முக்கியமான நிகழ்ச்சிகள், பண்டிகைகள் (தீபாவளி, பொங்கல், தைப்பூசம்) ஆகியவற்றை முன்னிட்டு நாட்டின் பல பகுதிகளில் இசை நிகழ்ச்சிகளும் நாடகங்களும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. அதோடு மட்டுமன்றி தமிழகத்திலிருந்து பல்வேறு கலைஞர்களை வரவழைத்து இசை அரங்கு, நாடகம், பேச்சு போன்றவற்றிற்கு ஏற்பாடு செய்து தமிழகக் கலைகளில் தங்களுக்குள்ள ஈடுபாட்டினை ஓரளவிற்கு வளர்த்துக் கொண்டு வருகின்றனர். இதற்குத் தமிழ்ப் பத்திரிகைகள், இதழ்கள் ஆகியவை பெரிதும் தொண்டாற்றி வருவதோடல்லாமல் இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்கும், ஆர்வத்திற்கும் ஊக்கமூட்டியும் வருகின்றன என்றே சொல்ல வேண்டும். இதற்குப் பின்னணி தற்போதைய அரசியல் சூழ்நிலையே என்று கூற முடியும்.

பரவல் செய்தித் தொடர்பில் தமிழ்ப் பயன்பாடு அதிகமாகி வரும் சூழ்நிலை உருவாகிவருகிறது. பத்திரிகைகளின் எண்ணிக்கை கூடியுள்ளது. வானொலியில் தமிழ் நிகழ்ச்சிகள் அதிகரிக்கப்பட்டு அதன் அமைப்பு முறையும் அவ்வப்போது பயனுள்ள முறையில் மாற்றப்பட்டு வருகிறது. தொலைக்காட்சியில் தமிழுக்கு அதிக இடம் இல்லையென்றே சொல்ல வேண்டும். தமிழ்ச் செய்திகளுக்கு ஒரு நாளுக்குப் பத்து நிமிடமும், வாரம் ஒரு முறை இந்திய நிகழ்ச்சிக்கு என இருபத்தைந்து நிமிடமும் தரப்படுகின்றன. முக்கியமான திருவிழா மற்றும் பண்டிகை நாள்களில் சிறப்பு நிகழ்ச்சிகள் ஒரு மணி நேரம் காட்டப் படுகின்றன. பொது இடங்களில் செய்யப்படும் அறிவிப்புகளில் வைக்கப் படும் அறிக்கைப் பலகை போன்றவற்றில் தமிழ் மொழி இடம் பெறுவதேயில்லை என்றே சொல்ல வேண்டும். சில அபாயமான பணிகளைச் செய்யுமிடங்களிலும் அபாயமான கருவிகள் வைக்கப்பட்டுள்ள இடங்களிலும் மட்டுமே தமிழ் மொழி அறிக்கைப் பலகைகள் காணப்படுகின்றன. ஆட்சி மொழி, சட்டமொழி, அறிவியல் மொழி என எல்லா நிலைகளிலும் மலாய் மொழியே அதிகார பூர்வமான மொழியாக அமைந்து ஆட்சி செலுத்துவதால் தமிழின் பயன்பாடு நாளுக்கு நாள் குறைந்தே வருகிறது. இளைஞர்களுடைய எதிர்கால முன்னேற்றம் கருதிய மனப்பாங்கினால் தமிழ்க்கல்வி பெறும் நிலையில் ஆர்வம் குறைந்து வருகிறது. ஒரு சில துறையினரின்

குறிப்பாகக் கலைத்துறை, பத்திரிகைத்துறை, அரசியல் துறை, இவற்றைச் சார்ந்தோரின் ஈடுபாட்டால் தமிழ்ப் பயன்பாடு இத்துறைகளில் ஓரளவிற்குத் தொடர்ந்து இருந்து வருகிறது. ஆனால், காலம் செல்லச்செல்ல இந்த நிலையில் பல்வேறு துறைகளில் தமிழ்ப்பயன்பாடு குறையத்தான் செய்யும். பள்ளிகளில் தமிழ்க் கல்வி கட்டாயப் பாடமாக ஆக்கப்பட்டுத் தமிழ் மாணவர்கள் முறையாகத் தமிழ் படித்தாலொழிய கல்வித்துறையில் தமிழ்ப் பயன்பாடு அதிகரிக்காது. தற்போதைய நிலையில் தமிழ்ப் பண்பாடு, தமிழ்க்கலைகள், இந்து சமய ஈடுபாடு ஆகியவையே தமிழ்ப் பயன்பாட்டினை ஓரளவிற்கு நிலை நாட்டி வருகிறது. பண்பாட்டின் பிற துறைகளிலும் எதிர்காலத்தில் ஈடுபாடு குறையும் நிலையிலும், தமிழகத்திலுள்ள சந்ததியினர் தொடர்பு எதிர்காலத்தில் குறையும் நிலையிலும் தமிழ்ப் பயன்பாடு மிகவும் குறைந்து விடக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.

தமிழ்ப் பயன்பாட்டில் பத்திரிகைகள் புதுச் சொல்லாக்கத்தில் ஓரளவு சிறப்பான பணியை ஆற்றி வருகின்றன எனினும் நிலைபேறாக்கம் செய்யப்பட்ட தமிழ்ச் சொற்கள் பரவலாக இல்லாத நிலையில் தமிழ் பேசும் நாடுகளில் பல்வேறு புதுச்சொற்கள் உருவாக்கபட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப் படவேண்டிய கட்டாயம் ஏற்பட்டு வருகிறது. இதனை மலேசியத் தமிழ்ப் பயன்பாடு நமக்குக் காட்டுகிறது. ஆகவே அங்குள்ள தமிழ்வழக்கும் நாம் வெளியிடும் அகராதிகள், பேரகராதிகள், தமிழ் அமைப்பு விளக்கங்கள் ஆகியவற்றில் கொண்டு வரப்பட்டு அதன் மூலம் ஒரு நிலையான வழக்கு பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படுதல் தமிழ் கூறும் நல்லுலகத்திற்குப் பயனளிக்கும்.

இன்றைய இளைஞர்கள் இனி தாங்கள் அந்நாட்டின் முழுமையான குடிமக்களாகவே இருக்கப் பெரிதும் விரும்புகின்றனர். இந்தியா திரும்பி வரும் எண்ணம் சிறிதேனும் இல்லை. இதற்குக் காரணம் மலேசியாவின் வளம் தங்கள் வாழ்க்கைக்குச் சிறந்த வழியினை ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதேயாகும். இதனால் ஒருகாலத்தில் இந்தியாவுக்குத் திரும்பி விடலாம் என்றிருந்த மக்களும் தங்களது முடிவினை மாற்றிக் கொண்டுவிட்ட நிலையினை அவர்களது மனப்பாங்கு காட்டுகிறது. ஆகவே மலாய் நாட்டில் தொடர்ந்து வாழ என்னென்ன வழிமுறைகள் உகந்தனவோ அவற்றைப் பின்பற்றத் தொடங்கி விட்டனர் தமிழ் மக்கள். அவற்றிலே மொழிப் பயன்பாடும் ஒன்று. மலாய் இருந்தால் எல்லாவற்றிக்கும் உரிய முறையில் அதனைக் கற்க வாய்ப்புக்கள் இல்லாத நிலை — அரசியல் அமைப்பில் இன்று இது பற்றி எல்லாம் துணிவாகப் பல்வேறு அமைப்புகளிலே எடுத்துச் சொல்ல முடியாத நிலை - இது போன்ற சூழ்நிலைகள் இருந்து வருவதால் தமிழ்ப் பயன்பாடு வளரும் — வாழும் என்பதற்குச் சரியான அறிகுறிகள் தென்படவில்லை என்றே சொல்ல வேண்டும்.

துணை நூற்பட்டியல்

1. Asmah Hajee Omar *(1982). Language and Society in Malaysia.* Kualalumpur: DBP.

2. Alisjahbana, T.S. *(1974) Modernisation of Malaysian and* Indonesian Languages. The Hague : Mouton.

3. Karunakaran, K. *(1983).* Sociolinguistic Patterns of Language Use, Annamalainagar: AITLA.

4. ————*(1985). Malainattil makkal tamil. Mozhiyiyal* 8.1 Annamalainagar. All India Tamil Linguistics.

5. Rubin, J. etal (1974). *Can Language be planned?* Association Honolulu: HUP.

மேற்கு மலேசியாவில் தமிழ்

ரெ. இராஜு*

மேற்கு அல்லது தீபகற்ப மலேசியாவின்[1] பல இனச்சமுதாயத்தில் (Plural Society) தமிழ் ஒரு முக்கிய மொழியாக இன்று விளங்கி வருகின்றது. இந்நாட்டின் இன அல்லது சமூக அடிப்படையைக் கொண்டு காண்போமானால், தமிழ் இந்நாட்டில் மலாய், சீனம் ஆகிய மொழிகளுக்கு அடுத்த மூன்றாவது இடத்தை வகிக்கின்றது. 1985-ஆம் ஆண்டின் மக்கள்தொகை மதிப்பீட்டின் படி, இந்நாட்டின் மக்கள் தொகையில் இந்தியர்களின் எண்ணிக்கை 13 இலட்சம் பேர் (சுமார் 10.0 விழுக்காட்டினர்). இவர்களில் 80.0 விழுக்காட்டினர் அல்லது சுமார் 10 இலட்சம் பேர் தென்னிந்திய வம்சா வழியைச் சார்ந்த தமிழர்கள்.[2] ஆகவே, எண்ணிக்கையைக் கொண்டு நோக்கும்போது சுமார் 10 இலட்சம் பேர் தமிழ் பேசுபவர்களாக இருக்கின்றனர். இதிலிருந்து வெளிநாடுகளில் இலங்கைக்கு அடுத்து மலேசியாவில்தான் தமிழ் மிகுதியானவர்களின் மொழியாக இருந்துவருகிறது. தவிரவும், தமிழின் செல்வாக்கு/தாக்கம் (dominarce / influence) மற்ற சிறுபான்மைப் பிரிவினர்களாகிய மலையாளிகள், ஆந்திரர்களிடையேயும் கூடப் பரவியிருக்கிறது. இவர்களில் பலர் தமிழைப் பேசவும் வாசிக்கவும் எழுதவும் தெரிந்திருக்கின்றனர் என்பதுடன் பலரின் வீட்டு மொழியாகவும் இருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இனி, வரலாற்றுப் பின்னணியில் இந்நாட்டில் தமிழின் வளர்ச்சியைச் சுருக்கமாகக் காண்போம்.

வரலாற்றுப் பின்னணி இந்நாட்டுடன் தமிழுக்கு உண்டான தொடர்பினை மூன்று காலக் கட்டங்களாகப் பிரிக்கலாம். அவை : ஆங்கிலேயர் ஆட்சிக்கு முற்பட்ட காலக் கட்டம், ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்ட காலக் கட்டம்

1. 1962-இற்கு முன்னர் இது மலாயா என்று வழங்கிவரப் பட்டது. அதன் பின்னர், அதன் கிழக்குப் பகுதியிலுள்ள போர்னியோத் தீவின் சாபா, சரவாக் ஆகிய மாநிலங்களுடன் இணைந்து மலேசியா என்று பெயர் மாற்றம் பெற்றது. 1965-இல் சிங்கப்பூர் மலேசியாவின் கூட்டமைப்பினின்று பிரிந்து தனி நாடாக ஆயிற்று.

2. 1985-ஆம் ஆண்டு புள்ளி விவர அறிக்கை, புள்ளி விவர இலாகா, கோலாலம்பூர். — பக்கம், 38.

மலாயாவின் சுதந்தரத்திற்குப் பின்னரான காலக்கட்டம் ஆகியவை.

ஆங்கிலேயர் ஆட்சிக்கு முற்பட்ட காலக் கட்டம் இது பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது. இதன் தொடக்கம் கிறிஸ்தவ காலத்தின் தோற்றத்துடன் தொடங்குகிறது என்று கூடச் சொல்ல இடமுண்டு. இதைக் காட்டக் கூடிய அகச்சான்றுகள் பத்துப் பாட்டில் காணக் கிடப்பதாக ஆய்வாளர் கூறுவர். இக்காலக் கட்டத்தில் தமிழர்க்கு மலாயா அல்லது தென்கிழக்காசியாவுடன் ஏற்பட்ட தொடர்பு அவர்கள் மேற்கொண்டிருந்த கடல் வாணிகத்தோடு பின்னிப் பிணைந்தது. இந்தப் பிணைப்பு காலப்போக்கில் சில தமிழ்ச் சொற்கள், தமிழரின் சில பண்பாட்டுக் கூறுகள் முதலானவை இப்பகுதியில் வாழ்ந்த மக்களிடையே பரவக் காரணமாயிற்று. எடுத்துக் காட்டாக, கப்பல், கட்டில், மாம்பழம் மீசை, கழுதை போன்ற தமிழ்ச்சொற்கள் இங்குப்பேசப் படும் மலாய் மொழியுடன் இரண்டறக் கலந்தன. தமிழரிடையே அன்று இருந்த சில சமய நம்பிக்கைகள், சடங்குகள், பண்பாட்டுக் கூறுகள் ஆகியவை மலாய்க் காரர்களின் பண்பாட்டில் முக்கிய இடம் பெற்றன.

இந்தப் பிணைப்பு அன்று கடல் வணிகர்களாக வந்த தமிழரில் சிலர் அப்போது கடல் வாணிகத்தில் இப்பகுதியில் (தென்கிழக்காசியாவின்) புகழ் பெற்ற துறைமுகமாயிருந்த மலாக்கா நகரில் நிரந்தரமாகக் குடியேறக் காரணமாயிற்று. இந்தக்குடியேற்றம் எப்போது தொடங்கியது என்பது உறுதியாகத் தெரியவில்லை. எனினும், 14-ஆம் நூற்றாண்டில் இவ்வட்டாரத்தில் இஸ்லாம் சமயம் பரவுவதற்கு முன்னர் தோன்றியிருக்கிறது என்பது உறுதி. ஏனெனில், அந்தத் தமிழ் வணிகர்கள் அப்பகுதியில் வாழ்ந்த மலாய்க்காரர்களுடன் சமூக உறவுகளை ஏற்படுத்திக் கொண்டு மலாய்ப் பெண்டிரை மணந்து இந்துக்களாகவே குடும்ப, சமூக வாழ்க்கையை அமைத்துக்கொண்டனர். ஆலயங்களையும் எழுப்பி வழிபட்டனர். அந்தத் தொடர்பின் அடிச்சுவடாக இன்றும் சில தமிழ்க் குடும்பத்தினர் அப்பகுதியில் வாழ்கின்றனர்.[3] இந்த இந்து சமயம் தழுவிய தமிழர்களின் குடியேற்றத்திற்குப் பின்னர் முஸ்லீம் தமிழர்களின் குடியேற்றம் தொடங்கிற்று. இஸ்லாத்தின் செல்வாக்கின் காரணமாக இந்துத் தமிழர்களின் மலாய்க்காரர்களுடனான தொர்டர்பு குன்றியது. ஆனால், முஸ்லீம் தமிழர்கள் மலாய்க்காரர்களுடன்அணுக்கமான சமூக உறவுகள் வைத்துக்கொள்ள இஸ்லாம் ஒரு தொடர்புப் பாலமாக அமைந்தது. தமிழ் மூஸ்லீம்கள் தொடர்ந்து மலாய்ப் பெண்டிரை மணந்தனர்[4] இருப்பினும், மொழி அடிப்படையில் இவர்களிடையே ஒரு பெரிய பண்பாட்டு மாற்றம் நிகழ்ந்தது. எண்ணிக்கையில் சிறுபான்மையினராயிருந்த இந்த இந்து, முஸ்லீம் தமிழர்கள் காலப் போக்கில் மலாய் மொழியின் மிகுதியான தாக்கத்தின் காரணமாகத் தமிழை முற்றும் மறந்தனர். மலாய் இவர்களுடைய அன்றாட வாழ்க்கை மொழியாக ஆயிற்று.

---

3. இவர்கள் இப்போது மலாக்காச் செட்டியார்கள் என்று மலாய்க்காரர்களால் வழங்கப்படுகின்றனர். ஆனல், செட்டி நாட்டைச் சார்ந்த செட்டியார்களுக்கும் இவர்களுக்கும் எவ்விதத் தொடர்பும்இல்லை.

4. இவர்களின் சந்ததியினர் 'ஜாவி பிராணாக்கான்' எனப்படுகின்றனர்.

2. ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்ட காலக் கட்டம் இக்காலக்கட்டம் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தொடங்கியது. இக்காலக் கட்டத்தில் இந்தியாவும் மலாயாவும் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இருந்தன. மலாயாவில் ஐரோப்பியர் தங்களுடைய காலனித்துவப் பொருளாதாரத்தை (colonial economy) மேம்படுத்த விழைந்தனர். கரும்பு, மிளகு, பின்னர் ரப்பர் பயிரிட மலிவான (cheap). தன் முனைப்பு இல்லாத, அடிபணிந்து போகக்கூடிய பணியாள்கள் ஆயிரக கணக்கில் தேவைப்பட்டனர். சிறு முதலீட்டின் வழிக் கொள்ளை இலாபம் பெறும் நோக்கத்தைக் கொண்ட இந்த ஐரோப்பிய தனவான்கள் ஏற்கெனவே தாங்கள் இந்தியாவில் பெற்ற அனுபவத்தின்வழி, தங்களுடைய தேவையை நிறைவு செய்யக் கூடிய வகையிலான, ஏற்கனவே தயார்ப்படுத்தி வைக்கப் பட்டிருந்த தமிழ்க் கூலிகள் இலட்சக் கணக்கில் இருப்பதைக் கண்டு, அவர்களுக்குப் பொய்யான சில கவர்ச்சிகளைக் காட்டி இங்குத் தொழிலாளர்களாக அவர்களைக் குடியேற வைத்தனர். நூற்றுக்கணக்கான தோட்டங்களை உருவாக்கி ஒரு தோட்டப்புறத் தமிழ்ச் சமூகத்தை தோற்றுவித்தனர். இவர்களுடன் நகர்ப்புற வசதிகளைக் கவனித்துக் கொள்ள கூடிய தமிழ்த் தொழிலாளர்களையும் தருவித்து இங்குக் குடியேறச் செய்தனர். இந்தத் தமிழ்த் தொழிலாளர்களோடு, வேறு சிலரும் வணிகர்களாகவும் வெள்ளைக் காலர்' தொழில் பார்ப்பவர்களாகவும் வந்தனர். இவர்களுடன் யாழ்ப்பாணத்திலிருந்தும் கற்ற தமிழர்கள் உத்தியோகம் பார்க்கும் பொருட்டு இங்குக் குடியேறினர்.

இவ்வாறு குடியேறிய தமிழர்களில் சுமார் 80 விழுக்காட்டிற்கும் மேற்பட்டோர் தொழிலாளர்கள். இவர்களில் மிகப் பெரும்பாலோர் எழுத்தறிவே இல்லாத பாமரர். எனினும் இவர்களின் வரவால் மலாயாவில் தமிழ் ஒரு சமூக மொழியாகி நிலையான இடத்தைப் பெற்றது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தமிழின் வாயிலாகக் கல்வி 19-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து மலாயாவில் தமிழ்ப் பள்ளிகள் தோன்றத் தொடங்கின. முதலில் இப்பள்ளிகளைத் தோற்றுவித்தவர்கள் கிறித்தவ சமய இயக்கங்களை நடத்தியவர். 1811 இல் பினாங்குத் தீவிலும், 1850-ஆம் ஆண்டளவில் மலாக்காவிலும் முதல் தமிழ்ப் பள்ளிகள் தோன்றின. 1870 களில் தொடர்ந்து சில மாநிலங்களில் தமிழ்ப் பள்ளிகள் இந்தக் கிறித்தவ இயக்கங்களால் நிறுவப்பட்டன. 1930-ஆம் ஆண்டு முதல் அரசாங்கமே சில தமிழ்ப் பள்ளிகளைத் தொடங்கியது. பின்னர், தொழிளாலர்களைக் கவர்வதற்காகத் தோட்ட முதலாளித்துவம் சில தோட்டங்களில் தமிழ்ப் பள்ளிகளைத் தொடங்கின. 1923 - இல் இந்திய அரசாங்கம் தொழிலாளர் சட்ட விதியின் கீழ் மலாயாவிற்குத் தொழிலாளர்களாகக் குடியேறும் இந்தியர்களின் குழநதைகளுக்குத் தாய்மொழிக் கல்வி வழங்க வேண்டுமென்பதை வலியுறுத்தியது. இது தோட்டப் புறங்களில் தமிழ்ப் பள்ளிகள் மேலும் தோன்றுவதற்கு வழிகோலியது.

ஆலயங்களில் தமிழ்ப் போதனை நகர்ப்புறங்களில் இந்து ஆலயங்களை நடத்தும் சபாக்களும் சிலவிடங்களில் தமிழ்ப் பள்ளிகளை நிறுவி நடத்தி

வந்தன. மற்ற இடங்களில் தமிழ்க் குழந்தைகளுக்கு ஆலயங்களில் தமிழ் கற்பிக்கப்பட்டது.

எனினும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தமிழ்ப் பள்ளிகள் தொடக்கப் பள்ளிகள் அளவிலேயே இருந்தன. தமிழ் இடைநிலை, உயர்நிலைப்பள்ளிகள் தொடங்க வேண்டுமென்ற ஆர்வம் சிலரிடையே இருந்தும் இது செயல்படுத்தப்படாமலேயே போய்விட்டது, இதற்குப் பல காரணங்களைக் கூறலாம். முதலாவது, தமிழ், தொழிலாளர்('கூலி') களின் மொழியாகப் புறக்கணிக்கப்பட்டது. நடுத்தரத் தமிழ் மக்கள் இடையே, குறிப்பாக ஆங்கிலம் கற்றவர்களிடையே அதற்கு ஆதரவு கிடைக்கவில்லை. இரண்டாவது, தமிழ்க் கல்வியினால் பொருளாதாரப் பயன்பாடு இல்லாதிருந்ததால் இவர்கள் தமிழ்ப் பள்ளிகளையும் தமிழ்க் கல்வியையும் புறக்கணித்தனர். மூன்றாவது, தொழிலாளர் வர்க்கத்தினரோடு தங்களை அடையாளங் கண்டுகொள்ள விரும்பாத இந்த நடுத்தர வகுப்பினர், சமூக நிலையில் தமிழைப் பயன்படுத்துவது தங்கள் தகுதிக்குத் தாழ்ந்த ஒன்று என்று கருதினர். இதனால், பல தொடக்கப் பள்ளிகள் கூடப் பெயரளவில்தான் இயங்கி வந்தன. எனவே. தமிழ் இக்காலக் கட்டத்தில் ஓர் அந்நிய மொழியாக இருந்ததுடன் அது வளர்வதற்கான சூழ்நிலையையும் பெற்று இருக்கவில்லை. ஆனால், சீன மொழியோ இதற்கு முற்றிலும் மாறுபட்ட நிலையில் உயர்கல்வித் தரத்தைப் பெற்றிருந்ததோடு வணிக மொழியாகவும் சீனர் சமூகத்தின் பெருமிதத்திற்குரிய மொழியாகவும் விளங்கியது.

இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் அரசு நிலையில் தமிழில் கல்வி பெறும் வாய்ப்பு ஏழாவது வகுப்பு வரை உயர்த்தப் பட்டது. எனினும், இந்த ஏழாம் வகுப்புகள் குறிப்பிட்ட சில நகர்ப்புறங்களில் வார இறுதி நாள்களில் மட்டும் நடத்தப் பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. அதிலும், இந்த வகுப்புகள் தமிழ் ஆசிரியர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்தில் தொடங்கப் பெற்றன, எனவேதான், அரசு நடத்திய ஏழாம் வகுப்புத் தேர்வுகூட 'ஆசிரியர் ஆயத்தத் தேர்வு' என்று குறிப்பிடப் பெற்றது. இந்த ஏழாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மூன்று ஆண்டுகள் வார இறுதி நாள்களில் போதனா முறைப்பயிற்சி வழங்கப்பட்டு அவர்கள் ஆசிரியர்கள் ஆவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. அதே வேளையில் இவர்களுடைய தமிழறிவும் கணிசமான அளவு உயர்வு பெற்றது. இவர்களுக்கான தமிழ்ப் பாடத் திட்டம் அப்போதைய தமிழக எஸ். எஸ். எல். சி. தமிழ்ப் பாடத்திட்டத்திற்கு இணையாக உயர்த்தப்பட்டது. இதற்குரிய பாட நூல்களும் தமிழகத்திலிருந்து தருவிக்கப்பட்டன. இப்படித் தமிழறிவை உயர்த்திக் கொண்ட தமிழாசிரியர்கள் பின்னர் நல்ல தமிழ் எழுத்தாளர்களாக ஆவதற்கும் வழி ஏற்பட்டது.

சுதந்திரத்திற்குப் பின்னர் 1957-இல் நாடு சுதந்திரம் அடைந்த போது இந்நாட்டின் பல்வேறு இனத்தினரையும் இணைக்கக் கூடிய ஒரு தேசியக் கல்விக் கொள்கை உருவாக்கப் பட்டது. இதன் படி இந்நாட்டுச் சுதேசிகளான மலாய்க்காரர்களின் மொழி - மலாய் தேசிய

மொழித்தகுதியினைப் பெற்றது. மலாய் மொழியைப் போதனா மொழியாகக் கொண்ட பள்ளிகள் தேசியப் பள்ளிகள் எனவும், ஏனைய மொழிப் பள்ளிகள் (சீனம், தமிழ், ஆங்கிலம்) தேசிய மாதிரிப் பள்ளிகள் எனவும் பிரிக்கப் பட்டன. எனினும், தேசிய மாதிரிப் பள்ளிகள் முதல் ஆறு ஆண்டுகளுக்கான தொடக்கப் பள்ளிக் கல்விவரைமட்டுமே அனுமதிக்கப்பட்டன.

இந்தப் புதிய கல்வித் திட்டத்தில் தமிழ் மாணவர்கள் இரண்டு வகையான தொடக்கக் கல்வியைப் பெறுகின்றனர். முதல் வகையினர் தமிழ்ப் பள்ளிகளில் கல்வி பயில்வோர் ; இரண்டாவது வகையினர் நேரடியாகத் தேசியப் பள்ளிகளில் கல்வியைத் தொடங்குபவர்கள். இதைத் தேர்ந்தெடுப்பது பெற்றோர்களைப் பொறுத்தது.

இருப்பினும், தேசியக் கல்விக் கொள்கையின் ஒரு முக்கிய அம்சம் என்னவெனில், தேசிய தொடக்க, இடைநிலை/உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் தமிழ் (அதே போல் சீன) மாணவர்கள் 15 பேர் இருப்பின், இவர்களுடைய பெற்றோர்கள் கேட்டுக் கொண்டால், தாய்மொழி வகுப்பு நடத்தப் பெறும். இதுகாறும், இத்தகைய வகுப்புகள் சரிவர நடைபெறுவதில் பல சிக்கல்கள் இருந்து வந்துள்ளன. சமூக நிலையில் அரசிடம் செய்து கொண்ட முறையீட்டின் பேரில் தற்போது கல்வி அமைச்சு இதில் சிறிது அக்கறை செலுத்தி வருகிறது.

அரசுத் தேர்வுகளில் தமிழ் இப்போது அரசினால் நடத்தப் பெறும் கீழ் இடைநிலை, இடைநிலை, பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பு ஆகிய மூன்று நிலைகளில் மாணவர்கள் தமிழை ஒரு பாடமாகத் தேர்வில் எடுக்கலாம். தவிர, இடைநிலை, பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வு ஆகியவற்றில் தமிழ் இலக்கியத்தையும் ஒரு பாடமாக எடுக்கலாம்.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் தமிழ் தற்போது ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் தமிழ்ப் பள்ளிகளுக்கெனப் பயிற்றுவிக்கப் பெறும் ஆசிரியர்களுக்குத் தமிழ் மொழி, தமிழ் இலக்கியம் கற்பிக்கப் படுகின்றன. ஆண்டுதோறும் நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் தமிழை ஒரு பாடமாக எடுத்துப் பயில்கின்றனர். முதன் முறையாக இந்த ஆண்டுமுதல் இடைநிலைப் பள்ளிகளுக்கான தமிழ் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் முயற்சியையும் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

பல்கலைக் கழகத்தில் தமிழ் புகுமுக வகுப்பில் தமிழில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மலாயாப் பல்கலைக் கழகத்தில் இந்திய ஆய்வியல் துறையில் தமிழைச் சிறப்புப் பாடமாக எடுத்து அதில் பட்டம் பெறலாம். இலக்கணம், சங்க இலக்கியம், காப்பிய இலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், இருபதாம் நூற்றாண்டு இலக்கியம் ஆகிய அனைத்தும் இம்மாணவர்களுக்குப் போதிக்கப்படுகின்றன. ஆண்டு தோறும் சுமார் இருபது மாணவர்கள் தமிழை எடுத்துப் பயின்று வருகின்றனர். ஒரு சிலர் M. A. Ph. D. பட்டங்களுக்கான ஆய்வுகளையும் மேற்கொள்ளுகின்றனர். இவ்வாறு பட்டம் பெற்றவர்கள் பள்ளி ஆசிரியர்களாகவும் சில குறிப்பிட்ட அமைச்சில் உயர் அதிகாரிகளாகவும் பணிபுரிகின்றனர்

ஆயினும், தமிழில் மட்டும் பட்டம் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு மிகக் குறைவே.

வானொலி தொலைக்காட்சியில் தமிழ் அரசினால் நடத்தப்பெறும் வானொலி, தொலைக் காட்சிகளில் தமிழ் நிகழ்ச்சி களுக்கென நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. தொலைக்காட்சியில் தினசரிச் செய்தி ஒளி பரப்பைத் தவிர, சுமார் ஒரு மணி நேரம் தமிழ் நிகழ்ச்சிக்கும் நேரம் தரப்படுகிறது. இந்த ஒரு மணி நேரம் உள்ளூரில் தயாரான தமிழ் நாடகங்களுக் கென ஒதுக்கப்பட்டிருந்தாலும், நல்ல நாடகங்கள் கிடைக்காமையால் தமிழ்த் திரைப்படங்களை ஒளிபரப்பவே பயன்படுத்தப்படுகிறது.

நாளிதழ்கள், திங்கள் ஏடுகள் தற்போது இங்கு நான்கு தமிழ் நாளிதழ்களும் ஐந்து-ஆறு திங்கள் ஏடுகளும் வெளி வந்து கொண்டிருக்கின்றன. இவை தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் பெரிதும் பங்காற்றி வருகின்றன. சிறுகதைகள், கவிதைகள், தொடர்கதைகள் முதலியன வெளிவருவதற்கும் உள்நாட்டுத் தமிழ் எழுத்தாளர்களின் வளர்சிக்கும் இவை முன்னோடிகளாக இருக்கின்றன.

எழுத்தாளர் சங்கங்கள் தமிழ் எழுத்துத் துறையை வளர்ப்பதற்கு 1950-1960 -களில் தோன்றிய தமிழ் எழுத்தாளர் சங்கங்கள் முக்கியப் பணியாற்றி வரு கின்றன. அவ்வப் போது நூல்களை வெளியிடுவது, பரிசுகள் வழங்கி எழுத் தாளர்களை ஊக்குவிப்பது போன்ற பணிகளை இவை செய்து வருகின்றன.

சமயத்தின் வழி தமிழ்ப் பணி பல இனங்கள் வாழும் இந்நாட்டில் சுதந் தரத்திற்குப் பின்னர் ஒவ்வொரு சமூகத்தினரிடையேயும் அரசியல்- பண் பாட்டுச் சின்னமாகச் சமயம் முக்கிய இடத்தைப் பெறத் தொடங்கியுள்ளது. தமிழர்களிடையே சமய ஈடுபாடு தேவார, திருவாசகங்களை ஓதுவது, சமய இலக்கியங்களைப் பயில்வது ஆகிய வற்றில் மிகுதியான ஆர்வம் அண்மைய ஆண்டுகளில் அதிகரித்திருக்கின்றது.

பல இன மலேசிய சமுதாயத்தின் தாக்கத்தில் தமிழின் நிலை இதுகாறும் கூறியவற்றி லிருந்து கடந்த அரை நூற்றாண்டுக் காலமாகத் தமிழின் நிலை மலேசியாவில் ஒரு கணிசமான அளவுக்கு உயர்ந் திருக்கிறது என்றாலும், நிலைமை முற்றிலும் நிறைவு கொள்ளத் தக்கதாக இல்லை என்றே கூற வேண்டும். குறிப் பாக, இன்று மூன்று வகையான பிரிவினரைத் தமிழர்களிடையே அடை யாளங் காண முடிகிறது. முதலாவது தரப்பினர், தமிழின் வழி தொடக்க கல்வியைத் தொடங்கும் சாதாரண மக்கள் சமூகத்தைச் சார்ந்தவர்கள்; இரண்டாவது தரப்பினர் ஆங்கிலத்தின் செல்வாக்கு மிகுதியாக உள்ள நடுத்தர வகுப்பினர்; மூன்றாவது தரப்பினர் மலாய் மொழியை முக்கிய மொழி யாகக் கொண்டு கல்வி பயின்று வரு பவர்கள். இந்த மூன்று பிரிவினரில் முதல் தரப்பினரிடையேதான் தமிழ் மிகுதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறது. சுமார் ஐம்பது விழுக்காட்டைச் சார்ந்த மற்றவர்களிடையே தமிழின் நிலை நிறைவுகொள்ளத் தக்கதாக இல்லை. இதற்கு முக்கியதொரு காரணம், தேசிய பள்ளிகளில் கவரத் தக்க முறையில் தமிழ் போதிக்கப்படாமலிருப்பதாகும். அடுத்து, நடுத்தர வகுப்பினரிடையே, ஆங்கிலத்திற்குள்ள செல்வாக்கு தமிழை ஒரு மூன்றாந்தர மொழியாக ஆக்கி

விட்டிருக்கிறது. இப்பிரிவினரிடையே ஆங்கிலமே அன்றாட வாழ்க்கைமொழியாக இருந்து வருகிறது. இனி, புதிதாகத் தோன்றிவரும் பிறிதொரு பிரிவினரிடையே, குறிப்பாக இளந் தலைமுறையினரிடையே, தேசிய மொழிப் பள்ளிகளில் கல்வியைத் தொடங்கி அதைச் சரிவரத் தொடர்வதற்கான வழியின்மையால் இடையிலேயே கல்வியைத் துண்டித்துக் கொள்ளும் ஒரு நிலை காணப்படுகிறது. இவர்களிடையே பேச்சுத் தமிழ் ஓரளவு நடைமுறையில் இருந்தாலும் அதில் மிகுதியாக மலாய்ச் சொற்களைக் கலந்து பேசுகின்ற நிலையைக் காண்கிறோம். காலப்போக்கில் இந்த நிலை இன்னும் விரிவடைவதற்கான சாத்தியம் உண்டு.[5]

அடுத்து, இந்நாட்டுத் தமிழ்ப் படைப்பிலக்கியங்களை உருவாக்குவதில் ஆர்வம் இருந்த போதிலும், பெரும்பான்மை மக்களிடயே தமிழ் நாளிதழ்கள், ஏடுகள், நூல்கள் ஆகியவற்றை வாங்கிப் படிக்கக்கூடிய ஆர்வம் இல்லை. சமூக அமைப்பும், இந்நாட்டுத் தமிழ் எழுத்தாளர்களின் மீதுள்ள ஒரு பாரபட்சப் போக்கும் இதற்கு முக்கியக் காரணமாக உள்ளன.

இறுதியாக, இப்படி 'வாழ்ந்தும் வாழாமலும்' இருக்கின்ற இந்த நிலை தமிழர் சமூகத்தின் ஒரு சாராரிடையே இன்னும் எவ்வளவு காலத்திற்கு இந்த நாட்டில் தமிழ் துடிப்போடு நடைபோட இயலும்?' என்ற அச்சம் கலந்த ஒரு கேள்விக் குறியை அவ்வப்போது தோற்றுவித்து வருகிறது. 'தமிழை இந் நாட்டில் வாழ வைப்பது எப்படி?". என்று பலர் சிந்தித்து வருகின்றனர். கடந்த காலங்களில் 'தமிழர் திருநாள்' போன்ற நிகழ்ச்சிகளின் வழி நல்ல தமிழுணர்வு ஊட்டப்பெற்று, தமிழின் வளர்ச்சியில் மலேசியத் தமிழர் சமூகம் அக்கறை செலுத்தி வந்திருக்கிறது. இன்றைய சமுதாய, அரசியல், பண்பாட்டு, பொருளாதார அழுத்தங்களுக்கிடையேயும் மாறி வருகின்ற சூழ்நிலைகளுக்கிடையேயும் தமிழர் சமூகம் மாதிரி-1950 களில் இருந்ததைப்போல் - திரண்டெழுந்து தன்னுணர்வு முனைப்போடு செயல்பட முடியுமா என்பதற்கு எளிதில் விடை கூறிவிட முடியாது. சுருங்கக் கூறின், பல்வேறு பல இனச் சமுதாய அலைகளின் மோதுதல்களுக்கிடையே பொருளாதார வலுவும் அரசியல் செல்வாக்கும் அற்ற சிறு பான்மைச் சமூக மொழியான தமிழ் ஒரு வெறும் பண்பாட்டுச் சின்னமாக மட்டுமே இருந்துவருகிறது. எனவே, அதனைத் தற்காத்துக்கொள்ள வேண்டுமாயின் மலேசியத் தமிழர் சமூகம் மிகுந்த விழிப்புணர்வோடும் தொலை நோக்கோடும் செயல்பட வேண்டும்.

---

5. தமிழ்ப் பள்ளிகள் தொடக்கக் காலத்திலிருந்து தமிழ்த் தொழிலாளர் சமூகத்தின் சின்னமாகவே இருந்து வந்துள்ளன. தமிழ்ப்பள்ளிகள் பிற பள்ளிகளைப்போல் கவர்ச்சிகரமாக இல்லாமையாலும், கல்விமேம்பாட்டுக்கு ஊக்கமளிக்கக்கூடியவையாக இல்லை என்று கருதப்படுவதாலும் சமூகத்தின் மற்ற பிரிவினர்களை ஈர்க்கக்கூடியவைகளாக இல்லை.

சிங்கப்பூரில் தமிழ்

தி. முருகரத்தனம்

1. 1. அறிமுகம் "கீழை உலகின் நியூயார்க்" எனப் புகழத்தக்க வளர்ச்சியுற்ற சிங்கப்பூர் 590 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள ஒரு சிறு தீவாகும். அந்தத் தீவினைச் சுற்றிலும் அமைந்துள்ள 50 தீவுத்திட்டுக்களும் சிங்கப்பூர் என்னும் தனி அரசினைச் சேர்ந்தன. சிங்கப்பூரின் இதயமும் உடலும் அதன் துறைமுகமே ஆகும். இந்தத் துறைமுகமே மேலைநாடுகளையும் கீழை நாடுகளையும் இணைக்கும் பாலமாக அமைந்துள்ளது. கீழைநாடுகளிலிருந்து மேலைநாடுகளுக்குச் செல்லும் பெரும்பாலான கப்பல்கள் சிங்கப்பூரைத் தொட்டே செல்கின்றன. ஆதலால் துறைமுகப்பணி, கப்பல் கட்டுதல் பெருந்தொழில்களாக அங்கு அமைந்துள்ளன. இதனால் அனைத்து நாட்டினரும் அங்கு வந்துபோக வாய்ப்பு ஏற்பட்டது. இந்த வாய்ப்போடு வாணிகம் செழித்தது. அதனைக் கட்டுப்பாடற்ற வாணிகமாக்கிச் சிங்கப்பூர் பொருளாதாரத்தில் உயர்ந்தோங்கியது.

அங்குள்ள மக்களுக்கு வணிக நிறுவனங்கள், கோயில்கள்; பணமே வழிபடுதெய்வம். மொழியும், கலையும் சமயமும் மதிப்புடைய பொருள்கள் அல்ல. மக்கள் சுறுசுறுப்போடு எந்நேரமும் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். பெரும்பான்மையான போக்குவரத்து வண்டிகள், அலுவலகங்கள், வீடுகள் ஆகியவை தட்பவெப்பக் கட்டுப்பாடு பெற்றவை (Air-conditioned). நாலுபேருக்கு ஒரு தொலைபேசியும் ஆறுபேருக்கு ஒரு தொலைக் காட்சிப் பெட்டியும் வழங்கும் வாழ்க்கைத்தரத்தை அந்நாடு பெற்றிருக்கிறது. அதனுடைய பொருளாதாரம் பெரும்பாலும் நுகர்வோர் பொருளாதாரம் ஆகும் (Consumer Economy). உலகத்துப் பொருள்கள் அனைத்தும் அங்கு எப்போதும் எளிதில் கிடைக்கும். சீனம், கொரியா, சப்பான் ஆகிய நாடுகளைத் தன் முன்னேற்றத்துக்கு மாதிரியாகக் கொண்டுள்ளது சிங்கப்பூர். இந்நாடுகளின் விற்பனைக் களம் (Market) சிங்கப்பூர். "கிழக்கே நோக்கு (Look east)" என்பது இப்போது சிங்கப்பூரின் கோட்பாடு.

1. 2. வரலாறு சிங்கப்பூரின் வரலாறு ஆயிரம் ஆண்டுகளுக்கு உட்பட்டதாகவே உள்ளது. மலேசியத் தீபகற்பம், ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட, ஸ்ரீவிஜய பேரரசுக் காலத்தில் சீனா, இந்தோனேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளோடு இந்தியா, இலங்கை முதலிய

நாடுகள் உறவுகொள்ளவழியாக அமைந் திருந்தது. இந்தியாவில் தோன்றிய புத்த சமயமும் இந்துசமயமும் மலேசியா சிங்கப்பூர் வழியாகவே இந்தோனேசியா, தாய்லாந்து, சீனம், சப்பான் ஆகிய நாடுகளுக்குச் சென்று பரவியது. மலேசியா நாட்டில் இடைக்காலத்துக் குரிய இந்து சமயத்துச் சின்னங்கள் நிறையக் கிடைத்துள்ளன. சிங்கப்பூரின் தெளிவான வரலாறு 1819-இல் சர் ஸ்டாம்போர்டு ராஃபில்ஸ் (Sir Stamford Raffles) என்ற ஆங்கிலேயர் குடி யேற்றம் செய்தபோது தான் தொடங்கு கிறது. அதற்கு முன்னர் அத்தீவு மலேயாவில் ஆண்டு கொண்டிருந்த ஓர் இசுலாமிய சுல்தானுக்குச் சொந்த மாக இருந்தது. பின்னர் அது ஆங்கி லேயரின் வணிகத் தளமாகவும் கடற் படைத்தளமாகவும் உருவம் பெற்றது. பின்னர்க் கிழக்கிந்தியக் கம்பெனியாரிட மிருந்து அதிகாரம் ஆங்கில அரசுக்கு மாறியது. 1962-இல் சிங்கப்பூர் ஆங்கி லேயர் ஆட்சியிலிருந்து விடுபட்டுத் தனி நாடாகியது.

1. 3 மக்கள் சிங்கப்பூரின் மண்ணுக் குரிய மக்கள் மலாய் மக்கள் எனப் படுவர். ஆயினும் சீனம், இந்தியா, இலங்கை முதலான நாடுகளிலிருந்து ஏராளமான மக்கள் கடந்த இரண்டு நூற்றாண்டுகளாகவே தொடர்ந்து குடி யேறி வாழ்ந்து வரலாயினர். இந்தியா வையும் இலங்கையையும் ஆண்ட ஆங்கிலேயரின் குடியேற்ற நாடாகச் சிங்கப்பூர் இருந்த காரணத்தினால் இந்தியாவிலிருந்து வணிகத்தின் பொருட்டும் வேலைவாய்ப்பின் பொருட்டும் இந்தியர்கள் இங்குத் தாராளமாகக் குடியேறினர். இவ்வாறு குடியேறிய இந்தியர்களின் பெரும் பாலோர் தமிழர்கள். இந்தத் தமிழர்கள் போதுமான வேலையின்றி வறுமையில் வாடிய கீழ்ச்சாதி, கீழ்மட்ட மக்களாகக் கிழக்குத் தமிழகத்தின் பெயருக்கு வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் ஆவர். இவர்களுள் ஆதிதிராவிட மக்கள் பெரும்பாலோர் துப்புரவுத் தொழிலுக் காகவும் பாதை போடுவதற்காகவும் பாலம் கட்டுவதற்காகவும் காட்டு வேலைக்காகவும் சென்றவர்கள்.

இந்தத் தமிழருள் ஏறத்தாழ 3000 பேர் இலங்கையில் இருந்து குடியேறிய

சிங்கப்பூரின் மக்கள் தொகை இப்போது இவ்வாறு அமைந்துள்ளது:-

மொத்த மக்கள் தொகை	... 25 இலட்சம்
சீன மக்கள்	... $18\frac{1}{2}$ இலட்சம் (76%)
மலாய் மக்கள்	... $4\frac{1}{2}$ இலட்சம் (15%)
இந்திய மக்கள்	... 1, 65, 000 (6.3%)

இந்தியர்களுள் தமிழர்களும் பிறரும் உள்ளனர். அவர்கள் தொகை இங்கு அறியத்தக்கது :-

இந்தியர்	... 1,65,000
தமிழர்	... 1,00,000 (65%)
மலையாளிகள்	... 23,000 (15%)
பிற இந்தியர் (இந்தி, தெலுங்கு, வங்காளம், பஞ்சாபி பேசுபவர்கள்)	... 42, 000

தமிழர். தமிழருள் ஏறத்தாழ 40,000 பேர் இசுலாமியர் ஆவர். ஏறத்தாழ 85,000 தமிழர்கள் சிங்கப்பூரிலேயே பிறந்து வளர்ந்தவராவர். 15 000 தமிழர் இன்று தமிழகம் வந்து போவோ ராவர். இன்று அங்கு வாழும் பெரும் பான்மையான தமிழர்கள் சிங்கப்பூரைத் தாயகமாகக் கொண்டு வாழ விரும்பு கின்றனர். சிங்கப்பூரின் செல்வச் செழிப்பும் வேலை வாய்ப்புகளும் உரிமை வாழ்வும் அவர்களுக்குப் பெருங் கவர்ச்சியாக அமைந்துள்ளன. ஆனாலும் தாயக மண்ணையும் கன்னித் தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் உற்றார் உற வினரையும் அவர்களால் மறக்க முடிய வில்லை. அவர்கள் உடலால்சிங்கப்பூரின ராயினும் மனத்தால் தமிழகத்தினராக வாழ்ந்து வருகின்றனர்.

1.4. அரசு சிங்கப்பூர் நாடு சென்னையை விடச் சின்னது. தேர்தலோடு கூடிய மக்களாட்சி முறையில் அமைந்த குடியாட்சியாகும், சிங்கப்பூர் அரசாட்சி. மக்கள் பெரும்பாலோர் தொழிலாளர்கள். ஆகவே தொழிலாளர் சார்பான அரசு அது எனவும் குறிப்பிட வேண்டும். அமைச்சர்கள் பெரும்பாலோர் தொழி லாளர் தலைவர்களே. மக்களுள் முக்கால் பங்கினர் சீனர்கள். பொருளாதாரத் திலும் கல்வியிலும் நன்கு முன்னேறி யவர்கள் அவர்கள். ஆதலால் ஆட்சியில் அவர்களே பெரும்பங்கு வகிக்கின்றனர்.

அடுத்த நிலையில் தமிழர்கள் விளங்குகின்றனர். அவர்களுள் பெரும் பாலோர் தொழிலாளர்களும் கூலிகளு மாவர். ஒருசிறுதொகையினர் வணிகரும் வட்டிக்கடையினரும் அரசலுவலரும் ஆவர்.அவர்கள் நாட்டின் நடுத்தரத்தில் வாழ்கின்றனர். பொருளாதாரத்திலும் கல்வியிலும் பண்பாட்டிலும் கீழ்மட்டத் தில் இருப்போர் மலாய் மக்கள். இவர்கள் கீழையாசிய இனத்தைச் சேர்ந்தவர்கள். தமிழர்கள் இரண்டு ஒருவர், ஆட்சியில் அமைச்சர்களாக உள்ளனர். ஆனால் மலாயர், ஒருவரும் அத்தகுதி பெறவில்லை. இந்நிலை 1982—இல்.

சிங்கப்பூர் அரசு தாராள (liberal in outlook), பரந்த மனப்பான்மையுள்ள அரசு; கெடுபிடிகளும் கொள்கை வெறி யும் இனமொழி சமயக்குறுநோக்கும் இவ் வரசிடம் இல்லை. கட்டுப்பாடு, ஒழுக்கம், தூய்மை, நேர்மை, தகுதி, திறமை ஆகியவை இவ்வரசின் குறிக்கோள். பொது இடங்களில் தூய்மையைக் கெடுக்குமாறு குப்பையைப் போடுவோர்க்குத் தண்டனை உண்டு; எச்சில் துப்பு வோருக்குத் தண்டனை உண்டு. போதைப்பொருள் கடத்துவோருக்குக் கொலைத்தண்டனை. அரசு உண்மை யாகவே மரம் நட்டு உண்மையாகவே நீர்பாய்ச்சிக் காத்துச் சிங்கப்பூரைச் சோலையாக்கி உள்ளது. தகுதி ஒன்றே அங்கு முன்னேற்றத்துக்கு வழி. பிற்பட்டோருக்கு ஒதுக்கீடு இல்லை; ஆனால் அரசு உதவி உண்டு! 'Democracy யோடு **Meritocracy** இங்குக் கோலோச்சுகிறது' என அங்குள்ள மக்கள் பெருமையடித்துக் கொள்ளு கின்றனர்.

மண் மலாயர்க்கு உரியதாக இருந்தும் பொருளாதாரமும் அரசும் சீனர்க்கு உரியனவாக இருந்தும் அங்கு யாருக்கும் எந்தக் குறையும் இல்லை. அங்கே பூமிபுத்திரர் இல்லை. சிங்கப்பூரை விரும்பி வாழ்வோர் எல்லாம் அங்குக் குடிமக்கள். சிங்கப்பூரைச் சுரண்டிச் செல்வது தடுக்கப்பட்டுள்ளது.

அங்கு மூன்று இன மக்கள் வாழுகின்றனர். அந்த மூவரின் மொழிகளாகிய சீனம் (மாண்டரின்), மலாய், தமிழ் ஆகியவை அங்குக் கல்வி மொழியும் ஆட்சி மொழியுமாகும். அவற்றோடு அனைத்துலக மொழியாகிய ஆங்கிலமும் எல்லா இடத்திலும் கட்டாயம். அரசிலும் கல்வி நிறுவனங்களிலும் வணிக நிறுவனங்களிலும் ஆங்கிலம் பேரிடம் பெற்றுக் கோலோச்சுகிறது. அரசின் அனைத்து வெளியீடுகளும் நான்கு மொழிகளிலும் வெளியிடப்படுகின்றன.

மூவினமக்களின் பண்பாட்டையும் சிதைப்பது அரசின் நோக்கமல்ல; வளர்ப்பதே அதன் நோக்கம். ஆதலால் பண்பாட்டு மக்களாட்சியை (Cultural Democracy as opposed to Cultural assimilation) அது தன் கொள்கையாகக் கொண்டுள்ளது. மக்கள் சமய வாழ்விலும் கலை வாழ்விலும் அவ்வரசு தலையிடுவதில்லை. இந்தக் கொள்கை காரணமாக முன்னர் ஓரினப் பள்ளிகளாக (Uni-racial Schools) நடந்தவற்றை மாற்றிப் பல்லினப் பள்ளிகளாக (Multi-racial Schools) அரசு அமைத்து விட்டது.

2. கல்வி சிங்கப்பூரில் கல்வி வாய்ப்பு அனைவர்க்கும் உண்டு. தகுதி, திறமையை ஒட்டிக் கல்வி எல்லாரும் கற்றுக் கொள்ளலாம். அங்குக் கல்வி நான்கு படிகள் உடையதாக அமைக்கப்பட்டுள்ளது. 1) தொடக்கப்பள்ளிக் கல்வி, 2) உயர்நிலைப் பள்ளிக் கல்வி, 3) மேல்நிலைப்பள்ளிக் கல்வி, 4) பல்கலைக் கழகக் கல்வி.

தொடக்கப் பள்ளிக் கல்வி ஆறாண்டுகள் நடைபெறுவது. இவ்வாறாண்டுகளும் இலவசக் கல்வி. தொடக்கக் கல்வி கட்டாயம் இல்லாமல் போனாலும் அனைவரும் கல்வி கற்று விடுகின்றனர். இக் கல்வி அவரவர்கள் தாய்மொழி வாயிலாகவே நடைபெறுகிறது. ஆங்கிலத்தின் வாயிலாகவும் நடைபெறும். விரும்பியோர் ஆங்கிலத்தை மேற்கொள்ளலாம். ஆங்கிலத்தின் வாயிலாகக் கற்போர் தன் தாய்மொழியினையும் கற்கவேண்டும்.

உயர்நிலைப் பள்ளிக் கல்வி 4 ஆண்டுகள் நடைபெறுவது; ஆனால் அது கட்டணம் உடையது. அதுவும் பொதுக்கல்வியாயினும் சிறுபான்மையினருக்குச் சிக்கல் தருகிறது. ஒரு வகுப்பில் குறைந்தது 15 பேர் இருக்க வாய்ப்பிருக்குமானால் மட்டுமே அவர்களுக்குரிய தாய்மொழி வாயிலாகக் கல்வி கற்பிக்கப்படும் என்ற விதி ஒன்று உள்ளது. சிங்கப்பூரில் பல பள்ளிகளில் இவ்விதி காரணமாகத் தமிழர்களுக்குத் தாய்மொழி வாயிலாகக் கல்வி கற்றலில் இடையூறு ஏற்படுகிறது. அதாவது அப்பள்ளிகளில் 15 தமிழ் மாணவர்கள் சேர்வது இயலாததாக உள்ளது. இதனால் பல தமிழ் மாணவர்கள் ஆங்கிலம் படிக்கின்றனர். சீனம் படித்தல் சீனருடைய வணிக, தொழில் நிறுவனங்களில் பணியாற்ற வாய்ப்புத் தருகின்றது எனத் தமிழர் கருதுகின்றனர். 'குறைந்தது 15 மாணவர்' என்ற விதியினை மாற்றுவதற்காக அங்குத் தமிழர்கள் முயன்று வருகின்றனர். தமிழர்களைப் பொறுத்த வரையில் உயர்நிலைப் பள்ளிச் சேர்க்கையில் எண்ணிக்கை குறைகிறது. ஆகவே வறுமை காரணமாகவும் வேலையில் சேரல் காரணமாகவும் தமிழ் மாணவர்கள் படிப்பை விடும் சூழல் ஏற்படுகிறது. இதன் பொருட்டுப் பொதுவாகத் தமிழர்கள் கவலைகொள்கின்றனர்.

மேல்நிலைப் பள்ளிக் கல்வி 2 ஆண்டுகள் உடையது. இங்குப் பொதுக் கல்வியோடு தொழிற்கல்வியும் இணைந்துள்ளது. மொழியைப் பொறுத்த வரையில் உயர்நிலைப் பள்ளிக் கல்வியின் நிலையே இங்கும் தொடர்கின்றது. 15 தமிழ் மாணவர்கள் இல்லாதபோது மேல்நிலைப் பள்ளிகளில் தமிழுக்கு வாய்ப்பில்லாமல் போகிறது. தமிழ் மாணவர்கள் எண்ணிக்கை மேல்நிலைப் பள்ளியில் மேலும் குறைந்து விடுகிறது. தமிழர்க்குள்ள வாழ்க்கைச் சிக்கலை இது காட்டுகிறது.

மேல்நிலைப்பள்ளிப் படிப்பிற்குப் பின்னர் மகளிர் நீங்கிய மாணவர் அனைவரும் ஓராண்டு கட்டாயம் படைப் பயிற்சி பெறவேண்டும். இதனை அனைவர்க்கும் தருவது அரசின் பொறுப்பு.

இதன் பின்னர்ப் பல்கலைக் கழகக் கல்வி, முதல்பட்ட நிலையில் மூன்றாண்டுகள் நடைபெறுகிறன. இப்போது சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகம் என்ற பெயரில் ஒரே ஒரு பல்கலைக் கழகம் இயங்கி வருகின்றது. இணைப்புப் பெற்றுப் பொதுக்கல்வி வழங்கும் கல்லூரிகள் இல்லை. (ஒரே ஓர் ஆசிரியர் பயிற்சிக்கழகம் மட்டும் அவ்வாறு இயங்குகின்றது) இந்தப் பல்கலைக் கழகத்தில் 7000 மாணவர்கள் (1982) பயில்கின்றனர். மிகப் பெரும்பாலோர் பட்ட வகுப்புக்களே பயில்கின்றனர். முதுகலைப் படிப்பும் ஆராய்ச்சியும் அரிதாகவே நடைபெறுகின்றன. முதுகலைக் கல்விக்கு சிங்கப்பூர் மேலை நாடுகளையே நம்பி இருக்கின்றது. உயர்கல்வி நிறுவனங்களில் பணியாற்ற விரும்புவோர் மட்டுமே முதுகலைக் கல்வியை நாடுகின்றனர். இச்சூழ்நிலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. இந்தியர், வெளிநாட்டார் பலர் பல்கலைக் கழகத்தில் பணிபுரிகின்றனர்.

மாணவர் சேர்க்கை எல்லாம் தகுதி அடிப்படையிலேயே நடைபெறுகிறது. சமூகத்தில் வாய்ப்பற்ற மாணவர்க்கு அரசு தாராளமாகப் பொருளுதவி செய்கிறது.

சீனமொழிக்கும் சீனர்களுக்கும் இப் பல்கலைக் கழகத்தில் நிறைய வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஏழாயிரம் மாணவர்களில் இருநூறு மாணவர்களே தமிழர்கள். இவர்கள் தமிழர் தொகையாகிய 4% நோக்கக் குறைவே. இந்தப் பெரும் பல்கலைக் கழகத்தில் தமிழுக்கெனத் தனித்துறை இல்லை. தமிழ் மொழி இலக்கிய, சமய, கலைக் கல்வியோ இந்தியக் கல்வியோ கற்க இங்கு வாய்ப்பில்லை. சிங்கப்பூரில் உள்ள தமிழர்கள் பலர் இந்தப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை அமையாததைப் பெருங் குறையாக எடுத்துக் கொண்டு கவலையுறுகின்றனர். 15 மாணவர்கள் தமிழ்க் கல்வி கற்க முன்வருவார்களேயானால் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறை அமைக்கலாம் எனத் துணை வேந்தர் கூறுகிறார். ஆனால் அந்தப் பதினைந்து மாணவர்கள் இல்லை! பொருளாதார மனப்பான்மை கொண்டு வேலை வாய்ப்புக் கருதி வணிகவியல், வங்கியியல், அறிவியல், பொறியியல், மருத்துவவியல் ஆகியவற்றைக் கற்கவே தமிழ் மாணவர்கள் எண்ணங் கொள்கின்றனர். தனித்தமிழ் கற்க அவர்கள் தயங்குகின்றனர். கோலாலம்பூரின் மலேயாப் பல்கலைக் கழகத்தில் இந்தியக் கல்வித்துறை இயங்கி வருவது

போன்று சிங்கப்பூர் பல்கலைக் கழகத்தில் இந்தியத் துறையோ தமிழ்த் துறையோ நடப்பதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கின்றது. பாடங்கற்பித்தல் ஒன்றையே இப் பல்கலைக்கழகம் நோக்க மாகக் கொண்டிருத்தலால் மாணவர்கள் இல்லாமையும் துறைகள் அமைத்தலும் சிக்கல்களாக இருக்கின்றன. துறை களுக்கு ஆராய்ச்சியும் பணியாகும் என்ற நிலை இருக்குமானால் அப் பணிக்கு ஏனத் துறைகள் அமைக்கலாம். இது இந்தப் பல்கலைக் கழகத்தின் பொதுவான குறை. தமிழர்கள் பற்றிய ஆராய்ச்சிக்கும் அங்கு நிறையத் தேவை உண்டு.

3. தமிழும், தமிழரும் பிறவெளிநாட்டுத் தமிழர்களோடு ஒப்பிடுகின்றபோது சிங்கப்பூர்த் தமிழர்கள் நல்ல நிலை யிலேயே உள்ளனர் எனக் கருதலாம். தாய்த் தமிழகத்தைக் காட்டிலும் செல்வச் செழிப்பும் வேலை வாயப்புக் களும் சிங்கப்பூரில் மிகுந்துள்ளன. அவற்றை அவர்கள் முழுமையாக அனு பவித்து வருகின்றனர். அரசியல் வாழ் வும் செம்மையுற அமைந்து மானம் போற்றி உரிமையுடன் அவர்கள் வாழ் கின்றனர். இப்போதுள்ள சிங்கப்பூர் அரசு பாராட்டத்தக்க பல கொள்கைகள் மேற்கொண்டு நடைபெற்று வருகிறது. சிங்கப்பூர் மக்களில் பெரும்பாலோர் வெளிநாடுகளில் இருந்து குடியேறிய வரே ஆவார். ஆதலால் மண்ணின் மைந்தர்கள் என உரிமை கொண்டாடி நாடு, இன, மொழி, சமயச்சிக்கல்களைக் கிளப்புவோர் அங்கு இல்லை. சிங்கப்பூர் அரசு அவ்வூரில் படைக்கப்படும் செல்வம் அங்கேயே பயன்படுமாறும் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப் படாதவாறும் மட்டுமே சில கட்டுப் பாடுகள் வைத்துக் கொண்டுள்ளது. ஆதலால் வெளிநாட்டுக் குடியுரிமை வைத்துக் கொண்டு சிங்கப்பூர் வந்து போவோர்க்கு அது வரையறை செய் கின்றது. சிங்கப்பூரைத் தாயகமாகக் கொள்வோர் அனைவரையும் அது போற்றி வாழ வைக்கின்றது. இந்த நிலையானது அண்மையில் குடியேறிய தமிழர்களுக்குச் சிக்கலாக உள்ளது. அவர்கள் தாய்த் தமிழகத்தோடு உறவு வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

'நல்ல நாடு ஒன்றிலே வாழுகி றோம்' என்ற மனநிறைவு அங்குள்ள தமிழர்களுக்குப் பொதுவாக இருந் தாலும் அவர்களுக்கும் குறைகள் இல்லாமல் இல்லை. பொதுவாகவே அயல்நாடுகளில் குடியேறிய மக்களுக்கு ஏற்படக்கூடிய குறைகள் சில சிங்கப் பூர்த் தமிழர்களுக்கும் ஏற்பட்டுள்ளன.

சிங்கப்பூர்த் தமிழர்கள் மொத்த மக்கள் தொகையில் 4% ஆக இருப்ப தால் சிறுபான்மையினருக்கு வழக்கமாக அமையும் பாதுகாப்பின்மை, மொழி, இனப்பண்பாட்டு மரபுகளுக்கு நெருக் கடி, பொருளாதார அரசியலில் வாய்ப்பு குறைவு ஆகியவை சிங்கப்பூர்த் தமிழர் களுக்கு ஏற்படும் நிலை உண்டு. இந்த நிலையோடு பொதுவாகவே தமிழர் களின் தாழ்நிலையும் ஒரு குறையாக அமைந்துள்ளது. சிங்கப்பூரில் குடியேறி அமர்ந்திருக்கும் தமிழர்களில் பெரும் பாலோர் தாய்த்தமிழகத்தில் ஏழை எளிய சுரண்டப்பட்ட ஒதுக்கப்பட்ட கல்வியற்ற மக்களின் வழிவந்தவர் ஆவார். பெரும்பாலும் கூலி வேலையைத் தேடிச் சென்ற ஆதி-திராவிட மக்களின் வழியினர் அவர்கள். இன்றும் படிப் படியே ஒரு சிறிதே முன்னேறி வந்திருக் கின்றனர். இன்று தமிழ்த் தொழிலா

ளர்களின் குடும்பத்தில் வானொலிப் பெட்டி, தொலைக்காட்சிப்பெட்டி, குளிர்ச்சிப்பெட்டி ஆகியவை இருப்பினும் அந்தச் சூழ்நிலையில் அவர்கள் எளிய வாழ்வினரே. பொருளாதார வாழ்விலும் அறிவுலகு வாழ்விலும் திறமையும் கெட்டிக்காரத்தனமும் மிக்க சீனர்களோடு போட்டியிட்டு மேல்நிலை அடைதல் அவர்களுக்கு அரிதாகவே உள்ளது. ஆதலால் இரண்டாம் தர மக்களாகவும் சீனர்களின் ஆதரவை நாடி நிற்பவராகவும் தமிழர்கள் இருக்க வேண்டி உள்ளது. இந்த நிலைகள் மாறுவதற்கான வாய்ப்புகளும் இப்போது இல்லை. இந்த நிலைகள் பற்றிய அச்சம் தமிழர்கள் இடையே நீறுபூத்த நெருப்பாக இருக்கலாம்.

இவ்வாறான பொதுவான குறைகள் போகச் சிங்கப்பூர்த் தமிழர்களுக்கே உரிய பலகுறைகளும் உண்டு. இன்றைய சிங்கப்பூர்த் தமிழர்களைப் பொறுத்த வரையில் அண்மையில் குடியேறித் தாய்த் தமிழர்களோடு நெருங்கிய உறவு வைத்துக் கொண்டிருக்கும் சிறுபான்மைத் தமிழர் போக மிகப் பெரும்பாலோர் சிங்கப்பூரையே தாயகமாகக் கொண்டுள்ளனர். அனைவர்க்கும் தமிழ்ப் பண்பாட்டுத்தொடர்பே பெருந்தேவையாக உள்ளது. இலக்கியங்கள், பாட்டுக்கள், பேசும்படங்கள், பல்வேறு இதழ்கள், பிற கலைகள் சமய விழாக்கள், வேடிக்கைகள், விளையாட்டுகள், தலயாத்திரை முதலானவைகள் அவர்களுக்கு மரபுடனும் புதுமையுடனும் தேவைப்படுகின்றன. அவற்றை அவர்கள் அங்கேயே படைத்துக் கொள்ளுதல் இயலவில்லை. வாய்ப்பும் வளமும் குறைவு. இந்தப் பண்பாட்டுத் தொடர் பிற்குச் சிங்கப்பூர்த் தமிழர்கள் எப்போதும் தாய்த் தமிழகத்தையே எதிர்நோக்கி இருக்கவேண்டி உள்ளது. இன்றைய உலகப் பொருளாதார அரசியல் சூழ்நிலையில் குடியேற்ற நாட்டு மக்கள் இப் பண்பாட்டுத் தேவையைத் தாயகத்தில் இருந்து எதிர்பார்க்கவே இயலும். அது முறையாகும். இந்தப் பண்பாட்டுத் தேவையினை நிறைவேற்றுதல் தமிழகத்துக் கடமையும் பொறுப்பும் ஆகும். பல்கலைக் கழகங்களும், தொண்டு நிறுவனங்களும், கலைமன்றங்களும், அரசின் துறைகளும் இப்பொறுப்பினையும் கடமையினையும் நிறைவேற்றலாம்.

அங்குள்ள தமிழர்க்கு ஒரு குறை, தமிழில் பட்டம் பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருப்பதாகும். தம் பண்பாட்டின் பேழையாக விளங்கும் தமிழைக் கற்றலுக்கு அது ஒரு வாய்ப்பு என்பது மட்டும் அல்லாமல், உயர்நிலைப் பள்ளிகளில் தமிழைக் கற்பிப்பதற்குத் தேவையான தகுதியைப் பெறுவதற்கும் அது ஒரு வாய்ப்பாகும் என்பது அவர்கள் கருத்தாகும். சிங்கப்பூர்ப் பள்ளிகளில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் பிற துறைகளுக்குரிய ஆசிரியர்களைப் போலவே பட்டம் பெற்றுள்ளவராக இருத்தல் வேண்டும். ஆயினும் அந்த வாய்ப்பு தமிழ் ஆசிரியர்களுக்கு இல்லை. இங்குள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பாடங்கள் கற்பிக்கத் தகுதி பெற்ற தமிழ் ஆசிரியர்கள் இல்லாதது ஒரு பெருங்குறை. பள்ளிகளில் தமிழ் மாணவர்களின் கல்வித்தரமும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளது. தமிழகத்துப் பல்கலைக் கழகங்கள் நடத்தும் அஞ்சல் வழிக் கல்வி வாயிலாகவாவது பட்டங்

கள் பெற அங்குள்ள தமிழர்கள் விரும்புகின்றனர். அதன் பொருட்டுத் தமிழக அரசினையும் பல்கலைக் கழகங்களையும் அவர்கள் வேண்டிக் கொண்டுள்ளனர்.

பள்ளிகளில் கற்பித்தல் பொருட்டுத் தக்க பாடநூல்கள் இல்லை என்பது தமிழர்களின் குறை. தமிழகப் பள்ளிக் கூடங்களுக்கு எனத் தயார் செய்யப் பட்ட பாடநூல்களையே அவர்களும் பயன்படுத்தும் நிலை உள்ளது. ஆயினும் அயல்நாட்டுச் சூழலில் அங்குள்ள பாடத் திட்டங்களுக்கேற்ப அங்குள்ள வாழ்க்கை முறையினை யொட்டிப் பாடநூல்கள் அமைய வேண்டும் என்பது அவர்கள் விருப்பம். அதற்கான வாய்ப்புக்கள் குறைவாக உள்ளன. தகுதி பெற்றாரும் இல்லை நூல்கள் தயாராகுமானால் அவற்றை அச்சிட்டுப் பெறுவதற்கான வசதிகளும் வாய்ப்புக்களும் அங்குக் குறைவு, செலவும் மிகுதி.

தமிழைத் தமிழர் முதல் மொழியாகக் கற்றல் மட்டுமல்லாது தமிழை இரண்டாம் மொழியாகவும் கற்பிக்கும் தேவை அங்குள்ளது. தமிழரல்லாத பிறருக்கு அத்தேவை உள்ளது. அவ்வாறே குறிப்பட்ட தேவைகளை ஒட்டிக் கற்பிக்கும் தமிழ்ப் பாடநூல்களும் தேவைப் படுகின்றன. இத் தேவைகளை நிறைவேற்ற அங்குத் தகுதி பெற்றார் இல்லையாதலால் அவர்கள் தாய்த் தமிழகத்தையே எதிர்நோக்கி நிற்கின்றனர்.

சிங்கப்பூரிலும் இலக்கியம் படைக்கும் திறம் பெற்ற தமிழர் பலர் இருக்கின்றனர். ஒருசமயம் 'இங்கு 50 கவிஞர்கள், எழுத்தாளர்கள் இருக்கின்றனர்' எனப்பெருமைப்படும் நிலை இருந்தது. அவர்கள் வெறுந் தமிழ் எழுத்தாளர்களாக இல்லாமல் சிங்கப்பூர் எழுத்தாளர்களாக இருக்க விரும்புகின்றனர். ஆனால் சிக்கல் எல்லாம் 1000 படிகள் விற்றல், போதுமான படிப்போர் கூட்டம், அச்சேற்றுதல் பற்றியவை ஆகும். இவற்றுக்கெல்லாம் தாய்த்தமிழகத்தை அவர்கள் எதிர்நோக்குகின்றனர். சிங்கப்பூர்ப் படைப்பிலக்கியங்களுக்குத் தமிழகத்தில் இடமும் வரவேற்பும் ஒப்புதலும் மதிப்பும் விற்பனையும் வேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர்.

சிங்கப்பூர்த் தமிழர்களைப் பற்றி அறிமுகமும் ஆய்வும் தேவை எனத் தமிழர் - குறிப்பாகத் தமிழ் இளைஞர் விரும்புகின்றனர். மொழி இலக்கிய ஆராய்ச்சி மட்டுமல்லாது சிங்கப்பூர்த் தமிழரைப் பற்றிய சமூக பொருளாதார வரலாற்றாராய்ச்சியும் நடைபெற வேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர். அவற்றில் தாமும் தாய்த் தமிழகத்தாரும் பங்கு பெற வேண்டும் என்பதும், அது அங்கும் இங்கும் ஆகிய இருபுறத்தும் நடைபெற வேண்டும் என்பதும், அவர்கள் விரும்பும் விருப்பமாகும். அத்தகைய ஆய்வாளர்களையும் அமைப்புக்களையும் தமிழகமே தந்துதவ முடியும்.

பொதுவாகவே தமிழும் தமிழ்ப்பண்பாடும் அங்குச் சீரழிந்து வருகின்றன. எனவும் தமிழர் போலி வாழ்க்கை வாழுகின்றனர் எனவும் நாளடைவில் தமிழை விட்டு ஆங்கிலத்தையோ, சீனத்தையோ படிக்கத் தமிழர் சென்று விடுவர் எனவும் ஒரு சிலர் எண்ணி அச்சங்கொண்டுள்ளனர். இவற்றையெல்லாம் சிந்திக்கும் ஆற்றல் பெற்ற சிந்தனையாளர்களும் தலைவர்களும்

சிங்கப்பூரில் தோன்றவில்லையே அங்குள்ள இளைஞரிடையே என்ற அச்சம் உள்ளது. உடன்வாழும் சீனருடனும் உலகின் பிற இனத்தாருடனும் போட்டியிட்டு வாழ்க்கைவாழ இச்சூழல் தேவை என அவர்கள் கருதுகின்றனர். இந்த இளைஞர்களின் கருத்தும் கவலையும் இங்குக் கருதத்தக்கன.

சிங்கப்பூரின் தேவைகளுக்கு ஏற்பச் சிந்திக்கும் திறன் பெற்ற தமிழறிஞர்கள் பற்றாக்குறை இங்கு நிலவுகிறது. இந்தியப் பண்பாடும் தமிழ்மொழியும் காட்டும் சிந்தனைகள், தத்துவங்கள் ஆகியவற்றைச் சிங்கப்பூர் மக்கள் அறியாமல் இருக்கின்றனர். 'நாளிதழ்கள், பிற தமிழ் வெளியீடுகள்' தொடர்பான துறையிலும் தேர்ச்சி பெற்ற சிங்கப்பூரார்கள் இல்லை.

'சரிவு கண்டுவரும் தமிழ்மொழித் தரமும் பண்பாட்டறியாமையும் நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றன. இதனால் தமிழ் பேசும் மக்களின் மத்தியில் கூட, பண்பாட்டுச்சரிவும் ஒதுக்கப்படுதலும் தென்படுகின்றன'.

'அரசியல் தலைவர்களும், சமுதாயத் தலைவர்களும் தமிழர்கள் தம் தொன்மை மிக்க செழிப்பான பண்பாட்டு இலக்கியக் கூறுகளான மற்ற சிங்கப்பூரார்களுக்குத் தர முயலவேண்டும் எனப் பன்முறை அறைகூவல் விடுத்திருக்கிறனர். ஆயினும் அவ்வாறு நிகழ்வதாகத் தெரியவில்லை. தமிழிலிருந்து ஆங்கிலம், மாண்டரின், மலாய் முதலான மொழிகளில் அப்படைப்புகளை எழுதச் சிங்கப்பூரார்கள் அறவே இல்லாததுதான் இதற்கு அடிப்படைக் காரணம்!.

நூலடங்கல்

முருகரத்தனம், தி. (1986). *தமிழர் வாழும் அண்டை நாடுகளில் தமிழ்க் கல்வி.* *தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.*

Arasaratnam, Sinnappah (1979). **Indians in Malaysia and Singapore: Kualalumpur: Oxford University Press.**

Singh Bahadur, I. J. (1982). **Indians in South East Asia. New Delhi: Sterling Publishers Private Limited.**

National University of Singapore, Tamil Language Society. Report on the Establishment of a Department of Tamil Studies at The National University of Singapore, 1981.

Singapore Government **Singapore: The Information Division, Ministry of Culture.**

தமிழ்க் கலை
தமிழ் 5, கலை 3,4

பர்மாவில் தமிழ்

எஸ். நாகராஜன்

இந்தியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள பர்மா, 1936 வரை பாரதத்தில் ஒரு மாநிலமாக இருந்து வந்துள்ளது. பர்மாவிற்கும் தமிழ் நாட்டிற்கும் பண்டைய காலத்திலிருந்தே தொடர்பு இருந்து வந்திருக்கிறது 1974-ஆம் ஆண்டில் சோஷியலிசக் குடியரசுக் கூட்டரசு பர்மா என்று அழைக்கப்பட்ட இந்நாடு தென்கிழக்கு ஆசியாவின் வடமேற்குப் பகுதியில் திபெத்து நிலமேட்டிற்கும் மலேயா தீபகற்பத்திற்கும் இடையே உள்ளது. 676,552 சதுர மைல்கள் உள்ள பர்மா நாட்டின் வடமேற்கு எல்லையில் இந்தியாவும், வங்காள தேசமும் இருக்கின்றன. வடகிழக்கு எல்லையில் சீனாவும் லாவோசும் இருக்கின்றன. தென்கிழக்கு எல்லையில் தாய்லாந்து இருக்கின்றது. பர்மாவில் பஞ்சம் இல்லை. அரிசி, தேக்கு, பெட்ரோலியம், முத்து, நவரத்தினம் ஆகியன ஏராளமாக விளைந்து அந்நிய செலவாணியை ஈட்டித் தந்து பர்மாவைச் செல்வ நாடாக்கி விட்டது. பர்மாவின் தலைநகரம் இரங்கூன்.

பர்மாவில் பேசப்படும் முக்கிய மொழிகள் பர்மிய மொழி, ஷான் (Shan), காரேன் (Karen), அரகானிசு (Arakanese), மான் (Mon), காசின் (Kachin) சின் (Chin) முதலிய மொழிகளாகும். இந்திய சமஸ்கிருத மொழிக் கையெழுத்துமுறை, புத்த சமயப் பாலி மொழிக் கையெழுத்து முறை ஆகிய இரண்டு கையெழுத்து முறைகளின் கலப்பு உருவமே பர்மிய மொழியின் எழுத்துத் தொகுதியாகும். சின் மொழியைத் தவிர, மேலே கூறிய எல்லா மொழிகளும் பர்மியக் கையெழுத்து முறையைப் பயன்படுத்து கின்றன. ஐராவதி சமவெளியின் நடுப்பகுதியில் வசிக்கும் பெரும்பான்மையான பர்மியர்கள் பர்மிய மொழியைப் பயன்படுத்து கின்றனர். ஐராவதி, சிட்டாங் பள்ளத் தாக்குகளைச் சுற்றி வளைத்து இருக்கும் புற எல்லைப் பகுதிகளில் பல பழங் குடியினர் சுமார் நூறு வேறுபட்ட மொழிகளைப் பேசுகின்றனர். மான்களும், சான்களும் தாய்மொழியுடன் (Thai Language) தொடர்புள்ள மொழிகளைப் பேசுகின்றனர். லாவோ (Lao) இனப்பிரிவினர் ஒருவிதத் தாயமொழியின் கிளை மொழியைப் பேசுகின்றனர். இவர்கள் பர்மாவின் மொத்த மக்கள் தொகையில் பத்து விழுக்காடு இருக்

கின்றனர். ஆனால் நாட்டின் மொத்த நிலப்பகுதியில் 20 விழுக்காடு பகுதியில் இவர்கள் இருக்கின்றனர். காசின்களும், சின்களும் ஒன்றோடு ஒன்று நெருங்கிய தொடர்புள்ள 44 மொழிகளைப் பேசுகின்றனர். பர்மாவின் மொத்த மக்கள் தொகையில் 10 விழுக்காட்டுக்கு மேல் உள்ளவர்கள் காரென்கள் ஆவார்கள். அரகானிசு, பாலௌங் (Palaung) இனப் பிரிவினர்கள் ஆஸ்திரேலியா, ஆசியக் கண்டத்தைச் சார்ந்த மொழிகளைப் (Austria - Asiatic Languages) பேசுகின்றனர்.

பர்மா தமிழ் நாடு தொடர்பு வரலாறு

பண்டைய காலத்திலிருந்தே நிலம், கடல் மூலம் தமிழ் நாட்டிற்கும், பர்மாவிற்கும் தொடர்பு இருந்து வந்தது. வடகிழக்கு இந்தியாவில் உள்ள வங்காளப் பிரதேச நிலவழி மூலம் தமிழர்கள் பண்டைய காலத்திலிருந்தே பர்மாவுக்குச் சென்றனர். வங்காள விரிகுடா கடல் மார்க்கம் மூலமாகவும் தமிழர்களும், தமிழ்ப்பண்பாடும் பர்மாவுக்குச் சென்றன. பர்மா-தமிழ்நாடு தொடர்பு தோன்றிய முதற்காலக்கட்டத்தைப் பற்றி தெளிவான சான்றுகள் இல்லை. ஆனால், தொடக்கக் காலக்கட்டத்தில் அமைதி வழி மூலம்தான் தமிழ்ப் பண்பாடு பர்மாவிற்குச் சென்றன என்று கூறலாம். தொடர்பு காலத்தின் முற்பகுதியில் தமிழ் அரசு பரம்பரையான பல்லவர்களுக்கும் பர்மியர்களுக்கும் தொடர்பு இருந்தது. பல்லவக் கையெழுத்து முறை பர்மிய மொழியில் மாறுதல் உண்டு பண்ணியது என்று கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுச் சான்றுகள் கிடைத்திருக்கின்றன. "கி.மு. 200 முதல் 300 வரை காஞ்சிபுரத்திலிருந்து புத்த சமயக் கருத்துக்களுடன் பல்லவ எழுத்து, நாகரீகம், பண்பாடு மூலம் தமிழகத் தொடர்பும், நட்பும் ஏற்பட்டன. தட்டாம் எனப்படும் சுவர்ண பூமிக்குப் புத்தத்துறவிகளால் அவை கொணரப்பட்டன என்று பர்மியப் பண்பாட்டு வரலாறு என்ற நூல் கூறுகிறது" (இர. ந. வீரப்பன்) காஞ்சீவரத்தைப் பற்றியும், மதிப்புரைஞர் தர்ம பாலாவைப் பற்றியும் மற்ற அறிஞர்களைப் பற்றியம், பொதுவாகத் தமிழ்நாட்டைப் பற்றியும் தலைங் பதிவுக் குறிப்புகளில் (TALAING RECORDS) இருக்கின்றன. இச்சமயத்தில் தான் புத்தசமயம் கூட பல்லவ காஞ்சிபுரத்திலிருந்து பர்மாவுக்குச் சென்றதாக நம்பப்படுகிறது. எட்டாவது நூற்றாண்டில் அதாவது கி.பி. 765-ஆம் ஆண்டளவில் இந்தியாவில் அரசியல் குழப்பம் தோன்றியபோது நான்கு பிராமண குல மரபுக்குழுக்கள் கிழக்குத்திசை வழியாக வனியாராவிலிருந்து பர்மா, பெகு, லாவோஸ், சியாம், கம்போடியா முதலிய நாடுகளுக்குச் சென்றனர். இச்சமயத்தில் தான் ஹர்ஷர், புலிகேசி, நரசிம்மவர்மனுக்கு இடையே போராட்டங்கள் ஏற்பட்டன; இப்போராட்டங்கள் இக்குடிப் பெயர்வு நிகழ்ச்சிக்குக் காரணமாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இந்தியாவை விட்டு அயல் நாடுகளுக்குச் சென்றவர்கள் எல்லோரும் தங்களுடைய பண்பாட்டையும் எடுத்துச் சென்றார்கள்.

சோழர்களுடைய ஆட்சிக் காலத்தின் போதும் பர்மாவுக்கும் தமிழ் நாட்டிற்கும் உள்ள தொடர்பு வளர்ச்சியடைந்தது. சோழர் ஆட்சிக் காலம் வரை தமிழ்நாடு அமைதி முறை மூலம்தான் பர்மாவுடன் தொடர்பு வைத்திருந்தது. ஆனால், சோழர்கள்

ஆட்சியின் போது பர்மாவின் சில பகுதிகளைச் சோழர்கள் கைப் பற்றினார்கள். கி. பி. 1025-இல் இராஜேந்திர சோழன் (1012-1044) கடாரம் மேல் படையெடுத்தான். கடாரம் பர்மாவைத் தாய்லாந்துடன் இணைத்தது என்று நம்பப்படுகிறது. அதாவது காடரம் என்பது ஒரு பகுதி பர்மாவையும் (கீழ்ப்பகுதிகள்) மற்றொரு பகுதி தாய்லாந்தையும் இணைக்கும் வால் போன்ற தென்பகுதி என்று ஒரு சாரார் கூறுகின்றனர். 'பரக்கும் ஓதக் கடாரம்' என்று கலிங்கத்துப்பரணியும், 'குளிறு தெண்டிரைக் கடாரம்' என அந்நூலும் சுட்டுகின்றன. 'காழகத்து ஆக்கமும்' என்று பத்துப்பாட்டும், பட்டினப் பாலையும் பகர்கின்றன. காழகம் எனும் கடாரத்தை 'அருமணதேயம்' என்று சிலப்பதிகாரம் செப்புகிறது. ஆகையால் கலிங்கத்துப்பரணி, பத்துப் பாட்டு, படடினப்பாலை, சிலப்பதி காரம் முதலிய நுல்களில் கடாரத்தைப் பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. கடாரம் என்பது பர்மாவின் மற்றொரு பெயர் என்று பண்டைய, இடைக்காலத் தமிழ்ப்புலவர்கள் கூறுகின்றனர். பர்மாவில் உள்ள பெகு அரசுக்கு எதிராக இராஜேந்திர சோழன் படை யெடுத்ததாக நம்பப்படுகிறது. வங்காளத்தின் வழியாக இப்படை யெடுப்பு ஏற்பட்டிருக்கும் என்றும், இரண்டு முறை கடல் மார்க்கம் வழி யாகவும், ஒரு முறை நில மார்க்கம் அதாவது வங்காளம் வழியாகவும் பர்மாவின் மேல் இராஜேந்திர சோழன் படையெடுத்தான் என்றும் ஆர். ஸி. மகும்தார் கூறுகின்றார். அகழ் வர்ராய்ச்சி சான்றுகளும் இப்படை யெடுப்பை பற்றி உறுதிப்படுத்துகின்றன.

பெகுவிற்கு அருகே இரண்டு கருங்கல் தூண்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக் கின்றன. இராஜேந்திர சோழன் கி. பி. 1025-1027 ஆண்டுகளுக்கு இடையே பெகுவின் மேல் படையெடுத்து வெற்றியடைந்த பிறகு, தன்னுடைய வெற்றியைப் பறைசாற்றும் நோக்கத்துடன் இந்த வெற்றி தூண் களை அல்லது ஜயஸ்தம்பங்களை அமைத்தான் என்று பர்மா அகழ் வாராய்ச்சியாளர்கள் [உதாரணம் டெசெயங்கோ (1912) கூறுகின்றனர். 'திருமன்னிவளர இருநில மடந்தையும்' என்ற சிதைந்த வரி உள்ள ஒரு தூண் இராசேந்திரனுடைய பர்மாவின் ஒரு பகுதியைக் குறிப்பிடும் வெற்றித்தூண் அங்கு இன்றும் உள்ளது.

இப்படையெடுப்புக் காலத்தைத் தவிர பொதுவாக மற்றக் காலங்களில் தமிழ் நாட்டிற்கும் பர்மாவிற்கும் இடையே அமைதியான உறவு நிலவியது எனக் கூறலாம். கி.பி. 1084-1112-இல் வாழ்ந்த சான்சீத்தர் என்ற பர்மிய மன்னனும் சோழப் பேரரசனும் சிறந்த நண்பர்களாக இருந்தனர் என்ற கல்வெட்டும் இங்கு உண்டு. பண்டைய காலத்திலிருந்தே பர்மாவிற்கும்-தமிழ் நாட்டிற்கும் இடையே வாணிப உறவு இருந்தது. மேலும் தமிழர்கள் குடி பெயர்ந்து பர்மாவில் குடியேற்றம் செய்வதும் தொடர்ந்து நடந்தது. ஆனால், கீழை பர்மாவை 1852 - ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்கள் கைப்பற்றிய வுடன்தான் உண்மையில் மிகுதியான அளவில் தமிழர்கள் பர்மாவிற்குச் சென்று குடியேறுவது அதிகரிக்கத் தொடங்கியது. ஆங்கிலேயர்கள் கீழை பர்மாவைக் கைப்பற்றுமுன், பொது வாக வாணிபம் செய்து வந்த பெரும்

பான்மையான தமிழர்கள் ரங்கூனில் வசித்தனர்; ஆனால், ஆங்கிலேயர்கள் கீழை பர்மாவைக் கைப்பற்றிய பிறகு தமிழர்கள் இரங்கூனிலிருந்து கீழை பர்மாவிற்குச் சென்று குடியேறத் தொடங்கினார்கள்.

சென்னை, வங்காளம் மாநிலங்களிலிருந்துதான் பெரும்பான்மையான இந்தியர்கள் கீழை பர்மாவிற்கும் சென்றார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசி காலக் கட்டத்தில் சென்று குடியேறிவர்களில் 60 விழுக்காடு சென்னை மாநிலத்திலிருந்து சென்றவர்கள் ஆவார்கள்; வங்காளத்திலிருந்து 1881-ஆம் ஆண்டளவில் சென்றவர்கள் 30 விழுக்காடு. 1901-ஆம் ஆண்டளவில் சென்றவர்கள் 25 விழுக்காடு ஆவார்கள். பம்பாய், வடமேற்கு மாநிலம், அவுத், மத்திய இந்திய மாகாணங்கள், பஞ்சாப் முதலிய மற்ற பகுதிகளிலிருந்து பர்மாவிற்குச் சென்றவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவேயாகும்.

சென்னை மாநிலத்திலிருந்து சென்றவர்கள் குறிப்பாக சென்னை கிழக்குக் கடற்கரைப்பிரதேசங்களில் உள்ள ஏழு மாவட்டங்களிலிருந்து சென்றார்கள். தஞ்சாவூர், கஞ்சம், கோதாவரி, விசாகப்பட்டினம், மதறாஸ் நகரம், தென்னார்க்காடு, கிருஷ்ணா முதலிய மாவட்டங்களிலிருந்துதான் தமிழர்களும், மற்ற தென்னிந்தியர்களும் பர்மாவிற்குச் சென்றார்கள். 1874-1884-ஆம் ஆண்டுகளுக்கு இடையே 83,197பேர்கள் தென்னிந்தியாவிலிருந்து பர்மாவுக்குச் சென்றார்கள். 1881-ஆம் ஆண்டில் இவர்கள் கீழை பர்மாவிற்குச் சென்றனர். 1886-ஆண்டில் வட பர்மாப் பகுதிகளுக்குச் சென்றனர். 1890-ஆம் ஆண்டளவில் மியங்கன், மைக்கியோ முதலிய பகுதிகளுக்குச் சென்றனர்.

பர்மாவிலிருந்து இந்திய மக்கள்தொகை 1881—1941

ஆண்டு	மொத்த மக்கள்தொகை	இந்திய மக்கள்தொகை	இந்தியர்கள் %
1881	3736771	243123	6.5
1891	8098014	420830	5.1
1901	10490624	568263	5.4
1911	12115217	743288	6.1
1921	13212192	887077	6.7
1931	14567146	1017825	6.9
1941	16823798	918000	5.4

(Burma Hand Book, Simla, Govt. of India Press, (1943, P.4)

பர்மாவில் குடியேறிய தமிழர்களுள் புகழ் வாய்ந்தவர்கள் செட்டியார்கள் ஆவார்கள். இராமநாதபுரத்து நகரத்தார்கள் பர்மாவில் முதன்முதலில் 1850-இல் மொய்மீன் பகுதியில் குடியேறி வட்டித் தொழிலைத் தொடங்கினார்கள். கீழ்பர்மாவில் 1881-இலும், வட பகுதியில் 1886-இலும், மாந்தலையில்

1890-இலும், மைங்னானில் 1891-இலும், மைக்கிலோவில் 1892-இலும் சிவப் போவில் 1894-இலும் இவர்கள் குடியேறினர். குறிப்பாக 1850—1950 ஆண்டுகளுக் கிடையே இவர்கள் செல்வாக்கு பர்மாவில் ஓங்கி இருந்தது. 1850-இல் முதன்முதலில் பொருளீட்ட தமிழக நகரத்தார் குடியேறி பொருளகத்தையும், நெல்வயல்களையும், கடைகளையும் திறந்தனர். அதன் பிறகு தலைநகர் இரங்கூன் உட்பட நாடெங்கும் தமிழர்கள் பெரும் வணிகர்களாகவும் உயர்ந்து விட்டனர். பர்மாவில் செட்டியார்களுக்கு 1655 கடைகள் 5½ கோடி ஸ்டெர்லிங் பவுன் மூலதனத்துடன் இயங்கி வந்தன. அப்போது அவர்களிடம் மூன்றரை இலட்சம் ஏக்கர் நெல் வயல்களும் வேறு உடைமைகளாக இருந்தன. 1930-இற்கு முன் மலாயாவுக்கு (700 கிட்டங்கி) அடுத்த நிலையில் 400 கிட்டங்கிகளில் வட்டித்தொழில், நில அடமானம், ஆலை நிருவாகம் முதலிய தொழில்களில் முதலீடு செய்து பொருளீட்டினர். 1105 கிட்டங்கிகளில் கிடைத்த 75 கோடி ரூபாயில் பர்மியர்கள் மட்டுமே பெற்றது, கடனாக 35 கோடி, தமிழர்கள் வாங்கிய கடன்கள் இதில் 40 கோடி ரூபாய் 1929-30இல் 570,000 ஏக்கர் (அதாவது மொத்தத்தில் 6 விழுக்காடு நிலம்) கீழ்பர்மாவில் இவர்களுக்குச் சொந்தமாகியது. இது 1938-இல் 2, 468, 000 ஏக்கராக (சுமார் 24 இலட்சம் ஏக்கருக்கு மேல்) உயர்ந்துவிட்டது. இது மொத்தத்தில் 50 விழுக்காடாக இருந்தது. இதுவே 30-12-1947-இல் ஐம்பது இலட்சம் ஏக்கர் நிலமாக செட்டியார் கழகங்களுக்கு உரிமையாகி விட்டது இங்குக் குறிப்பிடத்தக்கது. 1938-இல் மட்டும் ஐயாயிரம் கிட்டங்கிகளிடம் முப்பதுஇலட்சம் ஏக்கர் நிலமும் இதன் ஆதிக்கத்திற்கு வந்துவிட்டன. இது இருபது விழுக்காடு நிலமாகும். ‘செட்டி நாடு பாங்’ என்ற பெரிய அமைப்பையே அமைத்தவர்கள் நகரத்தார்கள். மேலும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கழகம் ஒன்றையும் அமைத்தனர்.

1913-ஆம் ஆண்டு 1929-ஆம் ஆண்டுகளுக் கிடையே 45 இலட்ச இந்தியர்கள் பர்மாவிற்குச் சென்றனர். இவர்களில் 60 விழுக்காட்டிற்கு மேல் தமிழர்கள் இருந்தனர் எனக் கூறலாம். பர்மாவில் இருந்த இந்தியர்களின் செல்வாக்கு வளர்ச்சியடைந்தது. இரங்கூன் ஓர் இந்திய நகரமாக மாறியது. ஒவ்வொரு ஆண்டும் பர்மாவிற்குச் சென்று குடியேறும் இந்தியர்களில் 60 விழுக்காடு இந்தியர்கள் இரங்கூனில் குடியேறினர். 1901-ஆம்ஆண்டில் இரங்கூனில் மொத்த மக்கள் தொகையில் 48 விழுக்காடு இந்தியர்கள் இருந்தார்கள்; 1931-ஆம் ஆண்டில் இவ்வெண்ணிக்கை 53 விழுக்காடாக அதிகரித்தது. 32 விழுக்காடு பர்மியர்களே இரங்கூனில் இச்சமயத்தில் வாழ்ந்தனர். துறைமுகம் கப்பல்தொகுதி சார்ந்த துறைகளிலும், மற்றும் சிலதுறைகளிலும் இந்தியப் பணியாளர்களே அதிகமாக இருந்தனர். இரங்கூனில் திறமைத் தொழிலாளர் துறையில் (Skilled Positions) 62 விழுக்காடு இந்தியர்கள் இருந்தார்கள்; கைத்திறன் பெற்றிராத தொழிலாளர் துறையில் (Unskilled jobs) 95 விழுக்காடு இந்தியர்கள் இருந்தார்கள். பர்மியர்கள் மிகுதியாக வாழும் ஐராவதி டெல்டா பகுதியில் 1931-ஆம் ஆண்டளவில் 65.8 விழுக்காடு வாணிபமும், 52.1 விழுக்காடு அரசாங்க நிருவாகப் பணிப் பொறுப்புகளும், 36.3 விழுக்காடு

போக்குவரத்து பணிப்பொறுப்புகளும் இந்தியர்கள் வசம் இருந்தன. 1930-ஆம் ஆண்டளவில் இரங்கூனில் 82.8 விழுக்காடு வங்கிகளும், வட்டித்தொழில்களும் இந்தியர்கள் வசம் இருந்தன. மற்ற மாவட்டங்களில் இத்துறையில் 51.4 விழுக்காடு இந்தியர்கள் வசம் இருந்தன. இரங்கூனில் இத்துறையில் ஒரு பர்மியர் கூட இருந்ததாக புள்ளி விவரம் கிடையாது. மற்ற மாநிலங்களில் 34.3 விழுக்காடு மட்டும் இத்துறையில் பர்மியர்கள் வசம் இருந்தன. பர்மியர்கள் பட்டினியால் வாடவில்லை என்றாலும், பொதுவாக பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் இருந்தனர். ஆகையால், பர்மியர்களுக்கு இந்தியர்கள் மேல் வெறுப்பு இருந்தது. உதாரணமாக 1930 - இல் இந்தியர்களுக்கு எதிராகக் கலகம் கூட தோன்றியது. இக் கலகத்தில் 100 பேர் இறந்தனர்.

1930-ஆம் ஆண்டளவில் பொருளாதாரத்தில் மந்த நிலை தோன்றியவுடனும், 1937-ஆம் ஆண்டில் பர்மா இந்தியாவிலிருந்து பிரிந்தவுடனும், பர்மாவிற்கு வரும் இந்தியர்களின் எண்ணிக்கை குறையத் தொடங்கியது. குறிப்பாக 1938-ஆம் ஆண்டிலிருந்து பர்மாவில் உள்ள இந்தியர்கள் பாதிக்கப் பட்டார்கள். நிலம் வாங்கும் மசோதா, குத்தகைக்காரர் சட்டம், புத்த மகளிர் மரபுரிமை, திருமணச்சட்டம், இரங்கூன் முனிசிபல் சட்டம் முதலியவை மூலம் பர்மிய மயமாக்கும் கொள்கை தீவிரமாக்கப்பட்டவுடன் தமிழர்கள் மிகுதியாகப் பாதிக்கப்பட்டார்கள். தவிர, 1938-ஆம் ஆண்டில் இந்தியர்களுக்கு எதிராக ஒரு கலகமும் தோன்றியது. மேலும், குடிபுகு உடன்பாடு (Immigration Agreement) பர்மாவில் உள்ள இந்தியர்களைப் பாதித்தது. இக் காரணங்களால் செட்டியார்கள் பர்மாவிலிருந்து வெளியேறுவது நல்லது எனத் தீர்மானித்தனர்.

இரண்டாம் உலகப் போர் தோன்றியவுடன் பர்மாவில் உள்ள இந்திய மக்கள் தொகையில் எண்ணிக்கை மிகுதியாக குறையத் தொடங்கியது. ஜப்பானிய படையெடுப்பின் போது 5,00,000 இந்தியர்கள் பர்மாவை விட்டு வெளியேறினர். இவர்களில் பல ஆயிரம் பேர்கள் வழியில் மாண்டனர். கால்நடையாகத் தமிழகம் திரும்பியோர் அனந்தம் 1931-இல் பர்மாவில் இருந்த இந்தியர் எண்ணிக்கை பத்து லட்சம். 1946-இல் பர்மாவிலிருந்து திரும்பிய இந்தியர்களின் எண்ணிக்கை 2,46,000. பர்மாவிற்குள் நுழைபவர்கள் எல்லோரும் விசா (Visa அயல் நாட்டு நுழைவுரிமை தரும் கடவுச் சீட்டின் மீது அளிக்கப் படும் மேல்வரிச்சான்றுரிமைக் குறிப்பு) பெற்றிருக்க வேண்டும் என்றும் அல்லது குடிபுகு செயல்துறைக் கட்டுப்பாட்டு அதிகாரி அளித்திருக்கும் அனுமதிச்சீட்டு பெற்றிருச்க வேண்டும் என்றும் பர்மிய அரசாங்கம் 1947 ஜூன் மாதம் அறிவித்தது. இதன் விளைவாக பர்மாவிற்குப் போகும் தமிழர்களின் எண்ணிக்கை, குறிப்பாக செட்டியார்களின் எண்ணிக்கை, குறையத் தொடங்கியது. 1953-ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி இரங்கூனில் 1953-ஆம் ஆண்டு மொத்த மக்கள் தொகை 7,37079; அதில் இந்தியர்களின் எண்ணிக்கை 40,396, 22 ஆண்டுகளுக்கு முன் 1931-ஆம் ஆண்டளவில் இரங்கூனின் மொத்த மக்கள்தொகையில் இந்தியர்கள் மட்டும் 51 விழுக்காடு இருந்தனர்.

மேலும் வாடகை மதிப்புத் தகவுச் சட்டம் (Standard Rent Act), குத்தகை ஒழுங்கமைவுச் சட்டம் (Tenancy Disposal Act 1947-48), வேளாண்மைக் கடன் துயர்த் தீர்ப்புச்சட்டம் (Agricultural Dept. Relief Act 1848), நிலம் தேசிய மயமாக்குதல் சட்டம் 1940 (Land Nationalisation Act 1948), வேளாண்மைத் துறை வங்கிச் சட்டம் (Agricultural Bank Act 1948), பர்மா அரசியல் அமைப்புச் சட்டம் 1947 (Burmese Constitution 1947), பர்மா அயல்நாட்டினர் சட்டம் 1948 (Burma Foreigners Act 1948) முதலியவை இந்தியர்களின் செல்வாக்கைக் குறைத்தன. குறிப்பாக இந்தியர்களைச் சிறுபான்மையினர் (Minority) என அரசியல் அமைப்புச் சட்டம் அங்கீகரிக்கவில்லை. இதன் உடனடி விளைவு செட்டியார்களின் செல்வாக்கு வீழ்ச்சியடையத் தொடங்கியது. 10,000 இந்தியர்கள மட்டுமே பர்மா நாட்டுக் குடிமக்களாக மாறினா. மேலும், அரசு அலுவலா துறையிலும் பர்மியர்களுக்கு முதன்மை இடம் அளிக்கபபட்டதால் தமிழர்கள் அரசில் அலுவலர்கள் பணியினை இழந்தார்கள். 1957-ஆம் ஆண்டு பர்மாவில் இருந்த இந்தியர்களின் எண்ணிக்கை 8,00,000.

1962-1966-ஆம் ஆண்டுகளுக்கு இடையே எல்லாக்கடைகளும் தேசிய மயமாக்கப்பட்டன. அல்லது அந்நியர்கள் கடை உரிமையாளர்களாக இருப்பது தடைச் செய்யப்பட்டது. ஆகையால், அயல்நாட்டினர்கள் பர்மாவை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயச் சூழ்நிலை உருவாகியது. அல்லது பர்மாவில் தங்க அனுமதி பெற்றால் வேலை செய்யவோ, வாணிபம் செய்யவோ வாய்ப்பளிக்கப் படவில்லை. ஆகையால், பெரும் பான்மையான இந்தியர்கள் தமிழர்கள் உட்பட இந்திய அரசு உதவியுடன் பர்மாவை விட்டு, தங்கள் உடைமைகளைப் பர்மாவில் விட்டுவிட்டு, வெளியேறினர். தங்களுடைய சேமிப்பில் ஒரு சிறுபகுதியே அவர்களால் இந்தியாவுக்கு கொண்டுவர முடிந்தது. இதற்குக் காரணம் பர்மா நாட்டு அந்நிய நாட்டுச் செலாவணி கட்டுப்பாடுகள் ஆகும். இன்று பர்மா நாட்டு இயற்கை வளம் முழுவதும் அரசின் சொத்து; மக்களுக்காக அரசு இவ்வியற்கை வளத்தை பயன்படுத்தும் உற்பத்தி வழிவகைகள் எல்லாம் (Means of Production) தேசியமயமாக்கப்படும்.

1962-இற்குப் பின் எழுந்த பயங்கர சோதனைக்குப் பின் அகில பர்மா இந்தியர் காப்பு முகாம்16-6-1963-இல் கம்பை நகரில் அமைக்கப்பட்டது. இது பர்மா இந்திய அகதிகள் முகாம். கப்பல்களில் சென்றுவிட்டவர்களின் (இந்தியாவுக்கு, அதிகமாகச் சென்னைக்கு) எண்ணிக்கை 62,412 பேர். 1964-இல் இது நடந்தது. இந்த முகாம் பொறுப்பாளர்கள் இந்திய அரசிடம் இந்தியாவில் வீடு கட்ட மனையும், வேளாண்மைக்கு நிலமும், வணிகர்களுக்குத் தொழிலும் செய்ய பணமும் கோரி விண்ணப்பித்தனர். இத்திட்டத்திற்கு அகில பர்மா இந்தியர் காங்கிரசு, நேதாஜி உதவிக்கழகம், தொண்டர் பேரணி, இந்தியத் தூதரகம் ஆகியவை உதவின.

1974 ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்புச் சட்டம் மேலும் எல்லாத் தமிழர்களையும் பர்மியக் குடிமக்களாக மாறியவர்கள் உட்பட, எல்லோ

ரையும் பாதித்தது. 1982 — ஆம் ஆண்டு குடிமகன் சட்டம் மூன்றுவிதக் குடிமகன் பிரிவுகளை அளித்தது. தாயக நாட்டினரல்லாதவர்கள் முக்கியப் பதவி கள் வகிக்க முடியாது என இச்சட்டம் கூறியது. ஆகையால், பர்மா, சுதந்திரம் அடைந்த பிறகு தமிழர்களின் செல் வாக்கு மிகவும் வீழ்ச்சியடையத் தொடங்கியது.

பர்மியப் பண்பாட்டிற்குத் தமிழர் கொடை

இந்தியப் பண்பாடு முதன்முதலாக ஐந்தாம் அல்லது ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் ஐராவதி ஆற்றுப் பள்ளத்தாக்கில் இருத்தது என்று சான்று கள் உள்ளன. பாலி மொழியிலும் மற்ற இந்திய மொழிகளிலும் எழுதப்பட்ட புத்த இலக்கியப்படைப்புகள், ப்ரோம் அருகே கிடைத்தன. மான்களிடமிருந்து Mons) பர்மன்கள் இந்திய எழுத்துக் கலையும், புத்த இந்து சமயங்களைப் பற்றியும் கற்றறிந்தனர். கீழைப் பர்மா வில் கிடைத்துள்ள பல்வேறு இந்து சமயச் சின்னங்களிலிருந்து இப்பகுதியில் புத்த மதம் மட்டும்தான் இருந்தது எனக் கூற முடியாது. புத்தர் சிற்பங்களும் சில பிராமணக் கடவுள் சிற்பங்களும் பர்மாவில் கிடைத்திருக்கின்றன.

புத்த சமயம் இந்தியாவில் மறையத் தொடங்கியவுடன் தென்னிந்தியாவி லிருந்து பல்லவர், சோழர் கட்டிடக் கலை கருத்துக்கள் பர்மாவிற்குச் சென்றன. புத்த சமயத்தை பின்பற்றிய வர்கள் கூட இக் கருத்துக்களை ஏற்றுக் கொண்டு, குறிப்பாக ஆற்றின் கழிமுக அரங்கத்தைச் சார்ந்த பர்மாவின் பகுதி களில் பயன்படுத்தினார்கள், என்று குவாரிட்ஸ் வேல்ஸ் (Quaritch Wales) என்பார் கூறுகின்றார். தென்னிந்தியா பேகன் கட்டடக்கலை உறவினைப் பற்றி போர்ச் ஹேமர் என்பார் எடுத்துரைக் கின்றார். கி.பி. 1090-இல் பேகனில் கட்டிமுடிக்கப்பட்ட ஆனந்தகோவில் "வடஇந்திய சிகரத்தை உடைய தென் இந்தியன் கோயில்" என்று சரியாகவே வருணிக்கப்பட்டிருக்கிறது என்று இவர் கூறுகின்றார். விஷ்ணு கணேசர், பிரம்மா உருவச்சிலைகள் எஸ்மாவிஸ் (Hmawze) எனுமிடத்திலும், விஷ்ணு, கருடா, ஹனுமான் உருவச்சிலைகள் மெர்குயி (MERGUI) எனுமிடத்திலும், சூர்யா, துர்க்கா, விஷ்ணு, அராகன் (Arakan) எனுமிடத்திலும் கிடைத்திருக்கின்றன.

தட்டானில் (மான் மாவட்டம்) கணேசர் இந்துக் கோயில் 1057 - இல் கட்டப்பட்டது. இது சோழர் காலக் கோயில். பேகன் நகரில் 1091-இல் கட்டப்பட்ட குகைக் கோயில்களில் பர்மியம், மான், புயூ, சீயம், தமிழ், சீனம் ஆகிய மொழி வடிவக் கல்வெட்டு கள் உண்டு என்பது வரலாறாக உண்டு. 1059-இல் மான் அரசன் மனுவகன் என்பவனால் நான்பாயாவில் பிரமன் கோயில் கட்டப்பட்டது.

சியாம், கம்பூசா, பர்மா அரச அவை சடங்குகளை நடத்தியவர்கள் பிராமணர் கள். இவர்கள் சோதிடர்களாகவும் பணி புரிந்திருக்கின்றனர்.

தொடக்கத்திலிருந்த தலைங் மொழி யின் எழுத்துத் தொகுதி (Talaing alpha bet) நான்காவது நூற்றாண்டைச் சார்ந்த வெங்கி மொழியின் எழுத்துத் தொகுதியைத் (Vengi alphabet) தழுவி யிருந்தது என்று போர்ச் ஹேமர் கூறு கின்றார். மான் எனுமிடத்தில் கண்டு பிடிக்கப்பட்ட பண்டைய கல்வெட்டு

களில் கையெழுத்து முறையும், மத்திய சியாமில் லோப்புரியில் கண்டுபிடிக்கப் பட்ட கற்றூண்களில் உள்ள கையெழுத்து முறையும் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவ கையெழுத்து முறையினைத் தழுவியிருக்கின்றன. மற்ற கல்வெட்டுகளில் கிடைத்த சான்றுகளும் தென்னிந்திய மொழிகளின் தொடர்பின் மூலம் பர்மிய எழுத்துத் தொகுதி உருவாகியிருக்கலாம் என்று உறுதிப்படுத்துகின்றன.

இரங்கூன் ஒரு பெரிய நகரமாக வளர்ச்சியடைந்ததில் தமிழ்த் தொழிலாளிகளுக்கும், தமிழ் ஒப்பந்தக்காரர்களுக்கும் சிறப்பான பங்கு உண்டு. ஆகையால் நகர அமைப்பு, வாய்க்கால் சீரமைப்பு முதலிய பொதுப்பணிகளில் பங்கேற்றனர். 1824–ஆம் ஆண்டில் இரங்கூனில் 1500 வீடுகளும், 9000 குடிகளும்தான் இருந்தனர். அப்பொழுது அது ஒரு கிராமமாக இருந்தது. 1901-ஆம் ஆண்டளவில் அது ஒரு பெரிய நகரமாக மாறத் தொடங்கியவுடன், தமிழர்களும் மற்ற இந்தியர்களும் 1,30,000 பேர்கள், அதாவது இரங்கூனில் இருந்த மொத்த மக்கள் தொகையில் 50 விழுக்காடாக இருந்தனர். காடுகளை அழிக்கவும், சதுப்பு நிலத்தை மாற்றவும், சாலைகள், புகைவண்டிச் சாலைகள் மாவட்டங்களைக் கட்டவும், அரிசி உற்பத்தி, வாணிபம் செய்யவும், மரம் வெட்டவும், தேயிலை வாணிகம் செய்யவும் தமிழர்கள் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டனர். ஆகையால் இன்றைய பர்மாவை உருவாக்கியதில், குறிப்பாக ஆங்கிலேய ஆட்சியின்போது, தமிழர்களுக்குச் சிறப்பான பங்கு உண்டு என அறுதியிட்டுக் கூறலாம்.

பர்மாவில் உள்ள தமிழ் மக்கள் தொகை

பர்மாவில் உள்ள மொத்த இந்தியர்களில் தமிழர்கள் 60 விழுக்காடு இருக்கின்றனர். ஆனால், ஏற்கனவே விவரித்த படி, குறிப்பாக இரண்டாம் உலகப் போருக்குப் பின் தமிழர்களின் தொகை குறையத் தொடங்கியது. இன்று பர்மாவில் 2,00,000 தமிழர்கள் வாழ்கின்றனர். உலகத் தமிழர்களின் மொத்தத் தொகையில் இவர்கள் 0.4 விழுக்காடு உள்ளனர் என்று ஞானசூரியன் என்பார் கூறுகின்றார்.

பர்மாவில் இருந்த இந்திய மக்கள் தொகை 1881—1941

ஆண்டு	மொத்த மக்கள்தொகை	இந்திய மக்கள் தொகை (இவர்களில் தமிழர்கள் 60 விழுக்காடு உள்ளனர்)	இந்தியர்கள் %
1881	3,736,771	243,123	6.5
1891	8,098,014	420,830	5.1
1901	10,490,634	568,263	5.4
1911	13,115,217	743,288	6.1
1921	13,213,192	887,077	6.7
1931	14,667,146	1,017,825	6.9
1941	16,823,798	918,000	5.4

(SOURCE : N.R. Chakravarti, Indian Minority in Burma p 15)

1953-ஆம் ஆண்டில் பர்மாவில் மொத்த மக்கள்தொகை 2, 940, 704 (ஏறக்குறைய 30 இலட்சம்) இந்தியர்கள் (மொத்த இந்தியர்களில் தமிழர்கள் 60 விழுக்காடு இருந்தனர்)286, 903 (ஆண்கள் 185,301; பெண்கள் 101, 602)

[SOURCE : இர. ந. வீரப்பன், **உலகத்தமிழர்**, P.153] 1982-ஆம் ஆண்டில் பர்மாவில் 3,00,000 இந்தியர்கள் இருந்தார்கள். இவர்களில் 40,000 பேர்களிடம் இந்தியன் பாஸ்போர்ட் இருந்தன. 40,000 பேர்களிடம் தேசியப் பதிவுக் கார்டுகள் இருந்தன. 180,000 பேர்கள் நாடற்றவர்களாக இருந்தனர். (SOURCE Uma Shankar Singh, Indians in Burma' in *Indians in Southeast Asia* ed. by. I.J. Rahadur Singh P. 111), இந்த மொத்த இந்தியர்களின் எண்ணிக்கையில் தமிழர்கள் 2,00,000 பேர் இருந்தனர் என்று ஞானசூரியன் என்பார் கூறுகின்றார்.

வீரப்பன் (Op. Cit, P. 153) கூறுகின்றார். "இன்று நான்கு இலட்சமாகத் தமிழர் எண்ணிக்கை வளர்ந்துவிட்டது. இது 1984-ஆம் ஆண்டு கணக்கு என்பது குறிப்பிடத்தக்கது. இன்று மூன்று இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் நாடற்றவர்களாகி விட்டனர். இதுவே உலக நாடுகளில் குடியுரிமையற்ற தமிழர் மிகுந்துள்ள முதன்மை நாடாகும். மிகக் குறைந்தவர்களே இங்குக் குடிவாணர்களாகி உள்ளனர். இவர்களும் அரசுத் துறையைச் சார்ந்தவர்களாவர்.

தமிழர்கள் மிகுதியாக வாழும் பகுதிகள் இரங்கூன் மத்தியப் பகுதி, கிழக்குப் பகுதி, வடக்கு, மத்தியப் பகுதிகள்; 'இலாமூடா, தட்டாகலே, கம்மாகச்சி, தட்டோன், கம்பை, கலாபஸ்தி, இஞ்சின், மினிக்கோன், தென் அவுக் கலப்பா, தாம்புவே, தல்லா, கீழந்தான், கம்மாயுட், தீங்காஞ்சூன், 'சூரியம்—டாம்பின்குயின், மண்டலை, மோல்மின், பாகான். பொதுவாக இந்தியர்கள் இரங்கூன், அராகன், ஐராவதி ஆற்றங் கரையோரம், தென்னாசரீம், மாக்வே முதலிய இடங்களில் வாழ்கின்றனர்.

சமய வாழ்க்கை நிலை 1961 இல் பர்மாவில் அரசு சமயமாகப் புத்தமதம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பர்மாவின் மொத்த மக்கள் தொகையில் 85 விழுக்காட்டினர் புத்த மதத்தைப் பின்பற்றுபவர்கள். தவிர, ஆன்மவாதிகள் (5%) முஸ்லீம்கள் (4%), இந்துக்கள் (4%), கிறித்துவர்கள் (2%) சிறுபான்மையினராக இருக்கின்றார்கள். எல்லோரும் சட்டத்தையும், தேசியநலத்தையும் மீறாமல் அவர் அவர்களுடைய சமயத்தைப் பின்பற்ற உரிமை உண்டு.

பர்மாவிற்குச் சென்ற பெரும்பான்மையான தமிழர்கள் இந்துக்கள் ஆவார்கள். பர்மாவில் 40 இந்துக் கோயில்களுக்கு மேல் இருக்கின்றன. தவிர, தமிழ்க் கத்தோலிக்கக் கோவில்களும் இருக்கின்றன. முக்கிய இந்துத் தமிழர் கோயில்கள் சித்தி விநாயகர் கோயில் (1860), காளிகோயில் (1860), தாட்டனில் உள்ள தண்டாயுதபாணி கோயில் (1888), இரங்கூன் மகாமாரியம்மன் கோயில் (1903) சுந்தர விநாயகர் ஆலயம் (1908), வரதராஜ பெருமாள் கோயில் (1927) முதலிய கோயில்கள் ஆகும். தவிர நடராசப் பெருமாள், சிவன் கோயில்களும் உண்டு.

1933வரை 62 ஆலயங்கள் பர்மா செட்டியார்கள் பேராதரவுடன் கட்டப்

பட்டன. இரங்கூனுக்கருகில் கம்பை என்ற ஊரில் திருமால் ஆலயம், தண்டாயுத பாணி ஆலயம், பிள்ளையார் கோயில் அமைக்கப்பட்டன. அகன்ற பெரிய மோகுல் தெருவில் உட்கட்டட அமைப்பில் தண்டாயுதபாணி ஆலயத்தை அமைத்துள்ளனர். பசுமந்தானில் இதுபோல் தண்டாயுதபாணி கோயிலுக்கு அரசகோபுரம் 1900-இல் கட்டப்பட்டது. 1942-இல் இது குண்டு வீச்சில் சேதமடைந்து மறு சீரமைப்பு 1967-இல் அமைக்கப்பட்டது. மற்றும் சித்தி விநாயகர், காளியம்மன் ஆலயங்களும் எழுந்தன. மோல்மீனில் முதலாவது செட்டியார் குடியேற்றம் (கிழக்குப் பர்மா) ஏற்பட்டபோது வேல்முருகன் ஆலயம் அமைத்தனர். இது மலைக் கோயிலாச. சிவத்தலமுள்ள கோயிலாகவும் பின்னர் மறு உருவாக்கப்பட்டு தைப்பூசக்காவடி, வேலாட்டம் முதலியன திருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதுவே பர்மாவில் பெரிய இந்து ஆலயம். 32 ஊர்களில் தண்டாயுதபாணிக் கோவில்கள் நாட்டுக் கோட்டைச் செட்டியார்களால் நிருவகிக்கப்படுகின்றன.

முப்பனின் நகரிலும் நிம்பலே பட்டணத்திலும் தமிழ்க்கோயில்கள் உண்டு. கமாயூட் மாரியம்மன், அருள் முத்து மாரியம்மன் ஆலயங்களும், இன்சீன் தில்லை மாகாளியம்மன், மினிக்கோன் சுப்பிரமணியர் ஆகிய ஆலயங்கள் தமிழ்ப்பணி ஆற்றுகின்றன. இதுபோல் சித்தி விநாயகர் ஆலயமும் செயல்படுகிறது. தமிழும் சமயமும் இருகண்களாகப் பயன்படும் கோயில்கள் பல உள.

அகில பர்மா இந்து மத்திய வாரியம் என்ற பெரிய அமைப்பு உண்டு. இந்தச் சபையில் 75 கோயில்களும், கழகங்களும் சேர்ந்துள்ளன. 75-இல் தமிழர் கோயில் 15 இரங்கூனில் இருந்தன. 1976 வரை இவ்வாரியமும் கோயில்களும் ஐந்து மாநாடுகளை நடத்திற்று. இவ்வாரியம் மிகப் பெரிய மலர் ஒன்றை வெள்ளி விழா மலராக ஆங்கிலத்தில் (1957-1978) வெளியிட்டு உள்ளது.

தமிழர்கள் கார்த்திகை, சித்திரைப் பிறப்பு, தீபாவளி, பொங்கல் மற்றும் சில சமய விழாக்களையும் திருநாள்களையும் கொண்டாடுகிறார்கள். பொங்கலுக்கே பெருஞ்சிறப்பு. 'பர்மியத் தமிழர் வடக்கு, கிழக்கு, மத்தியப் பகுதிகளில் பெரும் பாலோர் நெல் விவசாயத்தில் ஈடுபட்டுப் பெரும் பங்காற்றி வருகிறார்கள். தமிழகத்தைப் போல பொங்கலையும், மாட்டுப் பொங்கலையும், விசாகத் தினத்தையும் சிறப்புடன் நடத்துவதாகக் கேள்விப்பட்டோம். இந்து-புத்த சமூக ஒருமைப்பாடு மிகுந்து நல்லெண்ணத்தை இது வளர்த்திருக்கிறது.'' (வீரப்பன். OP Cit.p 149)

பர்மாவில் தமிழ்க் கத்தோலிக்கர் ஆலய நூற்றாண்டு விழா (1877-1977) கொண்டாடப்பட்டிருக்கிறது. இச்சமயம் லெருவரர் அடிகளாரால் இங்கு துவங்கப்பட்டது. இது புனித அந்தோணியார் திருவாலயமாக வளர்க்கப்பட்டு மாதா கோயிலாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. 1946-இற்குப் பின் இந்தச் சமயத் தலைவர்களாகத் தமிழர்களே உருவாகியிருக்கிறனர். தமிழ், பர்மியம், ஆங்கிலம் போன்ற மூன்று மொழிகளில் 1977இல் சிறப்பு மலர் வெளியிட்டனர். சிறியம் தமிழர் கலாச்சாரக் கழகம் 1977 முதல் தை மலராகப் பொங்கல் சிறப்

பேடாக வெளியிட்டுப் பிரபலம் அடைந்திருக்கிறது.

பொருளாதார நிலை ஆங்கிலேய ஆட்சியின் போது மூன்று வகைத் தமிழர்கள் பர்மாவில் பணிபுரிந்து செல்வம் திரட்டுவதற்காக வந்தனர். 1. முதலாளித்துவ அல்லது வணிகர் பிரிவினர்-குறிப்பாகத் தமிழ், தெலுங்குச் செட்டியார்கள். 2. அறிவுத்திறனுடையவர் பிரிவினர்கள். (Intellectual class) - இவர்கள் குறைவாகத்தான் இருந்தனர். ஆசிரியர்கள் பேராசியர்கள், டாக்டர்கள், பொறியாளர்கள், வழக்குரைஞர்கள், கணக்கர்கள், எழுத்தர்கள், நிர்வாக அலுவலர்கள் முதலியவர்களை இப்பிரிவினர்களாகக் கருதலாம். ஐரோப்பியர்களுடன் இணைந்து அறிஞர்கள் தற்கால, கல்வி, மருத்துவ, நிருவாக, நீதி நிருவாகம் உட்பட-முதலிய அமைப்புகளைப் பர்மாவில் உருவாக்கினர். இராஜபுத்திரர்கள், சீக்கியர்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் படை, காவல் துறைகளில் பணிபுரிந்த தமிழர்கள் குறைவு. பொதுவாக வாழ்க்கைத் தொழிலர்களாகப் பணிபுரிந்தனர் (Professional Classes.) எல்லாச் சாதிப் பிரிவிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். குறிப்பாகப் பிராமணர்கள் பலர் வாழ்க்கைத் தொழிலர்களாகப் பணி புரிந்தனர். 3. இறுதியாக தொழிலாளிகள் கூலியாட்கள்-திறமைத் தொழிலாளர் குழுவினர், கைத்திறன் பெற்றிராத கூலியாள்கள் என இரு பிரிவினர் இருந்தனர். தென்னிந்தியாவில் உயர்படி நிலையை அடைய முடியாமல் இருந்த பல தொழிலாளர்கள், குறிப்பாக வேளாண்மைத் துறையினர், பர்மாவிற்கு வந்து குடியேறினர். பர்மாவில், குறிப்பாக வேளாண்மை, தொழில் துறையில் இவர்களுக்கு ஓரளவு அதிக ஊதியம் கிடைத்தது. பர்மாவில் ஒரு குடும்பத்திற்குப் பத்து ஏக்கர் நெல் விவசாய நிலம் உண்டு. நல்ல விளைச்சல் பகுதிகள் மிகுதி. இதில் பாகுபாடு கிடையாது. தமிழர்களுக்கும் இந்த உரிமை உண்டு. நில்த்தில் விளையும் பாதியை அரசாங்கமே விலை கொடுத்து வாங்கிக் கொள்கிறதாம். அதனால் வறுமை இவ்வாறு நிலவுடைமையாளர்களிடம் இல்லை. அற்றைக்கூலியோ, கொத்தடிமையோ தமிழர்களிடம் இல்லை என்றாலும் வட பகுதிகளில் கலாச்சார வீழ்ச்சியும், வறுமையும் இருப்பதாகக் கூறுகின்றார்கள்.

தமிழ்க் கல்வி நிலை பர்மாவில் தமிழ் மொழியின் வளர்ச்சி, தமிழ்க் கல்வியின் வளர்ச்சி, நலிந்த தமிழர்களின் மனப்பான்மையை மட்டும் சார்ந்திருக்கவில்லை. ஆளும் வகுப்பினர்களின் மனப்பான்மையையும் சார்ந்திருந்தது. அதாவது பர்மியர்களுக்குத் தமிழர்களின் மேல் இருந்த வெறுப்புணர்ச்சி, தமிழ் மொழியின் வளர்ச்சியைப் பாதித்தது. தமிழர்களின் உயர்படி பொருளாதார நிலைதனைப் பார்த்து, தாழ்படியில் இருந்த பர்மியர்களுக்குப் பொறாமையும் வெறுப்புணர்ச்சியும் ஏற்பட்டது. ஆகையால், பர்மாவிற்குச் சுதந்திரம் வந்த பிறகு பர்மியர்களை உயர்த்த வேண்டும். தமிழர்களின் ஆதிக்கத்தையும் எல்லா அயல்நாட்டினரின் ஆதிக்கத்தையும் ஒழிக்க வேண்டும் எனும் கொள்கை உருவாகியது. இதன் விளைவால் பர்மியர்கள் தமிழர்களையும் வளரவிடவில்லை ; தமிழ் மொழியையும் வளரவிடவில்லை. எல்லா அயல்நாட்டு வாடையையும் முற்றிலும் ஒழிக்க

வேண்டும் என்பதே அவர்கள் குறிக்கோளாக இருந்தது.

பண்டைய பர்மாவில் சமயம் சார்ந்த கல்வி முறை இருந்தது. கிராமியத் துறவி மடங்களில் 6 வயதிலிருந்து 12 வயது வரை உள்ள பர்மியக் குழந்தைகளுங்குக் கல்வி அளிக்கப் பட்டது. பாலி மொழி மூலம் கல்வி அளிக்கப்பட்டது. ஆனால், பர்மாவில் ஆங்கிலேய ஆட்சி தொடங்கியவுடன் சமய சார்பற்ற பொது நிலை வாழ்விற்குரிய கல்வி முறை (Secular Education) அறிமுகப்படுத்தப்பட்டது. ஆகையால், பர்மாவில் 19 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேய ஆட்சி தொடங்கியவுடன் சமயச் சார்பற்ற பொது நிலை வாழ்விற்குரிய கல்வி முறையும், அரசுப் பளளிகளும், கிறித்துவச் சமயப் பரப்பாளர்கள் நடத்திய தனியார் பள்ளிகளும், பர்மியத் தலைமை ஆசிரியர்கள் உள்ள தனியார் பள்ளிகளும் அமைக்கப்பட்டன. பெரும்பான்மையான பள்ளிகளில் தாய் மொழியே பயன்படுத்தப்பட்டது. ஆனால், உயர்படி கல்வி ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்பட்டது. இரங்கூனில் மட்டும் பல்கலைக் கழகம் மூலம் கல்வி பயில 1920-ஆம் ஆண்டிலிருந்து வாய்ப்பு இருந்தது. மண்டலேவில் ஒரு வேளாண்மைத் துறைக்கல்லூரி இருந்தது.

ஆங்கிலேய ஆட்சியின் முதல் காலக் கட்டத்தின் போது இந்தியர்களும், பர்மியர்களும் ஒருவரோடு ஒருவர் கலந்து, இணைந்து வாழாமல் தனித் தனி இனமாக வாழ்ந்து வந்தனர். இவ்விரு இனப்பிரிவினர்களிடையே உள்ள வேறுபாடுகளுக்குத்தான் இக்காலக் கட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப் பட்டது. உதாரணமாக, கல்வித்துறையில் ஒவ்வொரு இனப்பிரிவினர்களும் தங்கள் இனப்பிரிவினர்களுக்குத் தனி இனப்பள்ளிகள் அமைக்க வாய்ப் பளிக்கப்பட்டது. அரசு உதவியும், மேற்பார்வையாளர் தொகுதியும் (Inspectorate) ஒவ்வொரு இனப்பிரிவினருக்கும் தனித்தனியாக அளிக்கப்பட்டது. ஆகையால், பல்வேறு இனப்பிரிவினர்கள் பல்வேறு பள்ளிகளைத் துவக்கி நடத்த அனுமதி அளிக்கப்பட்டது. தமிழர்களும் தங்கள் இனப்பிரிவினர்களுக்குத் தனிப் பள்ளிகள் நடத்தினர். 1898-99 ஆண்டளவில் தமிழர்களுக்கும், தெலுங்கர்களுக்கும் 45 பள்ளிகள் இருந்தன. இதைவிட மிகுதியான பள்ளிகள் முஸ்லீம்களுக்கும், மற்ற இந்திய இனப் பிரிவினர்களுக்கும் இருந்தன. வங்காளிகளும் இந்திக்காரர்களும, தமிழர்களும், தெலுங்கர்களும் உருது பேசும் முஸ்லீம்களும் தனித்தனிப் பள்ளிகளை நடத்தினர். ஒருவர்கூட பள்ளிகளில் பர்மிய மொழியைக் கற்பிக்க வாய்ப்பளிக்கவில்லை. 1920-ஆம் ஆண்டு வரை இந்திய மாணவர்களுக்குப் பர்மிய மொழி ஒரு கட்டாயப் பாடமாகக் கற்பிக்கப்படவில்லை. தமிழ்ப் பள்ளிகளிலும் பர்மிய மொழி கற்பிக்கப்படவில்லை. பர்மிய மொழியைக் கற்றுக் கொள்ளும் இந்திய மாணவர்கள் உட்பட ஆங்கிலேய பர்மியர் பள்ளிகளிலும், பர்மியப் பள்ளிகளிலும் சேர வாய்ப்பிருந்தது. ஆனால் பொதுவாக இந்திய மாணவர்கள், தமிழ்மாணவர்கள் உட்பட எல்லோரும் தங்களுடைய இனப்பள்ளிகளிலே கல்வி பயில விரும்பினார்கள். இக்காரணத்தால் தமிழ்ப் பள்ளிகள் மூலம் பர்மியத் தமிழர்களிடையே தமிழ்க் கல்வி வளர்ச்சியடைய வாய்ப்பு உருவாகியது.

தமிழும், தமிழர்களும் பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டு தொடக்கக் காலத்திலே வளர்ச்சியடைய வாய்ப்பு ஏற்பட்ட போதிலும் தமிழர்கள் பர்மியர்களோடு இணைந்து வாழும் கல்விச் சூழ்நிலை, மனப்பான்மை உருவாகவில்லை. இந்துச் சட்டம், முஸ்லீம் சட்டம், பர்மியர் புத்த சமயச்சட்டம் என்று தனித்தனிச்சட்டம் நடைமுறையில் இருந்தன. 1882-ஆம் ஆண்டளவிலே இரங்கூன் நகர மாநகராண்மைக் கழகத்திலே இந்தியர்களுக்குத் தனி பிரதி நிதித்துவம் அளிக்கப்பட்டது. ஆகையால் பர்மிர்யகளையும், தமிழர்களையும் இணைக்கும் பாலமாக இருந்த மொழி ஆங்கில மொழியாகும். பள்ளி உயர்படி நிலையில் ஆங்கில மொழி கட்டாயப் பாடமாக இந்தியர்களுக்குக் கற்பிக்கப்பட்டதால் அவர்கள் இம்மொழி மூலம் பர்மியர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ள முடிந்தது. ஆனால், பெரும்பான்மையான தமிழ்த் தொழிலாளர்கள் படிக்க முன்வரவில்லை. இவர்களால் பர்மியர்களுடன் ஆங்கிலமொழி மூலம் தொடர்பு வைத்துக் கொள்ள இயலவில்லை. ஆகையால், பர்மாவிற்குச் சென்று பர்மிய மொழியை நன்றாகக் கற்றுக் கொள்ளாமல் இருந்ததால் தமிழர்கள் தமிழ் மொழியை மட்டும் பேணி வரும் தனி இனமாக வாழ்ந்து வந்தனர்.

பர்மாவிற்குச் சுதந்திரம் கிடைத்த பிறகு பல தனியார் பள்ளிகள், தமிழ்ப் பள்ளிகள் உட்பட அரசு அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. எல்லாப் பாடங்களும் பர்மிய மொழி மூலம்தான் கற்பிக்கப்பட்டன. இரண்டாவது கட்டாய மொழியாக ஆங்கிலம் கற்பிக்கப்பட்டது. தமிழ்மொழியைப் பர்மிய அரசு கற்றுத்தரவில்லை. 1955-ஆம் ஆண்டிலிருந்து பல்கலைக் கழக நுழைவுக்குத் தேவையான மெட்ரிக்குலேஷன் தேர்வு பர்மிய மொழியில் மட்டும்தான் நடத்தப்பட்டது. பல்கலைக் கழகக் கல்வியும், பர்மிய மொழியில் மட்டும் தான் அளிக்கப்பட்டது. ஆகையால், பர்மிய மொழிமயமாக்கும் இச்சூழ்நிலையில் தமிழ்மொழி வளர்ச்சியடையும் சூழ்நிலை உருவாகவில்லை. தமிழர்களின் பொருளாதார வளர்ச்சியைப் பார்த்துப் பொறாமையடைந்த பர்மியர்கள் தமிழர்களின் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு வாய்ப்பளிக்க முன் வரவில்லை.

தமிழ்மொழிக் கல்வி வளர்ச்சியடையாத போதிலும் பர்மாவில் கல்வித் துறை வளர்ச்சியடைந்தது. 1960-ஆம் ஆண்டளவில் 50 விழுக்காடு குழந்தைகள் தொடக்கப்பள்ளிகளில் சென்று பயின்றனர்; 3 விழுக்காடு மாணவர்கள் உயர்படி நிலைப் பள்ளிகளில் கல்வி கற்றனர். 1958-ஆம் ஆண்டில் மாண்டலெ பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது. 1950-ஆம் ஆண்டில் 3000 மாணவர்கள் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்றனர், இதுவே 12000 மாணவர்களாக 1960-இல் உயர்ந்தது.

1962 மார்ச்சு 2-ஆம் நாள் ஜெனரல் நீவினின் ஆட்சி, அதாவது படைத்துறை ஆட்சி தொடங்கியது. இவருடைய ஆட்சி தொடங்கிய பிறகு தமிழர்களின் நிலை மேலும் மிகுதியாகப் பாதிக்கப்பட்டு நலிவடையத் தொடங்கியது. ஜெனரல் நீவின் பர்மாவை முழுவதும் பர்மியமயமாக்குவதில் ஈடுபட்டார். பர்மாவில் ஒரு சோஸலிஸ சமுதாய

அமைப்பை உருவாக்க வேண்டும் எனும் முயற்சியைத் தொடங்கினார். இதன் விளைவாகப் பல தமிழர்கள் பர்மாவை விட்டு வெளியேற வேண்டியதாக இருந்தது.

1947-ஆம் ஆண்டு பர்மிய அரசியல் அமைப்புச் சட்டப்படி எல்லாக் குடி மக்களுக்கும் கல்வி கற்கும் உரிமை உண்டு. பர்மிய மொழிதான் பொது மொழி; ஆனால், மற்ற தேசிய சிறு பான்மையினரின் மொழிகளையும் (Minority Languages) கற்பிக்கலாம். ஒவ்வொரு குடிமகனுக்கும் அடிப்படைக் கல்வி கட்டாயமாகக் கற்பிக்கப்படும். இச்சட்டப்படி தமிழ்மொழியைக் கற்பிக்க வாய்ப்பளிக்கப் படவில்லை. ஏனென்றால் தமிழர்களைக் தேசியச்சிறு பான்மையினராக (Minorities) பர்மிய அரசு அங்கீகரிக்கவில்லை. 10,000 இந்தியர்கள் மட்டுமே பர்மிய குடிமக்க ளாக மாறினர். மற்றவர்கள் நாடற்ற வர்களாக (Statele s) இருந்தனர்.

1964-ஆம் ஆண்டு கல்வித்துறை யிலும் நீவின் மாற்றங்களை உருவாக் கினார். கலைத்துறைக்கு (Arts) முக்கியம் அளிக்கப்படவில்லை. தொழில் துறை வளர்ச்சியடைய உதவும் அறிவியல் துறைக்கு முதன்மை இடம் அளிக்கப் பட்டது. இரங்கூன், மாண்டலே பல்கலைக் கழகங்களில் தன்னாட்சி முறை (Autonomy) அறிமுகப்படுத்தப் பட்டது. பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை 2-இலிருந்து 10-ஆக உயர்ந்தது. 8 கல்லூரிகள் (affiliated colleges) தோன்றின. பர்மிய மாணவர் களின் கலகத்தை ஒடுக்கும் நோக்கத் துடன் இத்திட்டம் செயல்பட்டது. இதே நோக்கத்துடன்தான் 1976-ஆம் ஆண்டு 22 வாழ்க்கை தொழில் சார்ந்த இளையோர் கல்லூரிகள் (Junior Colleges) சின் மாநிலத்தைத் தவிர மற்ற மாநிலங்களில் அமைக்கப்பட்டன.

மேலும், எல்லாப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலமொழி மூலம் கற்பிக்கப்படுவது நிறுத்தப்பட்டது. அயல்நாட்டுச் செய்தித்துறை (Foreign Information Organization) தடை செய் யப்பட்டது. அயல்நாட்டினரின் கல்வி, பண்பாடு நடவடிக்கைகளுக்குத் தடை யாணையிடப்பட்டது. அயல்நாட்டினர் நடத்திய பள்ளிகள் எல்லாம், குறிப் பாகச் சமயப்பரப்பாளர்கள் ஆதர வுடன் நடத்தப்பட்டக் கல்லூரிகள் எல்லாம் தேசியமயாக்கப்பட்டு அரசுப் பள்ளிகளாக மாறறப்பட்டன. தமிழ் கற்றுத்தரும் 50 தொடக்கநிலைப் பள்ளிகள் 1966-ஆம் ஆண்டில் இருந்தன என்று ஞானசூரியன் என்பவர் கூறு கின்றார். நீவினின் தேசிய மயமாக்கும் கொள்கை இத்தமிழ்ப் பள்ளிகளையும் பாதித்தது.

ஆகையால் பத்தொன்பதாம் நூற் றாண்டிலும், இருபதாம் நூற் றாண்டின் இடைக்காலம் வரையிலும் பர்மாவில் தமிழர்களுக்கும் தமிழ்க் கல்விக்கும் சிறப்பிடம் இருந்தது. ஆனால், பர்மா சுதந்திரமடைந்தவுடன் தமிழ்க்கல்வியின் வீழ்ச்சி தொடங்கியது. தமிழர்கள் சிறுபான்மையினர் (Minorities) என்றுகூட ஏற்றுக் கொள்ளப் படாததால் சிறுபான்மையினருக்கு, அளிக்கப்பட்டிருக்கும் மொழி உரிமை கூட தமிழர்களுக்கும் தமிழுக்கும் அளிக்கப்படவில்லை. மேலும், பர்மா வில் உள்ள அயல்நாட்டு மொழிகள் நிறுவனத்திலும்கூட தமிழ் மொழியோ,

மற்ற இந்திய மொழியோ கற்பிக்கப் படுவதில்லை. பர்மியர்களை உயர்த்த வேண்டும். பர்மாவைச் சோஸலிசப் பாதையில் அழைத்துச் செல்ல வேண்டும். அயல்நாட்டுப் பொருளாதார ஆதிக் கத்தை ஒழிக்க வேண்டும் என்ற பர்மிய நாட்டுப்பற்று மேலோங்கியதால் தமிழ் மொழியின் வளர்ச்சி முற்றிலும் பாதிக்கப்பட்டது. ஒருவேளை தமிழர் கள் தொடக்கத்திலிருந்தே பர்மிய மொழியையும், தமிழ் மொழியையும் கற்றுக் கொண்டு பர்மியர்களுடன் இணைந்து வாழ முயற்சி செய்திருந் தால் தமிழர்களுக்கும், அதாவது இந்தியர்களுக்கும் சிறுபான்மையினர் தகுதி அளிக்கப்பட்டிருக்கலாம். தமிழ் மொழியும் பர்மாவில் வளர்ச்சியடையும் வாய்ப்பு பெற்றிருக்கும் எனக் கூறலாம். ஆனால், வரலாறு வேறு திசையில் சென்றுவிட்டது.

இன்றும் பர்மாவில் மூன்று இலட்சம் தமிழர்கள் வாழ்கின்றனர். வீரப்பன் நான்கு லட்சம் பேர் இருக்கின்றனர் எனக் கூறுகின்றார். ஆகையால், அரசு தடையாணை மூலம் தமிழ்க் கல்வியை முற்றிலும் நீக்க முடியவில்லை. பர்மியப் பள்ளிகளில் தமிழ் வகுப்பு இல்லை என்றாலும் சில தமிழ்க் கோயில்களில் மாலை இரவு வகுப்புகள் நடத்தப் படுகின்றன. பேகானில் பத்து கோயில் இருந்தும் ஒரு கோயிலில்தான் தமிழ்ப் பாடம் போதிக்கப்படுகிறது. கமாயூட் மாரியம்மன் கோயில், மினிக்கோன் சுப்பிரமணியர் ஆலயம் முதலிய ஆலயங்கள் இன்றும் தமிழ்ப்பணி ஆற்றுகின்றன. கோயில்களும் கழகங் களும் ஞாயிறு தோறும் தமிழைப் படிப்பிக்கின்றன. இக்கோவில் பள்ளி களில் பர்மாவில் வெளியிடப்படும் பாலர் நூல்கள் பயன்படுத்தப்படு கின்றன. பி. சுப்பிரமணியன், மா. சந்திரன் என்பவர்கள் 'அண்ணா அரிச் சுவடி' எனும் பாலர் பாடநூலை 1981-இல் வெளியிட்டனர். 'கலைமகள் அரிச்சுவடி நூலை' பாலர் பள்ளிக்காக வேறு ஒருவர் வெளியிட்டார். ''ஔவையார் ஆத்திசூடி'' வெளியிட்ட தமிழ்ப் புலவர் என்.எம். நாகரத்தினம் பாலர் பாடம் என்ற முதல் வகுப்பு, 2-ஆம்வகுப்பு நூல்களை 1980 முதல் வெளி யிட்டு வருகிறார். அரசு ஆதரவு இதற்கு உண்டு. கோயில்களின் மாலை இரவு நேர வகுப்புகளுக்கு இவை பயன்படு கின்றன. சிலகோயில்களில் தமிழ் பயில வாய்ப்பில்லை. பொதுவாக, பர்மாவில் வாழும் தமிழ்க் குழந்தைகட்குத் தனிப் பட்ட முறையில் தமிழ் கற்பிக்க பல ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இருந் தாலும் தமிழ் படிப்போர் குறைந்து வருகின்றனர். வடபர்மாவில் இந்நிலை பரிதாபமாக உள்ளதாம். தமிழ் படிப் பிக்க எல்லாக் கோயில்களிலும் கட்டாய மாக்கவும், கட்டொழுங்காக்கவும் பர்மிய இந்துச் சங்கம் முயற்சித்து வருகிறது.

தமிழர்களும் அரசியலும் பர்மாவில் முதன் முதலில் இரங்கூனில் அமைககப்பட்ட முதற் தொழிற் சங்கம் 'தென்னிந்திய ஓட்டல் தொழிலாளர் சங்கம்'. இதன் தலைவராகப் பணியேற்றவர்களில் திரு. டி.எஸ். மணியும் ஒருவர். 1946-இல் அகில பர்மா தமிழர் சங்கம் அமைத் தனர். அதில் டி.எஸ். மணியும் ஒருவர். இது 13-3-1952-இல் கட்டடம் கட்டியது. 1931-இல் பர்மா சுயமரியாதைச் சங்கத்தைப் பர்மியத் தமிழர்கள் அமைத் தார்கள். அகில பர்மா தமிழர் சங்கம் தீ, வெள்ளம், புயல் போன்ற இயற்கைப்

பாதிப்புகளிலிருந்தும், சமூகவுயர்வுக்கும் பாடுபட்டது. 1950-இல் பர்மா திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டது.

மிக முக்கியமான சங்கம் அகில பர்மா இந்தியன் காங்கிரஸ் ஆகும். 1947-ஆம் ஆண்டிலிருந்து இச்சங்கம் இந்தியர்களின் நலனை மேம்படுத்த முயன்று வந்தது. ஆனால் 1962-ஆம் ஆண்டிற்குப் பிறகு இதன் முக்கியத் துவம் குறைந்தது. ஏனென்றால், பர்மிய அரசு இந்தியர்களைப் பாகுபடுத்தி ஒதுக்கும் புதிய கொள்கையை அறிமுகப் படுத்தியது. ஆகையால், பிற்காலத்தில் பண்பாடு சம்பந்தமான, சமூகம் தொடர் பான விழாக்களை மட்டும இச்சங்கம் நடத்தியது. இந்திய சுதந்திரநாள், குடியரசு தினம் போன்ற விழாக்களை மட்டும் கொண்டாடியது. இக்காரணத் தால் இச்சங்கத்தின் தலைவர்களால் சிறப்பான தொண்டு ஒன்றும் புரிய முடியவில்லை.

அரசு ஆதரித்த பர்மா சோஸலிஸ அமைப்புத் திட்டகட்சியைத் தவிர மற்ற எல்லா அரசியல் கட்சிகளும் 1964-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் முதல் தடை செய்யப்பட்டன. 1969, 1983-ஆம் ஆண்டுகளில் தி.மு.க. கட்சி தடை செய்யப்பட்டன. இதன் அலுவலகம் மூடப்பட்டது. ஆகையால், அரசியலில் தலையிடாமல் பர்மாவில் தமிழர்கள் ஒதுங்கி வாழ்கின்றார்கள். மேலும், அரசுக்கு எதிராகத் தோன்றியிருக்கும் கலகங்களையோ, கிளர்ச்சிகளையோ. தமிழர்கள் ஆதரிப்பதில்லை. பர்மாவில் கூட்டாட்சி அமைக்க வேண்டும் எனக் கூறும் கம்யூனிஸக் கட்சியையும் ஆதரிப் பதில்லை.

செய்தி பரவல் தொடர்புச் சாதனங்கள் சங்கங்கள்: அரசு விவகாரங்களில் தலை யிடாக் கொள்கையைப் பின்பற்றிய போதும் பண்பாடு போன்ற மற்ற விவகாரங்கள் தொடர்பாக, தமிழர்கள் பர்மாவில் சங்கங்கள் அமைத்திருக் கின்றார்கள். இங்குள்ள முக்கியமான சங்கங்களும் கோயில்களுமே தமிழை யும், பண்பாட்டையும் பரப்பி வரு கின்றன. அவற்றில் சில திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா. தி.மு.க., பர்மா இந்துத் தமிழ் மன்றம், அனைத்து பர்மா சுயமரியாதை இயக்கம், தமிழர் இளைஞர் முன்னணி மன்றம், பர்மா திராவிடர் கலாச்சாரக் கழகம், பர்மா தமிழர் கலாச்சாரக் கழகம் (1977) மக்கள் கவி பாரதியார் முன்னேற்றக்கலை மன்றம், தமிழ் இளைஞர் பொதுநலக்குழு, பர்மா தமிழ் இளைஞர் சங்கம் (1954), பர்மா ஈழ மாணவர் பொது மன்றம் (1976), அறிஞர் அண்ணா அறிவகம், அறவழி அன்பர்கள் குழு, தமிழர் முன்னேற்றக் கழகம். ஆண்டு தோறும் அறிஞர் அண்ணா விழாவும், பொங்கலைத் தமிழர் திருநாளாகவும் கொண்டாடி வருகிறார்கள். பெரியார் நூற்றாண்டு விழாவும், பாரதியார் நூற்றாண்டு விழாவும் கொண்டாடப்பட்டன. தட்டோனில் வள்ளுவர் கோட்டம் மிகப் பிரம்மாண்டமாக உருவாகி வருகிறது. பர்மாவில் வீரமாமுனிவர் விழா திருவள்ளுவர் திருநாள், டாக்டர் அம்பேத்கர் விழா, பாரதி விழா, மேலும் பல விழாக்கள் இச்சங்கங் களால் நடத்தப்படுகின்றன. தமிழக மாதிரியில் விழா நடத்தி வருகின்றனர்.

மேலும், பர்மாவில் இரங்கூனை மையமாகக் கொண்ட பல இஸ்லாமியக்

கழகங்கள் இருக்கின்றன. 1. சோலியா முஸ்லீம் சங்கம். 2. சோலியா முஸ்லீம் சன்மார்க்க சேவையகம். 3. சோலியா முஸ்லீம் மார்க்க நிதி ஸ்தாபனம் 4. பர்மா வாழ்வீர சோழன் முஸ்லீம் ஜமாஅத் முதலியன குறிப்பிடத்தக்கன. சில சங்கங்கள் இவ்வாறு பல நூற்றாண்டாக இயங்கி வருகின்றன. சோழர் காலத்துத் தமிழர்கள் இவ்வாறு பர்மாவிலும், இலங்கையிலும், 'சோலியா முஸ்லீம்களாக' இயங்கி, சற்று மாறுபட்ட இஸ்லாமியத் தமிழர்களாக, தமிழோடு வாழ்ந்து வருவதுவரலாற்றில் ஆதாரம் உண்டு. சிலர்தமிழை மறந்த நிலையில் வேறுபட்டு விட்டனர். பர்மாவில் தமிழ் முஸ்லீம்கள் மிகப் பிரபலமான வணிகர்களாக, பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுச் சிறப்பாக வாழ்கின்றனர்.

செய்தித்தாள்கள், மாதஏடுகள், தமிழ்நூல்கள்

1876-இல் விக்டோரியா பேரரசிக்குத் தமிழில் எழுதிவாழ்த்துப் பாவைப்பாடியவர் இராமசாமிப் புலவர். மீண்டும் இரண்டாம் பதிப்பாக அதனை நூலாக 1877-இல் வெளியிட்டிருக்கிறார். அப்போதே பர்மா, ஆங்கிலம், தமிழ், இந்தி அகராதியைச் சோசப் என்பவர் எழுதி வெளியிட்டிருக்கிறார். 'சத்திய சோதி' இதழும் 'தமிழ் உள்ளம்' என்ற ஏடும் வந்தன. தமிழ் உள்ளம் 1975-76-இல் வெளியிடப்பட்டது. 1976-இல் தமிழ்த் தென்றல் ஏடும் கையெழுத்தில் வெளிவந்தது. தமிழ் அச்சகம் சில உள்ளன.

29 7-1936-இல் 'லோகமான்யா' என்ற புதன்கிழமை தோறும் வெளிவரும் வார ஏட்டைப் பவானி நடேசன் ஆசிரியராக இருந்து வெளியிட்டிருக்கிறார். 1931-இற்கு முன் 'இஸ்லாம் அலின்' என்ற மாத ஏட்டைத் தமிழ் அறிஞர் பா. தாவுத்சா நடத்தியிருக்கிறார். 'சாந்தி' எனும் நாளேட்டை அமரர் எம்.கே.எம். இபுராகிம் நடத்தினார். இவ்வேடு 1952 வரை வெளிவந்தது. பிறகு இவரே 'தொண்டன்' என்ற நாளேட்டையும் நடத்தினார். இது 40 ஆண்டாக வெளிவந்திருக்கிறது. 1981-இல் இவர் காலமான பின் 'தொண்டன் நினைவு மலர் 1982-இல்' என அவர் பெயர்ச் சிறப்பில் பாதி தமிழும் பர்மிய மொழியிலும் சிறப்பான மலர் ஒன்று வெளியிட்டுப் பாராட்டியிருக்கிறார்கள்.

பூ.செ. புதியவணை ஆசிரியராகக் கொண்ட இலக்கிய ஏடு- காலாண்டிதழாக 1981-இல் வெளியிடப்பட்டு வருகிறது. இலக்கிய ஏடாக ஒரு காலத்தில் 'ரஸிக ரஞ்சினி' என்ற ஏடும் பிறவும் வந்திருக்கின்றன. ஆயுர்வேத வைத்தியரான திரு. எம்.என். நாகரத்தினத்தை ஆசிரியராகக் கொண்டு 'அறங்காவலன் ஏடு' 1983முதல் அகில பர்மா இந்து மத்திய சபையால் வெளியிடப்பட்டு வருகிறது. புத்தர் பெருமானின் 'தம்மபதம்' இவரால் தமிழாக்கப்பட்டு இந்த ஏட்டில் தொடர்ந்து வருகிறது. பாலி மொழியிலிருக்கும் 'சுலோகங்களின் விரிவுரையும் வெளிவருகிறது.

தமிழறிஞர்களிலே மிகச்சிறப்பாகத் தொண்டாற்றிய பெருமை வே. சாமிநாத சர்மா அவர்களுக்கு உண்டு. தமிழிலே மிகுதியான நூல்களை வெளியிட்ட பெருமையும் இவருக்கு உண்டு. 'தாயும் தாய்மையும்' என்ற அருமையான புதிய நூலை 1981-இல் திரு. பூ. செ. புதியணன் வெளியிட்டார். இந்நூல் பிரபலமான பர்மிய ஆசிரியர் சிட்சன் வின் எழுதிய நூலின் தமிழாக்கம். மற்ற

எழுத்தாளர்களில் சிலர் கலைதாசன் திலகம், வசந்தி, பாணபட்டன், வாண வளவன், பாரதிநேசன், ரத்னா, கிருஷ் ணகுரு, தமிழ்மணி, பி.எஸ்.பி., அப்துல் வகாப், கே.ஓ. எம். முகம்மது இஸ்மா யில், கார்முகில் கவிராயன், கவி.கே ஏ. மஜிது, ஹிஜி எஸ்.ஏ. ரகீம், திரு.எஸ் எம். யூனுஸ், தமிழ்ப்பித்தன், சிறுத் தொண்டன்.

கம்பை நாட்டுக் கோட்டைச் செட்டி யார்கள் கல்வி வாரியம் 1964-ல் வசன நூலாகத் திருக்குறளைப் பர்மிய மொழி யில், பர்மிய அறிஞர் ஊமியோதாண்ட் என்பவரை எழுதச் செய்து வெளி யிட்டது. இவர் ஆங்கிலத்திலிருந்து பர்மிய நூலாக்கினார். நூலில் 'கம்பைத் தனவைசியர் கல்விக் கழக வெளியீடு' எனக்குறிக்கப்பட்டது. தவிர, சில ஆண்டுகளுக்கு முன் புத்தத் துறவியாகி விட்ட ஒரு தமிழறிஞர் திருக்குறளைப் பர்மிய மொழியில் வெளியிட்டிருக் கிறார். தட்டான் திருகுறள் இயக்கம் திருக்குறளைப் பரப்புகிறது. டாக்டர். மு. வ. வின் திருக்குறள் தெளிவுரையை தொகுப்பாகத் தொடர்ந்து வெளியிட்ட வர் வி. சுப்பிரமணியன். இவர் 'சத்திய சோதி' தீபாவளி சிறப்பிதழை இலக்கிய மலராக 1979 முதல் வெளியிட்டு வரு கிறார். ஆனால், ஒரே நூலாக டாக்டர் மு.வ. தெளிவுரையை 1980-இல் பூ.செ. புதியவன் வெளியிட்டார்.

அகில பர்மா இந்து மத்திய சபை தமிழில் 'சமஸ்கிருத மாலை' என்ற நூலை 1974-இல் வெளியிட்டது.

ஆகையால், பர்மாவில் இன்று தமிழ் மொழி முற்றிலும் மறையவில்லை. தமிழ் உணர்வு இருக்கின்றது பர்மிய அரசின் அடக்குமுறை கொள்கையே தமிழ் உணர்வை அடக்கி மறைத்து வைத்திருக்கின்றது. இந்த அடக்குமுறை சூழ்நிலையின் விளைவால் இன்று பர்மாவில் தமிழ் ஒலிபரப்பு இல்லை. தமிழ்ப்படம் காண்பிக்கப்படுவதில்லை. தமிழ் ஏடுகளும் ஒன்று அல்லது இரண்டு தான். 1964-இற்குப்பின் சென்னையில் அமைக்கப்பட்ட பர்மா அகதிகள் முகாமும், நீண்ட பசாரும் இன்றைய பர்மாவின் அரசியல் சூழ்நிலையில் உரு வாகிய தமிழர் நிலையையும், 'தமிழ்க் கல்வி நிலையையும், தமிழ் மொழி நிலையையும் தெளிவாகப் படம் பிடித்துக் காண்பிக்கின்றன. பர்மாத் தமிழர் பர்மாவைத் தங்கள் தாயக மாக ஏற்றுக் கொண்டுவிட வேண்டும். அப்போதுதான் அவர்களின் தற்கால சோக வரலாற்றுக்கு ஒரு சரியான விடை கிடைக்கும் எனப் பலர் நம்புகின்றனர்.

ஆப்பிரிக்காவில் தமிழ்

க. ப. அறவாணன்

ஆப்பிரிக்கக் கண்டம்: வடக்கே நடுநிலக் கடலையும், தெற்கே பசிபிக் பெருங் கடலையும், மேற்கே அட்லான்டிக் பெருங்கடலையும், கிழக்கே இந்துமாக் கடலையும் உடைய ஆப்பிரிக்கக் கண்டம் உலகப் பெருங்கண்டங்களுள் ஒன்றாகும். இதன் நிலப்பரப்பு 300 இலட்சம் சதுரக் கிலோமீட்டர் ஆகும். உலகின் மொத்த நிலப்பரப்பில் இது ஐந்தில் ஒரு பகுதி ஆகும். ஆப்பிரிக்கக் கண்டத்திற்கு உள்ளே அமெரிக்க ஐக்கிய நாடுகள், சீனா, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளை அடக்கி விடலாம்; அத்துணைப் பெரிய கண்டம். எனினும் மக்கள் தொகை மிகப் பெரியது அன்று; மக்கள் அடர்த்தியும் மிகப் பெரியது அன்று.

ஆப்பிரிக்கக் கண்டத்தின் மொத்த மக்கள் தொகை முப்பத்துமூன்று கோடி. ஒரு சதுரக் கிலோ மீட்டருக்குப்; பதினொரு பேரே வாழுகின்றனர். (இந்தியாவில் ஒரு சதுரக் கிலோ மீட்டருக்கு 150 பேர்; சீனாவில் 76 பேர்; அமெரிக்காவில் 26 பேர்).

முப்பத்திமூன்று கோடி மக்கள் நாற்பத்தியோரு தனி நாடுகளில் வாழுகின்றனர். நாற்பத்தியொரு நாடுகளில மிகுதியான நாடுகள் சில இலட்சம் மக்கள் தொகையைப்பெற்றுத் தனி நாடுகளாக இயங்குகின்றன. மூன்று இலட்சத்து எழுபத்திஐயாயிரம் பேர் மட்டும் மக்களாக உடைய கேம்பியா ஒரு தனி நாடாகும். கேம்பி ஆற்றின் இரு கரைகளிலும் இவர்கள் வாழுகின்றனர். நிலப்பரப்பு 10368 சதுரக் கிலோமீட்டர். (இந்தியாவின் நிலப் பரப்பு 32, 87,000 சதுரக்கிலோ மீட்டர்)

இக்கண்டத்தில் பின்வரும் இனமக்கள் வாழுகின்றனர்.

1.	ஹமிட்	(Hamites)	ஒரே இன மூலத்தினர்
2.	செமிதிக்	(Semites)	
3.	நீக்ரோ	(Negros)	கொய்சன் (Khoisan) எனப்படுவர்
4.	புஷ்மேன்	(Bushmen)	
5.	ஒட்டன்டோ	(Hottentots)	
6.	நீக்ரிலோஸ்	(Negrillos)	
7.	காக்தேசியர்	(European) (Whites)	
8.	இந்தியர்		
9.	கலப்பினத்தினர்		

மேற்கண்ட இனங்களுள் 1. ஹமித், 2, செமிதிக், 7. காக்கேசியர், 8, இந்தியர், 9. கலப்பினத்தினர் ஆகியோரைத் தவிர ஏனையோர் இக் கண்டத்தின் மண்ணின் மைந்தர் ஆவர். நீக்ராய்த் (Negroi) என்ற பேரினத்தின் கிளையைச் சார்ந்தவர் ஆவர். திருமதி & திரு லீக்கி (Leahey) ஆகிய மானிட இயல் அறிஞர்களின் அண்மைக் கண்டுப் பிடிப்புகளின்படி ஆதி மனிதனின் வாழ்விடம் கிழக்கு ஆப்பிரிக்கா (Ethiopia, Kenya) ஆகும். அவர்தம் கண்டுபிடிப்பு நீக்ரோ இனமக்களின் தொன்மையைக் காட்டுகிறது.

உலகத்தில் எந்தக் கண்டத்திலும் இல்லாத அளவுக்கு ஆப்பிரிக்காவில் இனக்குழுவினர்[1] இடம் பெற்றுள்ளனர். கிட்டத்தட்ட இருநூறு இனக் குழுவினர் ஆப்பிரிக்காவில் வாழுகின்றனர். இவ்வினக் குழுப் பிரிவே ஆப்பிரிக்க அரசியலை ஆட்டிப் படைக்கிறது என்பது அறிஞர்தம் கணிப்பு.[2]

மொழி அமைவு: ஆப்பிரிக்காவில் 1140 மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றுள் ஒருசில தவிர (அராபி, அம்காரிக்) ஏனைய மொழிகள் எழுத்து வடிவம் பெறாதவை. இவற்றை வகைப்படுத்துவதில் மிகுந்த கருத்து வேறுபாடுகள் உள்ளன. திரு. செலிக்மேன் (C G.Seligman) ஆப்பிரிக்க மொழிகளை ஆறுவகைப் படுத்துவர்[3]. அவையாவன:

1. செமிதிக் (Semitic)
2. ஹமிதிக் (Hamitic)
3. ஒட்டன்டோ (Hottentot)
4. பாண்டு (Bantu)
5. சூடானிக் (Sudanic)
6. புஷ்மேன் (Bushman)

வேறு சில மொழியியல் அறிஞர்கள் ஆப்பிரிக்க மொழிகளைப் பின்வருமாறு வகைப்படுத்துவர்.

I. நைசர் காங்கோ மொழிகள்
   1. மேற்கு அட்லாண்டிக் மொழிகள்
   2. மண்டே மொழிகள்
   3. கூர் மொழிகள்
   4. குவா மொழிகள்
   5. அடமாவா கிழக்கு மொழிகள்
   6. பெனுவே காங்கோ மொழிகள்

II. கொய்சன் மொழிகள்
   1. காட்டன்றோ
   2. புசுமன்

---

1) *Ethnic:* belonging to or deriving from the cultural, racial, religious or linguistic traditions of a people or country. esp. a primtive one - The Random House Dictionary of the English Language - College Education. pp 4›4.

2) R. N. Ismagilova, Ethnic Problems of The Tropical Africa-can they be solved;. 1978.

3) Races of Africa 1968, p.6.

III. நைலோ–சகாரன் மொழிகள்

1. சொங்காய்
2. சகாரன்
3. மபான்
4. பூர்
5. கொமாங்
6. சாரி–நைல்

IV. கெமிடிக் மொழிகள்

1. எகிப்திய மொழி
2. பெர்பர் மொழிகள்
3. குசிறிக் மொழிகள்
4. சட் மொழிகள்

V. செமிட்டிக் மொழிகள்

வடக்குச் செமிட்டிக்

1. கீப்ரு
2. மோபைட்
3. கைமத்
4. பினீசியன்
5. உகரிட்டிக்
6. ஆரமய்க்
7. அக்கேடியன்

தெற்குச் செமிட்டிக்

1. அராபி
2. எதியோப்பியம்[3]

ஆப்பிரிக்க, இந்திய மொழித் தொடர்பு: ஆப்பிரிக்க மொழிகளுக்கும் தமிழ் உள்ளிட்ட திராவிட மொழிகளுக்கும் இடையே ஒற்றுமைகள் இருப்பது கண்டறியப்பட்டுச் சிலரால் தொடர்ந்து ஆராயப்பட்டும் வருகிறது.[4]

ஆப்பிரிக்க–இந்திய மக்கள் தொடர்பு: ஆப்பிரிக்காவிற்கும் தென் இந்தியாவிற்கும் பழக்கவழக்கப் பண்பாட்டுச் தொடர்புகளும் பண்டு முதல் இருந்து வந்துள்ளன. ஆப்பிரிக்கக் கண்டத்தின் வடபகுதியிலுள்ள எகிப்திற்கும், வடமேற்குமுனையிலுள்ள எதியோப்பியாவிற்கும், தென் இந்தியாவிற்கும் பல நூறு ஆண்டுகளாகத் தொடர்புகள் இருந்து வந்து உள்ளன. இவற்றால் தென்னிந்தியாவில் இருந்து ஆப்பிரிக்காவிற்கும் ஆப்பிரிக்காவிலிருந்து தென்னிந்தியாவிற்கும் சில பழக்கவழக்கங்கள் இடம் மாறிப் பரவின.

இந்தியாவின் தென்முனைக்குக் குமரி என்று பெயர். ஆப்பிரிக்கத் தென்முனையை ஒட்டிய மடகாசுகருக்கு வழங்கிய பழைய பெயர் கொமோர் (Komar) என்பதாகும். மடகாசுகருக்கு வடக்கே உள்ள தீவுக்கூட்டங்கள் சிலவற்றுக்குக் கொமோர் (Komar) என்று பெயர். உயிரியல் செய்தியும் இத் தொடர்பை உறுதிப்படுத்துகின்றது. மடகாசுகரிலுள்ள செடிகொடிகள் ஆப்பிரிக்காவுடன் ஒத்திருப்பதை விடத் தென்னிந்தியச் செடி கொடிகளுடன் மிகுதியாக ஒத்துள்ளன. தமிழ் உரை மரபில் குமரிக்கண்டம் பற்றியும் அதன்கண் 44 நாடுகள் இருந்தமை பற்றியும் குறிப்புகள் உள்ளன. அந்நாடுகளுள் ஏழ் முன்பாலை, ஏழ்பின்பாலை என்ற நாடுகளும் அடங்கும். அவற்றுடன் அவுணர்புரம், நீலபுரம் ஆகிய ஊர்களும் அழிந்த தென்குமரிக் கண்டத்தில் இருந்ததாகச் சுட்டப்படுகின்றன. பாலை என்பது ஆப்பிரிக்கச் சகாரா பாலை வனத்தையும் நீலபுரம் என்பது நீல

3) டாக்டர் அறவாணன், செதந்மிழ்செனகால் செங்கோர். ப, 69

4) ஓம்பர்கர், வியோபோல்டு செதார் செங்கோர், சேக்தியான் ஞ்ஜாய், யூ.பி. உபாந்தியாயா.

(நைல் Nile) ஆற்றங்கரையையும், அவுணர்புரம் என்பது நிமிர்த்த தோற்றம் உடைய நீக்ரோக்களையும் குறிப்பிடுகின்றன. தமிழ்ப் புராணங்கள் தமிழ்நாட்டைச் சில கருப்பு நிற மன்னர்கள் 500 ஆண்டுகள் ஆண்டதாகக் குறிப்பிடுகின்றன. உடுக் கண்ணன், மறைக்கண்ணன் என்ற பெயர்கள் நீக்ரோக்களை நினைவு படுத்துவன ஆகும். வரலாற்றுத்தந்தை எனப்பெறும் கிரேக்க அறிஞர் எரோடேட்டசு (கி.மு. 484—408) வட மேற்கு இந்தியாவில் இந்திய நீக்ரோக் களைப் பார்த்ததாகக் குறிப்பு எழுது கிறார்.

"இந்தியக் குலமரபினர் யாவரும் ஆடுமாடுகளைப் போல வெட்ட வெளியிலேயே சிற்றின்பம் அனு பவிக்கின்றனர்; அவர்களின் தோல் எததியோப்பியரின் தோல் போல் கருப்பாக உள்ளது.மற்ற மக்களின் விந்து போல அந்த மக்களின் விந்து வெள்ளையாக இல்லை; தோல் போலவேகருப்பாக உள்ளது. இதே நிலை தான் எத்தியோப்பியரிடமும் காணப்படுகிறது."[5]

மேற்கண்ட குறிப்பின்படி எத்தி யோப்பியரை ஒத்த கருப்பு நிற மக்கள் இந்தியாவில் இருந்ததாகத் தெரிகிறது. இதனை வேறுசில சான்றுகளும் உறுதி செய்கின்றன. செவர்க்கி (Jewargi) என்ற இடத்தில் (குசராத்து) கிடைத்த மிகப் பழைய எலும்புக்கூடு நீக்ரோ இனக் கூறுகளை உடையதாக அமைந் துள்ளது. லாங்கஜ் (Langhnaj) என்ற குசராத் மாநிலப் பகுதியில் கிடைத்த ஏழு எலும்புக் கூடுகள் நீக்ரோ இனக் கூறுகளை உடையனவாக இருக்கின்றன. திராவிட இந்தியா சுமேரியர்கயால் கி.மு. 4000-4500-இல் கருப்பர்களின் நாடு என்று அழைக்கப்பட்டது. ஆரியர்க்கு முன் இந்தியாவில் வாழ்ந்த மக்களை ரிக்வேதம் தாச வர்ணத்தினர் (கருப்பு நிறத்தினர்) என்று குறிப்பிடு கிறது. அன்றியும் அக்கால மக்களை மூக்கு இல்லாதவர்கள் (சப்பை மூக்கு) என்ற கருத்தில் அனாசர் (Anasa) என்றும் குறிப்பிடுகிறது. அசந்தாவில் உள்ள குப்தர் கால ஓவியங்களில் நீக்ரோ கூறுகள் உடைய மனித ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

நீக்ரோ இனக் கூறுகளை உடைய கருப்பு நிறமும், சுருள் முடியும், தட்டை மூக்கும் உடைய மக்கள் பழங்குடி களாகத் தென்னிந்தியாவில் இன்றும் வாழுகின்றனர். கேரளாவில் வாழும் காடர், புலையர், ஊரானியர், முல்லைக் குறும்பர் தமிழகத்து வாழும் மலாசா, இந்தியாவின் கிழக்கு எல்லையோரப் பகுதியில் வாழும் சில இனக்குழுவினர், குமரி மாவட்டத்தில் வாழும் காணிக் காரர், செம்மாங்கு மச்கள், பொள்ளாச்

5. பி.எஸ்.வி. இராகவன், எரோடட்டசு, ப: 269.

சிப் பகுதியில் வாழும் காடர், மணிப்பூர் சர்க்கார் மலைப்பகுதியில் வாழும் அங்காமி நாகருள் சிலர், அந்தமான் தீவுப் பகுதியில் வாழும் குட்டை நீக்ரோக்கள் ஆகியோரிடம் நீக்ரோ உடல் கூறு உள்ளது.[6]

காடர், பணியர், இருளர், ஊராளி, முல்லைக் குறும்பர், வெட்டுக் குறும்பர், அந்தமான் ஒங்கி ஆகியோரிடம் ஆப்பிரிக்கரை நினைவுபடுத்தும் பழக்க வழக்கங்கள் உள்ளன.[7]

அனுமன் வழிபாடு இந்தியாவில் பரவியுள்ள அனுமன் வழிபாடு சிந்தனைக் குரியது. அனுமன் வழிபாடு ஆப்பிரிக்கரின் இந்திய வாழ்வை நினைவு படுத்துவதாகும் குசைத் (Kusite) என்ற ஆப்பிரிக்கரின் பண்டைய ஆட்சி எல்லையில் அனுமனை ஒத்த ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. மொகஞ்சதரோவிலும், சுமேரியாவிலும் குரங்கின் வடிவம் பொறிக்கப்பட்டுள்ளது நீக்ரோ மக்களின் பண்டைய இருப்பிடம் தென்னிந்தியாவில் இருந்திருத்தல் வேண்டும் என்பது தென்னிந்தியாவில் இருந்த கிட்சிந்தைப் பகுதியும் தென்னிந்தியாவில் பரவியிருந்த அனுமன் வழிபாடும் உய்த்துணர வைக்கின்றன. ஆண்+மந்தி -அனுமான் என்றாயிற்று என்ற சொல் வரலாறும் அனுமனைத் தென்னிந்தியப் போராகக் காட்டுகின்றது.

வில் செய்து பயன்படுத்தின்மை அத்திமர வழிபாடு இறந்தோர் வீடு பேறு அடையும்போது பழி வாங்கும் பதம் காவல் புரிவதாக நம்புவது, மீன், விலங்குகள் செடிகொடிகள் ஆகியவற்றைக் குலச் சின்னங்களாகக் கொள்ளுவது ஆகியன நீக்கிட்டோ மக்களின் பண்பாட்டு எச்சங்கள் ஆகும். ஆக் வரலாற்றுக் காலத்திற்கு முன்பும் வரலாற்று காலத்தின் தொடக்கத்திலும் ஆப்பிரிக்கக் கண்டத்திற்கும் தென் இந்தியாவிற்கும் தொடர்புகள் இருந்தன என்பதை மேற்கண்ட செய்திகள் காட்டுகின்றன. ஆப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் ஐரோப்பியக் குடியேற்றம் நிகழ்ந்த பிறகு தென்னிந்தியாவிலிருந்து தமிழர்கள் குறிப்பிடத்தக்க அளவிற்குத் தாயகத்திலிருந்து ஆப்பிரிக்காவிற்கு இடம் பெயர்ந்தனர்.

ஆப்பிரிக்காவில தமிழர் குடியேற்றம்: கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் போர்ச்சுக்கீசியர் ஆப்பிரிக்காவைக் கண்டறிந்தனர். அவர்களைத்தொடர்ந்து டச்சுக்காரர், ஸ்பானிஷ்காரர், பெல்சியர், செர்மானியர், பிரஞ்சுக்காரர், ஆங்கிலோயர் ஆகியோர் ஆப்பிரிக்கக் கண்டத்தின் பல்வேறு பகுதிகளையும் கைப்பற்றிக் குடியிருப்புகளை உருவாக்கினர்.

மொரிசியஸ் தீவு, தமிழர்கள் மிகுதியாக வாழும் (10 விழுக்காடு) ஒரு நாடாகும். இத்தீவைப் போர்த்துக்கீசியர் 1507-இல் கண்டுபிடித்தனர். விரைவில் அத்தீவை விட்டு வெளியேறியும் விட்டனர். டச்சு நாட்டினர், கி.பி. 1598-இல் அத்தீவில் குடியேறி 1710-இல்வெளியேறி விட்டனர். பிரஞ்சு நாட்டினர் 1815-இல் அங்கு குடியேறினர். அந்நாட்டைப்

---

6. தமிழ்நாடு அரசு, தமிழ் நாட்டு வரலாறு. ப, 84, 85.

7. K.P. Aravaanan, Negruid elements in Dravidian India p. 16—19

8. S. K. Chttevji, quoted by History of Tamil Nadu, Govt, Puqlication. P. 87.

பிரஞ்சுக் குடி இருப்பாக மாற்றினார் லேபர்தோன என்ற பிரஞ்சு ஆளுநர். இந்தியாவிலிருந்து கரும்பைக் கொண்டு வந்து மொரிசியசில் பயிரேற்றினர் மொரிசியசு தீவு இதனால் கரும்புத் தோட்டம், ஆயிற்று.

1810-இல் ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் பெரும் கடற்போர் நடந்தது. அப்போரில் ஆங்கிலேயர் வென்று அத்தீவையும் தம் உடைமை ஆக்கிக் கொண்டனர். ஆப்பிரிக்கா முழுதுமே ஐரோப்பியர்களின் பங்காளிச் சண்டைக்களமாக மாற்றப்பட்டது. 20-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆப்பிரிக்காவில் பெரும்பகுதி பிரஞ்சுக் காரர் கையிலும் ஆங்கிலேயர் கையிலு மாக உடைமையானது.

ஆப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் ஐரோப்பியர்தம் குடியிருப்புகள் நிலை பெற்றன. ஐரோப்பியர், தம் ஆப்பிரிக்கக் குடியிருப்புநாடுகளில்புதியபுதியதொழில் களையும் தோட்டத் தொழில்களையும் தொடங்கினர். குறிப்பாகத் தங்க வைரச் சுரங்கங்கள் வெட்டப்பட்டன. கரும்புத் தோட்டங்களும், காப்பித் தோட்டங் களும் பயிரிடப்பட்டன இவற்றில்வேலை செய்யத் தொழிலாளர்கள் தேவைப் பட்டனர். சுரங்கங்களிலும் தோட்டங் களிலும் உடல் உழைப்புப்பணி ஆற்றப் போதிய வெள்ளைக்காரர்கள் இன்மை யினால் ஆசியக் குடியிருப்பு நாடுகளிலி இருந்து ஆள்களைத் தருவிக்க முடிவு செய்தனர். தொடக்கத்தில் சீனாவிலி இருந்து ஆள்கள் வருவிக்கப்பட்டனர். சீனத் தொழிலாளர்கள் வெள்ளைக்கார அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு அடிமை போலவேலைசெய்ய ஆயத்தமாக இல்லை. எனவே இந்தியாவிலிருந்து, குறிப்பாகத் தென்னிந்தியாவிலிருந்து மேலும் குறிப் பாகத் தமிழ் நாட்டில் இருந்து கப்பல் கப்பலாக வேலைக்கு ஆட்களைக் கொண்டு சென்றனர்.

உள்ளூர் ஆப்பிரிக்கரும், வெள்ளைக் காரருக்கு ஏற்ற வேலையாள்களாக இல்லை. காரணம் ஆப்பிரிக்கர் ஆறு திங்கள் மட்டுமே வேலை செய்வர். எஞ்சிய ஆறு திங்கள்கட்டாய ஓய்வு எடுத்துக் கொள்வர். இக்கட்டாய ஓய்வுக்குச் சூலு மொழியில் பமுலா என்பதாகும். இதனால் வெள்ளைக் காரர்களின் சுரங்கங்களும் தோட்டங் களும் ஆறு மாத ஓய்வு பெறும் நிலை உருவாயிற்று. இந்நிலை மேலும் கூலி ஆள்களைத் தென் இந்தியாவிலிருந்து கொண்டுவர ஊக்குவித்தது.

ஐரோப்பியக் காலனி காலத்தில் ஆப்பிரிக்க நாட்டுக்குச் சென்ற தமிழர் களுள் மிகப் பெரும்பான்மையோர் ஏழைக் கூலிகளாக இருந்தனர். கூலிஎன்ற சொல்லிற்கே இந்தியர் என்றே மேற்கு இந்தியத் தீவுகளில் பெயர் வழங்குகிறது கூலிஎன்பது தமிழர்களுக்கு இடப்பெற்ற இனப்பெயராக அத்தீவுகளில் இன்றும் வழங்குகிறது. வெளிநாடுகளில் வாழ்ந்த அக்காலத் தமிழர்தம் அக்கால நிலையை இச்சொல் வழக்கு காட்டுகிறது.

அயல்நாடு சென்ற தமிழர்களைப் பின் வரும் வகைகளில் பிரிக்கலாம்.

1. கட்டாயத்தின் பேரில் அழைத்துச் செல்லப்பட்டவர்கள்,
2. பஞ்சம் பிழைக்கச் சென்றவர்கள்.
3. ஊதிய உயர்வு நோக்கிச் சென்ற வர்கள்.

எனவேதான் அயல்நாடு சென்ற தமிழர் கள் ஏனைய அயலினத்தாரைப் போலச்

சென்ற மண்ணில் ஒன்றவில்லை. தாயக நினைவிலேயே, பொருளீட்டித் தாயகம் திரும்புவதிலேயே அக்கறையாக இருந்தனர்.

சென்றவர் அனைவரும் ஆடவர்களாகவே இருந்தமையும், மனைவி மக்களைத் தாயகத்தில் விட்டுப் பிரிந்து சென்றமையும் அவர்தம் தாயக நினைவிற்குப் பெருங்காரணங்களாக இருந்தன.

மாறாக அங்கேயே தங்க நேர்ந்த தமிழர் ஆப்பிரிக்கப் பெண்டிருடனும், பிரஞ்சு ஆப்பிரிக்கக் கலப்பினப் பெண்டிருடனும், மணந்து கலந்து வாழ்ந்தனர். எனவே தான் கிரயோல் என்ற கலப்புமொழி அவரிடையே உருவம் கொண்டது. தமிழ்மொழி செல்வாக்கு இழந்தது.

பிரஞ்சு ஆப்பிரிக்கத் தமிழர்: ஆங்கில அரசை விடப் பிரஞ்சு அரசு கொஞ்சம் தாராளமாக இருந்தது. 1954 வரை புதுச்சேரி மாநிலம் பிரஞ்சுக் குடியிருப்பாக இருந்து வந்தது. அம்மாநிலத்தில் பிரஞ்சுக் கல்வி நிறுவனங்களும் இருந்தன. இக்கல்வி நிறுவனத்தில் படித்த தமிழர்கள் மேற்கல்வி பிரான்சில் பெற அரசு பல உதவித் தொகைகளைக் கொடுத்தது. இவ்வாய்ப்பைப் பயன்படுத்திய தமிழர் குழந்தைகள் பிரான்சிற்கு மேற்கல்வி கற்கச் சென்றனர். சென்றவர், கற்றபின்பு பிரான்சிலும் பிரஞ்சு ஆப்பிரிக்க நாடுகளிலும் வியட்நாம், இந்தோசீனா, கம்போடியா ஆகிய நாடுகளிலும் வேலைகளில் சேர்ந்தனர். இவரன்றிப் பிரஞ்சுப் பட்டாளத்தில் புதுவைத் தமிழர்கள் குறிப்பிடத்தக்க தொகையினர் சேர்ந்தனர். ஆப்பிரிக்கா ஆசிரியாவிலுள்ள பிரஞ்சுப் பட்டாளத்தில் புதுவைத் தமிழர் எளிதாக இடம் பெற்றனர். சிலர் உயர் பொறுப்பையும் எய்தினர். வெப்ப நாடுகள் பிரஞ்சு வெள்ளைக்காரர்க்கு ஏற்பாக இல்லாமல் இருந்ததுவும், புதுவைத் தமிழர்களுக்கு ஏற்பாக இருந்ததுவும் வாய்ப்பாக இருந்தன.

ஆங்கில ஆப்பிரிக்க நாடுகளில் இருந்த தமிழர்களை விடப் பிரஞ்சு ஆப்பிரிக்க நாடுகளில் பணியாற்ற வாய்ப்புப் பெற்ற தமிழர்கள் செல்வத்தில் செல்வாக்கில் சிறந்தே இருந்தனர். எனினும், தம் தாய்மொழியான தமிழைச் சென்ற இடங்களில் காப்பாற்ற போதிய ஆர்வம் காட்டவில்லை பிரான்சுப் பல்கலைக் கழகத்திலோ, பிரஞ்சு பேசப்படும் ஏனைய நாடுகளிலோ தமிழ், பல்கலைக் கழக அரங்கை அடையாமல் நின்றதற்கு இதுவே காரணம்.

ஆப்பிரிக்காவில் தமிழ்மொழி அமைப்பு: ஆப்பிரிக்க கண்டத்தில் தமிழர் குறிப்பிடத்தக்க அளவு இருக்கும் பகுதிகளை மூன்றாகப் பகுத்துக்கொள்ளலாம்.

1. தமிழ், பள்ளி - பல்கலைக்கழகம் வரை பாடமாக உள்ளமை,
2. பல்கலைக் கழக அளவில் பாடமாக உள்ளமை,
3. கல்வி நிறுவனத்தைச் சார்ந்து இல்லாமல் தனிப்பட்ட முறையில் தமிழ் இடம் பெற்றுள்ளமை.

பள்ளி பல்கலைக்கழக மொழி: முதலாவதற்கு மொரிசியசைச் சுட்டலாம. அனைத்து மொரிசியசு தமிழ்த்தேர்வுக் குழு தனிப்பட்ட முறையில தமிழ் இலக்கியத்திலும் தமிழ் மொழியிலும்

தேர்வுகளைப் பிரஞ்சு மொழிவழி நடத்துகிறது. அதனுடன் சென்னையில் உள்ள மாணவர் மன்றம் என்ற அமைப்பின் உதவியைக் கொண்டு தமிழ் மணிப் பட்டத் தேர்வும் தனிப்பட்ட முறையில் நடத்தப்படுகிறது.

பல்கலைக் கழகப் பட்டவகுப்பு மொழி: முதன்முதலாகத் தமிழ், பல்கலைக்கழகப் பட்ட வகுப்பில் இரண்டாம் மொழிகளுள் ஒன்றாக மேற்கு ஆப்பிரிக்க நாடான செனகால் தக்கார் பல்கலைக் கழகத்தில் 1979-இல் அறிமுகமாயிற்று. செனகால் நாட்டின் அதிபர் லியோ போல்டு செதார் செங்கோர் அவர்களின் தனி ஆர்வத்தால் தமிழ்த்துறை பல்கலைக் கழகத்தில் உருவாயிற்று. சென்னை பச்சையப்பன் அறநிறுவனத்தைச் சார்ந்த செல்லம்மாள் மகளிர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரான டாக்டர் தாயம்மாள் அறவாணன் இங்கே தொடங்கப் பெற்ற தமிழ் பிரிவின் முதல் பேராசிரியராக அமர்ந்து பிரஞ்சு மொழி வழித் தமிழைக் கற்பித்தார். அவருக்குப்பின் அண்ணாமலைப் கழகத்தில் டாக்டர் ச. அகத்தியலிங்கம் அவர்களின் கீழ் பயினறு பி.எச்.டி., பட்டம் பெற்ற மூன்று செனகால் நாட்டினர் தமிழ்த் துறை ஆசிரியராக இருந்து வருகின்றனர்.

தனியார் முயற்சி வழி தமிழ்: தென்னாப்பிரிக்காவில் தமிழ், பள்ளி பல்கலைக் கழக நிலையை எட்டவில்லை. எனினும். தனிப்பட்ட முறையில் சைவ சமயத்தைச் சார்ந்து, இங்கே ஆங்கில மொழிவழித் தமிழ் உயிர்ததுக் கொண்டுள்ளது. தென்னாப்பிரிக்காவிற்கும், இந்தியாவிற்கும் உள்ள அரசியல் வேறுபாடு இந்நாடுகளுககிடையே தமிழ்த் தொடர்பை ஊக்குவிப்பதாக இல்லை. எனினும் அவ்வப்பொழுது சைவசமயம் சார்ந்த திருவாசகமணி கே.எம். பால சுப்பிரமணியம், பித்துக்குளி முருகதாஸ் முதலானோர் சென்று சைவத் தமிழைப் பரப்பினர். தற்போதும் ஒரு சிலர் சென்று வருகின்றனர்.

ஆப்பிரிக்காவுக்கு ஏற்ற தமிழ்ப் பாடநூல்கள்: பின்கண்ட குறிப்புகளை மனத்தில் வைத்து, ஆங்கிலம் பிரஞ்சு என்ற இருவேறு மொழிகளில் தமிழ்ப் பாட நூல்களை ஆயத்தம் செய்ய வேண்டும்.

1. தாய்மொழி தமிழாக உடைய குழந்தைகளுக்கு – ஆங்கிலம்/பிரஞ்சு
2. தாய்மொழி தமிழாக உடைய முதியோர்களுக்கு ஆங்கிலம்/பிரஞ்சு
3. தாய்மொழி தமிழாக இல்லாத பல்கலைக் கழக மாணவர்க்கு ஆங்கிலம்/பிரஞ்சு

இவையன்றி புதிய ஒலி ஒளி நாடா முறைகளைப் பயன்படுத்தி ஆங்கிலத்திலும் பிரஞ்சிலும் படங்களுடன் கூடிய பாடங்களை ஆயத்தம் செய்தல். இவ்வகையில் சிங்கப்பூரில் செய்திருக்கும் தமிழ்ப் பாட நூல் முயற்சிகள் பேருதவியாகவும் பெருந்துணையாகவும் இருக்கும்.

இன்றியமையாத துணை நூல்கள், கட்டுரைகள்.

1. அறவாணன், க.ப., செந்தமிழ் செனகால் செங்கோர், பாரிநிலையம், சென்னை-108, 1978.
2. அறவாணன், க.ப., பிரஞ்சு ஆப்பிரிக்காவில் தமிழ், கட்டுரை பக். 766-782 எண்பதில் தமிழ், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113, 1982.

3. Aravaanan. K.P.Dr. Dravidians & Africans, Paari Nilayam, Madras 108, 1978.

4. Ismagilo va. R.N., Ethnic Problems of The Tropical Africa can they be solved Progress Publishers, Mascow, 1978.

5. Sliegman. C.G., Races of Africa Oxford Udiversity Press, New York, 1968.

6. Thancana mootoo. M., Tamil Studies Undertaken in Mauritiu. As At 1980, (Essay-Pages-743-765). எண்பதில் தமிழ், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை-113, 1982.

தமிழ்க் கலை
தமிழ் 5, கலை 3, 4

தென்னாப்பிரிக்காவில் தமிழ்

ஆ. கார்த்திகேயன்

ஆப்பிரிக்க முக்கியப் நிலப்பகுதியின் தென் கோடியில் தென்னாப்பிரிக்கா அமைந்துள்ளது. இந்நாட்டின் வட மேற்கில் நமிபியாவும், கிழக்கில் ஸ்வாசிலாந்தும் அமைந்துள்ளன. தெற்கில் இந்துமாக்கடல் உள்ளது. தென்னாப்பிரிக்காவின் தலைநகரம் பிரிடோரியா, சட்டமன்றத் தலைநகரம் கேப்டவுனாகவும், நீதிமன்றத் தலைநகரம் புளூயம்பான்டீனாகவும் (B eemfontein) விளங்குகின்றன. இந்நாட்டில் வெள்ளையர்களும், கருப்பர்களும், நிற இனத்தவர்களும், ஆசியர்களும் (இந்தியர் உட்பட ஆகிய பலஇனத்தவர்கள்)வாழ்கின்றனர் 1980-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி தென்னாப்பிரிக்கக் குடியரசின் மொத்த மக்கள் தொகை 24,885,940 ஆகும்,இவர்களுள் வெள்ளையர் 4,528,000; நிற இனத்தவர் 2,612 000; கருப்பர் 16,923,000; ஆசிய இனததைச் சார்ந்தவர் 805,000. தென்னாப்பிரிக்காவில் வாழும் ஆசிய இனத்தவர்களில் தமிழ்,இந்தி,தெலுங்கு, உருது, குஜராநதி ஆகிய மொழிகளைத்தாய் மொழியாகக் கொண்ட இந்தியர்கள் வாழ்கின்றனர். தென்னாப்பிரிக்க இந்திய மக்களின் மொழிவாரியான மக்கள் தொகை எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டு உளளது.

தமிழ்	296,000
இந்தி	264,000
குஜராத்தி	112,000
உருது	720,00
தெலுங்கு	560,00

தென்னாப்பிரிக்காவில் வாழும் பெரும்பாலான மக்கள் கிருத்துவ மதத்தைச் சார்ந்துள்ளார்கள். வெள்ளையர்களில் நாற்பது விழுக்காடு அரசியலில் மிகவும் செல்வாக்கு வாய்ந்த டச்சுக் கிருத்துவ இயக்கத்தைச் சார்ந்தவர்கள். கருப்பர்களில் ஐந்தில் ஒரு பங்கினர் தனி ஆப்பிரிக்க கிருத்துவச் சங்கத்தைச் சார்ந்தவர்கள். மீதி ஆப்பிரிக்கர்கள் மெத்தாடிஸ்ட் (Methodists) ஆங்கிலிகன் Anglicans) போன்ற இயக்கத்தைச்

✲ இக் கட்டுரையில் உள்ள பெரும்பாலான கருத்துக்கள் பேராசிரியர் கு. நம்பிஆரூரன் அவர்கள் எழுதிய Indians in South Africa என்ற நூலை அடியொற்றியவை.

சார்ந்துள்ளார்கள். இந்திய மக்கள் பெரும்பான்மை இந்துமதத்தைப் பின் பற்றுகின்றார்கள். நிற இனத்தவர்களில் பெரும்பாலானோர் இஸ்லாமிய மதத்த வர்களாக இருக்கின்றனர்.

தென்னாப்பிரிக்காவின் அரசியல் அமைப்பு: 1910-இல் இங்கிலாந்து காலனி ஆதிக்கத்தைச் சார்ந்த நான்கு பகுதிகள் இணைக்கப்பட்டு தென்னாப்பிரிக்கக் குடியரசு அமைக்கப்பட்டது. 1931 டிசம்பர் திங்களில் பிரிட்டிஷ் பாராளு மன்றம் இயற்றியசட்டத்தில் தென்னாப் பிரிக்கா ஒரு சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. தென்னாப் பிரிக்கக் குடியரசு நிறுவியதிலிருந்து 1984 வரை அரசியல் நிருவாகம் அந்நாட்டின் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கிற்கும் குறைவாக இருந்த ஐரோப் பியர்கள் கையிலேயே இருந்தது. இதன் விளைவாக அவ்வப்போது மக்களிடையே எதிர்ப்பும் போராட்டங்களும் நிலவின. 1983 செப்டம்பரில் புதியதாக அரசியல் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டு வரப் பட்டன. இதனால் பல இனத்தவர்கள் கொண்ட பாராளுமன்ற அமைப்பு (Multiracial, tricameral Parliment) ஏற் பட்டது. குடியரசின் முழு அதிகாரம் அரசின் தலைவரிடத்தில் ஒப்படைக்கப் பட்டது. பாராளுமன்றம் House of Assembly, House of Representatives, House of Delegates, என்று மூன்று பிரிவு களை கொண்டுள்ளது. House of Assembly-இல் வெள்ளையர்களும், House of Representative - இல் நிற இனத்தவர் களும் House of Delegate இல் இந்தியர் களும் உறுப்பினர்களாக இருப்பர். பாராளுமன்றத்தின் காலம் ஐந்து ஆண்டுகள். ஒவ்வொருபிரிவு உறுப்பினர் களை அந்தந்த இனத்தவர்கள் வாக்கு அளித்து அவர்களின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பார்கள்.

இந்தியர்களுக்கு என்று கீழ்க்கண்ட அரசியல் கட்சிகள் இருப்பதும் தெரிய வருகின்றது.

i) Progressive Independent Party (PIP) Indian : Leader Faiz Khan

ii) Solidarity Party Indians: Leader G N. Reddy.

iii) Indian Reform Party: Official Opposition in South Africa Indian Council : Leader Y.S. Chinsamy

iv) Transwaal Indian Congress : Pres Dr. Essop Jassat.

குடியேற்றம்: வரலாற்றில் குறிப்பாக இந்திய வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டு குடிப்பெயர்ச்சியின் காலம் என்று கூறப்படுகின்றது. இக்காலக் கட்டத்திலேயே பெரும்பாலான இந்தியர் கள் அயல்நாடுகளுக்குக் குடிபெயர்ந் தனர். குறிப்பாக இலங்கை மலையகத் தமிழர்கள் மொரிசியஸ் தமிழர்கள், தென்னாப்பிரிக்கத் தமிழர்கள், மற்றும் சிலர் இக்காலங்களில் தான் தன் தாய் நாட்டிலிருந்து குடிபெயர்ந்து வெளியேறினார்கள். தென்னாப்பிரிக்கா விற்குத் தமிழர்கள் குடியேறிய வரலாறு இங்கு விவரிக்கப்படுகின்றது.

முதன் முதலில் 1860-இல் துருரோ (Truro) என்ற கப்பலில் தமிழர்கள் தென்னாப்பிரிக்காவில் டர்பன் என்ற நகருக்குக் கரும்புத் தோட்டத்தில் பணி புரிய கட்டுப்பாட்டு ஒப்பந்தத் தொழிலாளர்களாகச் (Indenture labourers) சென்றனர். இதற்கு முன்னரே

வெள்ளையர்கள் தென்னாப் பிரிக்காவைக் கைப்பற்றிக் குடியேறி இருந்தனர். அப்பகுதி வளமிக்கதாக இருக்கக் காணவே அங்கு விவசாய உற்பத்தியில் ஈடுபட எண்ணினர். எனினும் அவர்கள் தொழிலாளர் பிரச்சனையை எதிர்கொண்டனர். ஆப்பிரிக்க மக்களைப்போரிட்டு வெற்றி பெற்றிருப்பினும் அவர்களுடைய எதிர்ப்புணர்வு இருந்தவண்ணம் இருந்தது. நீண்ட நேரம் பணிபுரிய வேண்டியிருந்ததால் சில ஆப்பிரிக்கர்கள் காலனி ஆதிக்க வெள்ளையர்களுக்கு உழைக்க மறுத்தனர். இத்தகைய சூழ் நிலையில் வெள்ளையர்கள் வெளிநாடு களிலிருந்து வேலையாள்களை இறக்கு மதி செய்யத் தீர்மானித்தனர். 1846-இல் கிளாட்ஸ்டோன் என்பவர் பிரிட்டனி லுள்ள குற்றவாளிகளைக் கொண்டுவர முயன்று அம்முயற்சியில் தோல்வி யுற்றார். ஜவா தீவிலிருந்து சீனர்களைக் கொண்டுவர நினைததார். சீனர்கள் கடினமாக உழைப்பதில்லை; கூலி அதிகமாகக் கேட்பார்கள்; இந்நிலையில் அம்முயற்சியும் தோல்வியுற்றது. இத்தகைய காரணங்களால் நேட்டால் பண்ணைச் சொந்தக்காரர்கள் திறமை மிக்க, கூலி குறைவாகக் கேட்கக் கூடிய இந்தியத் தொழிலாளிகளை இறக்குமதி செய்யத் தீர்மானித்தனர். 1855- இல் கேப்காலனியின் கவர்னராக இருந்த சர். சார்ஜ்கிரே என்பவர் இதற்கான ஆரம்பபபணிகளைச் செய்தார். இம் முயற்சியின் விளைவாக இந்திய அரசுடன் ஒப்பந்தம் செயது கொண்டு காலின்ஸ் என்பவரைச் சென்னைக்கு அனுப்பினார்கள். இந்நேரத்தில் தமிழர் களும், தெலுங்கர்களும் குடி பெயர்ந்தனர்.

இனி குடிபெயர்வதற்கான சில முக்கியக் காரணங்களைக் காண்போம். 1833-இல் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் அடிமை முறை ஒழிக்கப்பட்டது. இதனால் பிரிட்டிஷ் ஆதிக்கக் காலனி களில் தொழிலாளர் திண்டாட்டம் ஏற் பட்டது. உள்நாட்டுத் தொழிலாளர்கள் பண்ணைகளில் வேலை செய்யத் தயாராக இல்லை. இதனால் நேட்டால், மொரிசியஸ், பிஜி, மேற்கு இந்தியத் தீவுகள் ஆகிய பகுதிகள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாயின. இதன் காரண மாக வெளிநாடுகளிலிருந்து தொழி லாளர்கள் இறக்குமதி செய்வதற்கான முயற்சிகள் ஏற்பட்டன.

இந்தியாவில் சாதி அடிப்படை யிலான வருணாசிரம முறை நிலவியது. இதனால் உயர்ந்த சாதிக்காரர்களிடம் நிலம் முதலிய சொத்துக்கள் இருந்தன. தாழ்ந்த சாதிக்காரர்கள் இவர்களைச் சார்ந்து வாழ வேண்டியிருந்தது. உழைத்து வாழ்ந்தார்களே யன்றி இவர் களுக்கு உழைக்கும் நிலத்தில் உரிமை இருந்ததில்லை. இத்தகைய நில உரிமை யாளர்களிடமிருந்து விடுதலை பெறவும் அவர்களின் சுரண்டலிலிருந்து தப்பிக் கவும் மக்கள் குடிபெயரத் தயாரானார் கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறு விவசாயிகள் அதிகமான வரிச்சுமைக்கு ஆட்பட்டனர். இதன் விளைவாகவும், பெரிய பண்ணை முதலாளிகளின் சுரண்டல்களாலும் சிறு விவசாயிகள் நில உடைமைகளை இழந் தனர். எனவே இவர்களும் குடிபெயரத் தயாரானார்கள்.

ஆங்கிலேயர்கள் இந்தியாவில் தங்கள் ஆட்சியை நிறுவியபோது

இங்கிலாந்தில் தொழிற்புரட்சி ஏற்பட்டது. இந்தியத் தொழிற் சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் ஆங்கிலேயர்களின் சந்தைகளில் விற்கத் தடை செய்யப்பட்டன. கிழக்கிந்தியக் கம்பெனியார்கள் துணி உற்பத்தியையே தடை செய்ய முயன்றனர். பருத்தி போன்ற கச்சாப் பொருள்களை ஏற்றுமதி செய்யத் தயாரானார்கள். இதனால் இந்திய உற்பத்தி தொழிற் சாலைகள் பாதிப்பிற்குள்ளாயின. தொழில் முடக்கம் ஏற்பட்டது. இந் நிலையில் பெரும்பாலானோர் குடி பெயர்ந்தனர்.

திரும்பத் திரும்ப இந்திய மக்களைத் தாக்கிய பஞ்சமும்; 1857-இல் இந்தியாவில் ஏற்பட்ட கலகங்களும் குடிபெயர்ச்சிக்குக் காரணங்களாக அமைந்தன.

தொடக்கக் கால நிலை: 1860-இல் குடி பெயர்ந்த தொழிலாளிகள் நேட்டால் அரசுடன் எத்தகைய ஒப்பந்தமும் செய்து கொள்ளவில்லை. இதன் விளைவாக அவர்கள் நேட்டாலில் மிகவும் மோசமாக நடத்தப்பட்டனர். இவர்களுக்கு ஒழுங்காகக் கூலி தரப்படவில்லை. உணவுப்பங்கீடு (ரேஷன்) ஒழுங்காக அளிக்கப்படவில்லை. போதிய மருத்துவ வழிகள் செய்து கொடுக்கப்படவில்லை. இத்தகைய கொடுமைகள் இந்திய அரசுக்கு எட்டின. இதன் விளைவாக 1866-இல் இந்திய அரசு குடிப்பெயர்ச்சியைத் தடை செய்தது. இக் காலக் கட்டத்தில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. இந்நெருக்கடி 1870-இல் தளர்ந்ததன் விளைவாக நேட்டால் பண்ணைச் சொந்தக்காரர்களுக்கு மீண்டும் வேலையாள்கள் தேவைப் பட்டனர். இந்நேரத்தில் கரும்புத் தோட்டங்களில் பணிபுரிவதற்கு மட்டுமின்றி இருப்புப்பாதைகள் போடுவதற்கும் பணியாள்கள் தேவைப் பட்டனர். நேட்டால் அரசும் தொழிலாளர்களின் குறைகளைப் போக்குவதற்காகக் கமிஷன் ஒன்றமைத்து அக் குறைகளைப் தீர்க்க முயன்றனர். இதன் விளைவாக இந்தியத் தொழிலாளர்கள் மீது செலுத்தப்பட்ட அடக்கு முறைகள் குறைக்கப்பட்டன. எனவே, மீண்டும் 1874-இல் குடிபெயர்ச்சி இரண்டாம் நிலையில் தொடங்கப்பட்டது 1874-கும் 1911-கும் இடைப்பட்ட காலங்களில் சுமார் 142,670 இந்தியர்கள் குடி பெயர்ந்ததாகத் தெரிய வருகின்றது. இவற்றில் மூன்றில் இரண்டு பங்கினர் தமிழர்களும், தெலுங்கர்களும் இருந்தனர். இரண்டாவது முறையாகக் குடிப் பெயர்ச்சி நிகழ்ந்தவுடன் இந்திய எதிர்ப்புணர்வு ஆப்பிரிக்க மக்களிடையே தோன்றியது. ஐரோப்பியர்களைக் காட்டிலும் இந்தியர்களின் எண்ணிக்கை கூடுதலாக இருந்தது. அக்காலத்திலேயே முனிசிபல், பாராளு மன்றத் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமையைச் சில இந்தியர்கள் பெற்றிருந்தனர். இந்திய மக்களின் வளர்ச்சியால் ஐரோப்பியர்கள் பொறாமையும் பயமும் கொண்டனர். எனவே 1893-இல் நேட்டால் அரசு கட்டுப்பாட்டு ஒப்பந்தத் தொழிலாளர்களின் காலக் கெடு முடிந்தவுடன் அங்கேயே தங்க முடிவு செய்தவர்களை வருடத்திற்கு ஒருமுறை தேர்தல் வரி கட்ட விதித்தது. 1894-இல் இவர்களுக்கு ஓட்டுரிமை இல்லை என்ற சட்டம் உருவாக்கப்பட்டது. 1906-இல் ட்ரான்ஸ்வால் அரசு அனைத்து இந்திய வம்சா வழியினரையும் பதிவு செய்து கொள்ள வேண்டி சட்டம் போட்டது.

இந்நிலையில் தான் அண்ணல் காந்தி அடிகள் இந்தியர்களை ஒன்று திரட்டி 'ஒத்துழையாமை' இயக்கம் தொடங்கி போராடினார். பின்னர் 1910-இல் தென்னாப்பிரிக்கக் குடியரசு நிறுவப் பட்டது.

பேசப்படும் மொழிகள்: தென்னாப் பிரிக்காவில் பேசப்படும் மொழிகளில் ஆப்பிரிகான்ஸ், ஆங்கிலம் போன்றவை பெரும்பான்மை மொழிகளாகும். இவற் றில் ஆங்கிலம் காலனி ஆதிக்கத்தால் தென்னாப்பிரிக்காவிற்கு வந்தது. ஆப்பிரிகான்ஸ் என்ற மொழி சென்ற நூற்றாண்டில் தோன்றியது இம்மொழி டச்சு மொழியின் கிளை மொழியாகும். இத்துடன் மலாய், கோயி (Khoi), பிரெஞ்சு, போர்ச்சுகீஸ் ஆகிய மொழிச் சொற்களைச் சேர்த்து தோன்றிய புது மொழியே ஆப்பிரிகான்ஸ் என்று அழைக்கப்பட்டது. 1870 வாக்கில் இம் மொழி இலக்கிய வழக்கிலும் பேச்சு வழக்கிலும் பயன்படுத்தப்பட்டது. ஆங்கிலமும், ஆப்பிரிகான்சும் தென் ஆப்பிரிக்க அரசின் அலுவலக மொழி களாகும். இவை தவிர காசா (Xhosa), சுலு (Zulu), செசோதா (Sesotha) போன்ற முக்கிய மொழிகளும் தென்னாப்பிரிக்காவில் பேசப்படு கின்றன. மேலும் குஜராத்தி, இந்தி, தமிழ், தெலுங்கு, உருது போன்ற இந்திய மொழிகள் வழக்கில் உள்ளன. இவை சிறுபான்மை மொழிகளாகும்.

தென்னாப்பிரிக்காவில் கல்வி: தென்னாப் பிரிக்காவில் கல்வி நிலை வரலாற்று நோக்கில் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப் படுகின்றது. காலனி ஆதிக்கத்திற்கு முன்பு தென்னாப்பிரிக்காவில் ஐரோப் பியர்கள் தவிர மற்ற இனத்தவர்களில் யாரும் கல்வி கற்றவர்கள் இல்லை. 1873-இற்கு முன்னர் இருந்த கல்வி நிலையங்கள் வெள்ளையர்களின் தேவைக்கே பயன்படுத்தப்பட்டன. காலனி ஆதிக்க காலங்களில் கல்வி மதத் தோடு இணைக்கப்பட்டிருந்தது. இச் சமயத்தில் கல்விக் கொள்கை கிருத்து மதப் பிரச்சார நிறுவனங்களின் பாதிப்பைப் பெற்றிருந்தது. இவர்கள் ஆதாரக்கல்வியையும் தாய்மொழிக் கல்வி யையும் வலியுறுத்தினார்கள்.

மேற்கத்திய சமயப் பண்பாட்டுச் சாதனங்களுடன் தென்னாப்பிரிக்கா விற்கு வந்த சமயப் போதகர்கள் இந்திய மக்களுக்கும் தென்னாப்பிரிக்க மக்க ளுக்கும் கல்வி அளிக்கும் வகையில் பள்ளிக்கூடங்களை நிறுவுவதில் அக்கறை காட்டினார்கள். சமயப் போதகர்கள் அளித்த கல்வியின் நோக் கம் மக்களைக் கிறித்துவ மதத்திற்கு மாற்றுவதற்கேயாகும். மக்களை மதப் பிரச்சாரர்களாக மாற்றுவதற்கும், மதத்தைப் பரப்புவதற்கும் கல்வி புகுத் தப்பட்டது. இத்தகைய கல்வி மக்களை நல்ல வேலைக்குத் தகுதி வாய்ந்தவர் களாக மாற்றவில்லை. இந்நிலையில் குடிபெயர்ந்த இந்தியர்கள் மிகவும் குறைவாகச் சம்பாதித்ததனால் தரமான கல்வியை எதிர்பார்க்காமல் கிடைக் கின்ற கல்வியைப் பயில்வதில் திருப்தி கொண்டனர்.

ரோமன் கத்தோலிக்க மதத்தவர் களே முதன் முதலில் குடிபெயர்ந்த இந்தியர்களின் கல்வி மேம்பாட்டிற்குப் பாடுபட்டனர். ஜின் பாப்டிஸ்ட் சபோன் என்ற பாதிரியார் முதன் முத லாகச் சென்னையிலிருந்து குடிபெந்யர் தமிழர்களைச் சந்தித்தார். இவர் தமிழ்

மொழியைக் கற்றுக் கொண்டார். அரசின் எதிர்ப்பு இருந்தபோதிலும் 1867-இல் பாதிரியார் சபோன் இலங்கையிலிருந்து தமிழ்ப்புத்தகங்கள் பெற்று சுமார் 30 மாணவர்கட்கு கல்வி கற்பிக்கும் ஒரு பள்ளியை நிறுவினார். 1885-இல் பிஷப் ஜுலியட் என்ற பாதிரியார் இந்தியப் பெண்களுக்கென்று தனியே ஒரு பள்ளியைத் தொடங்க முயற்சி செய்தார். வெஸ்லேயன் மதப் போதகர்கள் நேட்டால் மாநிலத்தில் இந்தியக் குழந்தைகளின் கல்விக்காகப் பாடுபட்டனர். ரால்ப் ஸ்டாட் என்பவர் சிலோனிலிருந்து நேட்டாலுக்கு வந்தார், அவர் ஆங்கிலம், தமிழ், இந்தி முதலியன கற்றுக் கொடுத்ததாகத் தெரிய வருகின்றது. 1873-இல் ஸ்டாட் நான்கு பகல் நேர பள்ளிகளை நடத்தி வந்தார். அவர் நீண்ட நாள்கள் தென்னாப்பிரிக்க இந்தியர்களுக்குப் பெருந்தொண்டாற்றினார். 1908-இல் கிருத்துவராக மாறிய தியோபிலிஸ் சுப்ரமணியம் என்ற ஐயர் நேட்டால் மாநிலத்திற்கு வந்து தமிழ்த் தொண்டாற்றினார்.

ஆங்கில மதப்போதகர்களும் இந்திய மக்களின் கல்வித் தொண்டிற்குப் பெரும் பணி புரிந்தனர். 1875-இல் மரிட்ஸ் பர்க்கில் இருந்த பாதிரியார் ஒருவர் சென்னையிலிருந்த பாதிரியார் ஒருவர் மூலம் சில தமிழாசிரியர்களைப் பெற முயற்சி செய்தார். அம்முயற்சி வெற்றி பெறவில்லை. 1883-இல் சென்னையில் இருந்த எஸ்.பி.ஜி.கல்லூரியில் பயிற்சி பெற்ற சாலமன் டைசன், சைமன் பீட்டர் வேதமுத்து ஆகியோர் டர்பன் மாவட்டத்தில் இருந்த தமிழர்களுக்குப் பாடம் கற்பித்தனர். 1892-இல் ஜோசப் நல்லத்தம்பி என்ற பாதிரியார் சென்னையிலிருந்து பீட்டர்மரிட்ஸ்பர்க்கிற்கு வந்தார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் டர்பனிலும், அதைச் சுற்றிலும் 12 பள்ளிகள் இருந்தன. இவை அரசுதவி பெற்றுஇயங்கி வந்தன. உயர்நிலைக் கல்வியும் இக்காலத்தில் தான் தோன்றியது. ஐதன்'ஸ்கல்லூரியில் திரவியம் கோயில் பிள்ளை என்பவரைத் தலைமையாகக் கொண்டு இரண்டாம் நிலைக் கல்வி (Secondary Education) தொடங்கப் பெற்றது. தனியார் பள்ளிகளும், கிருத்துவ நிறுவனப் பள்ளிகளும் தவிர அரசினர்ப் பள்ளிகளும், அரசுதவி பெற்ற பள்ளிகளும் ஆரம்பிக்கப்பட்டன. 1908-இல் நேட்டால் இந்தியர்களுக்கு 5 அரசினர் பள்ளிகளும், 26 அரசுதவி பெற்ற பள்ளிகளும் இருந்தன. இதே காலக்கட்டத்தில் ஐரோப்பியர்களுக்கு 308 அரசினர் பள்ளிகள் இருந்தமை குறிப்பிடத் தக்கது.

ஆரம்பத்தில் பள்ளிகளில் வேற்றுமையேதும் இல்லை. இந்தியக் குழந்தைகள் ஐரோப்பியர் பள்ளிகளிலும் கிருத்துவப் பள்ளிகளிலும் அனுமதிக்கப் பட்டனர். ஆனால் நேட்டால் அரசு 1899 - இல் இந்திய மாணவர்களுக்கு ஐரோப்பியப் பள்ளிகளில் பயிலஅனுமதி மறுக்கப்பட்டு வேற்றுமை பாராட்டியது. இந்தியர்களும், நிற இனத்தவர்களும் ஒரு பள்ளிக்கும், ஐரோப்பியர்கள் வேறொரு பள்ளிக்கும் சென்று பயின்றனர். இதன் விளைவாக மேலும் பல நிலைகளிலும் வேற்றுமை பாராட்டப் பட்டு இந்தியர்களின் பல உரிமைகள் பறிக்கப்பட்டன.

தற்போது கல்வியில் மூன்று நிலைகள் காணப்படுகின்றன,; ஆதாரக் கல்வி, இரண்டாம் நிலைக் கல்வி, உயர் கல்வி.

இந்தியர்களின் ஆதாரக்கல்வி ஏழு ஆண்டுக் காலம் தொடரப் படுகின்றது. முதன் நிலை வகுப்பு (sub-standard) இரண்டு ஆண்டுகளும் பின்னர் ஆதாரக் கல்வி ஐந்தாண்டுகளும் கொண்டன. நேட்டாலில் உள்ள இந்தியக் குழந்தைகள் முதன் நிலை வகுப்பை மூன்று ஆண்டுகள் பயில்கின்றனர். இவர்கள் தாய்மொழியையும் சேர்த்துப் பயில வேண்டியிருப்பதால் இந்நிலை உருவாயிற்று. ஆதாரக் கல்வியில் ஐரோப்பியர்களுக்கு உள்ள பாடத்திட்டமே இந்தியர்களுக்கும் உள்ளது. ஆதார வகுப்பில் ஆப்பிரிகான்ஸ், ஆங்கிலம், கணிதம், வரலாறு, புவியியல், இயற்கை விஞ்ஞானம், போன்ற பாடங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

இரண்டாம் நிலைக் கல்வி ஆறிலிருந்து பத்து வரை ஐந்தாண்டுகள் கொண்டுள்ளது. இதுவே பள்ளியிறுதிப் படிப்பாகும். மெட்ரிகுலேஷனுக்கு இணையாகக் கருதப்படுகின்றது. மாணவர்கள் ஆண்டு இறுதியில்பொதுத் தேர்வு எழுத வேண்டும். இரண்டாம் நிலைக்கல்வியிலும் ஐரோப்பியமாணவர்கட்கும், இந்திய மாணவர்கட்கும் பாடத்திட்டத்தில் எந்தவித மாற்றமும் இல்லை. டர்ட்னல் கிரசன்ட் இந்தியப் பெண்கள் உயர்நிலைப்பள்ளி மிகவும் குறிப்பிடத்தக்கது. 1945-இல் டர்பனில் தொடங்கப்பட்ட எம்.எல். சுல்தான் தொழில் நுட்பக் கல்லூரியில் வணிகவியல், ஆங்கிலம், லத்தீன், வரலாறு, கணிதம், உயிரியல் போன்ற வகுப்புகள் இருந்தன. இதில் இந்தியர்கள் பயின்றனர். கேப்டவுனிலும், ஜோகன்ஸ்பர்க்கிலும் உள்ள தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் இந்தியர்களும் நிற இனத்தவர்களும் பயின்றனர்.

சாஸ்திரி கல்லூரி தொடங்குவதற்கு முன்னர் இந்தியர்கள் உயர்கல்விக்கு ஆசை கொள்ள வில்லை. மேலும் பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றவர் B.A. களின் எண்ணிக்கையும் மிகவும் குறைவு. 1936-இல் சாஸ்திரி கல்லூரியில் வகுப்பு தொடங்கப்பட்டது. இதற்கு முன்னர் இந்தியர்களில் சிலர் அயல் நாடுகளுக்குச் சென்றும் கல்வி பயின்றனர்.

1959-இல் பல்கலைக் கல்வியில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. இதற்கு முன்னர் வெள்ளையர்களுக்கு மட்டுமே சில பல்கலைக் கழகங்கள் இருந்தன. பின்னர் வெள்ளையர் அல்லாதவர்கட்கு ஐந்து பல்கலைக் கழகங்கள் தேவை என்றுவலியுறுத்தப்பட்டது. இதன்அடிப்படையில் ட்ரான்ஸ் டர்பிளாப் (Turfloop) பலகலைக்கழகமும் (செசோதோ மொழி பேசுபவர்களுக்கு), போர்ட் ஹேர் (Fort Hare) பலகலைக் கழகமும் (Xhosa) மொழி பேசுவோர்களுக்கு), சுளு (Zulu) மொழி பேசுவோர்களுக்குச் சுளுலாந்து (Zululand) பல்கலைக் கழகமும், நிற இனத்தவர்கட்கு மேற்கு முனைப் (Western Cape) பல்கலைக் கழகமும் இந்தியர்களுக்கு டர்பன் பல்கலைக் கழகமும் தொடங்க சட்டம் வகுக்கப்பட்டது. எல்லாப் பல்கலைக் கழகங்களும் ஆப்பிரிகான்ஸ், ஆங்கிலம் பேசும் மக்களின் தேவைகளையே பூர்த்தி செய்தது. மொழி அலலது இனம் சார்ந்த பற்று கல்வியின் எல்லா நிலைகளிலும் காண முடிந்தது.

டர்பன் பல்கலைக் கழகம் 1961-இல் டர்பனில் சாலிஸ்பரி தீவில் தொடங்கப் பட்டது. அறிவியல், கலை, வாணிகம், பொது அலுவலகக் கல்வி சட்டம், பொறியியல், மருந்தியல் போன்ற துறைகள் இப் பல்கலைக் கழகத்தில் உள்ளன. மொழித் துறை ஒன்றும் நிறுவப்பட்டு அராபி, இந்தி, சமஸ்கிருதம், தமிழ் மற்றும் பல மொழிகளும் கற்பிக்கப்படுகின்றன. இந்து, இஸ்லாமிய மதக் கோட்பாடுகளைப் பயிலவும் வாய்ப்புக்கள் இருக்கின்றன.

1984-ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்கத் தமிழர் வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்க ஓர் ஆண்டாகும். தமிழ் மொழி பள்ளிப்பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு அரசாங்கதாரால் அனுமதிக்கப்பட்டுள்ளது. டர்பனில் 8000 மாணவர்கள் மொழி வகுப்பில் பயிற்சி பெறுகிறார்கள். அவற்றில் 4300 தமிழ் மாணவர்கள் உள்ளதாகத் தெரிய வருகின்றது. தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் இன்மையால் இம்முயற்சியும் தோல்வியடைவதாகத் தெரிய வருகின்றது.

கீழே கொடுக்கப்பட்டடுள்ள அட்டவணை தொன்னாப்பிரிக்கக் குடியரசில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையைக் காட்டுகின்றது.

கல்வி

மாணவர்கள் — (1983)

	ஆப்பிரிக்கர்	வெள்ளையர்	நிற இனத்தவர்	ஆசியர்
ஆரம்பக் கல்வி :	3150338	612527	610467	152915
உயர்நிலைப் பள்ளி :	678511	401796	163420	78288
பல்கலைக்கழகம் :	29356	120911	9397	13577
மற்ற நிறுவனம் :	14977	49454	6591	4021.

தமிழ் உணர்வும், தமிழ்ச் சங்கங்களும்: 'விவேகபானு' என்ற பெயரில் சி. விருத்தாசலம் பிள்ளை என்பவர் ஒரு பத்திரிகை நடத்தி வந்ததாகத் தெரிய வருகின்றது. இப்பத்திரிகை நின்று விட்டது. இதற்குப்பின்னர் ஜி. இராமசாமி, எஸ். முனுசாமிப் பிள்ளை ஆகியோர் 1930 வரை செந்தமிழ்ச் செல்வன் என்ற இதழ் நடத்தி வந்திருக்கிறார்கள். 'மாணவர் உலகம், 'இந்திய ஒளி' போன்ற இதழ்களும் வெளி வந்து நின்று விட்டன. இவ்விதழ்களில்எல்லாம் எத்தகைய செய்திகள், இலக்கியக் கட்டுரைகள் எழுதப்பட்டன என்று தெரியவில்லை. இவ்விதழ்கள்கிடைத்தால் தமிழர்களின் மொழித்தொடர்பான உளப்பாங்கையும், எண்ணத்தையும், தெரிந்து கொள்ள முடியும். மலேசியாவிலிருந்து 'தமிழியம்' என்ற இதழையும் வருவித்துப் படிப்பதாகத் தெரிய வருகின்றது.

தென்னாப்பிரிக்காவில் பல தமிழர் கழகங்கள் இருப்பதும் தெரிய வருகின்றது. நேட்டாலில் 'தமிழ்வேதக் கழகம்' ஒன்று உள்ளது. 1951-இல் இந்து தமிழ் வித்யாலயமும், நேட்டால் தமிழ் சைவ சபையும் இருந்ததாகத் தெரிய வருகின்றது. இக்கழகங்கள் தமிழ்ப் பயிற்சியைத் தொடங்கி பல மாணவர்கட்குத் தமிழ் பயிற்றுவித்தன. 1910-இல் டர்பனில் பிறந்த சிவசுப்பிரமணிய குருசாமி என்பவர் சைவ சித்தாந்தக் கழகம் அமைத்துள்ளார். இக்கழகத்திற்குத் தற்போது 100 கிளைக்கு மேல் இருப்பதாகத் தெரிகின்றது. மேலும் அருட்பாக் கழகம், திருக்குறட் கழகம், தமிழிசைக் கழகம், வைத்கசைவக் கழகம், தமிழ் மன்றக்கழகம், தெய்வ நெறிக் கழகம், ஆரிய சமாசம், ஸ்ரீராம கிருஷ்ணர் சங்கம் போன்ற அமைப்புகள் இருக்கின்றன. இச் சங்கங்களின் பணிகளைக் குறிப்பிடுகையில் "இங்குள்ள சங்கங்கள் தேவாரம், திருவாசகம், அருட்பா பாடுவதில் காலத்தைக் கழித்து வருகிறார்கள். தமிழைப் பேணாதவர்கள் இந்துக்களாக அவதிப்படுகிறார்கள்" என்று வீரப்பன் கூறுகின்றார். எல்லா விதமான கழகங்களையும் இணைத்து, தென்னாப்பிரிக்கத் தமிழர்க் கூட்டிணைப்புக் கழகம்" பெரிய அளவில் ஆரம்பிக்கப் பட்டுள்ளதும் தெரிய வருகின்றது.

முடிவுரை: இக்கட்டுரையில் தென் ஆப்பிரிக்கத் தமிழர்கள் குடிப்பெயர்ச்சி பற்றியும், அங்கு நிலவியிருந்த, நிலவுகின்ற பொதுவான கல்வி நிலை பற்றியும் கண்டோம். பல்வேறு இதழ்கள் தொடங்கி செயல்பட்டு வந்ததையும், பல்வேறு சங்கங்கள் இருக்கின்ற நிலையையும் பார்த்தால் தமிழர்கள் ஆப்பிரிக்கர்கள், வெள்ளையர்களிடத்தில் இருந்து மட்டுமன்றி இந்தியர்களிடத்திலிருந்தும் தங்கள் தனித்துவத்தை (id ndity) வெளிப்படுத்த முயற்சிக்கின்றார்கள் என்பது தெளிவு. இந்நிலையில் தமிழர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் இரண்டாவது மொழி, அம் மொழியிடத்தில் தமிழர்களின் உளப்பாங்கு போன்றவை ஆராயப்படவேண்டும். தென்னாப்பிரிக்கத் தமிழர்களிடத்தில் தமிழ்மொழி இழப்பு எந்த அளவிற்கு நடந்துள்ளது என்று தெரிந்து கொண்டால் அதற்கேற்றவாறு பாடத்திட்டங்கள் அமைக்க கருத்துக்கள் வழங்கலாம்.

REFERENCES :

Europa Year Book Vol. II. (1985). London: Europa Publications Limited.

கோதண்டராமன், பொன். (1976), உலகில் தமிழும் தமிழரும்.
சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

Nambi Arooran, K (1985). Indians in South Africa: With Special Reference to The Tamils. Thanjavur: Tamil University.

Richard. W. Hull. (1980). Modern Africa: Change and Continuity, New Jersy: Printice - Hall INC.

வீரப்பன், இர. ந. (1985). உலகத் தமிழர் சேலம்.

பிரிட்டனில் தமிழ்

பொற்கோ

1. முன்னுரை: பிரிட்டனுக்கும் தமிழுக்கும் ஏற்பட்ட தொடர்புக்கு வாணிகம், அரசியல், சமயம், கல்வி முதலான பல்வேறு வகைப்பட்ட காரணங்கள் உள்ளன. பிரிட்டனில் தமிழுக்கு ஏற்பட்டுள்ள இடம் வெறும் அலங்காரத்துக்காகவோ ஆசையினாலோ! ஏற்பட்ட இடமன்று. தவிர்க்க இயலாத வரலாற்றுக் காரணங்களால் அந்த இடம் ஏற்பட்டிருக்கிறது.

1. 1. வாணிகம்: பதினேழாம் நூற்றாண்டில் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் வாணிகத்தொடர்பு இந்தியாவில் கால்கொண்டபோதே ஆங்கிலேயர் ஓரளவாவது தமிழ் கற்றுக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. அப்போது ஆங்கிலம் தெரிந்த தமிழர்களின் தொடர்பும் அவர்களுக்குத் தேவைப் பட்டது. பிரிட்டனுக்கும் தமிழுக்கும் இடையே இன்று நாம் காணும் தொடர்புக்கு அப்போதே வித்து ஊன்றப்பட்டுவிட்டது எனலாம்.

1. 2 அரசியல்: கிழக்கிந்தியக் கம்பெனியார் இந்தியாவில் கைப்பற்றியிருந்த ஆட்சிப் பொறுப்பு ஆங்கிலேய அரசின் கைக்குச் சென்றபோது பிரிட்டனுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. தமிழ் நாட்டில் பணிபுரியும் ஆங்கிலேய அரசு அதிகாரிகளுக்குத் தமிழறிவு தேவை என்பதை ஆங்கிலேய அரசு அறிந்திருந்தது. தமிழ்நாட்டுக்கு வரும் ஆங்கிலேய அரசு அதிகாரிகள் தமிழ் கற்றுக் கொள்ள ஆங்கிலேய அரசு வழிவகைகளையும் செய்து கொடுத்தது. ஒரு காலக் கட்டத்தில், தமிழகத்தில் பணி புரியும் ஆங்கிலேய அரசு அதிகாரிகளுக்குத் தமிழ் தெரிந்திருக்க வேண்டும் என்றுகூட ஆங்கிலேய அரசு வற்புறுத்தியது.

1. 3. சமயம்: கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் ஆங்கிலேய அரசுக்கும் இங்கே தொடர்பு ஏற்படுவதற்குப் பல நூற்றாண்டுகள் முன்பே கிறித்துவ சமயம் இந்தியாவுக்கு அறிமுகமாகிவிட்டது. கிறித்துவ சமய வளர்ச்சிக்கும் செல்வாக்கிற்கும் பதினேழு, பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் நிலவிய அரசியல் சூழலும் சமுதாயச் சூழலும் பெரிதும் உதவியாக அமைந்தன. கிறித்தவ சமயத்துக்கு இங்கே விரிவாக்கம் தேடவந்த பிரித்தானியக் கிறித்தவ சமய அடியார்கள் நன்றாகத் தமிழ் கற்றுக் கொண்டு தமிழிலேயே மக்களோடு

தொடர்பு கொண்டார்கள். தமிழ் மொழி ஆராய்ச்சியிலும் தமிழ் இலக்கியக் கல்வியிலும் மொழிபெயர்ப்பிலும் பெரிதும் ஈடுபட்டுப் பிரித்தானியக் கிறித்தவ சமய அடியார்களில் சிலர் பெரும்பணி ஆற்றியிருக்கிறார்கள்.

1. 4. கல்வி அரசியல் பணிகளுக்காகவும் சமயத் தொண்டுக்காகவும் ஆங்கிலம் தெரிந்த தமிழர்களும் தமிழ் தெரிந்த ஆங்கிலேயர்களும் தேவைப் பட்டார்கள். இந்தத் தேவையை நிறைவு செய்யும் வகையில் பிரிட்டனிலும் தமிழகத்திலும் கல்வி நிறுவனங்கள் வாயிலாகத் தமிழ்க் கல்விக்கும் ஆங்கிலக் கல்விக்கும் வாய்ப்புகள் தோன்றின. இப்படிப்பட்ட சூழலில்தான் தமிழ் தெரிந்த பிரித்தானியர்களின் தொகையும் ஆங்கிலந் தெரிந்த தமிழர்களின் தொகையும் வளரத் தொடங்கின. பிரித்தானிய அரசின் அன்றைய ஆட்சிக்குட்பட்ட நாடுகளில் வழங்கிய புழம்பெரு மொழிகளையெல்லாம் கற்பிக்கக் கீழை நாட்டு ஆப்பிரிக்கக் கல்வி நிறுவனம் இலண்டன் மாநகரில் தோற்றுவிக்கப்பட்டது. இந்த நிறுவனம் ஆங்கிலேயர்கள் மூலம் தமிழ் கற்பித்ததோடு தமிழர்களை அழைத்துப் பணியமர்த்தம் செய்தும் தமிழ் கற்பித்தது. மொழித் துறையில் இப்படித் தொடர்பு ஏற்பட்டதோடு பிற அறிதுறைகளிலும் பிரிட்டனுக்கும் தமிழகத்துக்கும் தொடர்பு வளர்ந்தது. ஆசிரியர் நிலையிலும் மாணவர் நிலையிலும் வளர்ந்த தொடர்புகள் பிரிட்டனில் தமிழுக்கும் தமிழர்க்கும் வாய்ப்புகளை உருவாக்கி இடமளித்தன.

2. தமிழ்க்கல்வி மிகச் சுருக்கமாக நாம் மேலே குறிப்பிட்ட வரலாற்றுப் பின்னணியோடு பார்த்தால் பிரிட்டனில் இன்று காணும் தமிழ்க் கல்விச் சூழல் நன்கு விளங்கும். அரசியல் காரணங்களால் பிரித்தானியக் குடியுரிமை பெற்றும் பணிதேடிப் பணி வாய்ப்பு பெற்றும் மலேயா, சிங்கப்பூர், இலங்கை, தென்னாப்பிரிக்கா முதலான பல நாடுகளிலிருந்தும் தமிழர்கள் குடியேறியிருக்கிறார்கள் என்ற உண்மையையும் கருத்தில் கொண்டு தமிழ்க் கல்வி பற்றி நாம் இங்கே எண்ணிப் பார்க்க வேண்டும்.

2,1. பள்ளிகள் தமிழர்கள் மிகுதியாக வாழும் பகுதிகளில் தமிழ்க் குழந்தைகளுக்காகத் தமிழ் மக்களே சில பள்ளிகளை நடத்தி வருகிறார்கள். இப்படிப் பட்ட பள்ளிகள் அண்மைக்காலத்தில் தொடங்கப்பட்டவை. தனிப்பட்ட முறையில் தமிழ் கற்று இலண்டன் பல்கலைக் கழகம் நடத்தும் பொதுச் சான்றிதழ் தேர்வில் பங்கேற்றுப் பொது நிலை அல்லது சிறப்பு நிலையில் பொதுச் சான்றிதழ் பெற இலண்டன் பல்கலைக் கழகம் மாணவர்களுக்கு வாய்ப்பளித்திருக்கிறது.

2.2. பல்கலைக்கழகம் பல்கலைக்கழக நிலையில் தமிழ்க் கல்வி வாய்ப்பு இலண்டன் பல்கலைக் கழகத்தோடு இணைந்துள்ள கீழை நாட்டு ஆப்பிரிக்கக் கல்வி நிறுவனத்தில் மட்டுமே உள்ளது. இந்த நிறுவனத்தில் தமிழில் கலையியல் இளையர், கலையியல் நிறைஞர், ஆயவியல் நிறைஞர், அறிஞர் முதலாய பட்டங்களைப் பெற வாய்ப்பு உண்டு.

2.3. குறுகிய காலச் சிறப்பு வகுப்புகள் சமுதாய நலப்பணி புரியும் நோக்கத்தோடு இந்தியாவுக்கு வரும் மாணவர்

களுக்கு இந்தியச் சூழலை அறிமுகப் படுத்தும் வகையில் குறுகிய காலச் சிறப்பு வகுப்புகள் நடத்தப்படுவதும் உண்டு. தமிழகத்தில் சமுதாய நலப் பணி புரியத் திட்டமிட்டுள்ள பிரித் தானிய மாணவர்களுக்குத் தமிழ் வகுப்புகள் நடத்தப் பெறும்.

2.4 துணைநிலை மொழிக் கல்வி இந்தியச் சமுதாயம், இந்திய வரலாறு, இந்தியப் பண்பாடு, இந்தியச் சமயங்கள், இந்திய மெய்ப்பொருளியல் என இவ்வாறு பல் வேறு ஆய்வுப் பிரிவுகளை உள்ளடக்கிய ஓர் அறிதுறைக்கு இந்தியவியல் என்று பெயர் வழங்குகிறது. இந்தியவியல் துறையில் தமிழ்ச் சமுதாயம் பற்றியோ தமிழக வரலாறு பற்றியோ தமிழகச் சமயங்கள் பற்றியோ தமிழக மெய்ப் பொருளியல் பற்றியோ ஆராய்ச்சி செய்பவர்கள் தமிழ்மொழிக் கல்வி தங்கள் ஆய்வுக்குப் பெரிதும் துணை செயயும் என்பதை உணர்ந்து தாமே விரும்பித் தமக்குத் தேவையான அளவுக்குத் தமிழ் கற்கிறார்கள்.

தமிழாய்வு பிரிட்டனில் தமிழ்க் கல்வி தொடங்கிய காலத்திலிருந்தே தமிழாய்வும் நடந்து வருகிறது என்று கருதுவது தகும். ஆங்கிலேயர்கட்குத் தமிழை எப்படி எளிமையாகக் கற்பிக்க லாம் என்று எண்ணிப் பார்த்துச் சென்றநூற்றாண்டிலும்அதற்குமுன்பும் பல அறிஞர்கள் பல இலக்கண நூல் களையும் தமிழ் பயிற்று பாடநூல் களையும் எழுதி வெளியிட்டிருக்கிறார் கள். ஓரளவு தமிழறிவு பெற்றவர்கள் தமிழ்இலக்கியங்களிலும் ஆர்வங்கொண்டு இலக்கியங்களைப் படித்து ஆராயத் தொடங்கினார்கள். கால ஓட்டத்தில் மொழி, இலக்கியம், வரலாறு, தத்துவம் முதலான பல்வேறு பிரிவுகளில் ஆராய்ச்சி வளர்ந்தது. பல்கலைக்கழகங் களும் பல்வேறு நூலகங்களும் உயர் நிலைத் தமிழாராய்ச்சிக்கு உறுதுணை யாக விளங்கி வருகின்றன.

3. 1. பல்கலைக் கழகங்களில் தமிழாய்வு இலண்டன் பல்கலைக் கழகம், ஆக்ஸ் போர்டு பல்கலைக் கழகம், பர்மிங்ஃ காம் பல்கலைக்கழகம், ரெடிங்பல்கலைக் கழகம், மேஞ்ச்செஸ்டர் பல்கலைக் கழகம், எடின்பரோ பல்கலைக் கழகம் முதலான பல்கலைக் கழகங்கள் பல்வேறு சூழலில் அவ்வப்போது தமிழியல் ஆராய்ச்சிக்கு இடமளித்திருக் கின்றன. தொடர்ந்து தமிழ்க்கல்விக்கும் தமிழாய்வுக்கும் வாய்ப்பளித்து வருவது கீழை நாட்டு ஆப்பிரிக்கக் கல்வி நிறுவனந்தான் என்பது இங்கே குறிப் பிடத் தக்கது. இது இலண்டன் பல் கலைக்கழகத்தோடு இணைந்துள்ள ஒரு பழம் பெருங்கல்வி நிறுவனம்.

3.2. நூலகங்கள் தமிழ்க் கல்விக்கும உயர்நிலைத் தமிழாய்வுக்கும் உதவத் தக்க நூலகங்களுள் பிரிட்டிஷ் நூலகம் ஈடு இணையற்ற தனிச் சிறப்புக்கு உரியது எனலாம். இந்த நூலகத்தில் 25,000-இற்கு மேற்பட்ட தமிழ் நூல் களும் 500-இற்கு மேற்பட்ட தமிழ்ச் சுவடிகளும் உள்ளன. இதற்கு அடுத்த நிலையில் குறிப்பிடத் தக்கது இந்தியா ஆஃபீஸ் நூலகம். இதில் 20,000இற்கு மேற்பட்ட தமிழ் நூல்களும் பல அரிய சுவடிகளும் போற்றிக் காக்கப்பட்டு வருகின்றன.

கீழைநாட்டு ஆப்பிரிக்கக் கல்வி நிறுவன நூலகம், ஆக்ஸ்போர்டிலுள்ள போட்லியன் நூலகம், இலண்டனில் உள்ள ராயல் ஆசிய மன்ற நூலகம்

முதலான பல்வேறு நூலகங்களில் தமிழ் நூல்கள் இடம் பெற்றுள்ளன.

3.3. அரும்பொருட் காட்சியகங்கள் நூலகங்களைப் போலவே அரும்பொருட் காட்சியகங்களும் ஆராய்ச்சிக்குத் துணை புரிவன. தமிழக வரலாறு, நாகரிகம், பண்பாடு முதலானவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ளத் துணைபுரியும் அரும்பொருள்களைப் பிரிட்டிஷ் மியூசியத்திலும் விக்டோரியா ஆல்பர்ட் மியூசியத்திலும் போற்றிப் பாதுகாத்து வருகிறார்கள். இங்கே காணும் அரும் பொருள்கள் அரிய ஆய்வு நூல்களோடு ஒப்ப வைத்து எண்ணத் தக்கன.

3 4. தமிழாய்வு வளர்ச்சி நாம் முன்பே குறிப்பிட்டது போல் மொழியிலும் இலக்கியத்திலும் தொடங்கிய தமிழ் ஆராய்ச்சி காலப்போக்கில் வரலாறு, சமயம், மெய்ப்பொருள், சமுதாயம், நாட்டுப்புறவியல், இலக்கிய ஒப்பாய்வு, கல்வியியல், அகராதியியல் முதலான பல்வேறு பிரிவுகளாக விரிந்து பரந்து வளர்ச்சி பெற்றுள்ளது. தமிழியல் ஆய்வு மேலும் வளரத் தக்க வாய்ப்புகள் இங்கே உள்ளன.

3.5. ஆசிரியர்களும் ஆராய்ச்சி அறிஞர்களும் டாக்டர் கால்டுவெல் அவர்களின் திராவிட மொழி ஒப்பாய்வும் டாக்டர் ஜி.யூ. போப் அவர்களின் இலக்கண இலக்கியக் கல்விப் பணிகளும் தமிழுக்கு ஆராய்ச்சி அறிஞர்களிடையே உலக அரங்கில் ஓர் உயர்தனிச் சிறப்பிடத்தை ஏற்படுத்தின என்று குறிப்பிடுவது மிகையாகாது.

அறிஞர் டி.பர்ரோ அவர்கள் மொழி ஆராய்ச்சியில் தமிழ் தொடர்பாக ஆற்றியுள்ள பணிகள் தமிழின் தனிச் சிறப்பை உலகுக்கு உணர்த்தின. கீழை நாட்டு ஆப்பிரிக்கக் கல்வி நிறுவனத்தில் இப்போது பணியாற்றி வரும் அறிஞர் ஜே.ஆர். மார் அவர்கள் சங்க இலக்கியங்களில் ஆய்வு நிகழ்த்திப் பட்டம் பெற்றவர். மேலைநாடுகளில் கடந்த முப்பது ஆண்டுகளாக வளர்ந்து வரும் சங்க இலக்கிய ஆய்வுகளுக்கெல்லாம் இவருடைய ஆய்வு முன்னோடியாக விளங்குகிறது என்பதை இங்கே சிறப்பாகக் குறிப்பிடுதல் தகும். இப்போது எடின்பரோ பல்கலைக் கழகத்தில் பணி புரியும் டாக்டர் ஆர்.இ. ஆஷர் அவர்கள் இக்காலத் தமிழ் இலக்கிய ஆய்விலும் தமிழ்மொழி ஆய்விலும் ஈடுபாடு உள்ளவர்.

இலண்டன் பல்கலைக் கழகத்தில் உள்ள கீழைநாட்டு ஆப்பிரிக்கக் கல்வி நிறுவனத்தில் தமிழ் கற்பித்தவர்களில் பேராசிரியர் தாம்ப்சன், பேராசிரியர் பதி, டாக்டர் பொன். கோதண்டராமன் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். அறிஞர் ஜே.ஆர். மார் அவர்கள் உயர் நிலை ஆய்வுகளுக்கு வழிகாட்டுவதோடு மாணவர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் பணியையும் தொடர்ந்து செய்து வருகிறார். டாக்டர். பொன். கோதண்டராமன் உருவாக்கிய பாடநூலும் பதிவு செய்த ஒலியிழைப் பாடங்களும் அங்கு உள்ள மொழிபயின்றாய்வுக் கூடத்தில் தமிழ்க் கல்விக்குத் தொடர்ந்து பயன் படுகின்றன.

பிரிட்டிஷ் நூலகத்தில் உள்ள தமிழ் நூல்களையும் சுவடிகளையும் வரிசைப் படுத்தி வகுத்தும் தொகுத்தும் நூலோதிகளாக்கி ஆய்வறிஞர்கள் போற்றும் வகையில் டாக்டர் கவுர் அம்மையார் அவர்கள் அரும்பணி ஆற்றி வருகிறார்.

அறிஞர் எஸ். வித்தியானந்தன், தவத்திரு எஸ். தனிநாயகம், அறிஞர் கே. கைலாசபதி, அறிஞர் ஏ. சதாசிவம், அறிஞர் ஏ. வேலுப்பிள்ளை, அறிஞர் விசயலக்குமி ரங்கராசன், அறிஞர் டி. கந்தையா, அறிஞர் ஆ. கந்தையா, அறிஞர் நம்பி ஆரூரன் முதலான பல தமிழறிஞர்கள் பிரிட்டனில் ஆய்வு செய்து பட்டம் பெற்றனர் என்பது இங்கே சிறப்பாகக் குறிப்பிடத்தக்க செய்தி.

4. மக்கள் தொடர்பு ஊடகங்களில் தமிழ் இலண்டனில் தமிழர்கள் ஆயிரக் கணக்கில் வாழ்கிறார்கள். இவர்களுக்கும் உலகநாடுகளில் வாழும் தமிழர்களுக்கும் பயன்படும் வகையில் இங்கிருந்து சில தமிழ் இதழ்கள் வெளிவருகின்றன. பி.பி.சி. வானொலியிலும் பிறநாட்டுத் தமிழர்களுக்காக ஒரு தமிழ்ப் பகுதி உண்டு. தனியார் முயற்சியில் தமிழ்த் திரைப்படங்கள் திரையிடப்படுவதோடு இசை நடனம் முதலான கலை நிகழ்ச்சிகளும் நடப்பதுண்டு.

4.1. இதழ்கள் பிரிட்டனில் முதன் முதல் வெளிவந்த தமிழ் இதழ் 'லண்டன் முரசு'. இந்த இதழ் இலக்கியம், ஆராய்ச்சி, அரசியல், சமுதாயம் முதலான எல்லாப் பகுதிகளுக்கும் இடமளித்துப் பத்து ஆண்டுகளுக்கு மேலாகச் சிறப்பாகப் பணிபுரிந்தது. தமிழர் முன்னேற்றக் கழகம் என்ற ஓர் அமைப்பு தமிழன் குரல் என்ற ஒரு திங்களிதழை 1976-இல் தொடங்கியது. ஈழ விடுதலை என்ற பெயரில் 1976-இல் ஓர் இதழ் தொடங்கப் பெற்றதாக அறிகிறோம். இலண்டனிலிருந்து 'தமிழ் மலர்ச்சி' என்ற பெயரில் ஓர் ஏடு வெளியிடப்படுகிறது,

4. 2. சிறப்பு மலர்கள் இலண்டன் தமிழ்ச் சங்கம் உயர்ந்த ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய இரண்டு சிறப்பு மலர்களை 1973-இலும் 1976-இலும் வெளியிட்டது. ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது தமிழ் மலர்ச்சி ஒரு சிறப்பு மலரை வெளியிட்டது. திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி 1978-இல் ஒரு சிறப்பு மலரை வெளியிட்டது.

4.3. பி. பி. சி. தமிழோசை பி.பி.சி. வானொலி நிறுவனம் தமிழ்மொழிக்கு ஒரு சிறப்பிடம் அளித்துள்ளது. திங்கள் முதல் வெள்ளி வரை வாரத்தில் ஐந்து நாள்கள் தமிழோசை நிகழ்ச்சிகள் ஒலி பரப்பாகின்றன. செய்தி அரங்கம், வளரும் அறிவியல், நேயர் கடிதங்கள், செவ்வி (பேட்டி) முதலான பல்வகை நிகழ்ச்சிகள் தமிழோசையில் இடம்பெறுகின்றன. பி. பி. சி தமிழோசைப் பணிகளைத் திரு. வி. ஆர். கிருட்டினமூர்த்தி அவர்கள் சில காலம் கவனித்து வந்தார். தமிழோசைப் பணிகளைத் தொடர்ந்து எஸ். சங்கர மூர்த்தி அவர்கள் சிறப்புறச் செய்து வருகிறார்.

4. 4. திரைப்படங்களும் கலை நிகழ்ச்சிகளும் தனிப்பட்ட முறையில் சில தமிழன்பர்கள் அரங்குகளில் தமிழ்ப் படங்கள் பார்க்கவும் கலை நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழவும் ஏற்பாடு செய்வது உண்டு.

5. பண்பாட்டுவழித் தமிழ் பிற நாடுகளில் தமிழ் பேசவும் படிக்கவும் வாய்ப்புகள் அருகிப் போன சூழலில் தமிழர்கள் தமக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பைப் பண்பாட்டுக் கூறுகள் மூலந்தான் காப்பாற்ற முடிகிறது. இங்கே பண்பாட்டு கூறுகள் என்று கூறும்போது இசை, நடனம், வழிபாடு முதலானவற்றைக்

கருதித்தான் பண்பாடு என்று சொல்கிறோம்.

5.1. இசை தமிழில் எழுதப் பேசத் தெரியாத குழந்தைகள் கூட இசையார்வத்தால் தமிழ்ப் பாடல்களைக் கற்றுக் கொண்டு அழகாகப் பாடுகிறார்கள். இந்த இசைப்பாடல்கள் அவர்களின் தமிழ்த் தொடர்பைக் காப்பாற்றுகின்றன.

5, 2. நடனம் மேலே குறிப்பிட்டது போலவே தமிழில் எழுதப் பேசத் தெரியாத சில தமிழ்க் குழந்தைகள் ஆர்வத்தோடு பரத நாட்டியம் கற்றுக் கொள்கிறார்கள். இவர்கள் உரிய பாடல்களுக்கு மட்டும் பொருளை உணர்ந்து கொண்டு பொருளுணர்ச்சிக் கேற்ற பாவங்களோடு நடனமாடுகிறார்கள். இவர்களின் தமிழுறவைக் காப்பாற்றுவது நடனந்தான்.

5. 3. வழிபாடு சமய நம்பிக்கை உள்ள தமிழ்க் குடும்பங்களில் வழிபாட்டின் போது தமிழ்ப் பாடல்கள் பாடப்படுகின்றன. தமிழ் தெரியாவிட்டாலும் குழந்தைகள் இந்த வழிபாட்டுப் பாட்டுகளை மட்டும் கற்றுக் கொண்டு பாடுகிறார்கள். இந்தச் சூழலில் இவர்களின் தமிழ்த் தொடர்பைக் காப்பாற்றுவது வழிபாட்டுப் பாடல்கள்தான்.

5: 4. சங்கங்களும் மன்றங்களும் பிரிட்டனில் உள்ள தமிழ் மக்கள் பல்வேறு சங்கங்களையும் மன்றங்களையும் அமைத்திருக்கிறார்கள். இவற்றில் சிறப்பாகக்குறிப்பிடத்தக்கதுஇலண்டன் தமிழ்ச் சங்கம். இந்தத் தமிழ்ச் சங்கம் தமிழர்க்குரிய சிறப்பு விழாக்களை நடத்துதல். பெரியோர்களின் நினைவு நாள்களைக் கொண்டாடுதல், இலண்டனுக்கு வரும் அறிஞர்களையும் தலைவர்களையும் பெரியோர்களையும் வரவேற்று உரையாற்றச் செய்தல், கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்து நடத்துதல், சிறப்பு மலர்களை வெளியிடுதல் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்து நடத்துதல் முதலான பணிகளைச் செய்து வருகிறது.

தமிழ்ப் பண்பாட்டுக் கழகம், சிலம்பொலி மாதர் கழகம், உலகத் தமிழர் மறுமலர்ச்சி நிலையம், முதலான அமைப்புகள் தமிழ்ச் சமுதாயத்துக்கான பொதுநிலைப் பணிகளில் ஈடுபட்டு உள்ளன.

பிரித்தானிய இந்து மாமன்றம், சைவ முன்னேற்றச் சங்கம், இலண்டன் தமிழ்த் திருச்சபை முதலான அமைப்புகள் தமிழ் மக்களுக்குரிய சமயப் பணிகளில் ஈடுபட்டுள்ளன.

தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழத்தமிழர் கழகம், ஈழ ஆய்வகம் முதலான அமைப்புகள் ஈழத் தமிழர்களின் துயர் துடைக்கவும் முடிநத வகையில் உதவி செய்யவும் பாடுபடுகின்றன.

6. பிரிட்டனில் தமிழர்கள் பிரிட்டனில் தமிழர்கள் குடியேறியது கிழக்கிந்தியக் கம்பெனியாரின் தொடர்புக்குப் பிறகுதான் என்பது பொதுவாக நமக்கு நன்கு தெரிந்த செய்தி. இந்தக் குடியேற்றம் பல்வேறு அடிப்படைகளில் பல்வேறு நோக்கங்களில் பல்வேறு சூழல்களில் பல்வேறு காலக்கட்டங்களில் தொடர்ந்து நடந்திருக்கிறது.

6. 1. விடுதலைக்கு முன் இந்தியா பிரித்தானிய அரசின் ஆட்சியில் இருந்த

போதே அரசுப்பணி, கல்விப்பணி, செய்தித் தொடர்புப் பணி முதலான பணிப் பகுதிகளில் பொறுப்பேற்றுத் தமிழர்கள் பிரிட்டனில் குடியேறியிருக்கிறார்கள்.

6. 2. கல்வி வழிக் குடியேற்றம் கல்விக்காக பிரிட்டனுக்குச் சென்று அங்கேயே பணிவாய்ப்புப்பெற்று அங்கேயே தங்கிவிட்ட தமிழர்களும் உண்டு. கல்வி கற்பிப்பதற்காகப் பணியமர்த்த வாய்ப்புப் பெற்று, பிரிட்டனுக்குச் சென்று அங்கேயே குடியுரிமை பெற்ற தமிழர்களும் உண்டு.

6. 3. வாணிப வழிக்குடியேற்றம் வாணிப நோக்கில் பிரிட்டன் சென்று பிரிட்டனில் தங்கிவிட்டவர்களும் உண்டு. இந்த வகையினர் மிகச் சிறுபான்மையினர்.

6. 4. தொழில் வழிக் குடியேற்றம் பிரிட்டனில் தம் தகுதிக்கேற்ற வேலை வாய்ப்பினைத் தேடி பிரிட்டன் சென்று வேலை வாய்ப்பு பெற்று அங்கேயே குடியுரிமை பெற்றுச் சில தமிழர்கள் அங்கேயே வாழ்ந்து வருகிறார்கள்.

6. 5. அரசியல் நிலைப்பாட்டு வழிக் குடியேற்றம் மலேயா, சிங்கப்பூர், முதலான நாடுகளிலிருந்து பிரித்தானியக் குடியேற்றத்திற்கான உரிமையோடு பிரிட்டன் வந்த தமிழர்களைப் பிரித்தானிய அரசு ஏற்றுக்கொண்டு குடியுரிமை வழங்கியது. இத்தகைய தமிழர்களும் பிரிட்டனில் உண்டு.

பிரிட்டனில் வாழும தமிழர்கள் பல்வேறு சூழல்களில் பல்வேறு காலக் கட்டங்களில் அங்கு வந்து குடிரியுமை பெற்றவர்கள்.

பிரிட்டனில் குடியுரிமை பெறும் நோக்கம் ஏதும் இல்லாமல் கல்வியின் பொருட்டும் அங்கு வாழும் தமிழர்களும் உண்டு.

பிரிட்டனில் உள்ள தமிழர்களில் பெரும்பாலானவர்கள் இலண்டன் நகரில்தான் வாழுகிறார்கள். கிளாஸ்கோ, மேஞ்ச்செஸ்டர், பர்மிங்ஃகாம் முதலான இடங்களிலும் தமிழர்கள் வாழ்வதாக அறிகிறோம்.

7. முடிவுரை பிரிட்டனுக்குத் தமிழும் தமிழரும் சென்ற வரலாறு ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுக்கால உலக வரலாறு என்றே சொல்லத் தோன்றுகிறது. அயலகத் தமிழர்கள் தாயகத் தமிழர்களிடம் பொன்னையும் பொருளையும் எதிர்பார்க்கவில்லை. ஆனால், அவற்றினும் மேலான பண்பாட்டுத் தொடர்பையும் மொழித் தொடர்பையும் நல்லுறவையும் அவர்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள். அவர்களுடைய உரிமைகலந்த முறையான எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிவைப்பது இன்றைய சூழலில் நம் எல்லோருக்கும் கடமையும் பொறுப்பும் ஆகும்.

உதவிய நூல்கள்
தமிழ்

அருண் (1966) பிரிட்டனில் கண்ட புதுமைகள், திருச்சி.

சோமு (1969). அக்கரைச் சீமையிலே, சென்னை.

தனிநாயக அடிகள் (1974) ஒன்றே உலகம், சென்னை.

டாக்டர் பொற்கோ (1973) பி.பி.சி. தமிழோசையில்...... சென்னை.

டாக்டர் பொற்கோ (1976) உலகில் தமிழும் தமிழரும், சென்னை.

இர. ந. வீரப்பன் (1985) உலகத் தமிழர், சேலம்.

ஆங்கிலம்

Dr. K. Meenakshisundaram (1974) The Contribution of European Scholars of Tamil, Madras.

S. Thaninayagam (1968) Tamil Studies Abroad, Kuala Lumpur.

பிரித்தானிய நாட்டில் தமிழ்

அரங்க முருகையன்

பிரித்தானிய நாட்டுக்கும் தமிழ்-தமிழருக்கும் உள்ள தொடர்பு இன்று நேற்றையதன்று; பல நூற்றாண்டுகளுக்கும் முந்தியது.

தமிழ் இலக்கிய வரலாற்றினைப் படிப்போர், இருநூற்றாண்டுகட்கு முன் தமிழகத்துக்குத் தம் கிறித்தவ மதத்தைப் பரப்பவந்த ஜி.யூ. போப் ஐயர், தமிழ் மொழியின் வனப்பால் ஈர்க்கப் பெற்றுத் திருக்குறளையும் திருவாசகம் போன்ற அறநூற்களையும் ஆங்கிலத்தில் பெயர்த்துத் தொண்டாற்றியதோடு, இன்னுயிரை நீத்தகாலையும், தம் கல்லறையில் ஜி.யூ. போப் - ஒரு தமிழ் மாணவன் என்று பொறித்திட இறுதி முறி எழுதிவைத்தவாறே, ஆக்சுபோர்டு நகரில் அவர்தம் கல்லறையில் இன்னும் அவ்வாசகம் பளிச்சிடுகிறது.

தமிழுக்கும் பிரித்தானிய நாட்டுக்குமுள்ள தொடர்பு போப்பையரின் காலத்துக்கும் பல நூற்றாண்டுகட்கும் முந்தியது என்றறிய வியப்பாயிருக்கலாம்.

தமிழர்களால் வழக்கமாக இங்கிலாந்து என அழைக்கப் பெறும் இப்பிரித்தானிய நாடு, உண்மையில் வேல்சு, இங்கிலாந்து இசுகாட்லாந்து, வட அயர்லாந்து, (தென்அயர்லாந்து தனிக்குடியரசாகத் திகழ்கிறது) என்ற நான்கு மண்டலங்களைக் கொண்டது. இவற்றுள், வேல்சில் வேல்சு (WELSH) மொழியும் இங்கிலாந்தில் ஆங்கிலமும், இசுகாட்லாந்து வட அயர்லாந்தில் ஆங்கிலமும், கேலிக் (GAELIC) மொழியும் பேசப் பெறுகின்றன.

மலைகள் மிகுந்த வேல்சு ! முருகா என்பது மருவி காமுரு ஆனது.

பிரித்தானிய நாட்டில் பேசப்பெறும் மொழிகளுள் பழைமையானதாக எண்ணப்பெறுவது வெல்சு மொழி. பிரித்தானிய நாட்டின் வரலாற்றினை இயேசுநாதரின் காலத்திலிருந்து தெளிவாக அறிய முடிகிறது எனலாம், இயேசுநாதர் சிலுவையில் அறையப் பெற்ற காலத்தில் ஐரோப்பாவில் பெரும் பேரரசாகத் திகழ்ந்த உரோமானியப் பேரரசு பிரித்தானிய நாட்டின் மீது படையெடுத்து அந்நாளில் இந்நாட்டின் பல பகுதிகளில் ஆட்சிசெய்து வந்த துருயிடுகள் என்னும் இனத்தாரை வென்று அவர்களைக் கொன்றொழித்ததாகச் சொல்லப்பெறுகிறது.

துரூயிடுகள்[1] (Druids) இயற்கையையும் பல தெய்வங்களையும் வழிப்பட்டு வந்தவர்கள் என்று அறியமுடிகிறது, இந்நாட்டின் தொன்மைச் சின்னமான இசுடோன் கெஞ்ச் (Stonehenge) இத் துரூயிடுகளால் சூரிய வழிபாட்டுக் கோயிலாகக் கட்டப் பட்டதென்பர். இவ்வினத்தார் பேசிய மொழி கேலிக் (Gaelic) போன்று இருந்திருக்கலாம் என்று சொல்லப் பெறுகிறது.

துரூயிடு இனத்தார் அழிக்கப்பட்டாலும் பிரித்தானிய நாட்டின் தென்மேற்குப் பகுதியில் வாழ்ந்த வேல்சு மக்களின் மொழி முதலியன முற்றாக அழிக்கப்படவில்லை. உரோமானியரை அடுத்து பிரித்தானிய நாட்டின் மீது, செல்டிக் வைக்கிங், ஆங்கிலோ சாக்சானியர், நார்மன் இனத்தவர் போன்ற பல்லினத்தார் படையெடுத்து வந்து ஆண்டிருக்கின்றனர். தத்தம் மொழிச் சுவட்டையும் இங்கு விட்டுச் சென்று உள்ளனர். எனினும் வேல்சு மக்களின் மொழியை முற்றாக அழிக்க எவராலும் இயலவில்லே.

வேல்சு குன்றுகளும் பள்ளத் தாக்குகளும் நிறைந்த பகுதியாகும். வேல்சு மக்கள் எளிய நட்புறவுடைய மக்களெனலாம். வேல்சு என்னுஞ் சொல்லில் வேல் என்ற தமிழ்க்கடவுளின் வேற்படை தோன்றுதல் போல வேல்சு நாட்டைக் குறிக்க காமுரு (Cymru) என்னுஞ்சொல்லைப் பயன்படுத்துவர். அஃது நமக்கு முருகா என்று ஒலிப்பதாகத் தோன்றும். வேல்சுநாடெங்கணும் முன்னரே குறிப்பிட்டது போல் குறிஞ்சி நிலவளம் மிகுந்துள்ளதால் குன்று தோறும் குமரக்கடவுள் தம் திருவிளையாடல்களை நிகழ்த்துவதாகத் தமிழர் உள்ளம் எண்ணி உவகையுறும். குன்று வளத்தில் மனதைப் பறிகொடுத்த தமிழ் அன்பர்களின் முயற்சியால் குமரனுக்கு வேல்சில் கோயில் ஒன்றும் எழும்பியுள்ளது.

இரண்டாம் உலகப் போர் நிகழ்ந்த காலம் வரை இந்நாடு நெடுகிலும் எங்கும் ஆங்கிலமே பயிற்றுமொழியாகவும் ஆட்சி மொழியாகவும் இயங்கி வந்தது என்றாலும் பின்னர் பிரித்தானிய நாடு ஐரோப்பியப் பொதுச் சந்தை[2] ஒன்றியத்தில் ஓர் உறுப்பினராகச் சேர்ந்த பின் அத்தகு பன்னாட்டு மொழி பேசும் சிறுபான்மையோர் தத்தம் தாய் மொழி, கலே, பண்பாட்டைப் பேணி வளர்க்க ஊக்கமூட்டவேண்டியதாகி விட்டது.

இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி இந் நாட்டின் பழம் மொழியான வேல்சு மொழி புத்துயிர் பெற்றது. வேல்சிலுள்ள பள்ளி, கல்லூரி, பல்கலேக் கழகங்களில் வேல்சு மொழி கற்பிக்கப் பெறுகிறது, வானொலி, தொலேக்காட்சி நிலேயங்கள் (வேல்சு மாநிலத்தில் உள்ளவை மட்டும்) வேல்சு மொழியில் ஒலி / ஒளி பரப்புகின்றன. வேல்சு மக்கள் தங்கள் மொழி, கலே, பண்பாட்டினைப் பேணி வளர்க்கும் பெருமையில் நெஞ்சு நிமிர்ந்து நடக்கின்றனர்.

---

1. தமிழறிஞர் கா நமச்சிவாய முதலியார் இயற்றிய சிற்றிலக்கண வினு - விடையைக் காண்க.

2. ஐரோப்பியப் பொதுச்சந்தையில் பிரித்தானிய நாடு பிரான்சு, மேற்கு செருமணி, இத்தாலி, பெல்சியம், ஆலந்து, தென்மார்க், இசுபெயின், போர்ச்சுசுல், கிரேக்கநாடு, துருக்கி ஆகிய நாடுகள் சேர்ந்துள்ளன. - European Common Market.

முன்னரே குறிப்பிட்டவாறு, இசுகாட்லாந்து மாநிலத்தின் சில பகுதிகளிலும் வட அயர்லாந்தின் சில பகுதிகளிலும் மக்களால் பரவலாகப் பேசப்பெறும் கேலிக் மொழியைப் பேணி வளர்க்கும் நற்பணியும் நடந்தே வருகிறது.

மக்கள் ஒரு நாட்டினை விட்டு மற்றொரு நாட்டுக்கு வயிற்றுப் பிழைப்புக்காகவோ, வாழ்க்கையில் மேம்பாடுறுவதற்காகவோ, வேற்று நாட்டு வேற்றின ஆடவர் அல்லது பெண்டிரை மணந்து கொண்டதாலோ, கல்வி வளர்ச்சி, அல்லது அரசியல், மருத்துவக் (உடல்நலக்) காரணங்களினாலோ குடிபெயர்தல் தொன்றுதொட்டு இடையறாது நிகழ்ந்து வரும் செயலாகும் **Human migration is a constant process).** ஆகவே இந்நாட்டின் அண்டை நாடுகளான பிரான்சு, செருமனி, இத்தாலி, இசுபெயின். போர்ச்சுகல் போன்ற நாடுகளைச் சேர்ந்தோர் கணிசமான அளவில் குடியேறி வாழ்கின்றனர். ஆகவே அத்தகையோரின் தாய்மொழி வளர்ச்சியும் இந்நாட்டரசியலாரின் பொறுப்பாகிறது. இந்நாட்டு இடைநிலை, உயர்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரிகளில் பிரெஞ்சு, செருமானிய, போன்ற மொழிகள் இயல்பான விருப்பப் பாடங்களாகப் பயிற்றுவிக்கப் பெறுகின்றன. கணிசமான அளவில் மாணவ, மாணவியர் விரும்பின் இத்தாலி, இசாபானியம், கிரேக்கமொழி போன்றவையும் கற்பிக்க ஏற்பாடு செய்யப்பெறும் என்று அரசியலார் உறுதி கூறுகின்றனர்.

பிரித்தானிய நாட்டினர் கடந்த மூன்று நூற்றாண்டுகளில் பல்வேறு ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளை வென்று அங்கெல்லாம் ஆட்சியும் மேலாண்மையும் செலுத்தி வந்ததால் அந்நாட்டவரில் கணிசமான அளவினர் உயர்கல்விக்காக இங்கு வரவேண்டியதாயிற்று. ஆகவே, பல்வேறு ஆசிய, ஆப்பிரிக்க நாட்டு மொழிகளின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஆராய இலண்டன் பல்கலைக் கழகத்தின் ஒரு பகுதியாகக் கீழைநாடுகள் மற்றும் ஆப்பிரிக்க நாட்டு மொழிப் பள்ளி **(School of Oriental and African studies)** நிறுவப்பெற்றதோடு, பல பிரித்தானிய இளைஞர்கள் இம்மொழிகளில் புலமை பெறுமாறு ஊக்குவிக்கப் பெற்றனர். இவ்வாறு புலமை பெறத் தெரிவு செய்யப்பெற்ற மொழிகளுள் நம் அன்னைத் தமிழும் ஒன்று என்றறிய நம் நெஞ்சமெலாம் மகிழும்.

நல்ல தமிழ்ப்புலமையோடு, இந்திய இசை நுணுக்கமும் கற்றறிந்து, வீணை மீட்டவும் பயின்ற முனைவர் சான்மார் மேற்குறிப்பிடப்பெற்ற கீழைநாட்டு ஆப்பிரிக்க மொழிப்பள்ளியில் தமிழ்ப் பேராசிரியராகப் பொறுப்பில் அமர்ந்து உள்ளார்.

இசுகாட்லாந்தின் கோநகரான எடின்பரோவிலுள்ள பல்கலைக்கழகத்தில் மொழித்துறைத் தலைவராக இயங்கும் முனைவர் உரோனால்டு ஆசர் தமிழில் பயின்று பட்டம் பெற்றவர். கல்லூரி மாணவர்க்கான தமிழ்ப்பாட நூல் எழுதியுள்ளார். பலதமிழாராய்ச்சி மாநாடுகளில் பிரித்தானிய நாட்டுப் பேராளராகக் கலந்துகொண்டவர். எண்ணற்ற கட்டுரைகள் எழுதியுள்ளார்

பிரித்தானியப் பொருட்காட்சி கழத்தின் ஒரு பகுதியாக இலங்கும் நூல்

நிலையத்தின் கீழ்நாட்டுப் பகுதி உலகப் புகழ் வாய்ந்ததாகும். இங்கே யுள்ள அருந்தமிழ் நூற்களை முதன் முதலில் வரிசைப் படுத்திப் பட்டிய லிட்டவர் மறைந்த ஜி. யூ. போப்பையர் ஆவார். இப்போது இங்கு தமிழறிந்த முனைவர் (திருவாட்டி) ஆல்பர்ட்டின் கவுர் அப்பகுதிக்குப் பொறுப்பாளராக உள்ளார்.

இரண்டாம் உலகப்போர் நிகழ்ந்த காலையும் அதற்குப் பின் நிகழ்ந்த அரசியல் அமளி துமளியாலும் போலந்து நாட்டு மக்கள்பெருமளவில் பிரித்தானிய நாட்டில் தஞ்சம் புகுந்தனர். தம் தாய் நாட்டு மண்ணை விட்டு வந்தாலும் பெற்ற அன்னையினும் சிறந்தஉற்ற தாய் மொழியைப் பேணாதிருக்க முடியுமா? இன்றளவும் அரசினர் உதவி பெற்றும், தம் சொந்த முயற்சி, ஒற்றுமையாலும் தங்கள் தாய்மொழியைத் தத்தம் சிறார் கட்கு முறையாகப் பயிற்றுவித்து வரு கின்றனர். போலிசு (POLISH) மொழி உயர்பள்ளி இறுதித் தேர்வுக்கான விருப்பப்பாடமாக இன்று திகழ்கிறது.

அதுபோலவே பல்வேறு நாட்ட வரும் தத்தம் தாய்மொழி, கலை, பண் பாட்டினை வளர்க்கவும், தம் சிறார் கட்கும் உலகமாந்தர்க்கும் பயிற்றுவிக்க வும் அரசினரின் உதவி பெறுகின்றனர்.

இனி, இத்துறையில் தமிழர்களின் முயற்சியையும் பெற்ற வெற்றியையும் விரிவாக ஆய்வோம்.

பிரித்தானிய நாட்டில் மொத்தம் 156 மொழிகள் பேசப்பெறுவதாக ஓர் அரசினர் அறிக்கைப் பட்டியலிடுகிறது. இவற்றுள் நம் தமிழும் ஒன்று.

முன்னரே குறிப்பிட்டவாறு தமிழுக்கும் பிரித்தானியநாடு - ஆங்கில மொழிக்கும் ஏற்பட்ட தொடர்பு இன்று நேற்றையதல்ல. பன்மொழிப்புலவர் முனைவர் உரோஜல்டு ஆசர், அன்னைத் தமிழ் ஆங்கிலமொழிக்கு அருங்கொடை யாக நல்கிய சொற்கள் ஆயிரத்தை விஞ்சும் என்கிறார்.[3] ஆனைக் கொன் றான் (ஒரு வகை பாம்பு), மிளகுத் தண்ணீர், கட்டுமரம், அரிசி, நாவாய் வெற்றிலை, தேக்கு போன்ற எத் தனையோ நற்றமிழ்ச் சொற்கள் நேரடி யாகவும், ஓரை (Hour) போன்று இலத்தீன், பழங்கிரேக்க மொழி வாயி லாகவும் ஆங்கிலத்தில் வந்தேறியுள்ளன. குருளை (Girl), தந்தை, தாதை (Dad), பானை (Pan) போன்று தாம் வந்த சுவட்டினைக் காட்டும் சொற்கள் பல, மட்காப்பு (Mudguard), சம்பளம் (சம்பு+அளம்) - salary (salt என்ற சொல் தொக்கிநிற்றலை ஓர்க)போன்றும் ஞாயிறு (Sunday), திங்கள் (Monday) என்பன போன்றும் ஒரே சாயலான சொற்கள் தமிழ், ஆங்கிலம், ஆகிய இரு மொழிகளிலும் வழங்கிவருவது இவை மூத்த தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கு வந்தவை என்பதைத் தெள்ளிதாய்க் காட்டுகின்றன.

மதி கெடுப்பதும் மதியோ ?

'ஒட்டா! ஒரு மதி கெட்டாய்' என்று சிலேடையாகச் சொன்னாளாம் பழந் தமிழ்ப் பெருங்கிழவி ஔவை. மதி என்பது தமிழில் நிலவையும், அறிவை யும் குறிக்கப்பயன்படுதலே போல் ஆங்கிலத்திலும் அதே இரு பொருளில் மதி[4] (moon) பயன்படுத்தப் பெறுவது கூர்ந்து நோக்குவோர்க்குத் தற்செய லான ஒற்றுமை அன்று என்பது நன்கு புலப்படும்.

நாவால் இழைநக்கி நெருடும் நூல் பஞ்சின் நூலா, பனுவலா? நூல் என்பது தமிழில் பொத்தகத்துக்கும் நெசவு நூலுக்கும் பயன்படும் சொல். இவ்வழக்கம் தமிழில் மட்டுமின்றி ஆங்கிலத்திலும் உள்ளது விந்தையினும் விந்தையன்றோ!

தும்மினால் வாழ்த்துதலும் பாட்டனின் பெயரைப் பேரனுக்கிடலும்

"வழுத்தினாள் தும்மினேனாக;
அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீ ரென்று"

என்று தமிழ் மங்கையர் மதிநலம் கூறும் குறள். இன்றளவிலும் நாம் நம் வீட்டு இளம்பிள்ளைகள் தும்மும்போது, "நீ நூறாண்டு வாழ்க! என்பதன் குறுக்கமாக 'நூறு!' என்கிறோம்.

அது போலவே இந்நாட்டவரும் ஒருவர் தும்முகையில், வாழ்க (Bless you) என்று வாழ்த்துகின்றனர்.

நந்தமிழ்க் குடும்பங்களில் பாட்டனாரின் அல்லது பாட்டியின் பெயரை மரபு தழைத்து விளங்குதல் பொருட்டுப் பேரன் (பெயரன்) பேர்த்தி (பெயர்த்தி)க்கு இடல் தொன்று தொட்டு நிலவிவரும் வழக்கம். பெயரன், பெயர்த்தி என்ற சொற்களே அத்தகு பொருளை உணர்த்துதல் கண்கூடு. பத்துப்பாட்டு போன்ற பழந்தமிழ்நூற்களில் குறிப்பிடப்பெறும் மன்னர்களின் ஆட்சிக்கால எல்லையை நன்குஅளவிட்டு அறிய இயலாவண்ணம் இருப்பதற்கு இவ்வாறு ஓர் அரசனின் பெயரையே தாங்கிய அவ்வரசனின் பெயரனுகை இருக்கலாம் என்று ஐயமெழச் செய்தலே இதற்குத் தக்க சான்று. இந்நாட்டவரும் பாட்டனின் பெயரை பெயரனுக்கிடு கின்றனர்.

ஆங்கிலத்துக்கே தாய்மொழி தமிழா? ஒரு மொழிநூலறிஞர் தக்க ஆய்வுகளைமேற்கொண்டபின் ஆங்கிலத்துக்கே தாய்மொழி தமிழ்தானென்றும் தமிழின் சேய்மொழியான துளுவமொழி பேசுவோர் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு பழம்பெரு பாய்மரத் தோணிகளில் பயணம் செய்து பிரித்தானிய நாட்டுக்கு வந்து கரையிறங்கிக் குடியேறினர் என்றும் அவர்கள் பேசிய (துளுவ) மொழி பின்னாளில் இலத்தீன் கிரேக்க மொழி சமசுக்கிருதம் பிரெஞ்சுமொழி போன்ற பல்வேறு மொழிச் சொற்களையும், மீண்டும் அலை அலையாய் வந்தேறும் தமிழ்ச்சொற்களோடும் இணைந்தே இன்றைய ஆங்கில மொழி தழைத்துள்ளது என்றும் கூறியுள்ளார்.

இனித் தற்போதைய சூழலில் தமிழ் மொழி வளர்ந்து வருவதை ஆய்ந்து நோக்குவோம்.

முன்னரே கூறியபடி தமிழ்-தமிழர்க்கும் இந்நாட்டுக்கும் நெடுங்காலமாகவே

---

3. பண்டாரகர் உரோனால்டு ஆசர் இலண்டன் தமிழ்ச்சங்க ஆண்டு மலரில் (1973) எழுதிய Tamil Loan words in English என்ற கட்டுரையைக் காண்க.

4. Moon என்று ஆங்கிலத்தில் வழங்கும் சொல் இலத்தீனிலிருந்து வந்த Lunar என்ற வேரையுடையது. மதி (moon) மதியைக் கெடுத்தலால் Lunar என்றசொல்லும் கெட்டுத்திரிந்து Looney என்றாகிக் கிறுக்கனை (மதிநலங்கெட்டானை)க் குறித்தது.

தொடர்பு உண்டு. இரண்டாம் உலகப் போருக்குப் பின் இந்நாட்டுக்கு மேற் படிப்பு, பணி, வாணிகம் போன்ற காரணங்களில் கணிசமான அளவில் தமிழர்கள் வந்தனர். அத்தகையோரில் சிலர் இந்நாட்டிலேயே தங்கிவிட்டதும் உண்டெனலாம். பின்னர் 1960இற்குப் பின் பிரித்தானியப் படைக்குறைப்பினால் பணியிழந்த தமிழர்கள், மலேசியா, சிங்கை போன்ற நாடுகளிலிருந்து தங்களுக்கிருந்தஎல்லைக்கடவைபோன்ற வாய்ப்பினைப் பயன்படுத்தித் தங்கள் குடும்பங்களோடு இங்குவந்துசேர்ந்தனர் இத்தகையோரின் எண்ணிக்கை மூவாயிரம் என்று சொல்லப் பெறுகிறது.

இற்றை நாளில் தமிழர் என்று சொன்னால் எல்லோருக்கும் நினைவிற் தோன்றுவது இலங்கையே. அந்நாட்டில் ஆட்சியாளர் மேற்கொண்டுள்ள காட்டு மிராண்டித்தனமான இழிசெயல்களால் அல்லலுற்று அலையலையாகத்தமிழர்கள் தொடர்ந்து ஏதிலியராய் இங்கு வந்த வண்ணமுள்ளனர். ஆக இப்போது இங்குவாழும் தமிழர்களின் எண்ணிக்கை 35,000 என்று சொல்லப் பெறுகிறது.

தமிழர்கள் தொன்றுதொட்ட காலந் தொட்டே வாணிகம், பணி போன்ற வற்றின் காரணமாகக் கடல்கடந்து அயல்நாடு சென்றபோதெல்லாம் தம் மொழி, கலை,பண்பாட்டினைத் தாங்கள் சென்ற நாடுகளுக்கெல்லாம் உடன் கொண்டு சென்று பேணி வளர்ககத் தவறியதில்லை. அவ்வாறே, இந்நாளி லும் தாம் ஏதிலியராய் இந்நாட்டுக்கு வந்து சேர்ந்த நிலையினும் தம் மொழி கலை, பண்பாட்டினை மறக்கவில்லை. மாறாக, தமிழ்க் குலத்தார் ஒருவரை யொருவர் புரிந்து கொள்ளவும், ஒன்று படவும் தம் மொழி, கலை, பண் பாட்டினைக் கருவியாகப் பயன்படுத்தி மகிழ்கின்றனர்.

இன்று இந்நாட்டில் இருபது தமிழ்ப் பள்ளிகள் அரசினர் பண உதவி பெற்றும் தமிழ்க் குலத்தாரின் அரிய முயற்சியாலும் இயங்கி வருகின்றன. இவை, பெரும்பாலும் காரி, ஞாயிற்றுக் கிழமைகளில் இயங்குவதற்குக் காரணம், தமிழ்ச் சிறார்கள் திங்கள் முதல் வெள்ளி உள்ளிட்ட ஐந்து நாள்களில் அரசினர்ப் பள்ளி சென்று கணக்கு, ஆங்கிலம், அறிவியல் முதலியன கற்பதேயாம்.

மேற்கண்ட இருபது தமிழ்ப்பள்ளி களும் ஒன்றேடொன்று தொடர்பின்றித் தம் மனம்போன வாக்கில் பயிற்றுவிக் காவண்ணம் இப்பள்ளிகளையெல்லாம் இணைக்கும் பிரித்தானிய தமிழ்ப்பள்ளி களின் ஒன்றியம் நிறுவப் பெற்றுள்ளது. இவ்வொன்றியத்தின் கண்காணிப்பில் மொழிப்பயிற்சிக்கு மட்டுமின்றி, நாட்டியம், இசைபோன்றனவற்றுக்கும் பாடத்திட்டங்கள் வரையறுக்கப்பட் டுள்ளன. மேலே குறிப்பிடப் பெற்ற தமிழ்ப்பள்ளிகளுள் ஒன்றான மேற்கு இலண்டன் தமிழ்ப்பள்ளி இன்னும் ஒரு படி மேலே போய் இந்நாட்டுச் சூழலுக் கேற்ப மூன்று பாடநூற்களை இயற்றி யுள்ளது. இன்னும் வேறு பல நூற் களும் வெளிக்கொணரத் திட்டமிட் டுள்ளது.

இந்நாட்டில் எத்தனையோ மொழி கள் பேசப்பெறினும் (ஆங்கிலம், வேல்சு போன்ற இந்நாட்டு மொழி களைத் தவிர) தம் தாய்மொழிக் கல்வி பற்றிக் கருத்தரங்கம் முதன்முதலில்

நடத்திய பெருமை தமிழுக்கே உண்டு. இத்தாய்மொழிக் கருத்தரங்கம் மேற்கு இலண்டன் தமிழ்ப்பள்ளியின் ஏற்பாட்டில் 19மே பிப்ரவரியில் இலண்டன் ஆக்டன் நகர மண்டபத்தில் நிகழ்வுற்றது. காலையில் அறிஞர்களின் ஆய்வுரை; பிற்பகலில் மொழி, இசை, நாட்டியப் பயிற்சிக்கான பாடத்திட்ட வரையறை; மாலைப்பொழுதில் பல்வேறு பள்ளிக்குழுவினரும் பங்கு கொண்ட இசை, நாட்டியக் கலைவிழா மற்றும் தமிழ் நூற்கண்காட்சி, கணிப்பொறி வழித் தமிழைப் பயிலல்-பயிற்றுவித்தல் போன்ற காட்சிகளோடு மெத்த வளருது தமிழ் மேற்கே என்று நந்த தமிழ்க் குலத்தார் பெருமையுற நிகழ்ந்தேறின.

உலகறிந்த தமிழ் எழுத்தாளர்களும் இங்குண்டு. சைவத் தமிழ்மணி கி. ஞான சூரியன் [எழுதியுள்ள தமிழ் நூல்கள் 1) அஞ்சாநெஞ்சம் 2) அளவைவிநாயகர் அந்தாதி], திரு. க நவசோதி, திருவாட்டி இ ர ா சே ச சு வ ரி பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற திரு முத்துக்குமாரசாமி, திரு ஆ. சு. இராமலிங்கம், தமிழ்மணி அரங்க முருகையன் போன்றோர் இத்தகு எழுத்தாளர் - நூலாசிரியர்களுள் சிலராவர்.

ஆண்டுதோறும் தமிழர்கள் கணிசமாக வ ா ழு ம் பகுதிகளிலெல்லாம் பொங்கல் போன்ற தொன்மை விழாக்கள் கொண்டாடப் பெறுகின்றன. அப்போதும் குளிரற்ற கோடைக்காலத்திலும் தமிழ் நாடகங்கள் பாட்டரங்கங்கள் முதலியவை அறிஞர்களின் பேச்சோடு மேடையேறுதல் கண்கொள்ளாக் காட்சி.

பிரித்தானிய நாட்டுத்தமிழர்களுக்கு இன்னொரு சிறப்பும் உண்டு. தமிழ்நாடு இலங்கை ஆகிய தமிழ்த்தாய் மண்ணில் பிறந்து வளர்ந்து இங்கு வந்தோரும், சிங்கை, மலேசியா, பிசி, தென்னாப்பிரிக்கா, மாரீசியசு. கரீபியக் கடல் நாடுகள் போன்ற உலகின் பல்வேறு பகுதிகளில் பிறந்து வளர்ந்த தமிழர்களும் இங்கிணைந்து வாழ்ந்து மகிழ்தலே அச்சிறப்புக்குரிய செயலாகும்.

உலகமறிந்த இலண்டன் முரசு, தமிழன் குரல் போன்ற இதழ்களோடு, தமிழர்களின் நாட்டு விடுதலையை நாடும் பல்வேறு இதழ்களும் இங்கிருந்து வெளியிடப் பெறுகின்றன. விரைவில் சிந்து என்ற திங்களிதழ் ஒன்றையும் வெளிக் கொணர ஏற்பாடாகி வருகிறது.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி முருகன் பெயராலும், ஆனைமுகன் பெயராலும் இங்கே கோயில்கள் உள்ளன. அங்கெல்லாம் தமிழும், சமயக்கல்வியும் பயிற்றுவிக்கப் பெறுகின்றன. ச ம ய ப் ப ணி யாற்றும் மெய்கண்டார் ஆதீனம் போன்ற அறநிறுவனங்களும் இங்கு இயங்கிவருகின்றன. இந்நிறுவனங்கள் சமயவளர்ச்சி பற்றி நூல்கள் - ஏடுகளை வெளியிடுகின்றன.

தமிழை உயர்பள்ளி இறுதிநிலை அளவில் ஒரு பாடமாகக் கொண்டு இந்நாட்டில் அரசினர் தேர்வு எழுதும் வாய்ப்புள்ளது. ப ட் ட அ ள வி ல் ஆராய்ச்சி செய்வோருக்கு உதவ ஏற்பாடு உண்டு என்றும் சொல்லப் பெறுகிறது.

தமிழோசை என்ற பெ ய ரி ல் இங்கிருந்து உலகமெங்கணும் வாழும்

தமிழர்கள் செவிமடுத்தின்புற வாய்ப்பாக ஒலிபரப்பாகும் நிகழ்ச்சி பற்றிக் கூறாவிடின் இக்கட்டுரை முற்றுப்பெற்றதாகாது.

மொத்தத்தில், பிரித்தானிய நாட்டில் தமிழ் வளர்கிறது வாழ்கிறது. இனியும் தொடர்ந்து வாழும், வளரும்.

மொரீசியசில் தமிழ்

சு. இராசாராம்

'உல்லாசப் பயணிகளின் சொர்க்கம்' என்று ஐரோப்பியர்களால் அழைக்கப் படுகின்ற மொரீசியஸ் இந்துமாக்கடலில் தென்மேற்குப் பகுதியில் அமைந்து உள்ளது. இந்தியாவிலிருந்து 4,000 கிலோமீட்டர் தூரத்தில் கடல் நடுவே கிடக்கும் இச்சிறிய தீவு 'இந்துமாக் கடலின் திறவுகோல்' என்றும் வழங்கு கிறது. 2100 சதுர கிலோமீட்டர் பரப் புடைய மொரீசியஸ் தீவையும் 2512 சதுர கிலோமீட்டர் பரப்புடைய ரீயூனியன் தீவையும் இணைத்து 'மாஸ்கரின் தீவுகள் (Mascarene Islands) என்று வரலாற்றாசிரியர்கள் கூறுவர். இத்தீவுகளனைத்தும் பலகோடி ஆண்டு களுக்கு முன்னால் நிலத்தின் அடிப்பகுதி யிலிருந்து வெடித்த எரிமலைக் குழம்பின் சிதறல்களாகும். தற்கால மொரீசியஸ், மொரீசியஸ் தீவு, ரோட்ரிக்ஸ், (Rodrigues) அகலேகா (Agalega) புனித பிராந்தோன் (St. Brandon) ஆகிய தீவுகள் அடங்கிய பகுதியாகும். இவற்றுள் புனித பிராந்தோனும் அகலேகாவும் மிகச் சிறிய தீவுகள். அகலேகா சீசெல்சுக்கு மிக அருகில் மொரீசியசிலிருந்து 580 மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. இன்று ரிவியே த்யூ ரெம்பார்ட் (Rivere du Rempart), பம்பிள் மோசஸ் (Pamplemousses), போர்ட் லூயிஸ், (Port Louis) மோகா (Moka), பிளாக் (Flaeq), ப்ளெயின் வில்லியம்ஸ் (Plaines Wilhems) கிராண்ட் போர்ட் (Grand Port) பிளாக் ரிவர் (Black River) சவான் (Savanne) என்ற ஒன்பது மாவட்டங்கள் அடங்கிய நிலப்பகுதியாக மொரீசியஸ் விளங்கு கிறது.

1983 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொரீசியசின் மொத்த மக்கள் தொகை கிட்டத்தட்ட பத்து இலட்சமாகும். இவர்களுள் 966, 863 பேர் மொரீசியஸ் தீவிலும், 33,082 பேர் ரோட்ரிக்சிலும், 3:0 பேர் அகலேகாவிலும், 137 பேர் புனித பிராந்தோனிலும் வாழுகின்றனர். 1846ஆம் ஆண்டு தொடங்கி 1983ஆம் ஆண்டு முடிய பதினைந்து மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரங்களை வரிசைப்படுத்திப் பார்த்தால் ஒவ்வொரு கணக்கெடுப்பின் போதும் ஆண் மற்றும் பெண் பாலார் விகிதமும், இரு கணக்

கெடுப்புகளுக்கிடையேயான மக்கள் தொகையின் உயர்வையும், சராசரி ஆண்டு விகித உயர்வையும் அறிய இயலும்,

வரலாறு மொரீசியஸ் வரலாறு குடியேற்ற வரலாற்றோடு இணைந்ததாகும். டச்சுக் காரர்களே இத்தீவில் குடியேறிய முதல் ஐரோப்பிய இனத்தவர்எனலாம். இருந்த போதிலும், இவர்கள் வருகைக்கு முன்னரே போனீசியர்களும், மலாய் களும், அரபுகளும், இந்தியர்களும் இத் தீவுக்கு வந்ததாக வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

இவர்கள் எல்லோரின் வருகையை விட போர்த்துக்கீசியர்களின் வருகை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில், முதன் முதலாகப் போர்த்துக் கீசியர்களுக்கு மட்டுமே மக்கள் குடியேற்றத்துக்குரிய எல்லாத் தகுதி களும் நிறைந்த ஒரு சிறிய நாடாக மொரீசியஸ் தீவு தோன்றியது. இந்துமாக்கடலில் மொரீசியசின் கிடப்பை மேற்கு நாடுகளுக்குத் தெரிய வைத்தவர்களும் போர்த்துக்கீசியர்கள் தாம் என்றால் அது மிகையன்று. ஏறக் குறைய 1641 வரை இந்துமாக்கடலில் கடல் வாணிகத்தில் இவர்கள் சிறந்து விளங்கினர். 1641 - இற்குப் பிறகு, குறிப்பாக, டச்சுக்காரர்கள் மலாக் காவைப் பிடித்தவுடன் போர்த்துக்கீசியர் களின் செல்வாக்கு இந்துமாக் கடலில் குறைய ஆரம்பித்தது. போர்த்துக்கீசியர் களுக்குப் பின் மொரீசியஸ் மண்ணை மிதித்த ஐரோப்பிய இனத்தவர் டச்சுக் காரர்களாவர். 1598-ஆம் ஆண்டு இவர் கள் மொரீசியசுக்கு வந்தனர், இத் தீவுக்கு முதல் முதலாக 'மொரீசியஸ்' என்று பெயரிட்டவர்கள் இவர்கள் தாம். போர்த்துக்கீசியர்களைப்போல இந்துமாக்கடலில் வாணிகத்தைப் பெருக்கிப் பெரும்பொருள் ஈட்டவும், ஆங்காங்கே காலனி நாடுகளை அமைக்கவும் பதினாறாம் நூற்றாண்டில் டச்சுக்காரர்கள் கடற்பயணம் மேற் கொண்டிருந்தனர். 1619-இல் ஜாவா விலுள்ள ஜகார்த்தாவில் உருவாக்கிய பதவியா (Batavia) என்ற சிறிய நகரத் திலிருந்து கொண்டு டச்சுக் கிழக்கிந்திய கம்பெனி மொரீசியசில் நிலையான குடியிருப்பை ஏற்படுத்த செயற்பட்டு வந்தது. பிற்காலத்தில் நன்னம்பிக்கை முனையிலும் நிலையான குடியேற்றத்தை ஏற்படுத்திச் செயற்பட்டு வந்தனர். 1658 இல் மொரீசியசில் முதலாவது டச்சுக் குடியேற்ற முயற்சி தோல்வி யடைந்து 1664-இல் இரண்டாவது குடியேற்ற முயற்சி வெற்றி பெற்றது நன்னம்பிக்கை முனை கொடுத்த நம்பிக்கையினால் தான் என்பர் வரலாற்றாசிரியர். இரண்டாவது குடி யேற்ற முயற்சியிலும் தோல்வியடைந்து 1710-ஆம் ஆண்டு டச்சுக்காரர்கள் மொரீசியசை விட்டுப் போயினர்.

இந்நிலையில் பல்வேறு காரணங் களுக்காக மொரீசியசைத் தன்வசப் படுத்த வேண்டிய கட்டாயச் சூழ்நிலை பிரஞ்சுக்காரர்களுக்கு ஏற்பட்டது. இந்தி யாவில் பாண்டிச்சேரியில் பிரஞ்சு கிழக் கிந்தியக் கம்பெனி ஏற்படுத்திய வாணிக மையம் இதற்கு முக்கியக் காரணமாக இருந்தது. அத்துடன் இந்துமாக் கடலில் நன்னம்பிக்கை முனைக்கும் இந்தியா வுககுமிடையே மொரீசியஸ் அமைந் திருந்ததால் பிரஞ்சுக்காரர்கள் இந்தியாவிலுள்ள பிரஞ்சு ஆட்சிப் பகுதிகளோடு தொடர்பு வைத்துக் கொள்ள எளிதாக இருந்தது. இவை

எல்லாவற்றுக்கும் மேலாக போர்பான் (இன்றையரீயூனியன்)நாட்டில் வாணிகத் தொடர்பு வைத்துக்கொண்ட பிரஞ்சுக் கப்பல்களை மொரீசியசில் இருந்து கொண்டு கடற்கொள்ளைக்காரர்கள் தாக்குவதைத் தடுக்க முடிந்தது. கடைசியாக, இங்கிலாந்தோடும் ஆஸ்திரியாவோடும் பிரஞ்சு அரசு மேற்கொண்ட போரில் இழந்த இழப்பைச் சரிகட்ட புதிய காலனிகளை உருவாக்க வேண்டிய கட்டாயம் உருவானதும் மொரீசியசைத் தன்வசப்படுத்திக் காலனி அமைக்க வேண்டிய நிலைக்குப் பிரஞ்சு அரசு உள்ளானது. எனவே, 1715-ஆம் ஆண்டு செப்தம்பர் திங்கள் 20-ஆம் நாள் ட்யூப்ரஸ்னே என்பவர் மொரீசியசைக் கைவசப்படுத்தி 'பிரான்ஸ் தீவு (Isle de France) என்று பெயரிட்டார்.

பிரஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனியாரால் மொரீசியசில் நியமிக்கப்பட்ட கவர்னர்களுள பெர்டினாண்ட் பிரான்சுவா மாஹே லெபோர்தொன்னே சிறந்தவர். பிரான்ஸ் தீவைக் குடியேற்ற நாடாக ஆக்க இயலும்என்று பிரஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு முழு நம்பிக்கை அளித்தவர் இவரே. 1746-இல் பாண்டிச்சேரியை ஆங்கிலேயரின் தாக்குதலிலிருந்து மீட்க டியூப்ளேக்கு இவர் உதவினார். 1735-இல் பாண்டிச்சேரியிலிருந்து மொரீசியசுக்குக் கவர்னர் பதவி ஏற்கவந்தபோது தம்முடன் 1735 தமிழர்களை அழைத்து வந்தார். கட்டடக்கலை கலைஞர்கள், தச்சுவேலை செய்வோர் ஆகியோர் இவர்களுள் அடங்குவர். மொரீசியசில் 250 ஆண்டுகளுக்கு முன் முதலாவதாகக் குடியேறிய தமிழர்கள் இவர்கள் தாம் என்று வரலாற்றாசிரியர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

1725-ஆம் ஆண்டு தொடங்கி 1759-ஆம் ஆண்டுவரை பிரஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனி வாணிகத்தின் மூலம் பெரும் பொருள் ஈட்டியது. ஆனால் 1741-இல் இருந்து 1748 வரை நடந்த ஆஸ்திரியன் வாரிசு உரிமைப் போர் கம்பெனியின் வாணிகத்தைப்பெருமளவுபாதித்தது.இச் சமயத்தில் இந்தியாவில் கம்பெனிக்கும் ஆங்கிலேயர்க்கும் நடந்த போரில் கம்பெனி செல்வாக்கு இழந்ததோடு மட்டுமன்றி முக்கியமான வாணிக நிலையங்களையும் இழந்தது. போருக்குப் பின்னர் கம்பெனியின் பலத்தை மீண்டும் வளர்ப்பதற்குப் பிரான்ஸ் மன்னரின் உதவியை நாடியது. ஆனால், பிரான்சிலுள்ள பெரும்பாலான மக்கள் வியாபாரத்தில் கம்பெனி முழு ஆதிக்கம் செலுத்தி வந்ததை விரும்பவில்லை. அரசும மக்களின் இவ்விருப்பத்திற்கு மதிப்பளித்தது. அரசிடம் இருந்த செல்வாக்கையும் நன்மதிப்பையும் இழந்துவிட்ட நிலையை உணர்ந்த கம்பெனி மாஸ்கரீன் தீவுகளை அரசரின் ஆளுகைக்குள் கொண்டுவரத் தீர்மானித்து அவற்றின் நிருவாகப் பொறுப்பைக் கடல்துறை நடவடிக்கை அமைச்சகத்திடம் (Ministry of Marine Affairs) கொடுத்தது. 1767-ஆம் ஆண்டு பிரஞ்சு முடியரசு பிரான்ஸ் தீவைத் தன் நேரடி நிருவாகத்தின் கீழ்க் கொண்டு வந்தது.

பிரான்ஸ் தீவில் டச்சுக்காரர்கள் மேற்கொண்ட குடியேற்ற முயற்சியோடு பிரஞ்சுக்காரர்களின் குடியேற்ற முயற்சியை ஒப்பிட்டு நோக்கும்போது பிரஞ்சுக்காரர்கள் பெருவெற்றி அடைந்திருந்தனர் எனலாம். கிட்டத் தட்ட அறுபத்தியெட்டு ஆண்டுக்காலக் குடியேற்ற முயற்சியில் பிரான்ஸ் தீவின்

மொத்த மக்கள் தொகை நாற்பத்தைந் தாயிரமாகப் பெருகியது காலனித்துவ முயற்சியில் குறிப்பிடத்தக்க சாதனை என்றே கூறலாம். அநேகமாக இதே ஆண்டுக் காலத்தில் டச்சுக் குடியேற்றத் தில் முந்நூறு மக்களுக்குக் கூடுதலாக இல்லை. பிரஞ்சுக்காரர்களின் இச் சாதனைக்கு அடிப்படைக் காரணம் தோட்டங்களில் வேலை செய்வதற்காக ஏராளமான அடிமைகளைப் பிரான்ஸ் தீவுக்குத் துணிந்து கொண்டு வந்ததே எனபர் வரலாற்றாசிரியர்.

பிரஞ்சுக்காரர்களைப் போல இந்து மாக்கடலில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியும் கடல் வாணிகத்தில் ஈடு பட்டிருந்தது. 1798 - இல் எகிப்து நோக்கிப் படை திரட்டிச் சென்றிருந்த நெப்போலியன் போனாபார்ட் இந்தியக் காலனி நகரங்களின்மீது தம் தாக்குதல் களைத் தொடரலாம் என்று ஆங்கிலேயர் அஞ்சினர். எனவே, இந்துமாக்கடலில் சிறந்த முறையில் படைப் பாதுகாப்பு அமைத்துக் கொண்டனர். இச்சமயத்தில் விக்டர் குய் ட்யூப்ரே (Victor Guy Duperre) என்ற படைத்தலைவரின் பிரஞ்சுப்படை ஆங்கிலேயர் மீது தாக்குதல்கள் நடத்தின. இதன் விளை வாக, ஆங்கிலேயர் கிழக்கிந்தியக் கம்பெனி பிரான்ஸ் தீவையும் பக்கத்துப் பிற தீவுகளையும் கைப்பற்ற திட்டம் தீட்டியது. இத்திட்டத்தைச் செயற் படுத்தும் வகையில் 1809 - ஆம் ஆண்டு ரோட்ரிக்ஸ் தீவை ஆங்கிலேயர் கைப் பற்றினர். இதைப்போலவே 1810 - ஆம் ஆண்டு சூலைத் திங்களில் போர் பானையும் ஆங்கிலேயர் கைப்பற்றினார். தொடர்ந்து ஆகஸ்டு 14 - ஆம் நாளில் அதிகாலையில் ஆங்கிலேயர் பிரான்ஸ் தீவின் மீது தம் தாக்குதலைத் தொடங் கினர். திசம்பர் முதலாம் நாள் ஆபர்கிராம்பி ஆந்ற ஆங்கிலேயக் கப்பற் படைத்தலைவர் போர்ட் லூயிசை நோக்கித் தாக்குதலை நடத் தினார். இங்கு ஆபர்கிராம்பியின் படை களுக்கும் பிரஞ்சுப் படைகளுக்கு மிடையே போர் நடந்தது. ஆங்கிலப் படையில் 32 பேரும் பிரஞ்சுப்படையில் 62 பேரும் இப்போரில் மாண்டனர்.

பிரஞ்சுப் படைத்தலைவராக இருந்த டிகான் போரால் விளையப் போகின்ற உயிரிழப்பையும் பொருளிழப்பையும் தவிர்ப்பதே அறிவார்ந்த செயலாகும் என்றெண்ணி ஆங்கிலேயரிடம் சரண் அடைந்தார் 90 வருடங்களாகப் பிரஞ்சுக்காரர்களின் குடியேற்ற நாடாக இருந்துவந்த பிரான்ஸ் தீவுக்கு ஆங்கிலேயர் சொந்தக்காரர்களாயினர். 'பிரான்ஸ் தீவு' என்ற பெயர் மாற்றப் பட்டு மீண்டும் 'மொரீசியஸ்' என்று பெயர் சூட்டப்பட்டது. கிட்டத்தட்ட 160 ஆண்டு ஆங்கிலேய ஆட்சிக்குப் பின்னர் 1968 – ஆம் ஆண்டு மொரீசியஸ் விடுதலை அடைந்தது,

மக்கள் மொரீசியசைக் 'குடியேறிய வர்களின் தீவு' என்பர் இம்மண்ணின் மைந்தர்கள் என்று அழைக்கப்படும் இனத்தவர் எவரும் இலர். இங்கு வாழுகின்ற சுமார் பத்து இலட்சம் மக்கள் கிட்டத்தட்ட முந்நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் இந்துமாக் கடல் வழி குடியேறியவர்களும் அவர்கள் வம்சாவழியினருமாவர். இன்றுஇவர்கள் அனைவரும் மொரீசியர்கள்; இந் நாட்டின் குடிமக்கள்.

மொரீசியசில் குடியேறிய முதலா வது இனத்தவர் டச்சுக்காரர்கள். இவர்

களுக்கு முன்னர் போனீசியர்கள், மலாய்கள், அரபுகள், இந்தியர்கள், போர்த்துக்கீசியர்கள் ஆகியோர் கடற்பயணங்களின் போது இத்தீவுக்குப்போய் வந்துள்ளனர். ஆனால் இத்தீவில் நிலையான குடியிருப்பை ஏற்படுத்தும் எண்ணம் இவர்களுக்கு இருந்ததில்லை. 1710 - இல் டச்சுக்காரர்கள் மொரீசியசை விட்டு வெளியேறினர். பல்வேறு காரணங்களால் இவர்களது குடியேற்ற முயற்சி தோல்வியடைந்தது. தப்பியோடிய சில அடிமைகளைத் தீவிலேயே விட்டுவிட்டு நன்னம்பிக்கை முனைக்கு இவர்கள் திரும்பினர். இன்றும் 30 டச்சுக்காரர்கள் மொரீசியசில் உள்ளனர் என்று 1983 - ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பு அறிக்கை கூறுகிறது.

டச்சுக்காரர்களைத் தொடர்ந்து பிரஞ்சுக்காரர்கள் மொரீசியசுக்கு வந்தனர். மொரீசியசை மக்கள் குடியேறி வாழத்தக்க நாடாக்கிய பெருமை இவர்களைச் சாரும். இந்தியாவிலிருந்து குறிப்பாகத் தமிழகத்திலிருந்து கட்டடக் கலைஞர்களும் கைவினைஞர்களும் இவர்கள் காலத்தில்தான் இங்கு வந்தனர். பிரஞ்சுமொழி, நாகரிகம், கலை மற்றும் பண்பாடு ஆகியவற்றை இம்மண்ணிலிருந்து இன்று வரை பிரிக்க இயலாத அளவுக்கு இத்தீவோடு ஒன்றி வாழ்ந்தவர்கள் பிரஞ்சுக்காரர்கள் என்றால்மிகையன்று. இன்றுமொரீயசிஸ் மக்கள் தொகையில் மிகச்சிறுபான்மையினராகப் பிரஞ்சுக்காரர்கள் இருந்தாலும் தீவு முழுவதும் பிரஞ்சு மொழியும் பண்பாடும் வியாபித்துள்ளன. 1810 - இல் ஆங்கிலேயர் பிரான்ஸ் தீவைக் கைப்பற்றியதும் ஏராளமான பிரஞ்சுக்காரர்கள் பிரானசுக்குத் திரும்பினர். டச்சுக்காரர்களைப் போலவோ, பிரஞ்சுக்காரர்களைப் போலவோ ஏராளமான ஆங்கிலேயர்கள் மொரீசியசில் குடியேறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மொரீசியஸ் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு கிரியோல்கள் ஆவர். மொரீசியஸ் வரலாற்றில் அவ்வப்போது ஏற்பட்டு வந்திருக்கின்ற சமூக மற்றும் அரசியல் மாற்றங்களில் இவர்களுக்கு முக்கிய பங்கு உண்டு.

'கிரியோல்' என்ற சொல் ஆப்ரிக்கர் மற்றும் இந்தியர் ஐரோப்பிய வமிசாவழியினரோடு கலந்ததால் உருவான கலப்பின மொரீசியஸ் மக்களைக் குறிக்கிறது. பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் 'கிரியோல்கள்' என அழைக்கப்பட்ட பிரஞ்சு வமிசாவழியினர் இன்று 'பிரஞ்சு மொரீசியர்கள் (Franco -Mauritians) என்று அழைக்கப்படுகின்றனர். 1835 - இல் இந்தியாவிலிருந்து வந்த ஒப்பந்தத் தொழிலாளர்கள் மற்றும் சீனர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் இடையே உண்டான உறவு இவ்வினமக்களின் எண்ணிக்கை மேன்மேலும் உயர வழிவகுத்தது.

பிரஞ்சு இலக்கண அமைப்பு உடையதும் பெரும்பாலான ஆப்ரிக்க மொழிச் சொற்களையுமுடைய கலப்பு மொழியான 'மொரீசியன் கிரியோல்' இவர்களது தாய்மொழி. இம்மொழியே பிற்காலத்தில் எல்லா இனத்தவர்களும் பேசும் மொழியாக வளர்ந்தது. அரசியல், பொருளாதார மற்றும் சமூகக் காரணங்களினால் தத்தம் தாய் மொழிகளை நாளாவட்டத்தில் இழந்து போன பல மொழியினத்தவர்க்கும் கிரியோலே

முதன்மொழியாக இன்று உள்ளது. இம்மொழிகளைப்பேசும் அனைவரும் கிரியோல்கள் அல்லர். இன்று மொரீசிய சில் வாழும் தமிழர்கள் அனைவரும் இம்மொழியைப் பேசுகின்றனர். இதுவே, அனைத்து மொரீசியர்களின் தாய்மொழியாக விளங்குகிறது என்று கூறலாம்.

மொரீசியசில் போர்த்துக்கீசியர்கள் குடியேறத் தொடங்கிய காலத்திலேயே ஆப்ரிக்க அடிமைகளை இத்தீவுக்குக் கொண்டு வரத் தொடங்கினர். எந்த வொரு நாட்டின் குடியேற்ற வளர்ச்சி யிலும் அடிமைகளுக்கு முக்கியப் பங்கு உண்டு. மொரீசியசில் பிரஞ்சுகாரர் களின் குடியேற்ற முயற்சி வெற்றி யடைந்ததற்குக் காரணம் மடகாஸ்கர் மற்றும் ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து ஏராளமாக அடிமைகளைக் கொண்டு வந்ததேயாகும். 1834-இல் அடிமை முறை ஒழிப்பு பிரகடனப்படுத்தப்பட்ட போது இவ்வடிமைகள் விடுதலை பெற் றனர்.

பிரஞ்சுக்காரர்களின் காலத்தில் சீனர்கள் இத்தீவுக்கு வந்தனர். இன்றைய மொரீசியசின் பொருளாதார வளர்ச்சி யில் சீனர்கள் முக்கியப் பங்கு வகிக் கின்றனர். இவர்களைத் தவிர இந்தியர் களும் மொரீசியசில் வாழுகின்றனர்.

குடியேற்றம் பிரஞ்சுக்காரர்கள் மொரீசியஸ் தீவைக் குடியேற்ற நாடாக்க முற்பட்ட காலத்திலேயே தமிழர்கள் இங்குக் குடியேற ஆரம் பித்தனர் எனலாம். பிரஞ்சு கிழக் கிந்தியக் ம்பெனியாரால் நியமிக்கப் பட்ட கவர்னர்கள், மொரிசியஸ் தீவின் முன்னேற்றத்திற்குக் கைத்திறன் பெற்ற தொழிலாளர்களைஅனுப்பிவைக்குமாறு வேண்டினர். கம்பெனி அப்போது பாண்டிச்சேரியில் கவர்னராக இருந்த பெநுவா தூய்மா என்பவரை வேண்டி யது. இவர் பாண்டிச்சேரி மற்றும் சோழமண்டலக் கடற்கரைப் பகுதி களிலிருந்து சில கைத்திறன் பெற்ற தொழிலாளர்களைத் தெரிவு செய்து போர்பானுக்கு அனுப்பி வைத்தார். இத்தமிழ்த் தொழிலாளர்கள் போர் பானில் கல்கட்டடங்களைக் கட்டுவதில் ஈடுபட்டனர்.

1729-ஆம் ஆண்டு, 169 கைத்திறன் பெற்ற தொழிலாளர்களும் அவர்களது உதவியாளர்களும் மொரீசியசுக்கு வந்தனர் என்று வரலாற்றாசிரியர் சூரியமூர்த்தி குறிப்பிடுகிறார். 1735-இல் மாஹே தி லபோர்தொன்னே என்ற மொரீசியஸ் கவர்னர் போர்ட் லூயி துறைமுகத்தை விரிவுபடுத்தக் கட்டிடக் கலைஞர்களையும் தச்சுவேலை வல்லுநர்களையும் பாண்டிச்சேரி, காரைக்கால், மலபார் மற்றும் சோழ மண்டலக் கடற்கரைப் பகுதிகளிலிருந்து மொரீசியசில் குடியமர்த்தினார். இக் குடியேற்றம் 1760 ஆம் ஆண்டு வரை நீடித்தது. மொரீசியசைப் பிரஞ்சுக் காரர்களிடமிருந்து கைப்பற்றுவதற்காக ஆங்கிலேயர் நடத்திய போரில் பம்பாய் மற்றும் வங்காளத்திலிருந்து வந்த சென்னை இராணுவப் பிரிவு ஆற்றிய தீரச்செயல்கள் இன்றும் மொரீசியர் களால் நினைவுகூறப்படுகிறது. எனவே, மொரீசியசுக்குத் தமிழர்களின் வருகை அடிமை முறை ஒழிப்புக்கும், ஒப்பந்தத் தொழிலாளர்களின் குடியேற்றத்துக்கும் முந்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

1834-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17-ஆம் நாள் அடிமை முறை ஒழிப்பு பிரகடனம் செய்யப்பட்டது. மொரீசியசில் அப்போதிருந்த 70,000 ஆப்பிரிக்க அடிமைகள் மகிழ்ச்சிக் கடலில் திளைத்தபோது கரும்புத் தோட்ட உரிமையாளர்கள் கவலையடைந்தனர். இச்சமயத்தில் தான் அற்புத்நாட் சகோதரர்களின் தோட்டங்களில் வேலைசெய்வதற்கென 74 இந்திய ஒப்பந்தத் தொழிலாளர்கள் மொரீசியசுக்கு வந்தனர். மொரீசியசுக்கு வந்த முதலாவது ஒப்பந்தத் தொழிலாளர் குழு இவர்கள் தாம்.

அடிமை முறை ஒழிப்பைத் தொடர்ந்து இந்தியத் தொழிலாளர்களை ஒப்பந்தத்தின் பேரில்மொரீசியசில் குடியேற்றும் எண்ணத்தை ஆங்கிலேயர் செயற்படுத்த ஆரம்பித்தனர். 1834-இல் இருந்து 1923 வரை இந்தியர் குடியேற்றம் தொடர்ந்து நடைபெற்று வந்தது. இவ்விந்தியர்கள் கல்கத்தா, பம்பாய், சென்னை துறைமுகங்கள் வழியாக மொரீசியசுக்கு வந்தனர். சென்னைத் துறைமுகம் வழியாக வந்த தமிழர்கள் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி பகுதிகளைச் சேர்ந்தவர்கள். 1861 மற்றும் 1981 ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புகள் இம்மூன்று துறைமுகங்களிலிருந்து கப்பலேறி மொரீசியசுக்கு வந்த இந்தியர்களின் மொத்த எண்ணிக்கையைத் தெரிவிக்கின்றது.

ஆண்டு	துறைமுகம்	எண்ணிக்கை
1861	கல்கத்தா	99,670
	சென்னை	56,202
	பம்பாய்	15,863
1981	கல்கத்தா	83,120
	சென்னை	39,041
	பம்பாய்	7,440

சென்னைத் துறைமுகத்திலிருந்து கிழக்குக் கடற்கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த பலர் மொரீசியசுக்குக் குடியேறியதாகப் பல சான்றுகள் உள்ளன. 1874-இல் ரெய்கேட் என்ற கப்பல் மூலமாக 413 ஒப்பந்தத் தொழிலாளர்கள் மொரீசியஸ் வந்து சேர்ந்தனர். இவர்களுள் பெரும்பாலோர் பழைய சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். விசாகப்பட்டினம், கோதாவரி, நெல்லூர், கடப்பா, பெல்லாரி ஆகிய பகுதிகளிலிருந்து வந்த தெலுங்கர்களும் இவ்வெண்ணிக்கையில் அடங்குவர். இக்கப்பலில் மொரீசியசுக்கு வந்த தமிழர்கள் செங்கல்பட்டு, வடஆற்காடு, கோயமுத்தூர், தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலுள்ள முகவர்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களாவர். ஒவ்வொரு மாவட்டத்தின் முக்கியமான நகரங்களிலிருந்தும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். விவரம் வருமாறு:

	நகரங்கள்	குடிபெயர்ந்தோர் எண்ணிக்கை
1.	செங்கல்பட்டு	61
2.	வட ஆர்க்காடு	32
3.	தஞ்சாவூர்	36
4.	திருச்சிராப்பள்ளி	6
5.	கடலூர்	20
6.	கும்பகோணம்	3
7.	தஞ்சாவூர்	2
8.	வேலூர்	1
9.	சென்னை	37
		198

இப்புள்ளி விவரம் இந்தியாவின் தென் பகுதியிலிருந்து மொரீசியசுக்குக் குடியேறியவர்களுள் ஏராளமானவர்கள் தமிழர்கள் என்பதைக் காட்டுகிறது.

தமிழர்களின் இக்குடிப்பெயர்வுக்கு என்ன காரணிகள்? அடிமை முறை ஒழிப்பு, சமுதாயத்தில் ஒடுக்கப்படல், நிலப்பிரபுக்கள் மற்றும் வட்டிக்கடைக் காரர்களின் பொருளாதாரச் சுரண்டல், வாணிகம் மற்றும் தொழில்களின் வீழ்ச்சி, பஞ்சம் ஆகியவை இக்குடிப் பெயர்வுக்கு முக்கியக் காரணிகளாகும். இக்காரணிகள் அனைத்தும் ஒரு சமூகத் தின் பொருளாதார நிலை குலைவினால் உருவாகுபவை. பொருளாதார நிலையில் நலிந்த மக்களே குடிபெயர்வோராக இருப்பர்.சாதி, மதம் என்றபெயரால் மனித சமூகம் ஒடுக்கப்பட்டதும், வலியோர் எளியோரை வாட்டியதும், நிலப்பிரபுக்கள் அத்துமீறி ஆதிக்கம் செலுத்தியதும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதற்பகுதிச் சமூகத்தின் கோணங்களாகும். இக்கொடுமைகளைத் தாங்க இயலாமையே பொதுவாகத் தமிழர்களின் குடிப்பெயர்வுக்கு முக்கிய மான காரணியாகும். தமிழகத்தில் இக் காலக் கட்டத்தில் வறுமையாலும், நிலப் பிரபுக்களின் பொருளாதாரச் சுரண்டலாலும் சாதி, மதக் கொடுமை களாலும் மொரீசியசுக்குக் குடியேறி யோர் பலர். 'மோரீசுகாரர்', 'நட்டாலுக்கு ஓடிப்போனவர், என்று இந்நாடுகளுக்கு ஒப்பந்தத் தொழிலாளர் களாகப் போய், தமிழகம் திரும்பிய சிலரைக் கிராமங்களில் இன்றும் அழைப்பதைப் பார்க்கிறோம்.

ஒப்பந்தத் தொழிலாளர்களாக நல் வாழ்வுதேடி மொரீசியசுக்குக் குடியேறிய எளிய தமிழ் மக்கள் மொரீசியஸ் அரசு முகவர்களால் ஏமாற்றப் பட்டனர். மொரீசியஸ் வந்துசேர்ந்ததும் ஒப்பந்தப் படியல்லாமல் எல்லா வேலைகளையும் செய்யுமாறு தோட்ட உரிமையாளர்கள் இவர்களைப் பணித்தனர். அத்தோடு மிகக் கடுமையாகவும் நடந்து கொண்டனர். போதுமான கூலியும், ஒப்பந்தத்தில் குறிப்பிட்டபடி நியாய மான உணவுப் பொருள்களும் கொடுக் கப்படவில்லை, ஒப்பந்தம் பல நிலை களில் மிக எளிதாக மீறப்பட்டது. உணவும் உடையும் மறுக்கப்பட்ட நிலையில் பஞ்சைகளாய், பராரிகளாய் தமிழர்கள் இங்கு வாழ்ந்து வந்தனர். காலையிலிருந்து மாலை வரை கடின மான உழைப்பிற்குப் பின்னரும் வேலை செய்ய வலியுறுத்தப்பட்டனர். உடல் நலக் குறைவினாலோ வேறு சில காரணங்களாலோ வேலை செய்ய இயலாத தொழிலாளர்கள் இறக்கும் வரைக்கும் அடித்து நொறுக்கப் பட்டனர். அடிமை முறையைவிட இவ் வொப்பந்தத் தொழிலாளர் முறை தோட்ட உரிமையாளர்களால் கேவலப் படுத்தப்பட்டது. இவர்களின் அழுகுரல் இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் எட்டி அவ்வப்போது சில மாற்றங்கள் ஏற் பட்டாலும் முழுவதுமாக இவர்களுக்கு விடிவுகாலம் வரவேயில்லை. ஆப்பிரிக்க அடிமைகளோடு அடிமைகளாக வாழ்ந்து நான்கு தலைமுறைகளில் தம் மொழியை இழந்தனர். இன்று மொரிசிய சில் வாழும் தமிழர்களில் தமிழ் மொழியைப் பேசவும் படிக்கவும் தெரிந்தவர்கள் மிகச் சிலரே, வீட்டிலும் புறச் சூழ்நிலைகளிலும் கிரியோல் மொழியைப் பயன் படுத்துகின்றனர். தாய்மொழி போல இவர்களிடையே இன்று வழங்குவது கிரியோல் தான்.

மொழிச் சூழமைவு மொரிசியஸ் மொழிச் சூழமைவு குறித்து விரிவாகப் பார்ப்பதற்கு முன் 1972 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட மக்கள் தொகைக்கணக் கெடுப்புகளின் மொழி பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். இவ்விரு கணக்கெடுப்பு களின் நோக்கம் சமயம் வாரியாக மொரீசியர்களின் மொத்த மக்கள் தொகையை வகைப்படுத்துவ தாகும். எனவே, இம்மக்கள் தொகைக் கணக் கெடுப்புகளில் மொழிபற்றிய கேள்வி கள் மூதாதையர்களின் மொழியைத் தெரிந்து கொள்வதின் மூலமாகவும் அன்றாடம் பேசிவரும் மொழி எது என்பதைத் தெரிந்து கொள்வதின் மூலமாகவும் மொரீசியர்கள் மொழி வழி எந்த சமயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை இனங்காணும் வகையில் அமைந்திருந்தன.

1983 மக்கள் தொகைக்கணக் கெடுப்பின்படி மொரீசியசின் மொத்த மக்கள் தொகை 966, 863 ஆகும். இம்மக்கள் தொகையினர் மொத்தம் 63 மொழிகளைத தம் மூதாதையர் மொழி களெனக் குறிப்புதந்துள்ளனர். இவற்றுள் 33 மொழிகளின் பெயர்கள் கொடுக்கப் பட்டுள்ளன. 30 மொழிகள் பிற மொழி கள் (other languages) என்பதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன. இம் முப்பது மொழிகளையும் மூதாதையர் மொழி எனக் குறிப்பு தந்துள்ளவர்கள் மொத்தம் 164 பேர் மட்டுமே. 33 மூதாதையர் மொழிகள் கீழ் வருமாறு:

1. அரேபியம் (Arabic)
2. பம்பரா (Bambara)
3. வங்காளம (Bengali)
4. பச்சா (Bhacha)
5. போஜ்புரி (Bhojpuri)
6. கண்டோனிஸ் (Cantonese)
7. சீனம் (Chinese)
8. காக்னி (Cockney)
9. கிரியோல் (Creole)
10. ரீயூனியன் கிரியோல்
11. டச்சு (Dutch)
12. ஆங்கிலம் (English)
13. பிரஞ்சு (French)
14. செருமன் (German)
15. குஜராத்தி (Gujarti)
16. ஹக்கா (Hakka)
17. இந்தி (Hindi)
18. இத்தாலியன் (Italian)
19. குச்சே (Kutchee)
20. மல்காசெ (Malgache)
21. மாண்டரின் (Mandarin)
22 மராத்தி (Marathi)
23. முஸ்லீம் (Muslim)
24. போலிஷ் (Polish)
25. பஞ்சாபி (Punjabi)
26. உருசியன் (Russian)
27. சமஸ்கிருதம் (Sanskrit)
28. சிந்தி (Sindhi)
29. ஸ்லாவ் (Slav)
30 ஸ்பானிஷ் (Spanish)
31. தமிழ் (Tamil)
32 தெலுங்கு (Telugu)
33. உருது (Urdu)

இம்முப்பத்து மூன்று மொழிகளுள் இருபத்திரண்டு மொழிகள் மட்டுமே இன்று பேசப்பட்டு வருகின்றன. பம்பரா, வங்காளம், காக்னி, ரீயூனியன்

கிரியோல், டச்சு, குச்சே, மலகாசெ, முஸ்லீம், சமஸ்கிருதம், ஸ்லாவ், ஸ்பானிஷ் என்ற பதினொரு மொழிகள் இன்று பேசப்படவில்லை, இம்மொழிகளை மூதாதையர் மொழிகள் என 752 பேர் குறிப்பிட்டுள்ளனர். 1972 மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் இம் மொழிகள் குறிப்பிடப்படவில்லை. இவற்றுள் பெரும்பாலானவை 'பிற 'மொழிகள்' என்பதன் கீழ் அடங்கியிருக்க வேண்டும். மேலும் 1972 கணக்கெடுப்பின் போது சீனம், கிரியோல், ஆங்கிலம், பிரஞ்சு, குஜராத்தி இந்தி, மராத்தி, தமிழ், தெலுங்கு, உருது என்ற பத்து மொழிகள் மட்டுமே பேசப்பட்டு வந்தன. இவற்றைத் தவிர அதிகமாக 12 மொழிகள் இன்று பேசப்பட்டு வருவதாக 1983 கணக்கெடுப்பு அறிக்கை தெரிவிக்கிறது.

இம்மொழிகளுள் 1972 மக்கள் தொகைக்கணக்கெடுப்பின்போது குறிப்பிடப்பட்ட சீனம், கிரியோல், ஆங்கிலம், பிரஞ்சு, குஜராத்தி, இந்தி மராத்தி, தமிழ், தெலுங்கு, உருது ஆகிய 10 மொழிகளும் 1983 கணக்கெடுப்பிலும் மூதாதையர் மொழிகள் என்றும் அப்போது எல்லோராலும் பேசப்பட்டு வந்த மொழிகள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்விருகணக்கெடுப்புப் புள்ளிவிவரங்களை மூதாதையர் மொழி என்ற நிலையில் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மொரீசியஸ் மொழிச்சூழமைவு பற்றிய சில புதிய கருத்துக்கள் நமக்குக் கிடைக்கின்றன. எடுத்துக் காட்டாக, சீனம் முதலாக உருது முடிய பத்து மொழிகளை 'மூதாதையர் மொழி' என்று இருகணக்கெடுப்புகளின் போதும் குறிப்பிட்ட மக்கள் தொகையை மொழிவாரியாகப் பார்த்தால் இம்மொழிகளைப் பேசிவந்த மொரீசியர்களிடையே மொழியைப் பற்றிய மனோநிலையில் சில மாற்றங்கள் ஏற்பட்டு வந்திருப்பதை அறிய முடியும். கீழே கொடுக்கப் பட்டுள்ளஅட்டவணையைப்பார்க்கவும்.

	மொழி	மூதாதையர் மொழி 1972	1983
1.	சீனம்	20,608	15,819
2.	கிரியோல்	272,075	280,377
3.	ஆங்கிலம்	2,402	1,903
4.	பிரஞ்சு	36,729	32,627
5	குஜராத்தி	2,028	1,707
6.	இந்தி	320,881	208,450
7.	மராத்தி	16,553	20,412
8.	தமிழ்	56,757	66,154
9.	தெலுங்கு	24,233	25,619
10.	உருது	71,668	53,347

இம்மொழிகளுள் சீனம், ஆங்கிலம், பிரஞ்சு, குஜராத்தி, இந்தி, உருது ஆகிய மொழிகளை மூதாதையர் மொழி என 1983 கணக்கெடுப்பில் குறிப்பிட்ட மக்கள் எண்ணிக்கை 1972 கணக்கெடுப்பின்போது குறிப்பிட்ட மக்கள் எண்ணிக்கையை விட குறைவாக உள்ளது.

மொழி	மூதாதையர் மொழி	
	1972	1983
1. சீனம்	20,608	15,819
2. ஆங்கிலம்	2,402	1,903
3. பிரஞ்சு	36,729	332,627
4. குஜராத்தி	2,028	1,707
5. இந்தி	320,881	208,450
6. உருது	71,668	53,347

மாறாக, கிரியோல், மராத்தி, தமிழ், தெலுங்கு ஆகிய நான்கு மொழிகளைப் பொறுத்தவரையில் இவற்றை மூதாதையர் மொழி எனக் குறிப்பிட்ட மக்கள் எண்ணிக்கை 1972 மக்கள் தொகை கணக்கெடுப்பைவிட 1983 மக்கள் தொகை கணக்கெடுப்பில் குறிப்பிடத் தக்க அளவு அதிகரித்துள்ளது.

மொழி	மூதாதையர் மொழி	
	1972	1983
1. கிரியோல்	272,075	280,377
2. மராத்தி	16,553	20,412
3. தமிழ்	56,757	66,154
4. தெலுங்கு	24,233	25,619

இவ்வட்டவணையின் மூலம் கிரியோல் மொழியின் வளர்ச்சியைக் காணமுடிகிறது. இவ்வளர்ச்சி மொரீசியஸ் மொழிச் சூழலைப் பொறுத்த வரையில் நியாயமானதும் எதிர்பார்க்கக் கூடியதுமாகும். ஆனால், இவ்வளர்ச்சி யின் ஊடேயும் மராத்தி, தமிழ், தெலுங்கு ஆகிய மொழியினர் தத்தம் தாய் மொழியைப் பெரும்பாலும் பேசாத நிலையிலும் கூடப் பேணிப் பாதுகாத்து வந்துள்ளதைப் பார்க்க முடிகிறது. 1968 - ஆம் ஆண்டு விடுதலைக்குப் பின்னர் அரசு ரீதியாக இந்திய மொழிகளுக்குக் கொடுக்கப் பட்ட உரிமையும், முக்கியத்துவமும் இவ்வுயர்வுக்குக் காரணமாகும். மேலும் தம் மொழிகள் வழக்கழிந்து தத்தம் மொழியினக் குறியீடு அழிந்து வந்ததை இந்தியர் உணர்ந்ததும் மற்றொரு காரணமாகும்.

இன்று, அரசு நிலையில் மொழி பெரும்பான்மையோருக்குக் கிடைக் கின்ற வாய்ப்புகளும் வசதிகளும் தமக்கும் கிடைக்க வேண்டும் என ஒவ் வொரு மொழியினரும் விரும்புகின்றனர். சமூக நிலையில் பிற மொழியினர்க்கு இணையான அந்தஸ்தை எதிர்பார்க் கின்றனர். மட்டுமின்றி, கல்வி நிலையில் பிறமொழியினர்க்குச் சமமான வாய்ப்பு கள் தமக்கும் நல்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். இவை மொழி களை இழந்த நிலையில் சாத்தியமன்று என்பதைக் குறிப்பாக விடுதலைக்குப் பின்னர் இம்மொழியினர் உணர்ந்தது ஒன்றே இவ்வெண்ணிக்கை உயர்வுக்கு முக்கியக் காரணமாகும். இந்நிலை வேறு சில மொழிகளுக்கும் பொருந்தும். மொத்தமாகப் பார்க்கும்பொழுது விடு தலைக்குப் பின்னர் பல்வேறு மொழிப் பிரிவினரிடையே தத்தம் மொழி பற்றிய உணர்வு மேலோங்கியுள்ளது எனத் தெரிகிறது. இக்காலக்கட்டத்தில் ஓரளவுக்குப் பொருளாதார நிலையில் மேம்பாடு அடைந்ததும், இந்தியாவோடு தொடர்புவைத்துக் கொள்ள இயன்ற தும் மொழி உணர்வு வளர்வதற்குக் காரணமாக இருந்தன. எல்லாவற்றுக் கும் மேலாக இன்று தம் இனம், மொழி

என்ற பற்று எல்லா மொரீசியர்களிடையேயும் வளர்ந்து வருவதைப் பார்க்கிறோம். இம்மொழி மற்றும் பண்பாட்டு வளர்ச்சியில் மொரீசியஸ் நாட்டின் ஒற்றுமை பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பது அந்நாட்டின் தனித்தன்மை என்றால் மிகையாகாது. ஒவ்வொரு தனிமனிதனும் தன் மொழிக்கும் பண்பாட்டுக்கும் மேலாகத் தான் ஒரு மொரீசியன் என்று நினைக்கின்ற தனி உணர்வே இதற்கு காரணமாகும். இது மொரீசியஸ் மக்களின் பலமென்றே கூறவேண்டும்.

இன்று மொரீசியசில் வழங்கும் மொழிகளுள் பெரும்பாலோரின் மூதாதையர் மொழியாகவும் அன்றாட கருத்துப் பரிமாற்றத்துக்கென பயன்படுத்தப்படும் மொழியாகவும் கிரியோல் விளங்குகிறது. மொத்த மக்கள் தொகையில் 521,950 பேரால் இம்மொழி பேசப்படுகிறது. இவர்களைத் தவிர பிற மொழியினரும் கிரியோலைப் பேசுகின்றனர். இன்று இனம் மாறினும் சமயங்களுக்கு அப்பால் எல்லோரின் பொது மொழியாக இம்மொழி விளங்குகிறது என்றால் அது மிகையன்று. எனவே, மொரீசியசின் சிறப்புநிலை மொழி (major language)களுள் ஒன்றாகக் கிரியோலைக் கருதலாம். இரண்டாவது சிறப்புநிலை மொழியாக ஆங்கிலத்தைக் கூறலாம். பெர்கூசனின் கருத்துப்படி ஒரு மொழியைப் பேசுவோர் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தும் அம்மொழி ஒரு நாட்டின் ஆட்சிமொழியாக இருக்குமேயானால் அம்மொழியையும் சிறப்புநிலை மொழிகளில் ஒன்றாகக் கருதலாம். எய்ரே நாட்டில் ஐரீஷ் மொழியைப் பேசுகின்றவர்கள் அந்நாட்டு மக்கள் தொகையில் 3 விழுக்காட்டினரே. இருந்தும் இம்மொழியே அங்கு ஆட்சி மொழியாக உள்ளது. இதைப்போலவே 2,028 பேரால் மட்டுமே பேசப்பட்டு வருகின்ற ஆங்கில மொழி மொரீசியசில் ஆட்சிமொழியாக உள்ளது. தவிரவும், கல்வியமைப்பில் பயிற்று மொழியாகவும் இருந்து வருகிறது. எத்தியோப்பியாவிலும் இந்தியாவிலும் ஆங்கிலம் பயிற்று மொழியாக இருந்து வரும் நிலை இத்துடன் ஒத்து நோக்கத் தக்கது. எனவே, ஆங்கிலத்தையும் மொரீசியசின் சிறப்பு நிலை மொழியாகக் கருதலாம்.

இம்மொழிகளுக்கு அடுத்தபடியாக இளநிலை மொழிகளாக வழங்குபவை போஜ்புரி (197, 050) யும் இந்தி மொழி (111, 134)யும் ஆகும். மொரீசியஸ் மொத்த மக்கள் தொகையில் 5 விழுக்காட்டுக்குக் கூடுதலான மக்கள் இம்மொழியைப் பேசுகின்றனர். இவ்விரு மொழிகளுக்கும் அடுத்தபடியாக பெரும்பாலான மக்களால் பேசப்பட்டு வரும் மொழி பிரஞ்சும் தமிழும் ஆகும். இம்மொழிகளை முறையே 36,048 பேரும், 35,646 பேரும் பேசுவதாக 1983 மக்கள் கணக்கெடுப்பு கூறுகிறது. இவை இளநிலை மொழிகள் என்ற தகுதி பெறாவிட்டாலும் கிரியோல், ஆங்கிலம், போஜ்புரி, இந்தி ஆகிய மொழிகளுக்கு அடுத்தாற்போல பெரும்பாலான மக்களால் பேசப்பட்டு வரும் மொழிகளாகும்.

பிரஞ்சு, தமிழ் ஆகிய இருமொழிகளுள் பிரஞ்சு சிறப்புத் தகுதி பெற்ற மொழியாக (Language of special status) விளங்குகிறது. இன்று கூட நீதிமன்றங்

களில் ஆங்கிலமே வழங்கினாலும் பிரஞ்சு மொழியும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மட்டுமின்றி ஆரம்பப் பள்ளி நிலையிலிருந்தே ஆங்கிலத்திற்கு இணையாக இம்மொழி கற்பிக்கப்பட்டு வருகிறது. மொரீசியர்களிடையே உயர்ந்த பண்பாட்டு மொழியாகவும் இம்மொழி கருதப்படுகிறது. ஓரளவுக்கு ஒரு சிறப்பு நிலை மொழியைப் போலவே இம்மொழி மொரீசியசில் பயன்படுத்தப்பட்டு வருகிறது எனலாம். தைவான் நாட்டில் வாழும் சப்பானியர்களுள் 35 - 55 வயதுக்கு இடைப்பட்டவர்கள் சப்பானிய மொழியில் கல்வியறிவு பெற்று இன்றும் பல்வேறு துறைகளில் சப்பானிய மொழியைப் பயன்படுத்தி வருகின்றனர். இதைப்போலவே ஆங்கிலேயர் ஆட்சியிலும் பிரஞ்சு மொழியில் கல்வியறிவு பெற்றவர்களுள் பலர் இன்றும் பல்வேறு துறைகளில் பிரஞ்சு மொழியைப் பயன்படுத்தி வருவது குறிப்பிடத் தக்கது. மேலும், செய்திப் பரவல் தொடர்பு மொழியாக ஆங்லத்தை விட பிரஞ்சு மொழியே இன்று ஆதிக்கம் செலுத்தி வருகிறது எனலாம். நாளேடுகளிலும் வானொலியிலும் பிரஞ்சுமொழி தனி இடம் வகித்து வருகிறது.

மொழிக்கொள்கை பல மொழிகளைப் பேசும் பல்வேறு இன மக்களைக் கொண்ட நாடு மொரீசியஸ். மனித இனம் மற்றும் மொழிகளின் காட்சிச் சாலையாக இத்தீவு விளங்குகிறது என்றால் மிகையன்று. ஏறக்குறைய அறுபது மொழிகள் வழங்கும் மொரீசியஸ் சூழமைவில் மொழிபற்றிய மோதல்களும் பிரச்சினைகளும் தவிர்க்க முடியாதவை. பல மொழிகள் வழங்கும் ஒரு நாடு இம்மோதல்களுக்கும் பிரச்சினைகளுக்கும் விதிவிலக்காக நிற்க இயலாது. மொழிபற்றிய மோதல்களையும் பிரச்சினைகளையும் ஓர் எல்லைக்குள் உட்படுத்திச் சுமுகமான வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ள மொழிக் கொள்கைகள் வரையறுக்கப்படுகின்றன.

பல்வேறு மொழிகள் பேசப்பட்டு வரும் ஒரு நாட்டில் மொழிப் பிரச்சினைகள் பொதுவாக நாடாளுமன்றத்திலும் அரசு அலுவலகங்களிலும், பள்ளிகளிலும், நீதிமன்றங்களிலும் உருவாகின்றன. மொழி, இன வேறுபாடுகளுக்கு அப்பால் ஒவ்வொரு தனி மனிதனும தன் எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ளத் துடிக்கும் களன்கள் இவைதாம். இங்கு ஒவ்வொரு மனிதனும் அவன் மொழியும் மதிக்கப்பட வேண்டும். இது மொழிக் கொள்கையின் அடிப்படை தத்துவம்.

மொரீசியஸ் மொழிச் சூழமைவில் நாடாளுமன்றத்தைப் பொறுத்தவரையில் ஆங்கிலமும் பிரஞ்சு மொழியும் அரசியல் அமைப்புச் சட்டம் அங்கீகரித்த மொழிகளாகும். இருந்தாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களுள் கிட்டத்தட்ட 95 விழுக்காட்டினர் தம் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ள ஆங்கிலத்தையே பயன்படுத்துகின்றனர். இன்று மொரீசியஸ் அரசியலில் ஏற்பட்டு இருக்கின்ற மாற்றங்கள் பெரும்பாலான மொரீசியர்களால் பேசப்பட்டு வரும் கிரியோலையும் ஆங்கில மொழிக்கு இணையாக நாடாளுமன்றத்தில் பயன்படுத்த வற்புறுத்துகின்றன. ஆனால், கிரியோல் மொழி நாடாளுமன்ற மொழிகளுள் ஒன்றாக அங்கீகாரம் பெற போஜ்புரி தடையாக இருப்பதோடு

இவ்விரு மொழிகளின் அறிமுகத்தால் விளையவிருக்கும் பலத்த மொழிப் பிரச்சினைகளுக்கு அஞ்சி நாடாளுமன்ற பயன்பாட்டிலிருந்து இவை விலக்கி வைக்கப்பட்டுள்ளன.

அரசு அலுவலகங்களில் ஆட்சி மொழியாக ஆங்கிலம் பயன்படுத்தப் பட்டு வருகிறது. எல்லாக் கடிதப் போக்குவரத்துகளும் ஆங்கிலத்திலேயே நடந்து வருகின்றன. பிரஞ்சுக்காரர் களின் காலத்தில் பிரஞ்சு மொழி ஆட்சி மொழியாக இருந்ததால் ஆங்கிலேயர் ஆட்சியின் தொடக்கக் காலத்திலும் பிரஞ்சு மொழி ஆட்சிமொழியாக சில காலம் தொடர்ந்திருந்தது. பாரீஸ் உடன்படிக்கையின்படி மொரீசியஸ் தீவில் பிரஞ்சு மொழியையும் பண் பாட்டையும் அப்படியே காப்பது என்று கொடுத்திருந்த வாக்குறுதியை ஆங்கிலேயர்கள் காப்பாற்றக் கடன் பட்டு இருந்ததால் ஆங்கிலத்தை உடனடி யாக எல்லா நிலைகளிலும் ஆட்சி மொழியாகத் திணிப்பதில் பல சிரமங்கள் இருந்தன.

1839-இல் ஆங்கில அரசு, அரசுப் பணிகளுக்கென அதிகாரிகளை நியமிக்க முற்பட்டது. மொரீசியசை ஆங்கில மயமாக்கப் பல்வேறு வழிகளில் முனைந்து செயற்பட்டு வந்த அரசு இத்தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டது. அரசுப் பணிகளில் அமர ஆங்கில மொழியறிவின் தேவையை வற்புறுத்தியது. முதன் முதலாக ஆங்கில மொழியறிவின் தேவை கட்டாயப் படுத்தப்பட்டது இக்காலக் கட்டத்தில் தான். பிரஞ்சு மொழியை மிக வெளிப் படையாக நீக்குவதற்கு உடன்படிக்கை இடம் தராத நிலையிலும் ஆங்கில மொழியறிவின் தேவையை அரசாணை மூலம் கட்டாயப்படுத்த இயலாத நிலையிலும் மிகச் சாமர்த்தியமாக ஆங்கில அரசு நடந்து கொண்டது.

ஆங்கில அரசு இம்முயற்சியில் வெற்றி பெற்றதென்றே கூறலாம். இவ்வுத்தி பொருளாதார நிலையில் பின் தங்கிய இந்திய மக்களை மிகவும் கவர்ந்தது. இந்தியப் பெற்றோர்கள் தம் குழந்தைகளின் வளமான எதிர் காலம் கருதி ஆங்கில மொழியைக் கற்கத் தூண்டினர். இம்முயற்சியில் தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவம் வெகுவாகக் குறைய ஆரம்பித்தது. குறிப்பாகத் தமிழர்களிடையே கிரியோல் அன்றாடப் பேச்சுமொழியாக மாறி வந்து கொண்டிருந்த இக்காலக் கட்டத்தில் ஆங்கிலத்தின் மீது ஏற்பட்ட மோகமும் சமூக நிலையில் உயர்ந்த அந்தஸ்து பெறவேண்டுமென்ற வேகமும் சேர தமிழ் மிக விரைவாக மறக்கப்பட்டு வந்தது. தமிழர்களின் தமிழ் மொழி இழப்பிற்கு இதுவும் ஓர் காரணமாக அமைந்தது.

இன்று அரசு அலுவலகங்களைப் பொறுத்தவரையில் ஆட்சி மொழிக் கொள்கையில் சில மாற்றங்களை ஒரு சாரார் விரும்புகின்றனர். ஆங்கிலம் மற்றும் பிரஞ்சு மொழிகளுடன் கிரியோலும் போஜ்புரியும் ஆட்சி மொழிகளாக இருக்க வேண்டும் என்று சிலர் கருதுகின்றனர். நடை முறையிலுள்ள பல சிக்கல்களைக் கருத்திற்கொண்டு இக்கருத்து அதிகமாக இன்று வற்புறுத்தப்படவில்லை.

மொரீசியஸ் நீதிமன்றங்களிலும் ஆங்கிலமே அங்கீகாரம் பெற்ற மொழி

யாக இருந்து வருகிறது. என்றாலும், பிரஞ்சு மொழிக்கும் இச்செல்வாக்கு உண்டு. பிரஞ்சுக்காரர்களின் காலத்தில் நீதிமன்ற மொழியாகப் பிரஞ்சு மொழி இருந்தது. அப்போது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நெப்போலியன் சட்ட விதிமுறைகள் ஆங்கிலேயர் காலத்திலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்ததால் பிரஞ்சு மொழி நீதிமன்றத்தால் மதிக்கப்பட்டது. யாரேனும் நீதிமன்றத்தில் தம் வழக்கையோ சாட்சியத்தையோ பிரஞ்சுமொழியில் எடுத்துரைத்தால் அம்மொழி வாதிப் பிரதிவாதிகளுக்கும் நீதிபதிக்கும் தெரிந்த மொழியாக ஏற்றுக் கொள்ளப் பட்டு வழக்கு அம்மொழியிலேயே நடைபெற அனுமதிக்கப்பட்டது. இச்சலுகை எல்லா மொழிகளுக்கும் வழங்கப்பட்டது. ஆனால், பிரஞ்சு மொழியைத் தவிர பிற மொழிகளுக்கு மொழிபெயர்ப்பு வற்புறுத்தப்பட்டது.

நீதிமன்றங்களின் சட்டம் (The Court's Ordinance) 14-ஆம் பிரிவு உச்ச நீதிமன்றத்தில் ஆங்கிலம் மட்டுமே அலுவல் மொழியாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. ஆனால் ஆங்கிலம் தெரியாத ஒருவர் உச்ச நீதிமன்றத்தில் ஆஜராக நேர்ந்தால் அவர் தன் வழக்கையோ சாட்சியத்தையோ அவருக்குத் தெரிந்த மொழியிலேயே கூறலாம். தனக்கு ஆங்கிலத்தில் போதிய திறனில்லை என்பதை நீதிமன்றத்தினரைத் திருப்திபடுத்திய பின்னரே அவருக்கு இவ்வனுமதி வழங்கப்பட வேண்டும் என்று இச்சட்டப் பிரிவு கூறுகிறது. இவ்வாறு நீதிமன்றம் ஏற்றுக் கொண்ட மொழிகளுள் தமிழும் ஒன்றாகும். சீனம், இந்தி, குஜராத்தி, தெலுங்கு ஆகியவை பிற மொழிகள். இச்சட்டத்தின் 31-ஆம் பிரிவு மொழி பெயர்ப்பின் பொருட்டுச் சீனம், இந்தி, இந்துஸ்தானி, குஜராத்தி, தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் போதிய அளவு திறனுள்ள மொழிபெயர்ப்பாளர்களைத் தேவை கருதி நியமித்துக் கொள்ள கவர்னருக்கு அனுமதி அளிக்கிறது. வெள்ளிவேல் அண்ணாசாமி என்ற தமிழர் ஆங்கிலேயர் காலத்தில் இத்தகைய மொழிபெயர்ப்பாளராக இருந்தார்.

மொரீசியஸ் கல்வியமைப்பைப் பொறுத்தவரையில் மொழிக்கொள்கை அவ்வளவு சிறப்பாக அமையவில்லை என்றே கூறவேண்டும். பள்ளிக் கல்வியில் குழந்தைகள் தம் சூழ்நிலைகளில் கற்றுத்தேர்ந்த எந்த மொழியும் பயிற்று மொழியாகவோ பாடமொழியாகவோ இல்லை என்பது குறிப்பிடத் தக்கது. எடுத்துக்காட்டாகத் தமிழ்ச் சூழலில் வளரும் ஒரு குழந்தையின் தாய்மொழியான தமிழோ, புறச்சூழலில் கற்கும் மொழியான கிரியோலோ, போஜ்புரியோ பள்ளிக் கல்வித் திட்டத்தில் இடம் பெறுவதில்லை. அன்றியும், மொரீசியசில் பெரும்பாலான மக்களால் பேசப்பட்டு வருகின்ற இந்தி மொழியோ தெலுங்கு மொழியோ மராத்தியோ ஆரம்பப் பள்ளிகளில் பயிற்று மொழிகளாக இல்லை. பயிற்று மொழியாகவும் பாட மொழியாகவும் அன்னிய மொழிகள் ஆரம்ப நிலையில் இடம் பெறுகின்றன. அதாவது ஆரம்பப் பள்ளி நிலையில் ஆங்கிலமும் பிரஞ்சும் கட்டாய மொழிகளாகும். ஆங்கிலேய ஆட்சியின் தொடக்கக் காலத்தில் இவ்விருமொழிகளும் பயிற்று மொழிகளாக இருந்தன. கத்தோலிக்கக் கிறித்தவப் பள்ளிகளில்

பிரஞ்சு மொழியும் பிராட்டஸ்டண்ட் பள்ளிகளில் ஆங்கிலமும் சில காலம் பயிற்று மொழிகளாக இருந்தன. இந் நிலையில் பயிற்று மொழியாகப் பிரஞ்சு மொழி இருக்க வேண்டுமா அல்லது ஆங்கிலம் இருக்க வேண்டுமா என்ற பிரச்சினை எழுந்ததும் அப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டும் என்று ஆங்கில அரசு உணர்ந்தும் பெரும்பாலான இந்தியர்கள் கல்வி நிறுவனங்களில் புகுந்த பின்னரே எனலாம். இன்று பயிற்றுமொழியாக மேல்வகுப்புகளில் ஆங்கிலம் உள்ளது.

மொரீசியஸ் கல்வி மொழிக்கொள்கை குழந்தைக்கு எதிராக உள்ளது என்று ஒவ்வொரு பெற்றோரும் கருதுகின்றனர். தாய்மொழிக் கல்வி பள்ளிக் கல்வியில் எங்குமே இடம் பெறாதது வருந்தத் தக்கதாகும். குழந்தையின அன்னிய மொழியான பிரஞ்சுமொழி ஆரம்ப நிலையிலிருந்தே கட்டாயப்படுத்தப்படுகிறது என்று சிலர் கருதுகின்றனர். குறிப்பாக விடுதலைக்குப் பின்னர் தாய் மொழியிலேயே கல்வி நடைபெற வேண்டுமென்ற உணர்வு பொதுவாக எல்லா மொரீசியர்களிடையேயும் காணப்படுகிறது. அதே நேரத்தில் பிரஞ்சு மொழி பயிற்று மொழியாக இருத்தல்வேண்டும் என்று கருதுபவரும், ஆங்கிலம் மட்டும் பயிற்று மொழியாக இருந்தால் போதுமானது என்று எண்ணுபவரும் உள்ளனர். மொரீசியஸ் வரலாற்றோடும் பண்பாட்டோடும் பின்னிப் பிணைந்து வளர்ந்து வந்த மொழி பிரஞ்சு மொழி மட்டுமன்றி, பிரஞ்சு மொழிக்கும் இன்று பெரும்பாலான மொரீசியர்களால் பேசப்பட்டு வரும் கிரியோலுக்கும் மிகுந்த ஒற்றுமை உள்ளது. எனவே, கிரியோல் மூலமாகப் பிரஞ்சு மொழியைப் புரிந்து கொள்வது மிக எளிதாக உள்ளது. ஆங்கில மொழி பயிற்று மொழியாக இருக்குமானால் புதியதொருமொழியைப் படிக்கின்ற எல்லாச் சிரமங்களும் நேரிடும். ஆகவே, பிரஞ்சு மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று சிலர் நினைக்கின்றனர்.

ஆரம்ப நிலையில் தாய்மொழி பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று வாதிடுபவர்கள் ஆங்கிலமும் பிரஞ்சும் காலனித்துவ ஏகாதிபத்தியங்களின் மொழிகள் என அவற்றை மறுக்கின்றனர். அத்துடன், ஓர் அன்னிய மொழியைப் பயிற்று மொழியாகக் கற்பதில் ஒரு மொரீசியன் குழந்தையின் உளப்பாங்கிலான பிரச்சினைகளையும் இவர்கள் முன் வைக்கின்றனர். மொரீசியசில் எல்லோராலும் பேசப்பட்டு வரும் கிரியோலும் பிற கீழை மொழிகளும் பயிற்றுமொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று இவர்கள் கருதுகின்றனர். ஆனால் எந்த நிலையிலும் கிரியோல் பயிற்றுமொழியாதல் கூடாது என்பதில் பல கல்வியாளர்கள் கவனமாக இருக்கின்றனர். பள்ளிக் கல்வியில் கிரியோல் பயிற்று மொழி ஆகுமானால் முக்கியமான பண்பாட்டு மொழிகளாகக் கருதப்படுகின்ற பிரஞ்சும் ஆங்கிலமும் தொடக்கநிலையிலேயே குழந்தைகளுக்கு அறிமுகமாகும் வாய்ப்பு தடைப்படும் என்று அஞ்சுகின்றனர். மேலும், பெரும்பாலான மொரீசியஸ் இல்லங்களில் ஆங்கிலம் அல்லது பிரஞ்சுப் பண்பாடே பெரிதும் போற்றப்பட்டு வருகிறது. கிரியோல் உயர்ந்த பண்பாட்டை வளர்க்

காது. எனவே, அம்மொழி பள்ளிக் கல்வியில் பயிற்றுமொழியாகப் பயன் படுத்தப்படுமானால் உயர்ந்த ஒரு பண் பாட்டுப் பாரம்பரியத்திலிருந்து மொரீசியஸ் மக்களைக் குழந்தைப் பருவத்திலிருந்தே விலக்கியவர்களா வோம். இப்பண்பாட்டுக் குறைபாடு ஆழமான படிப்பறிவைப் பெறும் ஆர்வத்தைக் குறைத்து விடும் என்று நினைக்கின்றனர்.

தவிரவும், தாய்மொழி மூலமாகக் கல்வி புகட்டுவது சிறந்தது என்பது எல்லோரும் ஏற்றுக்கொண்ட உண்மை. ஆனால் மொரீசியசைப் பொறுத்த வரையில் தாய்மொழிகள் பேச்சளவில் நிறைவு பெற்றுவிட்டன. பல மொழி யினர் தம் தாய் மொழியை இழந்து விட்டனர் என்றாலும் தகும். தமிழைப் பொறுத்தவரையில் இம்மொழியைப் பேசுவோர் மிகச் சிலரே. இவர் களிடையே தாய்மொழிக் கல்வி குறித்த உளப்பாங்கு தாய்மொழி பயிற்று மொழியாகும் நிலைக்குச் சாதகமாக இல்லை. தாய்மொழி மூலம் கல்வி கற்பது பின்னோக்கான வளர்ச்சி என்று பல மொழியினர் கருதுகின்றனர். படித்தவர் களிடையே ஆங்கிலமும் பிரஞ்சும் தெரிந் திருக்கின்ற இருமொழி நிலை உயர்வாகக் கருதப்படுகிறது. இதன் பொருள் தாய் மொழிக் கல்வி புறக்கணிக்கப்பட வேண்டும் என்ற கருத்து உடையவராக இன்றைய மொரீசியர்கள் உள்ளனர் என்பதன்று.

இன்றைய மொரீசியஸ் கல்வியாளர் களும் மொழியியலாளர்களும் பள்ளிக் கல்வியில் ஆங்கிலம் மற்றும் பிரஞ்சு மொழிகளோடு போஜ்புரி, இந்தி தமிழ், தெலுங்கு, மராத்தி, குஜராத்தி போன்ற சிறுபான்மைமொழிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளனர். காலனி ஆதிக்கம் தொடங்கி விடுதலை பெற்று பல ஆண்டுகளாகியும் முறையான- மொரீசியஸ் நாட்டு வளர்ச்சிக்கும் மக்களுக்கும் பொருத்தமானஒருமொழிக் கொள்கை தேசிய அளவில் உருவாக வில்லை என்பது இவர்களது கருத்து.

மொரீசியஸ் மக்கள் சமுதாயத்தில் சிறுபான்மை மொழிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்த கவர்னர் ஹிக்கின்சன் அம்மொழிகளைப் பயிற்றுவிக்கப் பள்ளி களைத் திறநதார். போர்ட் லூயியில் தமிழ் மொழியைக் கற்பிப்பதற்கென ஒருபள்ளி திறக்கப்பட்டது. ஆரம்பத்தில் இப்பள்ளிகள் சிறப்பாக நடந்து வந்தா லும் பின்னர் இந்தியர்கள் மொரீசியஸ் தேசிய ஒருமைப்பாட்டில் இணைவதற்கு இம்மொழிப்பள்ளிகள் தடையாக இருந்ததாகக்கருதப்பட்டு மூடப்பட்டன. மொழிகள் எதற்கும் பயிற்று மொழி தகுதி வழங்கப்படவில்லை. இத் தகுதியைப் பெறுவதற்கு எந்த மொழி யினரும் தீவிரமாகப் போராடவில்லை என்று கூறலாம். ஆனால் 1941ஆம் ஆண்டு மொரீசியஸ் கல்வித் துறை இந்திய மொழிகளான இந்தி, உருது, தமிழ் முதலான மொழிகளின் வளர்ச்சிக்காக ரூ.15000/- ஒதுக்கீடு செய்தபோது இம்மொழிகளும் கல்வி யமைப்பில் இணைக்கப்பட்டுக் கற்பிக்கப்பட வேண்டும் என்ற போராட்டம் எழுந்தது. ஆனால், ஆங்கில அரசு இப்போராட்டங்களைப் பொருட்படுத்தவில்லை. மொரீசியஸ் கல்வியமைப்பில் எந்த இந்திய மொழி யும் இடம்பெறவில்லை. இது இந்திய மக்களிடையே ஆங்கிலேயர் மீது வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்தியது.

ஐரோப்பிய மொழிகளுக்கு இணையாக இந்திய மொழிகளும் இணையான அந்துஸ்து பெற வேண்டும் என்று பல இந்தியத் தலைவர்கள் போராட்டம் நடத்தினர். அவர்களுள் இராம்கூலம், பிசுந்தயால் சகோதரர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். இக்காலத்தில் தமிழுக்காகப் போராடியவர்களுள் பெருமாள் சுப்பராயன் நினைவு கூறத் தக்கவர்.

1944இல் கல்வி பற்றிய சிறப்பாணை இயற்றப்பட்டது. இதில் இந்திய மொழிகளுக்குக் கல்வித் திட்டத்தில் இடம் அளிக்கப்பட்து. ஆரம்பப்பள்ளி நிலையிலிருந்தே இந்திய மொழிகளைக் கற்பிக்கவும், பிரஞ்சு மொழிக்குப் பதிலாகக் கிரியோலைக் கீழ்நிலை வகுப்புகளில் பயன்படுத்தவும் அனுமதி வழங்கப்பட்டது. பின்னர் 1957 சிறப்பாணையில் அரசு மற்றும் மானியம் பெறும் பள்ளிகளில் மூன்றாம் வகுப்பு வரை எந்த மொழியையும் பயன்படுத்தலாம் என்ற அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் மூன்றாம் வகுப்புக்குப்பின்னர் ஆங்கிலம் மட்டுமே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று வலிந்து கூறுகிறது இச் சிறப்பாணை. வகுப்பறையில் கிரியோல் மொழியின் பங்கு பற்றிய குறிப்பு எதுவும் கொடுக்கப்படவில்லை. ஆனால் ஆங்கிலம் பயிற்று மொழியாக இருந்தாலும் அநேகமாக எல்லா வகுப்புகளிலுமே ஒன்றை விளக்குவதற்கு ஆசிரியர்கள் கிரியோல், போஜ்புரி மொழிகளைப் பயன்படுத்திவருகின்றனர்.

மேனிலைப் பள்ளி நிலையில் இலத்தின், கிரேக்கம் போன்ற உயர் தனிச்செம் மொழிகள் பெற்றிருந்த இடத்தை இன்று இந்தியமொழிகள், ஆக்கிரமித்து வருகின்றன. ஆறாம் வகுப்பு வரை இம்மொழிகள் கற்பிக்கப் பட்டு வருகின்றன. மேனிலைப் பள்ளிகளில் விருப்பப் பாடங்களாக இருக்கின்றன. ஆனால். பிரஞ்சு மொழிக்கும் பிற அன்னிய மொழிகளுக்கும் இருக்கின்ற உவித்தொகை போன்ற சலுகைகளும் வசதிகளும் இந்திய மொழிகளுக்கு இல்லை. இந்தியர்களின் மொழி உணர்வு ஒன்றே இம்மொழிகள் இன்றுவரைக் கல்வித் திட்டத்தில் நிலைத்து நிற்க உதவுகிறது.

மிகச் சமீபக்காலம் வரை கல்வி மொழிக் கொள்கையில் மாற்றஙகள் கொண்டு வரவேண்டுமென்று மொரீசியஸ் கல்வியாளர்கள் விவாதித்து வருகின்றனர் 1982 ஆம் ஆண்டு மொரீசியஸ் பல்கலைக் கழகம் நடத்திய மொரீசியஸ் மொழிப்பிரச்சினைகள் பற்றிய தேசிய அளவிலான கருத்தரங்கு (National Seminar on the Language Issues in Mauritius) குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, கல்வி மொழிக் கொள்கை பற்றிய விவாதம் இந்திய மும்மொழித் திட்டக் கொள்கையைப் பிரதிபலித்துள்ளது. மொழிக்கொள்கைமட்டுமின்றி பல தேசியப் பொருளாதார மற்றும் அரசியல் போக்குகளில் இந்திய ஆதிக்கம் வெகுவாகவே உள்ளது.

தமிழ்க்கல்வியைப் பொறுத்தவரையில் இராயல் கல்லூரியிலும் மகாத்மா காந்தி நிறுவனத்திலும் தமிழ் கற்பிக்கப் பட்டு வருகிறது, இந்தி உருது ஆகிய இந்தியமொழிகளுக்கு அடுத்தாற்போல் தற்போது 8,701 மாணவர்கள் தமிழைக் கற்றுவருகின்றனர். 219 தமிழாசிரியர்கள் மொரீசியஸ் முழுவதிலும் இம்மொழியை கற்பித்து வருகின்றனர். இராணி எலிசபெத் கல்லூரியில் மேனிலைப்பள்ளி நிலையில்தமிழ் கற்பிக்கப்பட்டுவருகிறது.

பள்ளித் திட்டத்தில் மட்டுமின்றி தமிழில் ஆர்வம் உடையோரை ஊக்கும் விக்கும் வகையில் மாலைப் பள்ளிகளும் நடத்தப்படுகின்றன. இவற்றுள் மகாத்மா காந்தி நிறுவனம் நடத்தி வரும் தமிழ்ச் சான்றிதழ் மற்றும் பட்டய வகுப்புகளில் ஆண்டுக்கு நாற்பது பேர் தமிழ்க் கல்வி பெற்று வருகின்றனர்.

சுமார் 250 ஆண்டுகளுக்கு முன் மொரீசியசில் குடியேறிய தமிழர்கள் குடியேறிய 150 ஆண்டுகளுக்கு உள்ளாகவே தம் மொழியை இழந்து உள்ளனர். நாட்டு விடுதலைக்குப் பின்னரும், அதற்குமுன் 50 ஆண்டுகளில் சமூகஅந்தஸ்தும் பொருளாதாரஉயர்வும் அடைந்த தமிழர்கள் தமிழுக்கு மறு வாழ்வு அளிக்கப் பாடுபட்டனர். விடுதலைக்குப் பின்னர் தமிழ்க் கல்வித் திட்டத்தில் உரிய இடம் பெற்றது பலர் தமிழ் கற்க வாய்ப்பாக அமைந்தது. இருந்தபோதிலும் இந்தியத் தமிழர் களைப் போலத் தமிழில்பேசி உரையாட இயலவில்லையே என்ற ஆதங்கம் இன்னும் பல தமிழர்களிடையே காணப்படுகிறது. கல்விக் கூடங்களில் கற்ற எழுத்துத் தமிழை உரை யாடுவதற்குப் பயன்படுத்துகிற பல மொரீசியஸ் தமிழாசிரியர்கள் பேச்சுத் தமிழைக் கற்க ஆர்வம் காட்டுகின்றனர். பேச்சுத் தமிழில் பேசினால் மட்டுமே தமிழன் என்ற மனநிறைவு ஏற்படுகிறது என்று வெளிப்படையாகக் கூறுபவர் பலர். தமிழில் வழங்கும் எழுத்துத் தமிழ் பேச்சுத் தமிழ் என்ற இரட்டை வழக்கு நிலை சிறப்பான கூறாக மொரீசியஸ் தமிழர்களால் கருதப் படுகிறது. பிரஞ்சு மொழியும் கிரியோல் மொழியும் ஒரு மொழியின் இரட்டை வழக்குகளாக இங்குக் கருதப்படுவதும் அம்மொழிக்கு இணையாக இத்தகுதி தமிழுக்கும் உள்ளது என்ற மொழி உணர்வும் பேச்சுத் தமிழைக் கற்கும் ஆர்வத்தைத் தூண்டியிருக்கலாம். இது மட்டுமின்றி மொரீசியஸ் தமிழர்கள் இன்று தமிழகத்தோடு பெருமளவில் தொடர்புகொண்டுள்ளனர். தமிழ்படிக்க வும் பிற பாடங்கள் படிக்கவும் ஏராள மான மொரீசியர்கள் தமிழகத்துக்கு இன்று வருகின்றனர். இங்குள்ள தமிழர் களோடு சரிசமமான நிலையில் கலந்து உரையாடவும் பேச்சுத் தமிழைச் கற்க விரும்புகின்றனர். இத்தேவையை மனத் திற்கொண்டு மகாத்மாகாந்தி நிறுவனம் பாடநூல்களை எழுதியுள்ளது. மொரீசியஸ் பள்ளிக் கல்வி நிலையில் தமிழைப் பொறுத்தவரையில் இரட்டை வழக்குக் கல்வி முறையைப் (Bidialectal Education) பயன்படுத்தாலம் என்ற சு. இராசாராமின் கருத்தை மொரீசியஸ் தமிழ்க் கல்வியாளர்கள் வரவேற்று உள்ளனர்.

செய்திப் பரவல் தொடர்பு மொழி யாக அரசு நிலையில் ஆங்கிலம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இருந்த போதிலும் பிரஞ்சு மொழியும் இணை மொழியாக எல்லா நிலைகளிலும் பயன் படுத்தப்பட்டு வருகிறது. மொரீசியஸ் வானொலியும் தொலைக்காட்சியும் இவ் விருமொழிகளுக்கு அடுத்தாற்போல் இந்திமொழிக்கு இன்று முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. கிரியோல் மொழி யும் குறிப்பிடும் அளவுக்கு நிகழ்ச்சிகளில் பங்கு பெறுகிறது. செய்திகள் பற்றிய சுருக்கம் கிரியோல் மொழியில் வழங்கப் படுவது குறிப்பிடத்தக்கது. வானொலி யில் நாளொன்றுக்கு 3½ மணிநேரம் இந்திய மொழி நிகழ்ச்சிகள் ஒலிபரப்பா கின்றன. இதில் தினந்தோறும் அரை

மணி நேரம் தமிழ் ஒலிபரப்பு நடைபெறுகிறது. மூன்று வாரங்களுக்கு ஒரு முறை மொரீசியஸ் தமிழ்க் கலைஞர்கள் அல்லது தமிழகக் கலைஞர்களின் அரை மணி நேர நிகழ்ச்சி ஒலி பரப்பாகிறது. பத்திரிகைத் துறையில் மிகச்சில இந்திய மொழிப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. இவற்றுள் தமிழ்ப்பத்திரிகை வரலாறு கிட்டத்தட்ட 125 ஆண்டுக் காலப் பாரம்பரியம் உடையது. ல மொரீசியன் என்ற நாளிதழில் 1861-ஆம் ஆண்டு தமிழ்க் கட்டுரையொன்று வெளியிடப்பட்டது. இக்காலத்தில் பல தமிழ் இதழ்கள் தோன்றி மறைந்தன. 1868 தொடங்கி The Mercantile Advertiser (1868), Mimic Trunpater (1911) Tamil Kalvi Kazagam (1934) Tamili Maha Sangam (1947). The Peacock (1961) L' Eclaireur (1963) Tamil Voice (1964) ஆகிய இதழ்கள் குறிப்பிடத்தக்கன. இன்று 'ஒளி', 'சக்திவேல்' என்ற இரு வார இதழ்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவ்விரு இதழ்களிலும் பெரும்பாலான செய்திகள் பிரஞ்சு மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியாகின்றன. தமிழில் எழுதுவோரும் படிப்போரும் அருகி வருகின்ற நிலையை இவ்விதழ்கள் காட்டுகின்றன. Le Militant என்ற எதிர்கட்சி பத்திரிகை மிகுதியாகக் கிரியோல் மொழியைப் பயன்படுத்துகிறது. பிரஞ்சு எழுத்துகளில் சிறிது மாற்றம் செய்து இப்பேச்சு மொழி அச்சிடப்படுகிறது. இவ்வரிவடிவ அமைப்பை டி. வீராசாமி என்பவர் செய்துள்ளார். அவ்வப்போது தமிழ்த் திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன. அரசு நடத்தும் நாடக விழாக்களில் தமிழ் நாடகங்கள் இடம் பெறுகின்றன.

தமிழ் மறுமலர்ச்சி அரசியல், பொருளாதார மற்றும் சமூகக் காரணிகளால் மொரீசியஸ் தமிழர்களிடையே மொழி இழப்பு ஏற்பட்டது. மொரீசியசில் குடியேறிய நான்கு தலைமுறை காலத்திற்குள்ளாகவே மொழியை இழக்கும் அவல நிலைக்கு இவர்கள் உள்ளாயினர். குடியேற்றத்தின் பொருட்டுத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து குடிபெயர்ந்தவர்கள் சமூக நிலையிலும் பொருளாதார நிலையிலும் பின்தங்கியவர்களாக இருந்தனர். அடிப்படைக் கல்வி கூட பெற இயலாத இம்மக்கள் நல்வாழ்வு தேடி பல இன்னல்களையும் பொருட்படுத்தாது மொரீசியசுக்குச் சென்றும் ஏமாற்றமே அடைந்தனர். மிகக் குறைவான கூலியில் அன்றாட உணவுக்கு இவர்கள் போராட வேண்டியிருந்தது. குடியேற்ற அலுவலகங்களைச் சேர்ந்த முகவர்களின் ஆசை வார்த்தைகளை நம்பி நாலாயிரம் மைல்களுக்கு அப்பால் குடும்பத்தாரைப் பிரிந்து தோட்ட உரிமையாளர்களின் அடிமைகளாய் வாழ்ந்து வந்தனர்.

தோட்ட உரிமையாளர்கள் அனைவரும் ஐரோப்பியர்களாக இருந்ததாலும், ஆப்பிரிக்க அடிமைகளோடு வேலை செய்ய வேண்டியிருந்ததாலும் அடிமைகள் பேசி வந்த — ஐரோப்பியர்களுக்குப் புரிந்த கிரியோல் மொழியை இவர்கள் கற்க வேண்டியவர்களானார்கள். தமிழ் மொழியின் பயன்பாடு குறைந்தது. இருந்தபோதிலும் முதல் தலைமுறையினர் பெரும்பாலும் தமிழைப் பயன்படுத்தினர். ஆனால், இரண்டாம் தலைமுறையினரிடம் தமிழ் முதல் இடத்தையும் கிரியோல் இரண்டாவது இடத்தையும் பெற்றது. வீட்டில்

தமிழ் மொழியையும் சுற்றுப்புறச் சூழல்களில் மிகக் குறைந்த அளவு கிரியோலையும் பயன்படுத்தினர். மூன்றாவது தலைமுறையினரிடைய கிரியோல் முதல் இடத்தையும் தமிழ் இரண்டாவது இடத்தையும் பெற்றது. அநேகமாக எல்லாச் சூழல்களிலும் கிரியோல் மொழியைப் பயன்படுத்தினர். மிகக் குறைவாக குடும்பச் சூழ்நிலைகளில் அவ்வப்போது தமிழைப் பயன்படுத்தினர். நான்காம் தலைமுறையினரிடம் கிரியோல் மட்டுமே இடம் பெற்றது. தாய்மொழியாகிய தமிழை முழுவதுமாக இவர்கள் மறந்தனர். குடும்பச் சூழ்நிலையும் இதற்குச் சாதகமாக அமைந்திருந்தது. ஆங்கில ஆதிக்கத்தில் தமிழ் எங்கே மதிக்கப்படப் போகிறது என்று தமிழர்களுக்கு ஏற்பட்டிருந்த விரக்தியும் தமிழ்மொழி இழப்புக்கு முக்கிய காரணியாகும். மேலும் பொருளாதார நிலையில் முன்னேறத் துடித்துக் கொண்டிருந்த அக்காலத் தமிழர் பிரஞ்சு மொழியையோ, ஆங்கில மொழியையோ கற்றால் மட்டும் தான் வாழ்க்கையில் உயரமுடியும் என்று நினைத்தனர். இது மட்டுமன்றி, பள்ளிக்கூடங்களில் தமிழ் கற்கும் வாய்ப்பும் இல்லை. இக்காரணங்களால் தமிழ்க் கல்வி தமிழர்களாலேயே புறக்கணிக்கப்பட்டது. இருந்தாலும் ‘வாத்தியார்கள்’ என்று அழைக்கப்பட்ட தமிழாசிரியர்கள்ஆங்காங்கேதிண்ணைப் பள்ளிகளில் தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ் மொழியைக் கற்பித்து வந்தனர்.

மொரீசியஸ் கவர்னராக இருந்த ஹிக்கின்சன் இந்திய மொழிகளைக் கற்பிபதற்கென சிலபள்ளிகளை ஆரம்பித்தார் என்று பார்த்தோம் அல்லவா ? இப்பள்ளிகள் ஓரளவுக்குத்தாய்மொழிஉணர்வைத் தமிழர்களிடையே ஏற்படுத்தின. பள்ளிக்கல்வித்திட்டத்தில்இந்தியமொழிகளையும் இணைக்கப் பல போராட்டங்கள் நிகழ்ந்தன. இப்போராட்டங்களில் தமிழரும் கலந்து கொண்டனர். குறிப்பாக 1940களில் பெருமாள் சுப்பராயன் தமிழ் மறுமலர்ச்சிக்காகப் பெரிதும் பாடுபட்டார். ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த இவர் அக்காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்து வந்த திரு.வி.க., மறைமலை அடிகள் ஆகியோரோடு தொடர்பு கொண்டு தமிழ் வளர்ச்சிக்கு வித்திட்டார். தனக்குப் பின்னரும் தமிழ் வளர்ச்சிப்பணி தொடர்ந்து நடைபெற வேண்டும் என்ற கருத்தில் முத்துக்குமாரன் சங்கிலி, இராஜரத்தினம் சங்கிலி சகோதரர்களை இப்பணியில் ஈடுபடுத்தினார். பெருமாள் சுப்பராயன் மறைவுக்குப் பின்னர் இராஜரத்தினம் சங்கிலி, அருணாசலம் புட்பரதம், சுப்பையன், முத்தையன், சு. பொன்னன் தாசன் செட்டி ஆகியோர் மொரீசியசின் மூலை முடுக்குகளிலெல்லாம் தமிழ் மணம் பரப்பத் தமிழ் மன்றங்களை நிறுவினர். அத்தோடு தமிழ்மொழி கற்பிப்பதைத் தொண்டாக மேற்கொண்டு ஊர் ஊராகச் சென்றனர். மொரீசியசின் இன்றைய தமிழ் மறுமலர்ச்சியில் இவர்கள் பங்குமிகப்பெரிது.

விடுதலைக்குப் பின்னர் கல்வித் திட்டத்தில் தமிழ் இடம் பெற்றது. தமிழ் கற்க விரும்பிய பள்ளிக் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிக்கத் தகுந்த ஆசிரியர்கள் இல்லை. ஓரளவு தமிழ் பயின்றவர்களுக்கு முறைமையான ஆசிரியர் பயிற்சி அளிக்கத் தமிழகத்திலிருந்து தமிழாசிரியர்கள் வரவழைக்கப்பட்டனர். இவர்களுள் பட்சிராசன்

உ. புழனி ஆகியோர் குறிப்பிடத் தக்க வர்கள். இவர்களே மொரீசியஸ் சூழ் நிலைகளுக்கேற்றவாறு தமிழ்ப்பாடநூல் களையும் எழுதினர்.

தமிழ் இலக்கிய வளர்ச்சி ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே ஆங்காங்கே தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு வித்து ஊன்றப்பட்டது. அக்கால ஆங்கில மற்றும் பிரஞ்சு நாளிதழ்களில் கட்டுரை களும், மிக அரிதாகச் சில கவிதைகளும் எழுதப்பட்டன. 1861-ஆம் ஆண்டு சூன் 20ஆம் நாளிட்ட ல மொரீசியன் என்ற பத்திரிகையில் வெளியான தமிழ்க் கட்டுரையொன்றை எடுத்துக் காட் டாகக் கூறலாம். 1920களில் பெருமாள் சுப்பராயன் சில கவிதைகளை எழுதி னார். **Guy de Theramand** என்ற பிரஞ்சு நாவலாசிரியர் எழுதிய **'Ravengar'** என்ற நாவலை இவர் தமிழிலே மொழிபெயர்த்தார்.

ஆங்கிலேயர்க்கும் பிரஞ்சுக்காரர் களுக்கும் போர் நடந்து கொண்டிருந்த போது பம்பாயிலிருந்து வந்த சென்னை இராணுவப் பிரிவில் இராணுவ வீரராக வந்தவர் துளசிங்க நாயனார் என்பவர். இவர் தமிழ் மொழியிலும் இலக்கியத்திலும் ஆழ்ந்த புலமை பெற் றவர். பெருமாள் சுப்பராயனும், வடி வேல் செல்லன் என்பவரும் இவரிடம் தமிழ் பயின்றவர்களாவர். இவ்விரு வரும் பிற்காலத்தில் பல கவிதைகளை இயற்றினர். 1927-இல் ஜி. வெங்கட சாமி என்பவர் 'சீதாலட்சுமி' என்ற நூலையும் 1940இல் அருணாசலம் என்பவர் 'கலைமகள் போதனம்' என்ற நூலையும், எஸ். முதலியார் என்பவர் 1940-இல் 'தமிழ் மன்னன் குமரன்' என்ற நூலையும் எழுதினர். தமிழர்கள் பிரஞ்சு மொழியை எளிதாகக் கற்றுக் கொள்ளும் வகையில் ஜி. சீனிவாசன் Vocabulaire Tamoul - Francais என்ற நூலை 1911-இல் எழுதினார். இன்று பள்ளிகளில் தமிழ் கற்பித்துவருகின்ற தமிழாசிரியர்கள் பலர் கட்டுரைகளும் கவிதைகளும் எழுதிவருகின்றனர். முத்துக் குமாரன் சங்கிலி பிரஞ்சு மொழி யில் மொழிபெயர்த்த திருக்குறளும், முத்துக்குமாரன் சங்கிலியும் அம்மீகனும் மொழிபெயர்த்த பாரதியின் சில பாடல் களும் மொரீசியஸ் தமிழர்களிடையே பிரபலமாகி உள்ளன.

இன்றைய நிலை மொரீசியஸ் தமிழர்கள் தமிழ்மொழி வளர்ச்சியில் இன்று ஆர்வம் காட்டுகின்றனர். அரசியல் மற்றும் சமூக ரீதியில் தன்னைத் தமிழன் என்று மொழி வழி இனங்கண்டு கொள்ள வேண்டிய கட்டாயம் இன்று இவர்களுக்கு உருவாகியுள்ளது. தமிழ் வளர்ந்தால் மட்டுமே தமிழன் வளர முடியும் என்ற நிலை மொரீசியசில் இன்று உருவாகியுள்ளது. தமிழ் மொழி யையும் பண்பாட்டையும் இழந்து மற்றொரு பண்பாட்டில் தம்மை ஐக்கியப்படுத்திக் கொள்ள மொரீசியஸ் வாழ் தமிழர்கள் இன்னும் தயங்கு கின்றனர். இந்நிலையில் தமிழும் தமிழரும் வாழ நம்மால் இயன்ற பணியை நாம் செய்ய வேண்டும்.

REFERENCES

Ammigan T (1985) Tamil Quest in Mauritius (1735-1985). Mauritius: Swan Printing.

Ly Tio Fane Pinco, H (1984) Lured Away: The Life History

of Indian Cane Workers in Mauritius. Mauritius : Mahatma Gandhi Institute.

Moonindra Nath Varma (1973) Indian Immigrants and their descendants in Mauritius Vol. 1. Vacoas.

Pushparathan, Arunachalam (1981) "The Teaching of Tamil Language in Mauritius", In Proceedings of the Fifth International Conference Seminar of Tamil Studies. Madurai.

Rajaram S. (1985) "Teaching of Tamil in Mauritius" In Journal of Tamil Studies Vol. 27. International Institute of TamilStudies. Madras:

Toussaint, Auguste (1977). History of Mauritius. Hong Kong : Macmillan Education Limited.

தமிழ்க் கலை

தமிழ் 5, கலை 3,4

இந்தோனேசியாவில் தமிழரும் தமிழ்ப் பண்பாடும்

ஈ. ச. விசுவநாதன்

கிழக்கிந்தியத் தீவுகளில் பெரும்பான்மையானவை பூமத்தியரேகைக்கு வடக்கிலும், தெற்கிலும் முறையே சுமார் ஐந்து டிகிரிவரை பரவியுள்ளன. அவைகளில் இரியன் ஜயா (IRIAN JAYA) முதல் சுமத்திரா (SUMATRA) வரை பரவியுள்ள தீவுகளின் கூட்டத்தை இந்தோனேசியா என அழைக்கின்றோம். வரலாற்றுப் புகழ்பெற்ற நாடுகளில் ஒன்றான இந்தோனேசியாவில் பதினான்காம் நூற்றாண்டுவரை பௌத்த சமயமும், இந்து சமயமும் செல்வாக்கோடு இருந்தன. தென்கிழக்கு ஆசியாவில் வல்லரசுகளாகத் திகழ்ந்த ஸ்ரீவிஜயா, சயிலேந்திரா, மகாபாயிட் போன்ற பேரரசுகள் இந்தோனேசிய மண்ணில் தோன்றியவைகளே. இப்பேரரசுகளின் காலத்தில், பௌத்த சமயமும், இந்து சமயமும் மிகுந்த அரசியல் செல்வாக்குப் பெற்றிருந்ததோடல்லாமல், மக்கள் மத்தியிலும் ஏற்றம் பெற்றிருந்தன. இதனை இந்த நாட்டு வரலாறும், பௌத்த சமய அறிஞர்களின் பயணக் குறிப்புகளும் உறுதி செய்கின்றன. கி.பி. 671-ஆம் ஆண்டில் இந்தோனேசியாவிற்கு வந்த சீனப் பயணி இசிங் (I-ching) என்பவர், சுமத்திராவின் தென்கிழக்குப் பகுதியில், உள்ள பலெம்பாங் (PALEMBANG) என்னுமிடத்திலிருந்த பௌத்த மடத்தில் ஆயிரம் மாணக்கர் படித்து வந்ததாகக் குறிப்பிடுவதும், ஸ்ரீவிஜயப் பேரரசின் சிறப்பினை விளக்குவதும் மேற்கூறிய கருத்தை அரண்செய்வதாக உள்ளன. அதே போல் ஜாவாவில் உள்ள கெடு பள்ளத்தாக்கில் (KEDU PLAINS) அமைந்துள்ள போரோபுதூர் புத்தக் கோயிலும் (BOROBUDUR) பிரம்பனன் (PREMBANAN) சிவன்கோயிலும் இக்கருத்திற்கு மேலும் வலுவூட்டுகின்றன. இவை மட்டுமன்றி இந்நாட்டுக் கலைகளிலும், சிற்பங்களிலும், சித்திரங்களிலும், நாடகத்திலும் இவ்விருசமயங்களின் தாக்கத்தைப் பரக்கக் காணலாம். இந்த நாட்டுநிழலாட்டத்தின் உயிர்நாடியாகவிளங்குவன இராமாயணமும், மகாபாரதமுமேயாகும். இந்நாட்டு மக்களின் பெயர்களில் பல, மகாபாரதக்கதை மாந்தர்களாக இருப்பதனை இந்த நாட்டில் பயணம் செய்த யாவரும்

அறிவர். இந்தியப் பண்பாட்டின் தாக்கத்தைப் பெருமளவில் பெற்றுள்ள இந்தோனேசியாவை ஒரு மாதகாலம் சுற்றிப் பார்க்கும் நல்வாய்ப்பு எனக்கு 1972-ஆம் ஆண்டில் ஏற்பட்டது. அப்போது ஜாவாவிற்குக் கிழக்கில் அமைந்துள்ள பாலித் தீவில் இரண்டு வாரங்களும், கெடு பள்ளத்தாக்கில் அமைந்துள்ள ஜோக் ஜாகர்த்தாவில் ஒரு வாரமும், ஜாகர்த்தா, மேடான் போன்ற நகரங்களில் ஒரு வாரமும் தங்கி அப்பகுதிகளைச் சுற்றிப் பார்த்ததோடல்லாமல் பல குறிப்புகளையும் எடுத்து வந்தேன். அக்குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டே இந்தக் கட்டுரையைப் பாலித்தீவு ஜோக் ஜாகர்த்தா மேடான் என மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளேன். இப்பிரிவுகள் ஒவ்வொன்றிலும் தமிழ்ப்பண்பாடு, கலை, சமயம் ஆகியவைகளின் தாக்கத்தை ஆங்காங்கே எடுத்துக் காட்டியுள்ளேன். இந்தக் கட்டுரை முறையான ஆராய்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைந்தால், அதனை நான் மகிழ்ச்சியோடு வரவேற்பேன்; அறிஞர் உலகமும் வரவேற்கும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

பாலித்தீவு இந்தியா, நேப்பாளம் நீங்கலாக இந்துக்கள் பெரும் பான்மையாக உள்ள இடம் பாலித தீவாகும். ஜாவாவிற்குக் கிழக்கில் உள்ள இநதத் தீவு இயற்கை வளம் நிறைந்தது. எங்குப் பார்த்தாலும் பச்சைக் கம்பளம் விரித்தது போன்ற வயல் வெளிகளை உடையது. தென்னந் தோப்புகளும், வானளாவிய மலைகளும், நீல மணி போல் தோன்றும் குன்றுகளும் நிறைந்தது. இயற்கை அன்னை இன்ப நடனம் புரியும் இத்தீவு சுமார் இரண்டாயிரம் சதுர மைல் உடைய்து. இங்கு வாழும் மக்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டுப் பேர் இந்துக்கள் ஆவர். இம்மக்கள் இசை, நடனம், சிற்பம், சித்திரம் போன்ற கலைகளில் வல்லவர்கள்.

பாலி மக்கள் இயற்கைப் பொருள்களைக் கடவுளாக எண்ணி வழிபடுகின்றனர். அவர்கள் வணங்கும் தெய்வங்களில் மிக முக்கியமானது சூரியன் ஆகும். நிலம், நீர், காற்று, தீ, மலை எல்லாவற்றையும் அவர்கள் கடவுள்களாக எண்ணி வழிபடுகின்றனர்.

நாம் மலைகளில் முருகனுக்குக் கோயில் கட்டி வழிபடுகின்றோம். எல்லா மலைகளையும் அவன் கோயில் கொண்டுள்ள இடமாக எண்ணுகின்றோம். ஆனால் பாலித் தீவினர் மலைகளை எல்லாம் சிவன் குடிகொண்டுள்ள இடமாகக் கருதி வணங்குகிறார்கள்.

பாலியில் உள்ள பெரிய மலை "குனுங் அகுங்" (Gunung Agung). இதனை உலகின் உச்சி என்றும், இறை வழிபாட்டின்மைய இடம் என்றும், பரம் பொருளாகிய சிவன் உறையும் மாமேரு என்றும், மண்ணையும், விண்ணையும் இணைக்கும் பாலம் என்றும் இங்குள்ளவர்கள் நம்புகினறனர். இந்த மலையையே அவர்கள் கடவுளாகவும் எண்ணுகின்றனர். கோயில்களிலெல்லாம் இம்மலைக்கென ஒரு தனி இடத்தை ஒதுக்கி, அதனைத் தெய்வமாகப் போற்றுகின்றனர். விண்ணில் இருக்கும் தம் மூதாதையர் இம்மலை வழியாகப் பூமிக்கு வந்து, அவர்கள் நடத்தும் விழாக்களிலும், பண்டிகை

களிலும் கலந்து கொள்வதாகப் பாலி மக்கள் கருதுகின்றனர்.

இந்து சமயம் பரவல் இயற்கை வழிபாடும், ஆவி உலகக் கோட்பாட்டிலே நம்பிக்கையும உள்ள பாலித்தீவினரிடம், கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முதற்கொண்டே பௌத்த, இந்து சமயக் கருத்துகள் பரவ ஆரம்பித்தன. இவை ஸ்ரீவிஜயா, சயிலேந்திரா, மகாபாயிட் போன்ற வல்லரசுகளின் காலங்களில் மக்களிடை விரிவாகப் பரவலாயின. சுமத்திராவிலும், ஜாவாவிலும் பதினைந்தாம் நூற்றாண்டில் இஸ்லாமிய சமயம் பரவியபோது இந்த இரு தீவுகளிலும் வாழ்ந்த இந்து, பௌத்த சமயத் துறவிகளும், அறிஞர்களும், கலைஞர்களும் பாலியைத் தங்கள் புகலிடமாகக் கொண்டனர் என வரலாற்று அறிஞர்கள் கூறுகிறார்கள். அவர்களால் பௌத்த, இந்து சமயக் கருத்துகள் இங்கு வேரூன்றின என்றும் நினைக்கிறார்கள்.

சாதிப்பாகுப்பாடு பாலி மக்களிடம் சாதிக் பாகுபாடு உள்ளது. அந்தனர், அரசர், வணிகர், சூத்திரர் என்னும் அடிப்படையில் சமூகம் பிரிந்துள்ளது. எனினும் இச்சமூகத்தில் தீண்டாதார் என்னும் பிரிவு ஒன்றில்லை. இந்த சாதிகளுக்குள் கொள்வினை கொடுப்பினை வழக்கத்தில் உள்ளது என்று கூறுவோர் பலர் உண்டு; இல்லை என்று மறுப்பவர் சிலர் உண்டு.

அந்தணர்களைப் பாலி மொழியில் ‘பிதான்தா’ (PEDANDA) என அழைக்கின்றனர். இவர்களை உயர்ந்த சாதியினராகவும், சமஸ்கிருத மொழியில் வல்லவர்களாகவும் கருதுகின்றனர். இவர்கள் ஒரு காலத்தில் அரசவையில் முக்கிய இடம் பெற்றிருந்தனர் என்றும், அறங்கூறும் மன்றங்களில் நீதிபதிகளாக விளங்கினர் என்றும், அரசர், வணிகர் போன்றவர்களின் குடும்பச் சடங்குகளை நடத்திவைத்தவர் என்றும் அறிகிறோம். தற்போது அவர்கள் எந்த அரசாங்கப் பதவியிலும் இல்லை; வழக்கறிஞர்களாகத் தொழில் நடத்தவும் இல்லை. வெறும் சமயச் சடங்குகளை நடத்தி வைக்கும் புரோகிதர்களாக வாழ்கின்றனர்.

அந்தணர்களைப் போலவே பௌத்த பிக்குகளும் பாலியில் மிக உயர்வாகக் கருதப்படுகின்றனர். பல வகையான சமயச்சடங்குகளை இவர்கள் முறையாக நடத்தி வைக்கின்றனர். சில வகையான சமயச் சடங்குகளிலும், குடும்பச்சடங்குகளிலும் இவ்விருவருமே கலந்து கொள்வதுண்டு.

அந்தணர்களை வேத சாத்திரங்களில் வல்லவர்கள் எனப்பாலித் தீவினர் நம்புகின்றனர். இறந்தவர்களின் ஆவியினை நேராகத் தேவலோகத்திற்கு அனுப்பும் வழிமுறைகளை அறிந்தவர்கள் என நினைக்கின்றனர். இதனால் அந்தணர்களை ஈமக்கடன் செய்விக்க எல்லாச் சாதியினரும் பெரும் பொருள் கொடுத்து அழைக்கின்றனர். அவர்களை அழைத்து ஈமக்கடன் செய்வதைப் பெருமையாகக் கருதுகின்றனர். மேலும் பஞ்சாங்கம் பார்த்து நாள், திதி போன்றவைகளைக் கணக்கிட்டுக் கூறும் சோதிடர்களாகவும் விளங்குகின்றனர்.

கோயில்கள் பாலியில் சிறியதும் பெரியதுமாக 4,661 கோயில்கள் இருப்பதாக ஜே.

எல். ஸ்வெல்லன்கிரிபல் (J.S.SWELLEN GREBEL) என்னும் அறிஞர் கணக்கிட்டுள்ளார். இக்கோயில்கள் தமிழகத்தில் உள்ள கோயில்களைப் போல அமைப்பில் இல்லை. இக்கோயில்களில் நம் நாட்டில் உள்ளது போல இறைவன் சிலையோ, இறைவியின் சிலையோ இல்லை. இங்கு எத்தகைய உருவ வழிபாட்டினையும் காண இயலாது. கோபுரங்களோ, கூரை வேய்ந்த மண்டபங்களோ இக்கோயில்ளில் கிடையாது.

கோயில் அமைப்பு கோயில் என்பது தாழ்ந்த சுற்று மதிலோடு கூடிய ஓர் பரந்த இடமாகும். இந்த இடத்தைக் குறுக்கு மதில்களால் இரண்டாகவோ மூன்றாகாவோ பிரிப்பது வழக்கம். ஆனால் நான் பார்த்த கோயில்கள் யாவும் இரு பிரிவினை உடையனவே. பொதுவாக இப்பிரிவினை வெளிப் பிரகாரம், உட்பிரகாரம் எனக் கூறலாம். வெளிப் பிரகாரத்திற்குள் நுழைய ஒரு வாயில் உண்டு. அந்த வாயிலில் நம் நாட்டுக் கோயில்களில் உள்ளது போல் கோபுரம் ஒன்றும் இல்லை. அழகிய வேலைப்பாடுள்ள ஒரு கதவை இரண்டாகப் பிளந்து. பக்கத்திற்கு ஒன்றாக வைத்தால் எப்படி இருக்குமோ, அதுபோல் அந்த நுழைவு வாயில் உள்ளது. சில கோயில்களின் வாயிலில் துவார பாலகர்கள் உள்ளனர். இன்னும் சில கோயில்களில் யாளியை வாயிலின் இருபுறமும் வைத்துள்ளனர். இந்த யாளியின் உருவ அமைப்பு நம் நாட்டுக் கோயில்களில் உள்ள யாளி போல உள்ளது. ஆனால் என்னுடைய நண்பராகிய சீனப் பேராசிரியர், யாங் பெங், இந்த யாளி சீனக் கோயில்களில் உள்ள யாளி போன்றது எனக்கருதுகிறார்.

உட்பிரகாரத்திற்குள் நுழைய வேறோர் தனி வாயில்உண்டு. இதுவே வேலைப்பாடோடு கூடிய பட்டையான கோபுரம் போன்றதோற்றம் உடையதாக இருக்கும். ஆனால் இக்கோபுரத்தைத் தமிழகக் கோயில்களில உள்ள கோபுரங்களோடு ஒப்பிட இயலாது,

உட்பிரகார வாயில் தரைமட்டத்தில் இருந்து மூன்று அல்லது நான்கடி உயரத்தில் உள்ளது. வாயிலை ஒட்டி அமைந்துள்ள படிக்கட்டுகளில் ஏறித் தான் உட்பிரகார வாயிலை அடைய முடியும். உட்பிரகார வாயிலுககு வேலைப்பாடோடு கூடிய கதவுகள் உண்டு. இக்கதவுகளுக்குப் பின்னுல் சுமார் நான்கடி தூரத்தில் ஒரு பெரிய சுவர் இருக்கின்றது. இந்தச் சுவரை ஒட்டி இடப்புறத்திலும் வலப் புறத்திலும் படிக்கட்டுகள் உள்ளன அப்படிகளின் வழியாக இறங்கித்தான் உட்பிரகாரத்திற்குள் செல்ல முடியும்.

மக்கள் நேராக உட்பிரகாரத் திற்குள்செல்லத் தடையாக இருப்பது வாயிலுக்குப் பின்னுல் உள்ள சுவர் தான். இந்தச் சுவர் தீய ஆவிகளை உட்பிரகாரத்திற்குள் நுழைய விடாமல் தடுப்பதாகப் பாலி மக்க கருதுகின்றனர். அவர்கள் கருத்துப்படி, ஆவிகள் ஒரே நேர்க் கோட்டில் செல்வதால் அவை இச்சுவரில் மோதிக் கொண்டு மேலே செல்ல முடியாமல் திரும்பி விடுகின்றனவாம். இந்த நம்பிக்கையின் காரணமாகத் தான் இரண்டாவது வாயிலின் உட்புறத்தில் சுவர் ஒன்றனை எழுப்பி இருப்பதாகக் கூறுகின்றனர்.

வெளிப் பிரகாரத்தில் கோயில் மணிக்கூண்டு, மடைப்பள்ளி, நேர்த்திக் கடன் செய்வோரின் காணிக்கைகளைச் சேமிக்கும் இடம், இசைக் கருவிகளை வாசிப்போர் இடம், பக்தர்கள் தங்கும் இடம் யாவும் உள்ளன. பண்டிகை நாட்களிலும், விழாக் காலங்களிலும் வெளிப்பிரகாரத்தில் இசை, நடனம், நாடகம் நடைபெறும். நம் நாட்டில் உள்ள கோயில்களிலும் வெளிப் பிரகாரத்தில் தான் மடைப்பள்ளி காணிக்கைகளை வாங்கும் இடம், தேவார, வேத பாடசாலைகள் போன்றவை உள்ளன. அதேபோல் விழாக்காலக் கலை நிகழ்ச்சிகளும் வெளிப்பிரகாரத்தில்தான் நடைபெறுகின்றன. பாலிக் கோவில்களின் வெளிப்பிரகாரத்தில் பல சமயங்களில் கோழிச் சண்டையும் நடைபெறுவதுண்டு. அச்சமயங்களில் கோயில் மிகுந்த ஆரவாரததுடன் இருக்கும்

இந்த வெளிப்பிரகாரத்தில் தற்போது உல்லாசப் பயணிகளுக்காக இசை, நடன, நாடக நிகழ்ச்சிகளைத் தினந்தோறும் நடத்துகிறார்கள். பக்தர்கள் அமரும் இடத்தில் உல்லாசப் பயணிகள் அமர்ந்திருந்து இந்நிகழ்ச்சிகளை காண்பர். நான் பாலித் தீவில் பார்த்த நாட்டிய நாடகங்கள்யாவும் இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டவை.

மேரு உட்பிரகாரத்தில் பல தெய்வங்கள் உறையும் இடங்கள் உள்ளன. இவை களை 'மேரு' எனக் கூறுகிறார்கள். ஒவ்வொரு மேருவின் மேற்பகுதியும் படிப் படியாகக் குறைந்து செல்லும் அடுக்குகளை உடையது. அடுக்கு புல்லால் வேய்ந்தகூரை உடையது. மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று என ஒற்றைப் படையிலேயே அடுக்குகள் இருக்கும். மூன்று அடுக்குகளை உடைய மேரு ஸ்ரீதேவிக்கும், ஐந்து ஈஸ்வரனுக்கும், ஏழு பிரம்மாவிற்கும், ஒன்பது விஷ்ணுவிற்கும், பதினொன்று மகேஸ்வரனுச்கும் உரியதாகும்.

பாலித்தீவினர் வணங்கும் ஈஸ்வரன், விஷ்ணு, பிரம்மா ஆகியோர் முறையே மும்மூர்த்திகளான அரன், அரி அயனுக்கு ஒப்பானவர்கள். அவர்கள் வழிபடும் ஸ்ரீதேவியும் ஒரு சிறு தெய்வமே. மகேஸ்வரன்தான் அவர்கள் போற்றித் துதிக்கும் முழுமுதற்கடவுள்.

மேரு சீனக் கோயிலின் தோற்றம் உடையது. தெய்வம் வந்து தங்குவதற்கு மேருவின் அடிப்பகுதியில் மேடை ஒன்று உண்டு. இது மிகுந்த சிற்ப வேலைப் பாடோடு கூடியது. இந்த மேடையினை நம் கோயில்களில் உள்ள கர்ப்பக்கிருகம் போல் கருதலாம். எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளை ஒரு சிறு இடத்தில் அடைத்து வைக்கப் பாலி மக்கள் விரும்பாத காரணத்தினால், இந்தக் கர்ப்பக்கிருகம் எப்போதும் திறந்தே இருக்கும், சுற்றுச் சுவரோ, கதவுகளோ கிடையாது. மேலும் இந்தக் கர்ப்பக் கிருகத்தில் எந்தத் தெய்வச் சிலையும் இல்லை. மக்கள் இங்கு வந்து வழி படுகின்றபோது, இறைவன் ஆவிரூபத்தில் இருந்து அருளுவதாகப் பாலித் த்வினர் நம்புகின்றனர்.

உட்பிரகாரத்தின் கிழக்குப் பகுதியில், சுற்றுச் சுவரோடு கதவுகளை உடைய ஒரு கர்ப்பக்கிருகம் உள்ளது. கோயில் உள்ள பகுதியில் வாழ்ந்த செல்வாக்குப் பெற்ற மூதாதையர் ஒருவர்க்கு உரியது இது. இதனுள் மட்டும் சிவலிங்கம் ஒன்றுள்ளது.

இந்தக் கர்ப்பக்கிருகத்திற்குச் சுற்றுச் சுவரும், கதவுகளும் உண்டு. இக் கதவுகள் எப்போதும் பூட்டி இருப்ப தால், இதனுள் பலவகை உலோகங் களிலான உருவச் சிலைகளையும், உற்சவ மூர்த்தியின் படிமங்களையும் வைத்திருக்கிறார்கள். பாலித் தீவில் உள்ள "குனுங் அகுங்", "படூர்" என்னும் இரண்டு முக்கிய மலைகளுக்கும் உட் பிரகாரத்தின் வடக்குத் திக்கில் இரண்டு மேருகள் உள்ளன. சூரியனுக்கும் ஒரு தனி மேரு உள்ளது. இவை தவிர தெய்வங்களின் செயலாளர்களுக்கும், தெய்வங்கள கூறுவதை விளக்கிக் கூறு கின்ற விரிவுரையாளர்களுக்கும், தெய்வங்கள் கூடிப் பேசுவதற்கும் உரிய தனித்தனி மேருகள் பல உள்ளன.

உற்சவ மூர்த்தி விழாக் காலங்களில் மட்டுமே உருவ வழிபாடு நடைபெறு கிறது. இச்சமயங்களில் உற்சவ மூர்த்தி யின் உருவத்தை அலங்கரித்து, நீராட்ட ஆற்றங்கரைக்கோ, கடற்கரைக்கோ எடுத்துச் செல்வார்கள். உற்சவ மூர்த்திக்கு முன்னால் நடுத்தர வயது உடைய பெண்கள் வரிசைப் பொருள் களைத் தட்டுகளில் ஏந்திச் செல்வர். பூக்கள், பழங்கள், பலவகைத் தின் பண்டங்கள், ஆடை அணிகலன்கள் இவைகளை வரிசைப் பொருள்களாகக் கொண்டு செல்வதுண்டு.

நீராட்டிய பிறகு உற்சவ மூர்த்தியை அலங்கரித்து மக்கள் தொழக் கோயிலில் வைப்பார்கள். பிமங்கு (PEMANGU) எனப்படும் அந்தணரல்லாத பூசாரி, உற்சவ மூர்த்திக்கு முன்னால் உட் கார்ந்து கொண்டு, பக்தர் கொடுக்கும் பலவகைத் தின்பண்டங்களையும், பழங் களையும் மூர்த்திக்கு முன் வைத்துப் பூசை செய்து, அவைகளைத் திரும்பவும் பக்தர்களிடமே கொடுத்து விடுவார். அதனை அவர்கள் வீட்டிற்குக் கொண்டு வந்து உறவினர்களோடு கலந்துண்பர்.

உற்சவ மூர்த்தியை நதிக்கோ கடற் கரைக்கோ நீராட்ட எடுத்துச்செல்வது, அப்போது ஆடை அணிகலன்களை உடன் எடுத்துச் செல்வது போன்ற வற்றிலும், உற்சவ மூர்த்திக்குப் பூசை செய்வது போன்ற சமயச் சடங்கு களிலும் தமிழகப் பழக்க வழக்கங்கள் சமயச் சடங்குகள் ஆகியவற்றின் தாக்கம் நிறைந்திருப்பதாக நான் கருதுகின்றேன். இது குறித்து ஆய்வு நடத்தினால் தமிழ் நாட்டுச் சமயச் சடங்குகளின் பரவலான செல்வாக்கை, குறிப்பாக இந்தோனே சியாவில் பெற்றுள்ள முக்கியத்துவத்தை உலகிற்கு எடுத்துக் காட்டலாம்.

ஆவிகள் வழிபாடு : திருவிழாக் காலங் களிலே கெட்ட தேவதைகளுக்கும், ஆவிகளுக்கும் சாந்திப் பூசைகள் செய் வார்கள். அப்போது அரிசி, பூ, பழம, இறைச்சி, காசு இவைகளைப் படை யலாக வைப்பார்கள். பூசை முடிந்த பிறகு இப்படையலை மக்கள் உண்ப தில்லை. அவைகளை நாய்கள் தின்ப தற்காக வீதிகளில் எறிந்து விடுவார்கள்.

பாலித் தீவில் உள்ள மக்கள் பொது வாக விழாக்காலங்களிலேயே கோயில் களுக்குச் செல்கிறார்கள். மற்ற காலங் களில் பெரும்பாலும தெய்வ வழிபாடு செய்ய அங்குச் செல்வதில்லை. அதற்குப் பதிலாக நாள்தோறும் வீடுகளில் மூதாதையர் வழிபாடும், இறை வணக்கமும் நிகழ்த்துகிறார்கள். கொடிய தேவதைகளாலும், ஆவி களாலும் இடுக்கண் வராமல் தடுக்க

அவைகளுக்கெனத் தனியாகச் சில பூசைகளைச் செய்கிறார்கள். இந்தப் பூசையில் வழக்கமான பொருள்களோடு இறைச்சியினையும், மதுவையும் படையலாகப் படைக்கின்றனர். இத்தகைய சடங்குகளைத் தமிழ் நாட்டிலும், முனீஸ்வரன், காட்டேரி போன்ற கிராமத் தெய்வங்களை வழிபடும்போது செய்கிறார்கள். பொதுவாகக் கோயில் வழிபாட்டைவிட, வீடுகளில் நடைபெறுகின்ற பூசைகள் தாம் பாலி மக்களின் வாழ்க்கையில் முதலிடம் பெற்றுள்ளன.

கோயில் வழிபாட்டு நியதிகள் கோயில்களுக்குள் எல்லாச் சமயத்தவரும்சென்று வரலாம் ; எல்லா சாதியினரும் சென்று வழிபடலாம். எனினும் சில நடைமுறை விதிகளை யாவரும் தவறாமல் கடைப் பிடிக்க வேண்டும். கோயிலுக்குச் செல்வதற்கு முன்பு, காலணிகளைக் கழற்றி விட்டுக் கோயிலுக்கு முன்புள்ள குளத்திலோ, ஓடையிலோ, ஆற்றிலோ கை, கால்களையும், முகத்தையும் கழுவிக் கொள்ள வேண்டும். பிறகு பூசாரி கொடுக்கும் துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டு கோயிலுக்குள் செல்ல வேண்டும். மேல் துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டு ஆண்கள் கோயிலுக்குச் செல்லும் வழக்கம் தமிழகத்தில் உண்டு. ஆனால் பாலியில் பெண்களும் பூசாரி கொடுக்கும் துண்டை இடையில் கட்டிக் கொண்டு தான் கோயிலுக்குச் செல்ல வேண்டும். இந்தத் துண்டிற்குச் சிறுதொகை ஒன்றைக்கட்டளைமாக வசூலிக்கிறார்கள். இது கோயிலுக்குச் செலுத்தும் காணிக்கையாகவும் கருதுகிறார்கள். கோயிலின் உட்பிரகாரத்தில் தூய்மையையும் அமைதியையும் யாவரும் காக்க வேண்டும்.

இந்து சமயக் கடவுளர் பாலித் தீவினர் போற்றுகின்ற கடவுள்களில் பல இந்து சமயத்தைச் சார்ந்தவை. இவர்கள் சூரியனைக் கோயில்களிலும் வீடுகளிலும் வணங்குகின்றனர்.

சிவனோடு ஒப்ப எண்ணப்படுகின்றவர், இவர்கள் வழிபடும் "பாதார குரு" (BATARA GURU) என்பவர். இவர் அந்தணர்களின் தலைவர் முனிவர் போல் தாமரைப் பூவில் அமர்ந்திருப்பவர்; நான்கு கைகளை உடையவர். முன்னிரண்டு கைகள் கூப்பிய நிலையில் இருக்கின்றன; மற்ற இருகைகளில் வலக்கையில் தாமரையும் இடக்கையில் சாமரையும் உள்ளன.

திருமூர்த்திகளில் ஒருவராகிய பிரம்மாவைத் தீயாகவும், பிரஜாபதியாகவும் பாலித் தீவினர் நினைக்கின்றனர். இவருக்கு ஒரே ஒருமுகம் தான் உண்டு. நான்முகனை இவர்கள் பிரம்மாவாகக் கருதாமல், அதாவது படைக்கும் கடவுளாகக் கருதாமல், ஒரு வகையில் அழிக்கும் கடவுளாகவும், மக்கள் தெய்வமாகவும் நினைக்கிறார்கள்.

நீர்நிலைக் கடவுளாக விஷ்ணுவைப் பாலி மக்கள் கருதுகிறார்கள். கருவளம் (FERTILITY) தரும் கடவுளும் இவரே. இவரைத் தேவலோகத்தின் தலைவனாகவும், தேவர்களின் காப்பாளனாகவும், படைத்தலைவனாகவும் கருதுகின்றனா. காக்கும் கடவுளாகிய விஷ்ணு, பாலித் தீவில் இந்திரனும் வருணனும் செய்யும் செயல்களைச் செய்கின்றார்.

ஸ்ரீதேவியினை விஷ்ணுவின் மனைவியாகப் பாலித்தீவினர் வழிபாடு செய்கின்றனர் இவ்வேளை விளை நிலங்களின்

தலைவியாகவும் கருதப் படுகின்றாள் இத்தீவில். நெல்வயல்கள் நிறைந்துள்ள இடங்களில் எல்லாம் இத்தேவியின் கோயில்களைக் காணலாம்.

ஈசனுடைய அம்சமாகக் காலனை இத்தீவில் உள்ள மக்கள் எண்ணிப் போற்றுகின்றனர். விஷ்ணுவைப் போல இவனுடையநிறமும் நீலமே. அச்சத்தைத் தரும் பூத உருவமுடைய இவன் உயிர்களைக் கொள்ளை கொள்பவன்.

சுடுகாட்டில் உறையும் தெய்வம் துர்க்கை: இவள் இறந்தவர்களின் ஆவிகளை எமனிடம் தீர்ப்பிற்காக அனுப்புவதாக இப்பாலி மக்களிடம் ஒரு நம்பிக்கை உள்ளது. ஆதலின் இவளை அஞ்சத் தக்க தெய்வமாகக் கருதி வணங்குகிறார்கள்.

சிவபெருமானுடைய மைந்தனாகவும் குழந்தைகளின் தெய்வமாவும் முருகனைக் கருதி பாலித்தீவினர் வழிபடுகின்றனர். குழந்தைகளுக்குப் பெயர் வைத்தல், காது குத்தல் போன்ற சடங்குகளை எல்லாம் முருகனை நினைத்தே இங்குள்ளவர்கள் செய்கிறார்கள்.

கணபதியை இத்தீவினர் 'கண' (GANA) என அழைக்கின்றனர். இவர் ஞானத்தின் கடவுளாகக் கருதப்படுகிறார் பாலியில். கணபதி வழிபாடு ஒரு காலத்தில் பாலி முழுவதும் பரவி இருந்தாக வரவாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். ஆனால் இந்த வழிபாடு மறைந்தன காரணத்தை யாரும் தெளிவாக்கவில்லை. தற்போது இத்தீவில் உள்ள மக்கள் அணியும் தாயத்துகளில் கணபதி உருவத்தைப்பொறித்து அணிந்து கொள்கிறார்கள். இத்தாயத்துகளை அணிவதால், ஆவிகள் தம்மை அணுகுவதில்லை எனப் பாலித் தீவினர் உறுதியாக நம்புகின்றனர். இந்த நம்பிக்கை ஜாவா தீவிலும்பரவலாக உள்ளது. இத்தாயத்துகளை ஹிப்பிகள் முதல் எல்லோரும் சமய வேறுபாடு இல்லாமல் அணிகிறார்கள்.

பாலித் தீவினருக்கும் அழகுத் தெய்வம் மாறன் தான். இவனுடைய மனைவியின் பெயரும் ரதியே. அழகிய பெண்களை எல்லாம், பாலி மலைகள் ரதி என்றே அழைக்கின்றனர். ரதி என்னும் சொல், பெண் என்னும் பொருளில் இத்தீவில் பரவலாக வழங்குகின்றது.

உமா தேவியை இயற்கை அன்னையாக இம்மக்கள் வழிபடுகின்றனர். இவளை நாம் சிவனுடைய மனைவியாகவும் மலைமகளாகவும் கருதுகிறோம். ஆனல் பாலித்தீவினர் மலைமகளை (Giri Putri) சிவனுடைய இரண்டாவது மனைவியாகக் கருதுகிறார்கள்; வாழ்க்கை வளமெல்லாம் அருளும் அன்புத் தெய்வமாக எணணித்துதிக்கின்றனர்.

சிவனுடைய பூத கணங்களை முச்சந்திகளில் எல்லாம் காணலாம். சிலர் இவைகளையே சிவனாக்கருதி, முச்சந்ததிகளிலெல்லாம் வழிபாடு செய்கிறார்கள்.

இறை வழிபாடு பாலித்தீவினரின் வாழ்வில் இரண்டறக் கலந்திருப்பதனை பாலி செல்லும் ஒவ்வொருவரும் காணலாம். தெய்வ வழிபாடு நிகழ்த்திய பிறகே பெரும்பான்மையான மக்கள் தம் அன்றாடத் தொழிலைத் தொடங்குகின்றனர். இது இவர்கள் வாழ்வில்

நிகழும் நித்திய நியதியாகவும் உள்ளது. டாக்ஸி ஓட்டுபவன் கூட அதிகாலையில் எழுந்து ஒரு தென்னந் தொன்னையில் சிறிது அரிசி, பூ, பழம் கரும்புத் துண்டு, இவைகளை வைத்து ஊதுபத்தி ஏற்றித் தெய்வ வழிபாடு செய்த பிறகே தன் வண்டியை ஓட்ட எடுப்பான். பூசை செய்து முடித்ததற்கு அறிகுறியாக அவன் காதில் பூக்கள் செருகப்பட்டு இருக்கும். காதில் பூவைக்கும்பழக்கத்தை, அதுவும் பூசைக்கு வைத்த பூவைக் காதில் செருகும் பழக்கத்தைப் பரவலாகத் தமிழ்நாட்டில் காணலாம்.

பாலி மக்கள் வழிபடும் தெய்வம் இந்து சமயக் கடவுளர்களாகவும் இருக்கலாம்; அவர்களுடைய மூதாதையர்களாகவும் இருக்கலாம்; அன்றித் தீமை செய்யும் ஆவிகளை வசப்படுத்துவதற்கு நிகழ்த்தும் வழிபாடாகவும் இருக்கலாம். எத்தகைய வழிபாடாக இருப்பினும் பாலி மக்களின் சமய வாழ்வில் இந்து சமயக் கடவுள்களும், வழிபாட்டுக் கூறுகளும், தமிழகச் சடங்கு முறைகளும் இடம் பெற்றுள்ளன என்பதனைப் பாலித்தீவிற்குச் செல்லும் யாவரும் தெளிவாக உணரலாம். அதுபோலவே இம்மக்களின் கலைவாழ்வில் இராமாயணமும், மகாபாரதமும் முக்கிய இடம் பெற்று உள்ளன. இவ்வாறு இந்து சமயத்தின்பல்வேறுகூறுகளைத்தம் வாழ்வோடு பிணைத்துக் கொண்டு, தம்மை இந்துக்கள் எனப் பெருமிதத்தோடு கூறிக் கொள்ளும் ஒரு பெருஞ்சமுதாயம் பாலித்தீவில் வாழ்ந்து வருகின்றது.

ஜோக்ஜாகர்த்தா — ஜாகர்த்தா கி. பி. எட்டாம் நூற்றாண்டு முதல் ஜோக் ஜாகர்த்தா சைலேந்திரப் பேரரசின் முக்கிய நகரமாக விளங்கியது. இந்த நகரத்தைத்தான் இன்றும் இந்தோனேசியாவின் பண்பாட்டு மையம் (cultural **center**) எனக் கருதுகின்றனர். இங்குத்தான் சைலேந்திரப் பேரரசர்கள் பலர் வாழ்ந்த அரண்மனைகளில் சில இன்றும் அழியாமல் உள்ளன; அவர்களுக்காக எழுப்பப் பெற்ற போரோ புதூர், பிரம்பனன் போன்ற நினைவாலயங்கள் இருக்கின்றன.

சைலேந்திரப் பேரரசர்கள் கி. பி. எட்டாம் நூற்றாண்டு முதல் மிக வல்லமை பெற்று, இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடைப்பட்ட வணிக வழியான மலாக்கா சந்தியைத் (Strait of Malacca) தங்கள் ஆட்சியின் கீழ் வைத்திருந்தனர் அதே சமயத்தில் ஜாவாவின் வடக்கில் உள்ள மதுரா (Madura) தீவு மிகப் புகழ் பெற்ற துறைமுகமாகவும், பண்பாட்டு மையமாகவும் விளங்கியது. இந்தத் தீவின் வழியாகவும், பலெம்பா வழியாகவும் இந்தியப் பண்பாடு ஜாவா தீவில் கால் கொள்ளலாயிற்று.

இந்தியாவில் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் புத்த மதத்தின் பெரும் பிரிவான மகாயானவின் ஓர் கிளையான தந்தரயான (Tantrayana) சமயம் முக்கியத்துவம் பெறலாயிற்று. அதே நேரத்தில் தான் தமிழகத்திலும் சைவ சமய மறுமலர்ச்சி ஏற்பட்டுப் பக்தி மார்க்கத்திற்கு வழிகோலியது. இந்தத் தந்தரயான மகாயான சமயமும், பக்தி மறுமலர்ச்சி இயக்கமும் இந்தோனேசியாவில் நுழைய ஆரம்பித்தன. இவை எட்டாம் நூற்றாண்டு முதல் ஜாவா தீவில் மிகுந்த செல்வாக்குப் பெற்றன.

சில சைலேந்திர அரசர்கள் புத்த சமயத்தைத் தழுவியதோடன்றிப் படிப் படியே தங்கள் நிலையையும் மக்கள் மத்தியில் புத்தருக்குச் சமமானதாக உயர்த்திக் கொண்டனர். புத்தருடைய அடைமொழிகளைத் தங்கள் பெயரோடு இணைத்துக் கொண்ட தன்றித் தங்களையும் கடவுளின் அவதாரமாக மக்கள் மதித்துப் போற்றத் தக்க நிலையில் நடக்க ஆரம்பித்தனர். இவ்வாறு கடவுளாக மதிக்கப்பட்ட அரசர்கள் இறந்தவுடன், அவர்களை அடக்கம் செய்த இடத்திலேயே பெரிய கோயில்களைக் கட்டினர். அரசன் பௌத்த சமயத்தைக் சார்ந்தவனாக இருந்தால் பகோடாவையும் (Pagoda), இந்துவாக இருந்தால் கோயிலையும் கட்டினர். அவ்வாறு கட்டிய புத்த இந்து சமயக்கோயில்களை இன்று நாம் கெடு பள்ளத்தாக்கில் காண முடி கின்றது. போரோபுதூரில் உள்ள பகோடோ கி.பி 800-ஆம் ஆண்டிலும், பிரம்பனனில் உள்ள கோயில் கி.பி. 856 - ஆம் ஆண்டிலும் கட்டப் பட்டிருக்கக் கூடும் என இங்குள்ள கல்வெட்டுக்களால் அறியமுடிகின்றது.

சோழர்காலத்துக் கட்டிடக் கலையின் சாயலைப் பிரம்பனன் கோயிலில் காண முடிகின்றது. இந்தக் கோயிலின் பரப்பளவு ஏறக்குறைய தஞ்சைப் பெரிய கோயிலின் பரப்பள வில் கால்பகுதியேனும் இருக்கும். இதனுடைய உட்பிரகாரத்தில் ஆறு கோயில்கள் உள்ளன. அவைகளில் மூன்று பெரியவை. அவை சிவபெருமானுக்கும், திருமாலுக்கும், பிரம்மாவிற்கும் உரியவை. மற்றைய மூன்று சிறிய கோயில்களை நான் சென்றிருந்த சமயத்தில் பழுது பார்ப்ப பதற்காக மூடி வைத்திருந்த காரணத் தினால் அவைகளின் உள்ளிருந்த சிலை களைப் பற்றி அறிய இயலாமற் போய் விட்டது. இந்தக் கோயில்களின் அமைப் பும், அவைகளில் பிரதிஷ்டைச் செய்யப் பட்டிருக்கும் விக்ரங்களின் தன்மையும் சோழர் காலத்துக் கட்டிடக்கலை, சிற்பக்கலை ஆகியவைகளின் சாயலை ஒட்டி அமைந்துள்ளதாக என்னால் ஊகிக்க முடிந்தது. எனினும் இக்கருத்தை முறையான ஆய்விற்குப் பிறகுதான் உறுதி செய்ய இயலும்.

நம் நாட்டில் பிரம்மாவிற்கெனத் தனிக் கோயில்கள் இல்லை. ஆனால் பிரம்பனன் கோயிலின் உட்பிரகாரத் தில் பிரம்மாவிற்கான தனிக்கோயில் ஒன்று உண்டு. அதேபோலத் தாய்லந்தின் தலைநகரான பாங்காக்கிலும் பிரம்மன் கோயில் ஒன்று இருக்கிறது. பிரம்மனை முதலில் வழிபட்டு விட்டுத்தான் தாய் மக்கள் எந்த ஒரு நல்ல காரியத்தையும் தொடங்குகிறார்கள். பிரம்மாவின் சிலையினைப் பாங்காக் மாரியம்மன் கோயிலிலும் காணலாம்.

பரம்பனன் கோயிலை ஒட்டி ஓர் அழகிய சிற்றோடை ஓடுகின்றது. இந்த ஓடையில் கைகால் கழுவிக் கொண்ட பிறகே பக்தர்களும், உல்லாசப் பயணி களும் கோயிலுக்குள் செல்ல முடியும். இந்தப் பழக்கமும் தமிழ் நாட்டு வழக்கம் போலவே உளளது.

ஆண்டிற்கொருமுறை இந்தக் கோயிலை ஒட்டிய ஓர் இடத்தில் நிழ லாட்ட நிகழ்ச்சியை உல்லாசப் பயணி களுக்காக நடத்திக் காட்டுகின்றனர். இந்த நிழலாட்டத்தின் கதை இராமாய ணத்தை அடிப்படையாகக் கொண்டது.

சிற்சில சமயங்களில் மகாபாரதக் கதைகளையும் நிழலாட்டமாக நடித்துக் காண்பிப்பதுண்டு. இந்த இராமாயணத்திற்கும் வால்மீகி இயற்றிய இராமயணத்திற்கும் நிறைய வேறுபாடு உள்ளது. எனினும் இந்தோனேசிய வரலாற்றுப் பேரறிஞர்களில் சிலர், தம் நாட்டு இராமாயணக்கதை தென்னகத்திலிருந்து வந்ததாக நம்புகின்றனர். அதுபோலவே ஜாவா மக்கள் மத்தியில் பரவலாக உள்ள கோல் சுழற்றுதலும் மற்பயிற்சியும், இசை நுணுக்கங்களும் படிக் (Batik) எனப்படும் சித்திரம் தீட்டி துணிகளை உருவாக்கும் முறையும் தென்னகத்திலிருந்து வந்ததாக அறிஞர்களில் சிலர் நம்புகின்றனர். இத்துறைகளில் தமிழகத்தின் பங்கு எந்த அளவிற்கு உள்ளது என்பதனை அறிய முறையான ஆய்வு நிகழ்த்த வேண்டியது தமிழறிஞர் கடமையாகும்

ஜாகர்த்தா இந்தோனேசியாவின் தலைநகரான ஜாகர்த்தா, ஜாவாத் தீவில் உள்ளது. நான் இந்த நாட்டிற்குச் சென்ற சமயத்தில் இந்நகரத்தில் சுமார் அறுநூறு தமிழ்க் குடும்பங்கள் இருந்ததாக அறியமுடிந்தது இதனை உறுதி செய்யும் வண்ணம் இங்கு ஒரு கோயிலும் உள்ளது.

சில தமிழர்கள் கைத்தறி லுங்கிகளைத்தமிழகத்திலிருந்து வரவழைத்து இந்தோனேசியா முழுவதும் வியாபாரம் செய்து வந்தார்கள். மேலும் சிலர் 'படிக்' துணிகளை உருவாக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள். நாட்டுக் கோட்டை நகரத்துச் செட்டிமார்களில் சிலர் வட்டிக் கடைகளை நடத்தி வந்தனர்.

மேடான் கி.பி. 1619-ஆம் ஆண்டில் டச்சுக்காரர்கள் ஜாகர்த்தாவைக் கைப்பற்றி அந்த இடத்தில் படேவியா **(Batavia)** என்னும் நகரத்தை நிறுவினர். அதற்குப் பிறகு படிப்படியே இந்தோனேசியா முழுவதையும் தங்கள் ஆட்சிக்குக் கொண்டு வந்த தோடல்லாமல், லவங்கம், பட்டை, ஏலக்காய் போன்ற தாளிதப் பொருள் வணிகத்தையும் தங்கள் ஆதிக்கத்தின் கீழ்க் கொணர்ந்தனர். தாளிதப் பொருள் வணிகத்தைப் பிடிக்கவேண்டும் என்ற குறிக்கோளோடு வந்த டச்சுக்காரர்கள் தாம், முதன் முதலில் சுமத்திராவின் வடகிழக்கில், டேலி ஆற்றங்கரையில் (DELI RIVER) அமைந்த மேடானில் புகையிலை, ரப்பர் இவைகளை வணிக நோக்கத்தோடு பெருமளவில் பயரிடத் தொடங்கினர். இந்தத் தோட்டங்களில் வேலை செய்வதற்காகப் பத்தொன்ப தாம் நூற்றாண்டில் பல தமிழர்களைக் கூலிகளாகக் கொண்டு வந்தனர். அவ்வாறு தோட்டக் கூலிகளாக வந்த தமிழர்களின் வம்சாவளியினர் தாம் இன்று மேடானில் நிறைந்துள்ளனர். மேலும் சுமத்திராவில் ரயில் பாதை போடத் தொடங்கிய போதும் தமிழர்கள் சிலரைக் கூலிகளாகக் கொண்டு வந்தனர் என மேடான் வாழும் தமிழர்களில் சிலர் கூறினர். இந்த ரயில் பாதையின் முக்கிய சந்திப்பும் முடிவும் மேடான் தான்.

மேடானில் 1972-ஆம் ஆண்டில் ஏறக்குறைய 50,000 தமிழர்கள் இருந்ததாக மாரியம்மன் கோயிலின் அறங்காவலர் ஒருவர் கூறினார். இந்த எண்ணிக்கையை ஏற்கவோ மறுக்கவோ முடியாது. ஏனெனில் நான் மேடானில்

எத்தகைய கள ஆராய்ச்சியினையும் மேற்கொள்ளவில்லை. இருப்பினும் மேடானில் உள்ள கோயில்களைப் பார்க்கும் போது இங்குள்ள தமிழர்களின் தொகை ஐம்பதாயிரத்திற்கும் அதிகமாகவே இருக்கவேண்டும் என்று ஊகிக்க இடமுள்ளது

1877-ஆம் ஆண்டு சுமத்திரா-டெலி பகுதியில் முதன்முதலில் ஸ்ரீ தெண்டாயுத பாணி கோயிலைத் தமிழர்கள் கட்டினார்கள். அதை அடுத்து இந்த நகரிலேயே 1884-ஆம் ஆண்டிலும், 1912-ஆம் ஆண்டிலும், முறையே ஸ்ரீ மகாமாரி அம்மன் கோயிலையும், ஸ்ரீ காளியம்மன் கோயிலையும் நிறுவினர். 1923-ஆம் ஆண்டில் பிஞ்சை என்னும ஊரில் ஓர் மாரியம்மன் கோயிலையும், 1925-ஆம் ஆண்டில் லுபுக்பாக் என்னும் பட்டினத்தில் ஸ்ரீ தெண்டாயுத பாணி கோயிலையும் கட்டி முடித்தனர். இவை தவிர வட சுமத்திராவில் உள்ள சிற்றூர்களில் பல கோயில்கள் இருப்பதாக அறிந்தேன்.

மேடானில் உள்ள தமிழர்கள் பலர் இன்னும் ரப்பர் தோட்டத் தொழிலாளிகளாகவே உள்ளனர். ஒரு சிலர் நன்றாகப் படித்து முன்னேறி அரசாங்க அலுவலில் உள்ளனர்,

வடசுமத்திராவில் உள்ள தமிழர்களில் சிலர் கைலித்துணிகளை விற்பனை செய்வதாக அறிந்தேன். வேறு சிலர் "படிக் எனப்படும் சித்திரங்கள் தீட்டப் பெற்ற ஆடைகளை உற்பத்தி செய்யும் தொழிற் சாலைகளை நடத்துவதாகக் கேள்விப்பட்டேன். நாட்டுக்கோட்டைச் செட்டிமாரில் பலர் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள தோடல்லாமல், ஒரு சிலர் வட்டித் தொழிலையும் செய்து வருவதை மேடானில் கண்டேன்.

மேடானில் உள்ள தமிழர்களைப் பற்றி முறையான ஆராய்ச்சியினைச் செய்ய வேண்டிய கடமை தமிழ் அறிஞர்களுக்குண்டு.

பொதுவாக இந்தோனேசியாவில் தமிழகத்தின் தாக்குறவைத் தெளிவாக அறிய வேண்டுமானால், தமிழறிஞர்கள் இந்த நாட்டில் கள ஆராய்சிச்சியினை முறையாகச் செய்யவேண்டும். இந்த ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்க்கு இந்தோனேசிய டச்சு மொழியிலும், வட மொழியிலும்நல்ல புலமை வேண்டும்; இது மிக இன்றியமையாதது. அதோடு தமிழ் நாட்டுக் கலைகள் பற்றிய ஆழ்ந்த அறிவும், தெளிவான வரலாற்று அறிவும்இருக்க வேண்டும். அப்போது தான் இந்தோனேசியாவில் உள்ள கோயில்களையும், கலைகளையும், சிற்ப சித்திரங்களையும் தமிழகத்திலுள்ள வைகளோடு ஒப்பிட்டு உண்மையை அறிய ஏதுவாக இருக்கும்.

Notes

For a study on Indonesia and South East Asia refer the following standard works:

1) J.F. Cady, *South east Asia: Its Historical Development*, New York, 1964.

2) G. Coedes, *The Making of South East Asia*, California, 1966.

3) D.H.G. Dobby, *South East Asia* London, 1948.

4) Charles Eliot, *Hinduism and Buddhism*, 3 Vols., London, 1921.

5) D.G.E. Hall, *The History of South East Asia*, London, 1955.

6) R. Le May, *The Culture of South East Asia*, London, 1958.

7) K.A.N. Sastri, *South Indian influences in the Far East*, Bombay, 1949.

8) Leur Van, *Indonesian Trade and Society*, The Hague, 1955.

9) H.G.Q. Wales, *The Making of Greater India*, London, 1961.

சேசெல் தமிழர்கள்

ஈ. ச. விசுவநாதன்

நைஜீரியாவில் உள்ள சொகோடோ பல்கலைக்கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, ஆஸ்திரேலியா விற்குச் செல்ல வேண்டிய அவசியம் 1980ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் எனக்கு ஏற்பட்டது. அந்த வாயப்பைப் பயன்படுத்திக்கொண்டு, ஆப்பிரிக்கா கண்டத்தின் கிழக்குப் பகுதியில் உள்ள கீன்யாவில் (Kenya) இரண்டு வாரங்கள் தங்கி அந்த நாட்டைச் சுற்றிப் பார்த்தேன். அதற்குப் பிறகு சேசெல் (Seychelles) தீவுகளில் நான்கு நாட்களும், மரிசியஸ் (Mauritius) தீவில் இரண்டு வாரங்களும் தங்கி அந்த நாடுகளைச் சுற்றிப் பார்த்ததோடு அல்லாமல் முறையாகக் குறிபபுகளை யும் எழுதி வைத்தேன்.

சேசெல் தீவுக்கூட்டங்களில் மிக முக்கியமான தீவுகளான மாஹி (Mahe) பிரஸ்லா (Praslin), லடீக் (Ladigue) போன்ற தீவுகளைச் சுற்றிப் பார்த்தேன். அப்போது மாஹியில் வணிகம் செய்து வந்த ம. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்களுடன் சில மணிநேரம் பேசிய பேச்சின் மூலம் பெற்ற கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டும் கிலுயோனே[1] (Guy Lionnet) என்பவர் எழுதிய **சேசெல்** *(The Seychelles)*, **சேசெல்லின் சுருக்கமான வரலாறு** (*A Short History of Seychelles*) என்னும் இரு நூல்களின் துணைகொண்டும், இத்தீவுகளை அமைதியாகச் சுற்றிப் பார்த்த என் சொந்த அனுபவத்தைக் கொண்டும் இந்தக் கட்டுரையினை எழுதியுள்ளேன்.

சேசெல்லில் வாழும் தமிழர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. அவர்களில் பலர் வணிகத் துறையில் ஈடுபட்டுச் செல்வாக்கோடு வாழ்கின்றனர். ஒரு சிலர் கல்வித்துறையிலும், அரசாங்கத் திலும் பணிபுரிகிறார்கள். இத்தமிழர் களில் பெரும்பான்மையானோர் இந்தியாவோடு நெருங்கிய தொடர்பு கொண்டு வாழ்கின்றனர். இத்தொடர்பு 1971 ஆம் ஆண்டிற்குப் பிறகு மிகவும் அதிகமாக வலுவடைந்துள்ளது, இதற் கான காரணங்களைப் பிறகு காண் போம்.

இந்தக் கட்டுரையில் சேசெல் பற்றி அறிய வேண்டிய முக்கிய தகவல்கள்

யாவற்றையும் குறிப்பிட்டுள்ளேன். அதோடு இந்நாட்டின் சுருக்கமான வரலாற்றையும், மக்களின் வாழ்க்கை முறையினையும் இயற்கை வளத்தையும் தெளிவாகக் கூறியுள்ளேன்.

கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ள மொம்பாசாவிற்கு (Mombasa) ஆயிரம் மைல் கிழக்கிலும்; மடகாஸ்கருக்கு (Madagascar) அறுநூறு மைல் வடகிழக்கிலும் 92 தீவுகள் அடங்கிய கூட்டம் ஒன்று (Seychelles Bank) இந்துமாக்கடலில் உள்ளது[2]. இதன் பெயர் சேசெல் (Seychelles) என்பதாகும். இதனைச் சிசேல்ஸ், செசெல்ஸ், சீசெல்ஸ் எனப் பலவகையாக் கூறுகிறார்கள். "Seychelles" என்னும் பிரெஞ்சு மொழிச் சொல்லைச் சேசெல் (Se-shel) என உச்சரிக்க வேண்டும்.

பூமத்திய ரேகைக்குத் தெற்கில் அமைந்துள்ள இத்தீவுகளில், தென் கிழக்கு, வடமேற்கு என்னும் இரு பருவக் காற்றுகளும் வீசுவதால் ஆண்டொன்றிற்குத் தொண்ணூறு அங்குலத்திற்கு மேல் மழைபெய்கிறது.

வரலாற்றிற்கு எட்டாத காலத்தில் ஆப்பிரிக்கா கண்டமும், ஆசியா கண்டமும் இணைந்திருந்ததாகவும், அந்த இணைப்பை நினைவூட்டும் வகையில் இந்துமாக்கடலில் சிதறியுள்ள தீவுகளின் கூட்டங்களில் சேசெல் கூட்டமும் ஒன்றாகும் என அறிஞர்கள் கருதுகிறார்கள். இந்தக் கூட்டம் அறுநூறு மைல் வரையில் இந்துமாக்கடலில் பரவியுள்ளது. இத்தீவுக் கூட்டங்களில் முப்பத்தேழு பாறைகளால் ஆனவை; பிற பவழத் தீவுகள். இவைகளில் மாஹியும், பிரஸ்லாவும் மிகப் பெரிய தீவுகள் இவ்விரு தீவுகளில் தான் பெரும்பான்மையான மக்கள் வாழ்கிறார்கள். மாஹிக்கு அருகில் உள்ள செயின்ட் ஆன் (St. Anne), சர்ப் (Cerf Is) போன்ற தீவுகளிலும், பிரஸ்லாவை ஒட்டியுள்ள குறியோஸ் (Curicuse Is.), கூசா (Cousin I.) போன்ற தீவுகளிலும் ஒரு சில மக்கள் வாழ்கிறார்கள்.

Map I Seychelles Bank





இத்தீவுகளின் மொத்த நிலப்பரப்பு 171 சதுர மைல்களாகும். இவைகளில் மாஹித் தீவின் பரப்பளவு மட்டும் 57 சதுர மைல். எந்த இடத்திலும் இத்தீவின் அகலம் ஐந்து மைல்களுக்கு மேலில்லை. இதன் நடுப்பகுதியில் ஒரு சிறு மலைத் தொடர் உள்ளது. அது மூவாயிரம் அடிவரை சில இடங்களில் உயர்ந் துள்ளது. இதனால் மாஹி உருவத்தில் மிகப்பெரிய தீவு போன்ற உருவெளித் தோற்றத்தை உண்டாக்குகிறது.

மாஹியில் தான் சேசெல்லின் தலைநகரமான விக்டோரியா உள்ளது, இதுவே நாட்டின் மிகப் பெரிய நகரமும் துறைமுகப் பட்டினமும் ஆகும். இங்குத் தான் 1971-ஆம் ஆண்டில் கடலைத்தூர்த்து ஒரு அழகிய விமான நிலையத்தை உருவாக்கியுள்ளனர். நாட்டின் மக்கள் தொகையில் ஏறக் குறைய இருபத்தைந்து சதவிகிதத்தினர் இந்த நகரத்தில் தான் வாழ்கின்றனர்.

மாஹிக்கு இருபத்து நான்கு மைல் வடகிழக்கில் பிரஸ்லா தீவு உள்ளது. இத்தீவின் நடுப் பகுதியிலும் உயர்ந்த மலைஒன்றுண்டு. வெண்மலர் பரப்பியது போன்ற அழகிய கடற்கரையினை உடைய இத்தீவைச் சுற்றிப் பல சிறுதீவு கள் உள்ளன. அவைகளில் மிகவும்சிறப் பானது லடீக் என்பதாகும். பணவசதி படைத்த உல்லாசப் பயணிகள் ஒரு சிலர் வந்து தங்கும் பேறுபெற்ற தீவாகவும் இது விளங்குகின்றது.

வரலாறு முதன் முதலில் அராபியர்கள் சேசெல் தீவுகளைக் கண்டிருக்கிறார்கள்; ஆனால் இவைகளில் தங்குவதற்கான எந்த முயற்சியையும் அவர்கள் மேற் கொள்ளவில்லை. அதேபோல் ஐரோப்பா விலிருந்து இந்தியாவிற்கு வரக் கடல் வழியைக் கண்ட போர்த்துகீசிய மாலுமி யாகிய வாஸ்கோடகாமாவும் கி.பி. 1502 ஆம் ஆண்டில் சேசெல் தீவுகளுக்குத் தெற்கில் உள்ள அமிரெண்டஸ் (**Amirantes**) தீவுகளைப் பார்த்திருக்கிறார்; ஆனால் அவரும் சேசெல் தீவுகளை அடைந்ததாகக் குறிப்பில்லை. இத் தீவுகள் யாவும் கடல் போக்கு வரத்துப் பாதையை விட்டு விலகியிருப்பதால், பதினாறாம் நூற்றாண்டு இறுதிவரை எந்தமேனாட்டவரின் பார்வைக்கும் சிக் காமல் இருந்தன. கி. பி. 1609-ஆம் ஆண்டில் ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியைச்சார்ந்த அலெக்ஸாண்டர் செர்பே (**Alexander Sharpeigh**) என்பவர் உணவுப் பொருளைநாடி இத்தீவுகளை அடைந்ததாக அறிகிறோம். இங்கே அவர்களுக்கு வேண்டிய பழங்களும், ஆமையின் சுவையான இறைச்சியும், தெளிந்த நீரும் கிடைத்த காரணத் தினால் பல வாரங்கள்தங்கிச் சென்ற தாகவும் குறிப்புகள் உள்ளன. எனினும் செர்பே இத்தீவுகளை இங்கிலாந்தின் காலனியாக்க எத்தகைய முயற்சியையும மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

இத் தீவுகளைக் காலனியாக்கும் முயற்சியில் முதன் முதலில் ஈடுபட்ட வர்கள் பிரெஞ்சுக்காரர்களே யாவர். பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்து மாக்கடலில் பிரஞ்சுக்காரர்களுக்கு மரிசியஸ், ரீயூனியன் (**Reunion**) என்னும் தீவுகள் காலனிகளாக இருந்தன அவைகளின் ஆட்சிப் பொறுப்பு பிரெஞ்சுக் கிழக் கிந்தியக் கம்பெனியின் கையிலிருந்தது. அப்போது அக்கம்பெனியின் ஆளுநராக இருந்த மாஹி தே லபுர்டோனே (**Mahe de Labourdonnais**),



குகு-டி-மேர் மரமும், ஆமையும் அமைந்த நாட்டுச்சின்னம்.

கி.பி. 1742-ஆம் ஆண்டிலும், கி.பி 1744-ஆம் ஆண்டிலும் லசார் பிகோ (Lazare Picault) என்பவரின் தலைமையின் கீழ் கப்பற்படை ஒன்றை அனுப்பி, இத்தீவுகளைப் பார்வையிட்டு வரும்படி கூறினார். அவர் சேசெல் தீவுக் கூட்டங்களில் பெரியதாயுள்ள தீவிற்கு ''மாஹி'' எனத் தன் தலைவரின் பெயரையே வைத்தார். அதேபோல் இத்தீவை ஒட்டி அமைந்த வளைகுடாவிற்கு ''லசார் பே'' (BAIE LAZARE) எனத் தன் பெயரையே இட்டார். பிகோவைத் தொடர்ந்து இத்தீவுகளுக்கு அவ்வப்போது வந்த பிரெஞ்சு மாலுமிகள், இங்குக் கண்ட பல இடங்களுக்குப் பிரெஞ்சுப் பெயர்களையே வைத்தனர். அது போலவே பதினைந்தாம் லூயியின் நிதி நிர்வாக அதிகாரியாக இருந்த விகாண்ட் மொரேடு கேசல் (Vicomte Moreau de Seychelles) என்பவரின் பெயரையே இத்தீவுக் கூட்டத்திற்கிட்டார். இதற்குப் பிறகு இதனைச் சேசல் என அழைக்க ஆரம்பித்தனர். ''சர்ப்'' என்னும் பிரெஞ்சுக் கப்பலின் பெயரே மாஹிக்கு அருகில் உள்ள தீவின் பெயராயிற்று; பிரெஞ்சுப் பாதிரியான ஆன் என்பவரின் பிறந்த நாளன்று, முதன் முதலாகக் கரையேறிய ஒரு தீவிற்கு — மாஹிக்கு அருகில் உள்ள தீவிற்கு– செயின்ட் ஆன் எனப் பெயர் இட்டனர். இதே போல் இத்தீவுக் கூட்டங்களில் உள்ள எல்லாத் தீவுகளுக்கும், வளைகுடாக்களுக்கும், நதிகளுக்கும், பிற முக்கிய இடங்களுக்கும் பிரெஞ்சுப் பெயர்களையே வைத்தனர்.

பிரெஞ்சுக்காரர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் இடையில் இருந்த வியாபாரப் போட்டியே சேசெல்லைப் பிரெஞ்சுக் காலனியாக்க, மரிசியஸிலிருந்த பிரெஞ்சு அதிகாரிகளைத் தூண்டியது. அதற்கிணங்க கி.பி. 1756-ஆம் ஆண்டில் நிகலாஸ் மர்பி (Nicolas Morphey) ஒரு கப்பற்படையுடன் சேசெல் சென்று அத்தீவுகளை முறைப்படி பிரெஞ்சு காலனியாக்கினார். பிரெஞ்சு நாட்டுரிமையை நிலைநாட்டும் வண்ணம், தற்போதுள்ள விக்டோரியா துறைமுகத்துக்கருகில் பிரான்ஸ்நாட்டுச் சின்னம் பதித்தநடுகல் ஒன்றனை ஊன்றினார். எனினும் ஐரோப்பில் நடந்து வந்த ஏழாண்டுப் போரில் (1756-1763) பிரான்ஸ் முழு மூச்சுடன் ஈடுபட்டிருந்த காரணத்தினால், இத்தீவுகளில் பிரெஞ்சுக்காரர்களைக் குடியேற்றும் முயற்சியில் மரிசியஸ் அதிகாரிகள் அதிக அக்கறை காட்டவில்லை. இந்த ஏழாண்டுப் போர் முடிந்த பன்னிரெண்டு ஆண்டுகளுக்குப் பிறகு லடீக், லா குரியோஸ் என்னும் இரு கப்பல்களின் மூலம் சேசல் அடைந்த பிரெஞ்சுக்காரர்கள், இத்தீவுகளைப் பிரெஞ்சுக் காலனியாக்கியதற்கு அறிகுறியாகப் பிரஸ்லா தீவில் உள்ள ஆன்ஸ் பொசசன் (Anse Possession) என்னும் சிறிய வளைகுடாவின் கரையோரத்தில் நடுகல் ஒன்றனை மறுபடியும் நாட்டினர். இதே சமயத்தில் மரிசியஸ் தீவிலிருந்த சில பிரெஞ்சுக் குடிமக்களை இத்தீவுகளில் குடியேற்றும் முயற்சியில் ஈடுபட்டனர்.[4]

முதன் முதலில் குடியேறியவர்கள் பிரெஞ்சுக்காரர்களே முதன் முதலில் இத்தீவுகளில் வியாபார நோக்கத்தோடு குடியேறினர். இவ்வாறு குடியேறியதற்கான காரணங்கள் நிறைய உண்டு. இத்தீவுகளில் கப்பல் கட்டுவதற்கான மரங்கள் பல மலிந்திருந்தன. குகு டி மேர் (Coco-de-mer) என்னும் பழத்தை விலைமதிப்பற்ற

புதுமைப் பொருளாகக் கருதி ஆப்பிரிக்காவிலும், ஆசியாவிலும் இருந்த சுல்தான்கள் பெருவிலை கொடுத்து விரும்பி வாங்கினர். பிரான்ஸின் காலனித்துவ அதிகாரியான பியர் புவார் Pierre Poivre) என்பவர் இத்தீவுகளில் ஏலக்காய் கிராம்பு, பட்டை, இலவங்கம் போன்ற தாளிதப் பொருள்களை விளைவிக்க முடியும் என்று நம்பினார். அவருடைய கனவை நினைவாக்க எண்ணிய பிரயே ஜீபார் (Brayer du Barre) என்பவர் கி.பி. 1770-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 27-ஆம் தேதி முப்பது பேருடன் செயின்ட் ஆன் என்னும் தீவை வந்தடைந்தார். இவ்வாறு வந்தவர்களில் பெரும்பான்மையானோர் ஆப்பிரிக்க அடிமைகள்; ஒரு சிலர் பிரெஞ்சு மேற்பார்வையாளர்; ஒரு மருத்துவர் ஒரு சில கம்மியர். இவரைப் போலவே வேறொரு பிரெஞ்சுக்காரரும் பல மாடுகளையும், கோழிகளையும், விவசாயம் செய்வதற்கான விதைகளையும் எடுத்துக் கொண்டு மாஹியில் குடியேறினார். இவ்வாறு குடியேறியவர்களிடம் விவேகத்தை விட முரட்டுதனமான நம்பிக்கை மட்டும் இருந்த காரணத்தினால் அவர்களின் முதல் முயற்சி வெற்றிபெறவில்லை.

எனினும் பியர் புவாரும் அவர்களுடைய நண்பர்களும் சேசெல் தீவுகளில் தாளிதப் பொருள்களை விளைவிக்க முடியும் என்னும் தங்கள் நம்பிக்கையைக் கைவிட வில்லை. ஆண்டுவான் ஜிலோ (Antoine Gillot) என்பவர் மாஹியின் கிழக்குக் கரையில் உள்ள ஆனஸ் ரோயால் (Anse Royal) என்னுமிடத்தில் மிளகு, ஏலக்காய், இலவங்கம் போன்ற பொருள்களை விளைவிக்க முயன்று அதில் வெற்றி பெறாத காரணத்தினால் தன்னுடைய முயற்சியை 1780-ஆம் ஆண்டில் அறவே கைவிட்டு விட்டார். எனினும் இவர்களின் தொடக்க கால முயற்சியின் காரணமாகத் தான் இன்று சேசெல்லில் இலவங்கப்பட்டை உற்பத்தி விரிவாக நடைபெறுகின்றது. இதனால் தான் இந்நாட்டு மக்கள் இன்று பியர் புவாரை, "இலவங்கப்பட்டை தொழிலின் தந்தை" எனக் குறிப்பிடுகின்றனர்.

சேசெல் தீவுகளில் மக்களை நிரந்தரமாகக் குடியேற்ற இயலுமா என்பது பற்றி விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், பிரெஞ்சு இராணுவம் இத்தீவுகளை எடுத்துக்கொண்டு, லுடினோ டு ரோமேவீல் (Lieutenant de Romainville என்பவரின் தலைமையில் ஆட்சி புரியத் தொடங்கியது. அவருக்குப் பின்வந்த கவர்னர்கள் பிரெஞ்சுக்கப்பல்களுக்குத் தேவைப்படும் உணவுப் பொருள்களை இத்தீவுகளில் விளைவிக்கத் தொடங்கினர். அதோடு வெளிநாட்டு வியாபாரத்திற்காக இத்தீவுகளில் வளர்ந்திருந்த மரங்களையும், ஆமைகளையும் பெருவாரியாக ஏற்றுமதி செய்ய ஆரம்பித்தனர். இத்தகைய வரையறையற்ற ஏற்றுமதியைத் தடுக்கவும், நாட்டின் இயற்கை வளத்தைக் காக்கவும லூயூ டி மலவோய் (Louis de Malavois) என்னும் கவர்னர் சில சட்டங்களைக் கொண்டு வந்தார். கி.பி. 1794 ஆம் ஆண்டு முதல் இந்த நாட்டைச் சிறப்பாக ஆட்சி புரிந்த கவர்னர், ஜோன் பாப்டீஸ்ட கோடுகுவன்ஸி (Jean Baptiste Queau de Quincy) ஆவார்.

டுகுவன்ஸி சேசெல்லை ஆளத் தொடங்கிய காலத்திலேயே ஆங்கிலே

யர்கள் இத்தீவுகலள அடைந்தனர். இவருடைய காலத்தில் தான் இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும் ஐம்ராப்பாவில் போர் நடந்து கொண்டிருந்தது. கி.பி. 1794-ஆம் ஆண்டு மே மாதம் ஐந்து ஆங்கிலப்போர்க் கப்பல்கள் 1,200 வீரர்களுடனும், 162 பீரங்கிகளுடனும் சேசெல் அடைந்த காரணத்தினால், டுகுவன்ஸி அவர்களுக்குப் பயந்து சரணடைந்ததோடு அல்லாமல் நாட்டையும் ஆங்கிலேயர்களுக்கு உரிமையாக்கினார். மரிசியஸிலிருந்த பிரெஞ்சு அதிகாரிகள இதனை அறிந்ததும் டுகுவின்ஸிக்கு உதவி செய்யக் கப்பற்படை ஒன்றினை அனுப்பினர். இப்படையை ஆங்கிலேயர் முறியடிதத தோடல்லாமல் சில பிரெஞ்சுக்காரர்களையும், ஆப்பிரிகக அடிமைகளையும் சிறைப் பிடித்தனர். எனினும் ஆங்கிலேயர்கள் இத்தீவுகளில் நிரந்தரமாகத் தங்கி ஆட்சிபுரிய எண்ணவில்லை. இரண்டு வாரங்கள் இங்குத் தங்கிய பிறகு, மேற்கொண்டு செய்ய வேண்டிய பிரயாணத்திற்கு வேண்டிய உணவுப் பொருள்களைச் சேர்த்துக் கொண்டு, எநத ஆங்கில வீரர்களையும் இத்தீவில் காவலுக்கு வைக்காமல் அவர்கள் வந்த வழியே திரும்பினர். ஆங்கிலேயரின் தலை மறைந்தவுடன் டுகுவன்ஸி மறுபடியும் இத்தீவுகளைப் பிரான்ஸின் அதிகாரத்திற்குட்பட்ட காலனியாகவும் ஆங்கிலேயர் வரும்போது அவர்களுக்குரிய காலனி எனவும் கூறிக்கொண்டு, கி.பி. 1809-ஆம் ஆண்டு வரை இத்தீவுகளை ஆட்சிபுரிந்து வந்தார்.

கி.பி. 1810-ஆம் ஆண்டு மரிசியஸ் இங்கிலாந்தின் காலனியாயிற்று. இதனால் மரிசியஸின் அதிகாரத்திற்குட்பட்டிருந்த சேசெல் தீவுகளும் இங்கிலாந்தின் ஆட்சிக்குட்பட்ட காலனியாக மாறவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனால் வேறு வழியின்றி டுகுவன்ஸியும் நிரந்தர மாறுதல் ஒப்பந்தத்தை ஆங்கிலேயர்களுக்கு எழுதிக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்குப பிறகு லெப்டினெணட் பார்த்தலோமியோ சலிவன் (Lievteranı Bartholomew Sullivan) என்பவர் இத்தீவுகளின் முதல் பிரிட்டிஷ் தளபதியானார். எனினும் டுகுவன்ஸியின் ஆட்சித் திறமையை மெச்சிய ஆங்கிலேயர்கள் அவரிடம் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தனர்.

நெபோலியனின் ஐரோப்பியப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த பாரிஸ் உடன்படுக்கையின் படி,[5] மரிசியஸ், சேசெல் என்பவை பிரிட்டிஷ் காலனிகளாயின. எனினும் ஆங்கிலேயர் சேசெல்லில் அதிக நாட்டம் செலுதத வில்லை. ஆனால் இங்கு வாழ்ந்து வநத ஐரோப்பியத் தோட்ட முதலாளிகளும், அடிமைகளாக வேலை பார்த்து வந்த ஆபபிரிக்க வம்சாவளியினரும் நாட்டின் பொருளதாரத்தை விருத்தி செய்வதில் முனைந்தனர்.

கி.பி. 1835-ஆம் ஆண்டில் ஆப்பிரிக்க அடிமைகள் விடுதலை பெறுவதற்கான சட்டம் ஒன்று பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நிறைவேறியது. அச்சட்டத்தின்படி 1838-ஆம் ஆண்டு முதல் சேசெல்லில் வேலை செய்து வந்த அடிமைகள் யாவரும் விடுதலை பெற்றனர். இந்த விடுதலைக்குப் பிறகு இந்த நாட்டில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது.

விடுதலை பெற்ற ஆப்பிரிக்க வம்சாவளியினர் தங்கள் நாட்டின் இயற்கை

வளத்தைப் பேணத் தொடங்கினர். இம் முயற்சியில் பிரிட்டிஷ் அரசாங்கமும் ஒத்துழைத்தது. கி.பி. 1840–ஆம் ஆண்டு முதல் அரசாங்கம் மர ஏற்றுமதியைப் பெருவாரியாகக் குறைத்தது; அது போலவே இறைச்சிக்காகப் பெருமளவில் ஆமைகளை ஏற்றுமதி செய்து வந்ததை யும் அறவே நிறுத்தி விட்டது. நாட்டிற்குத் தேவையான அந்நியச் செலாவணியைப் பெறுவதற்காக அரசாங்க அதிகாரிகளும், நாட்டு மக்களும் விவசாய வளர்ச்சியில் அதிகக் கவனம் செலுத்தினர். இதனால் விவசாயம் நாட்டின் மிக இன்றியமை யாத பெருந்தொழிலாக மாறியது. பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவுப் பொருள்களை விளைவித்த தோடன்றி ஏற்றுமதிக்காகத் தென்னந் தோப்புக்களை மக்களும், அரசாங்கமும் பெருமளவில் வளர்க்க ஆரம்பித்தனர். இதனுல் தேங்காய் எண்ணெய் ஏற்றுமதி பெருகியது. அதோடு தாளிதப் பொருள் களாகிய ஏலக்காய், இலவங்கம், பட்டை போன்றவைகளைப் பெருவாரியாகப் பயிர் செய்து அவைகளை ஏற்றுமதி செய்யவும் தொடங்கினர்.[5]

கி. பி. 1903-ஆம் ஆண்டில் சேசெல் பிரிட்டிஷ் முடியாட்சிக்குட்பட்ட காலனி யாக (Crown colony) மாறியது. பொருளா தார வளர்ச்சி மெச்சத் தக்க நிலையில் இல்லாத காரணத்தினால், இந்த நாடு முடியாட்சி காலனியாக மாறியதும் பிரிட்டிஷ் அரசாங்கத்திட மிருந்து உதவித்தொகை பெற்று நாட்டின் ஆட்சிப் பொறுப்பைக் கவனித்து வந்தது. இருப்பினும் மக்கள் எதிர்பார்த்த அளவிற்குப் பெரிய வளர்ச்சி யேதும் நாட்டில் ஏற்படவில்லை. பிரெஞ்சுக் காரர்களைப் போலவே, ஆங்கிலேயர் களும் இந்தக் காலனிக்கு அரசியல் கைதிகளை அஞ்ஞான வாசம் செய்ய அனுப்பிவைத்தனர். அவர்களுள் மிக முக்கியமானவர் தற்போது சைபிரஸின் தலைவராக உள்ள மகாரியோஸ் (Makarios) ஆவார். இவர் 1956-ஆம் ஆண்டில் சேசெல்லில் அரசியல் கைதியாகச் சில காலம் தங்கி இருந்தார்.[6]

இருபதாம் நூற்றாண்டின் முற் பகுதியில், பல அரசியல் கட்சிகள சேசெல்லில் தோன்ற ஆரம்பித்தன. காலப்போக்கில் மக்களாட்சி முறை நாட்டில் மெல்லக் கால்கொள்ள ஆரம்பித்தது. மக்களால் தேர்ந்தெடுத்கப் பட்ட முதல் மந்திரி சபை 1948-ஆம் ஆண்டில் அமைந்தது. பிரிட்டிஷ் அரசாங்கம் தன் உரிமையையும் அரசியல் ஆதிக்கத்தையும் வெளிப் படுத்தும் வகையில் கவர்னர் ஒரு வரையும், படைத்தளபதி ஒருவரையும் நியமிக்கும் உரிமை பெற்றது,

இநத நாட்டின் உண்மையான அரசியல் வளர்ச்சியும், பொருளாதார வளர்ச்சியும் 1960–ஆம் ஆண்டு முதல் தொடங்க ஆரம்பித்தது. 1970–ஆம் ஆண்டில் நாடு புதிய அரசியல் சட்டத்தைப் பெற்றது. அதனால் பதி னெட்டு வயதிற்கு மேற்பட்ட யாவரும் வாக்குரிமை பெற்றனர்; மக்களால் தேர்ந்தெடுக்கபட்ட பிரதிநிதிகள் பெருவாரியாக உள்ள ஆட்சிக் குழு ஒன்று அமைந்தது. 1975-ஆம் ஆண்டு அக்டோபர் முதல் தேதி முதல் நாட்டில் தன்னாட்சி முறை அமைந்தது. அதற் கடுத்த ஆண்டு ஜூன்மாதம் 28 - ஆம் தேதி சேசெல் முழு அரசியல் விடுதலை பெற்ற நாடாயிற்று.

1971-ஆம் ஆண்டில் தான் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான வழி வகைகளைக் காணுவதில் அரசாங்கம் தன் முழுகவனத்தையும் செலுத்த ஆரம்பித்தது. இந்த ஆண்டில் தான் கடற்கரையை ஒட்டிய மலையின் ஒரு பகுதியை வெட்டிக் கடலைத் தூர்த்து 230 ஏக்கரில் போயிங்-747 விமானங்கள் இறங்கத் தக்க விமான நிலையத்தைக் கட்டி முடித்தனர். விண்ணைமுட்டும் மலைக்கும், நீலக்கடலுக்கும் இடைப் பட்ட செயற்கையான நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த விமான நிலையம், இயற்கைச் சூழலோடு அமைந்து இந் நாட்டிற்கு வரும் பயணிகளின் உள்ளத்தைக் கவர்ந்து வருகிறது. இந்த விமான நிலையத்தைக் கட்டி முடித்த பிறகு, பல நாடுகளிலிருந்தும் உல்லாசப் பயணிகள் வந்து குவிய ஆரம்பித்து உள்ளனர். நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் இதனால் பெருகிவருகிறது. நாடு முழுவதிலும் பயணிகள் தங்கு வதற்கான விடுதிகளும். ஓட்டல்களும் பெருக ஆரம்பித்துள்ளன. அதே சமயத் தில் நாட்டின் இயற்கை அழகையும் வளத்தையும் காக்கும் முயற்சியில் அரசாங்கமும், மக்களும் ஈடு பட்டு, இந்த நாட்டை இந்து மாக்கடலில் உள்ள ஒரு தெய்வலோகமோ எனக் கூறும்படி மாற்றி வருகின்றனர்.

பிரான்சின் தாக்கம் சேசெல் ஏறக்குறைய 160 ஆண்டுகள் ஆங்கிலேயர்களின் ஆட்சியிலிருந்தது. இந்நாடு பிரான்சின் ஆதிக்கத்தில் இருந்த காலம் 40 ஆண்டுகளே யாகும். எனினும் இத்தீவு களில் பிரெஞ்சு மொழி, பண்பாடு இவைகளின் தாக்கத்தைப் பரவலாகக் காணலாம்.

நாட்டின் பெயரும், இந்நாட்டிலுள்ள பல இடப்பெயர்களும் பிரெஞ்சுப் பெயர் களே யாகும். இந்நாட்டு மக்கள் பெரு வாரியாகப் பேசும் கிரியோல் (Creole) மொழி பிரெஞ்சுக் கிளைமொழி ஒன்றி லிருந்தே உருவானது. ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருந்த போதிலும், மக்களின் பேச்சு மொழியாக உள்ளது கிரியோல் ஆகும். பிரெஞ்சு மொழி நாட்டின் இரண்டாவது மொழியாக உள்ளது. மக்களின் பழக்க வழக்கங்கள் பலவற்றில் பிரெஞ்சுப் பண்பாட்டின் தாக்கத்தைத் தெளிவாகக் காணலாம். அதேபோல் நாட்டின் சட்ட திட்டங்கள் பலவற்றில் நெபோலியன் உருவாக்கிய சட்டத்தின் (Code of Napoleon) சாயலைப் பரக்கக் காணலாம்.

மக்களும் வாழ்க்கையும் இந்த நாட்டின் மக்கள் தொகை 1,50,000 ஆகும். இதில் இருபத்தைந்து சதவிகிதத்தினர் நாட்டின் தலைநகரான விக்டோரியாவிலேயே வாழ்கின்றனர். மற்றவர்களில் பெரும் பான்மையானோர் கடற்கரையை ஒட்டி அமைந்துள்ள சிற்றூர்களிலும், கிராமங் களிலும் வாழ்கின்றனர். இவர்கள் வாழும் குடிசைகள் மிகவும் எளிமை யானவை ; பனை ஓலை வேய்ந்த கூரை களை உடையவை. இந்தக் குடிசைகளின் உள்ளும் புறமும் எப்போதும் மிகத் தூய்மையாகவே இருக்கும். சமையலைப் பெரும்பாலும் இம்மக்கள் வீட்டிற்கு வெளியிலேயே செய்கின்றனர். ஒவ் வொரு குடிசையைச் சுற்றிப் பெரும் பாலும் தோட்டம் ஒன்றுண்டு. இத் தோட்டத்தில் தம் அன்றாடத் தேவைக் கான காய்கறிகளை இந்த மக்கள் பயிரிடுகிறார்கள். பெரும்பாலும் ஒவ் வொரு குடிசையைச் சுற்றிக் குறைந்தது

பத்துப் பன்னிரெண்டு தென்னை மரங்களாவது இருக்கும். நிறைய தென்னை மரங்கள் ஒருகுடிசையைச் சுற்றியிருந்தால், அவைகளில் சிலவற்றை அரசாங்க அனுமதியுடன் கள் இறக்குவதற்குப் பயன்படுத்துகிறார்கள். தென்னங் கள்ளைக் கிரியோல் மொழியில் "களோ' எனக் கூறுகின்றனர். தம் சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்தியது போக எஞ்சியுள்ள கள்ளை இம் மக்கள் விற்கவும் செய்கிறார்கள். இறைச்சிக்காகப் பன்றிகளையும், கோழிகளையும் ஒவ்வொரு குடும்பத்தினரும் நிறைய வளர்க்கிறார்கள்.

சேசெல் மக்களில் பெரும்பான்மையானோர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். இதில் கணிசமான தொகையினர் தங்கள் சொந்த நிலத்திலேயே தென்னை, வெனிலா, தாளிதப் பொருள்களாகிய ஏலக்காய், இலவங்கம், பட்டை போன்றவைகளைப் பயிரிடுகிறார்கள். சிலர் பெரிய விவசாயப் பண்ணைகளில் பணியாற்றுகிறார்கள்.

1971-ஆம் ஆண்டில், விமான நிலையம் கட்டியபிறகு, ஆயிரக்கணக்கான உல்லாசப் பயணிகள் ஆண்டு தோறும் சேசெல் வர ஆரம்பித்துள்ளனர். இவர்கள் தங்குவதற்குரிய ஓட்டல்களைக் கட்டுவதற்கும், பிறவசதிகளைச் செய்வதற்கும் நிறைய ஆட்கள் தேவைப் படுவதால், இங்கு வேலையில்லாத் திண்டாட்டம் பொதுவாக மக்கள் மத்தியில் இல்லை. பலர் தற்போது கொல்லத்துக்காரர்களாகவும், தச்சர்களாகவும், மோட்டார் ஓட்டிகளாகவும் ஓட்டல் தொழிலாளர்களாகவும் பணி புரிகிறார்கள்.

இந்த நாட்டின் பழங்குடி மக்களாக யாரையும் கூறுவதற்கில்லை. கி.பி. 1770-ஆம் ஆண்டில் இந்த நாட்டிற்கு வந்து குடியேறிய பிரெஞ்சுக்காரர்களையும், அவர்களுக்குத் துணையாக வந்த ஆப்பிரிக்க அடிமைகளையும் தான் இந்த நாட்டின் பழங்குடி மக்களாகக் கருத வேண்டும். இவர்களைத் தொடர்ந்து தொழில் நுட்ப வினைஞர்களாகவும், கடைக்காரர்களாகவும் இந்தியர்களும் சினர்களும் குடியேறினர். இந்தியாவிலிருந்து வந்தவர்களில் பெரும்பான்மையானோர் தமிழர்கள். இவர்களுக்குப் பிறகு அதிகாரிகளாகப் பல ஆங்கிலேயர்கள் இந்த நாட்டிற்கு வந்தனர்.

கொள்வினை கொடுப்பினை காரணமாக நிறைய இனக்கலப்பு இந்நாட்டு மக்களிடை நிகழ்ந்துள்ளது எனினும் தற்போது நிறத்தைக் கொண்டு இம் மக்களுடைய இனத்தை ஓரளவு தெளிவாகப் பிரித்தறிய இயலும்.

ஆப்பிரிக்க இனத்தின் தாக்குறவை இங்குள்ள கிரியோல் மக்களிடம் காண இயலும். ஆப்பிரிக்கப் பண்பாட்டை இந்நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களிலும், நம்பிக்கைகளிலும், கேளிக்கைகளிலும் தெளிவாகக் காணலாம். மோடி (Moutia) எனப்படும் சேசல் நடனம் ஒருவகை ஆப்பிரிக்க நடனமேயாகும். பறைபொலியின் பின்னணியோடு நடைபெறும் இந்த நடனம் மிக்க ஆரவாரம் உடைய காரணத்தினால் ஆண்டிற்கொரு முறை விக்டோரியாவில் நடைபெறும் கார்னிவெல்லின் (Carnival) போது மட்டும் இந்நிகழ்ச்சி நடக்கும். ஆனால் சிற்றூர்களிலும், கிராமங்களிலும்

பொதுவாகப் பண்டிகை நாட்களில் மக்கள் யாவரும் இந்நடனத்தை ஆடி மகிழ்வர்.

இதுபோலவே இந்நாட்டு மக்களிடம் பரவலாகக் காணப்படும் மூட நம்பிக்கைகளையும், ஆப்பிரிக்காவோடு தொடர்பு படுத்தலாம். மேற்கோளாகச் சேசல் மக்கள் கண் திருஷ்டியைப் போக்கக் கிரிஷ்—கிரிஷ் (Gris—Gris) என்னும் ஒருவகைத் தாயத்தை அணிந்து கொண்டு திரிவதைக் காணலாம். இது போன்ற ஒரு பழக்கத்தைக் கானாவிலும் (Ghana), நைஜீரியாவிலும் (Nigeria), கீன்யாவிலும் (Kenya), இதியோபியாவிலும் (Ethiopia) பரவலாக காண முடியும். மேலை நாட்டு மருத்துவரிடம் உள்ள நம்பிக்கையை விடக் காட்டில் உள்ள பொனாம் டு புவா (Bonhomme du Bois) என்னும் நாட்டு மருத்துவரிடம் நம்பிக்கை அதிகம். நோயைப் போக்க மந்திரதந்திரங்களோடு பல வகை மூலிகைகளையும் பயன் படுத்துவதால் இவர்களைச் "சூன்ய மருத்துவர்" என இந்நாட்டு மக்கள் அழைக்கின்றனர். நாட்டு மருத்துவரிடம் ஆப்பிரிக்க மக்களுக்குள்ள நம்பிக்கையை இன்றும் பரவலாக எல்லா ஆப்பிரிக்க நாடுகளிலும் காணலாம். நான் வாழ்ந்த ஆப்பிரிக்க நாடுகளாகிய சானா, நைஜீரியாவைத் தவிர சென்று பார்த்த லைபீரியா (Liberia), கீன்யா, இதியோபியா, டோகோ (Togo) போன்ற நாடுகளில் வாழும் மக்கள் "போமேர் என்று அழைக்கப்படும் நாட்டு மருத்துவரிடம் அதிக நம்பிக்கை வைத்துள்ளனர். மேலும் மக்கள் மத்தியில் உலவும் நாடோடிக் கதைகளிலும், ஆப்பிரிக்கப் பண்பாட்டின் தாக்கத்தை தெளிவாகக் காணலாம்.

இந்த நாட்டு மக்களில் பெரும்பான்மையானவர்கள் கத்தோலிக்கர்கள். இந்தியர்களில் பலர் இந்துக்களாகவும், சீனர்களில் பலர் பௌத்த சமயத்தைத் தழுவியவர்களாகவும் உள்ளனர். இந்தியச் சீனப் பண்பாட்டின் தெளிவான தாக்கத்தை முறையே இவ்விரு இனத்தவரிடம் காணலாம்.

அன்றாட உணவில் இந்த நாட்டு மக்கள் மீனையும், பழங்களையும், காய கறிகளையும் நிறையப் பயன்படுத்துகிறார்கள்[7]. "வெட்சு கிளாம்" (Wedge Clams) என்னும் சிப்பி வகையைக் கொண்டு செய்யப்படும் "டெக் டெக்'. (tec tec soup) சூப்பு இந்த நாட்டின் பிரசித்தி பெற்ற சூப்பாகும். இவை தவிர பன்றி, கோழி இறைச்சிகளோடு உள்நாட்டில் தயாரிக்கும் இருவகையான மதுவை நிறையக் குடித்து மகிழ்கின்றனர். தென்னங்கள்ளை, "களோ" (Calou) என்றும், கரும்புச் சர்க்கரையிலிருந்து தயாரிக்கும் மதுவை "பாக்கா" (Bacca) என்றும் அழைக்கின்றனர்.

இயற்கை எழில் ஆண்டொன்றிற்கு ஒன்றரை இலட்சத்திற்கு மேற்பட்ட உல்லாசப் பயணிகளை ஈர்க்கும் சேசெல் இயற்கை அழகிற்குப் பெயர் பெற்ற நாடாகும். இந்த நாட்டின் பெரிய தீவாகிய மாஹியின் நடுவில் நீண்ட மலைத் தொடர் ஒன்றுள்ளது, இதனைத் துவா பிரயர் (Trois Freres) மலைத் தொடர் என அழைக்கின்றனர். இந்த மலையின் மேல் ஏறிப் பார்த்தால் சாம்பல் நிறப் பாறைகளையும், பச்சைப் பசேல் என்று ஓங்கி வளர்ந்திருக்கும் வெப்ப மண்டலக் காடுகளையும், பால் போல் பரந்திருக்கும் வெண்மணல் கடற்கரையையும், நீலம் பரவியது

போன்ற வளைகுடாக்களையும் கண்டு மகிழலாம். இங்கே மலிந்திருக்கும் இயற்கை அழகைப் பார்த்து மகிழலாமே தவிர எழுதிக்காட்டி இன்பத்தை விளை விக்க இயலாது.

வேறு எந்த நாட்டிலும் காண இயலாத பலவகை நவநவமான பறவை களையும், விலங்குகளையும் இந்த நாட்டில் காணலாம். பிரஸ்லா தீவில் இத்தகைய புதுமையான குகு-டி-மேர் என்னும் ஒரு வகைப் பனைமரம் உள்ளது. இது ஏறக்குறைய நூறு ஆடி வரை வளரும். இந்த வளர்ச்சியைப் பெறக் குறைந்தது எண்ணூறு ஆண்டு கள் ஆகும் எனத் தாவர இயல் அறிஞர்கள் கூறுகிறார்கள். இந்த மரத் தின் பழம் அல்லது கொட்டை மனிதனின் இடுப்புபோல் பெரிதாகவும், ஏறக்குறைய நாற்பது முதல் ஐம்பது பவுண்டு கனமுள்ளதாகவும் இருக்கும்.

இந்த மரம் இருபத்தைந்து ஆண்டு களுக்குப் பிறகுதான் காய்க்கத் தொடங் கும் என்றும், அக்காய்கள் முழு வளர்ச்சி யைப் பெற ஏழு ஆண்டுகள் ஆகும் என்றும் தாவர இயல் வல்லுநர் கூறு கின்றனர். இந்தப் பழங்களின் கொட் டையைக் கொண்டு குவளைகளையும், கோப்பைகளையும், நீர் இறைக்கும் வாளிகளையும் நிறையச் செய்கிறார்க்ள். தற்போது இப்பழங்களை உல்லாசப் பயணிகளுக்காகப் பெருமளவில் விற்கத் தொடங்கியுள்ளனர்.

இத்தகைய மரங்கள் நாலாயிரம் பிரஸ்லா தீவில் உள்ளன. இந்த விநோத மரத்தைக் ''கடற்பனை'' என்று இந் நாட்டு மக்கள் கூறுகின்றனர். இம் மரத்தைப் பற்றிப் பல வேடிக்கையான கதைகளும் உண்டு. இந்த மரங்கள் பாலுண்ணிகளைப் போல இனப் பெருக்கம் செய்கின்றன என்றும், இதன் பழங்கள் இரவில்தான் பூமியில் விழு கின்றன என்றும், அவ்வாறு விழுந்த வுடன் அவைகளில் இருக்கும் ஆண் - பெண் மூலங்கள் ஒன்றிணைந்து இன விருத்தி செய்கின்றன என்றும் இங்கு உள்ள மக்கள் நம்புகின்றனர். இம் மரத்தின் பாலுறவைப் பார்ப்பவர்கள் உடனே குகு-டி-மேர் மரங்களாக மாறுவர் என்னும் பரவலான நம்பிக்கை யுள்ளதால், இக்கதையைப் பற்றிய உண்மையினை அறிய இயலாமற் போகின்றது.

குகு-டி-மேர் பனைகளைத்தவிர ஸ்குரூபைன் (Screwpines) பிட்செர்செடி (Pitcher plant), இழுது மீன் செடி (Jellyfish Plant) போன்ற பலவகை சிறிய மரங்களும் உள்ளன. பிட்செர் செடியின் இலைகள் கொள்கலன் போல் இருப்பதால், இவைகளில் தண்ணீரைப் பிடித்து வைக்கிறார்கள். இழுதுமீன் செடியின் பழம் உருவ அமைப்பில் மீன் போல் இருப்பதால் அதுவே அந்த மரத்திற்கும் பெயராயிற்று.

மாஹியிலிருந்து அறுநூறு மைல் தொலைவில் உள்ள அல்டபிரா (Aldabra) என்னும் திட்டில் மிகப் பெரிய ஆமைகள் சுதந்திரமாகச் சுற்றித் திரி கின்றன. பிறக்கும் போது இரண்டு அல்லது மூன்று அங்குல நீளமுள்ள இந்த ஆமைகள் நாளடைவில் ஐந்தடி நீளமும், ஐந்நூறு பவுண்டுகனமும் உள்ளவைகளாகப் பெருத்து வளர் கின்றன. இவை சில நூற்றாண்டுகள் வரை உயிருடன் வாழவல்லவை. மரங்

களைத் தவிர உயிரினங்களில் நீண்ட காலம் வாழக்கூடியவை இந்த ஆமை களேயாகும். இவைகளை உணவிற்காக வெள்ளையர் பெருவாரியாக அழித்து வந்த காரணத்தினால் தற்போது அரசாங்கமே இவைகளைப்பாதுகாத்துப் பேணும் பணியில் ஈடுபட்டுள்ளது.

ஆமைகளைப் போலவே மிகப்பெரிய சிப்பிகள் உள்ளன. இவை நான்கு அடி நீளமும், கால் டன் நிறையும் உள்ளவை. இவைகளை ஆங்கிலத்தில் "**giant clam**" என அழைக்கின்றனர்.

பலவகைப்பட்ட பறவைகளின் சரணாலயமாக விளங்குவது கூசா (**Cousin**) தீவாகும். பறவைகளைப் பாதுகாக்கும் உலகஇயக்கத்தின் மேற் பார்வையில் உள்ள இத்தீவில் டெர்ன்ஸ் நாட்டில், வாடர்ஸ், ரூபஸ் டர்டில் டவ், பிரஷ் வார்பிலர் போன்று பலவகை யான பறவைகள் உள்ளன.[8] உலகில் எந்த நாட்டிலும் பிரஷ் வார்பிலரைக் காண இயலாது. இது மிக இனிமை யாகப் பாடும். உலகில் உள்ள அரிய பறவைகளில் பிரஸ்லாவில் உள்ள கருப்புக்கிளியும் ஒன்றாகும்.

மாஹி, பிரஸ்லா தீவுகளைச் சுற்றி லும் சுமார் எண்ணூறு வகையான மீன் கள் நிறைந்துள்ளன. இவைகளில் இருபத்தோறு வகைகளை உலகின் எப் பகுதியிலும் காண இயலாது.

இத்தகைய இயற்கை வளமும், அழகும் மிளிரும் இத்தீவுகளுக்கு தமிழகத்திலிருந்து பல தமிழர்கள் இருபதாம் நூற்றாண்டில் வியாபார நோக்கத்தோடு வந்து குடியேறினர். அவர்களில் பெரும்பான்மையானோர் காரைக்கால், பாண்டிச்சேரி, தஞ்சாவூர் போன்ற பகுதிகளிலிருந்து வந்தவர்கள்.

தற்போது இத்தீவுகளில் ஏறக் குறைய ஐந்நூறு தமிழ்க் குடும்பங்கள் உள்ளன. இத்தமிழர்களில் ஒரு சிலரைத் தவிர, மற்றவர்கள் யாவரும் வியாபாரி களாக உள்ளனர். ஏற்றுமதி இறக்குமதி செய்யும் பெரிய வியாபாரிகளில் சிலர், தமிழர்களே. மக்களுக்கு வேண்டிய பொருள்கள் யாவற்றையும் ஒரு சேர ஒரே இடத்தில் வாங்கத் தகுந்த கடை களை வைத்துக் கொண்டு இங்குள்ள தமிழர்கள் வியாபாரம் செய்கின்றனர். மாஹித் தீவில் உள்ள மிகப் பெரிய. வணிகக்கடையை வைத்து நடத்துபவர் ஒரு தமிழரே.

ஏர் இந்தியா விமானம் சேசெல் வழியாக மரிசியஸ் செல்வதால், இந்த வியாபாரிகள் தமிழகத்தோடு நெருங்கிய தொடர்பை வைத்துக்கொண்டுள்ளனர். பல பொருள்களைத் தமிழகத்திலிருந்து வரவழைத்து விற்பனை செய்கின்றனர். வெளி நாட்டினர் பயன்படுத்தக் கூடிய பல அழகுசாதனப் பொருள்களை இங்கிலாந்திலிருந்தும், பாரிசிலிருந்தும் தருவித்து நல்ல இலாபத்தற்கு விற் கின்றனர்.

தமிழகத்தில் கொண்டாடப்படும் எல்லாப் பண்டிகைகளையும் இங்குள்ள தமிழர்கள் தங்கள் இல்லங்களிலேயே கொண்டாடுகிறார்கள். தமிழகப் பண் பாட்டினை மறவாமல், தாங்கள் வியா பரம் செய்யும் இந்த நாட்டிலும் அதனைப் போற்றிக் காத்து வரு கிறார்கள்.

நான் 1980 ஆம் ஆண்டில் மாஹித் தீவைச் சுற்றிப் பார்த்து வருகையில், திரு. கோவிந்தசாமிப் பிள்ளை என் பவரை விக்டோரியாவில் உள்ள அவருடைய கடையில் சந்தித்துச் சில மணிநேரம் பேசிக்கொண்டிருந்தபோது ஓர் அரிய கருத்தை வெளியிட்டார்.[9] அவர் கூறிய கருத்தின் சுருக்கம் இதோ:

> தமிழர்கள் உலகத்தின் பல நாடுகளில் பரவியுள்ளனர். பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுகளில் பலர் தோட்டக் கூலிகளாக, ஒப்பந்தக் கூலிகளாக உலகத்தின் பல பகுதிகளுக்குச் சென்றார்கள். அவர்களில் பலர் இன்னும் தோட்டக் கூலிகளாகவே உள்ளனர்.
>
> பர்மா, மலேசியா, செய்கோன் போன்ற நாடுகளில் நாட்டுக் கோட்டைச் செட்டிமார் வட்டிக் கடைவைத்து வியாபாரம் நடத்தினார்கள். காலப்போக்கில் அவர்கள் அதையே வங்கிகளாக மாற்றி, அந்தநாடுகளின் பொருளாதாரத்தைத் தங்கள் கைப்பிடியில் வைக்கத் தவறிவிட்டார்கள்.
>
> காரைக்கால், பாண்டிச்சேரி, தஞ்சை போன்ற ஊர்களிலிருந்து சென்ற செங்குந்த முதலியார்கள் பல சரக்கு வியாபாரத்தில் விற்பனர்களாக மலேசியா, சிங்கப்பூர், பர்மா போன்ற நாடுகளில் விளங்கினார்கள். அவர்களும் அங்கேயே நிலைத்து, நாட்டின் பொருளாதாரத்தைத் தங்கள் பிடியில் வைக்கத் தவறி விட்டனர்.
>
> இருபதாம் நூற்றாண்டில் தமிழர்கள் அறிஞர்களாக, பல்வேறு துறைகளில் உலகில் பல நாடுகளில் பணியாற்றுகிறார்கள். இதுபோற்ற வேண்டிய ஒன்று. எனினும் அவர்களில் யாரும் பெரும் வியாபரத்தில் ஈடுபடுவதில்லை; அத்திறமையும் அவர்களுக்கு இல்லை. சிந்திக்காரர்களைப் போலவோ, யூதர்களைப் போலவோ வெளிநாடுகளில் எந்தத் தமிழனும் பொருளாதாரத்தில் வலுத்தவர்களாக இல்லை.
>
> படித்த தமிழர்கள் என்று வியாபாரத்தில் பெருவாரியாகச் சீனர்களைப் போலவும், சிந்திக் காரர்களைப் போலவும், யூதர்களைப் போலவும் ஈடுபடுகின்றார்களோ அன்றுதான் தமிழினம் உலகில் பொருளாதாரச் செல்வாக்கும், பெருமையும் பெற முடியும்.

இந்தக் கருத்தை ஒவ்வொரு தமிழனும் ஆழ்ந்து எண்ணிப்பார்க்க வேண்டும். இன்று தமிழர்கள் உலகில் இல்லாத நாடே இல்லை எனலாம்; இலண்டன், நியூயார்க், சிங்கப்பூர், மேற்கிந்தியத் தீவுகள் என உலகம் முழுவதும் பரவியுள்ளனர். இத்தமிழர்களில் ஒரு பகுதியினரேனும் சிந்திக் காரர்களைப் போல, லெபனான் நாட்டு மக்களைப்போல, யூதர்களைப் போல உலக வணிகத்துறையில் ஓர் முக்கிய இடத்தைப் பெறப் பாடுபடவேண்டும். "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்னும் முதுரையை ஓர் தாரக மந்திரமாகக் கொண்டு தமிழர்கள் வணிகத்துறையில் முன்னின்றால் தான் உலகம் தமிழினத்தை மதிக்கும். பொருளாதாரச் செல்வாக்கைப் பெற்ற இனங்கள் தான் இன்று உலகத்தில் பல

துறைகளில் முன்னோடிகளாக விளங்கி கின்றனர்.

NOTES

1. Guy Lionnet, *The Scychelles & A Short History of Seychelles*, London David and Charles, 1972.

2. Map 2a Seychelles Bank

3. Map 2b Map of Seychelles.

4. Harry Miller, *Seychelles: A Visitor's Guide*, London, n.d., pp.54-57

5. For a detailed study of the history of Seychelles read, J.T. Bradley, *The History of Seychelles*, in 2 Vol., 1940.

6. Harry Miller, p. 61.

7. நம் நாட்டில் உள்ள காய்கறிகள் பலவும் மாஹியில் கிடைக்கின்றன. சிவப்பு ஸ்னப்பர், (red snapper), ஜாப் (job), கொர் டானியர் (co-donnier) போன்ற சிறிய மீன்களையும், சுறா, அரசமீன் (King Fish) டுயுனி (tunny) போன்ற பெரிய மீன்களையும்நிறைய உண்கிறார்கள் ராம் சீதா பழம், மாம்பழம், அவகாடோ பேர்ஸ் (avocado pears), போன்ற பழங்களை அதிகமாகத் தங்கள் அன்றாட உணவோடு பயன்படுத்துகிறார்கள். கிரியோல் உணவு, தமிழக உணவை விட அதிகக் காரமாக இருக்கும்.

8. terns, shearwaters, rufous turtle dove, brush warbler: some important land birds. The island is full of sea-birds such as sooty terns, noddy terns and fairy terns.

9. *1980-ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 26-ஆம் தேதி சேசெல், திரு.ம. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்களுடன் நடத்திய பேட்டியின் மூலம் அறிந்த சில கருத்துக்களின் சுருக்கம்.*

சீசெல்சு நாட்டில் தமிழர்

க. சச்சிதானந்தன்

1. 115 தீவுகள் கொண்ட நாடு சீசெல்சு. இங்கே ஏறத்தாழ (1981) 65,000 மக்கள் வாழ்கிறார்கள். பரப்பளவு 453 ச.கி; தீவுகள் இரண்டுக்கிடையே ஆகக்கூடிய தூரம் 1200 கி.மீ. மிகப் பெரியதீவு மாகே, 27 கி மீ. நீளம், 9 கி.மீ. அகலம். தலைநகர் விக்டோரியா.

தமிழ் நாட்டில் இருந்து தென் மேற்காக 3000 கி.மீ. தொலைவில் விக்டோரியா உள்ளது. இந்து மாக்கடலின் மேற்குப் பகுதியில் உள்ள தீவுக் கூட்டங்களுள் சீசெல்சும் ஒன்று. ஆப்பிரிக்காவின் கிழக்குக்கரையில் இருந்து 1500 கி.மீ. மேற்கேயும், மடகாஸ்கர் தீவிலிருந்து 1000 கி.மீ. வடக்கேயும் மாகே உள்ளது. நில நடுக்கோட்டுக்குத் தெற்கே அகலக்கோடு 4. இற்கும் 5. இற்கும் இடையேயும், கிழக்கு நெடுங்கோடு 55. இற்கும் 56. இற்கும் இடையேயும் இத்தீவுக் கூட்டங்கள் அமைந்துள்ளன.

60 கோடி ஆண்டுப் பழமையான கற்பாறைகள், கடல் மட்டத்தின் மேல் மலைகளாக உயர்கின்றன. 914 மீட்டர் உயரமான மலை மாகேயில் உண்டு. ஆண்டு முழுவதும் மழை பொழியும். நாளாந்த வெப்ப அளவு 24–30. செ. இடையானது.

பச்சைப் பசேலென விளங்கும் இத் தீவுகளில் மட்டும்தான் திருவோட்டுப் பனை வளர்கிறது. இங்கிருந்து மட்டுமே பெறப்படும் திருவோடுகள் உலகெங்கும் உள்ளவர்களால் பெரிதும் விரும்பப்படுகின்றன.

தமிழர்கள், அரேபியர், ஆப்பிரிக்கர், சீனர் கடலாடிகளாய் இத்தீவுக் கூட்டங்களைப் பலமுறை கடந்து சென்றுள்ளனர். சிலர் குறிப்புகள் எழுதி வைத்துள்ளனர். அரேபியரின் புதைகுழிகள் அங்கு உள. பெரும் நிலப்பரப்புகளைத் தாயகமாகக் கொண்ட இம் மக்கள், இச்சிறு தீவுகளில் குடியேற எண்ணவில்லை. மேனாட்டுக் கடலாடிகளின் கண்பட்ட பின்பே இத் தீவுகளில் முறைமையான மனிதக் குடியேற்றமும், நிலப்பயன்பாடும், ஆட்சியும், பின்னர் தனி நாடான நிலைமையும் ஏற்பட்டன.

மொரிசியஸ், இறியுனியன் தீவுகளில் குடியேறிய, ஆட்சி செய்த பிரஞ்சுக்காரர் அத்தீவுகளை வளமாக்கத் தமிழர்களைப் பாண்டிச்சேரியில் இருந்து அழைத்துச் சென்றனர். 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்த முயற்சியில் ஈடு பட்ட அவர்கள், மொரிசியஸில் இருந்து பாண்டிச்சேரிக்கு வரும் கடல் வழிகள், காற்றுத் திசைகள், காலங்கள் என்பன பற்றி ஆராய்ந்தனர். மிகக் குறுகிய வழியைக் காணச் சென்ற லெசார்ல்ஸ் கப்பல் தற்செயலாக இத்தீவுக் கூட்டங் களை அடைந்தது.

2. குடியேற்றம் 1742-இல் பிரெஞ்சுக் காரர் இத்தீவினைக். கண்டனர். அங்குள்ள மரவளம் அவர்களைக் கவர்ந்தது. தமிழர்களைக் கொண்டு சென்றனர். மரங்களை வெட்டுவித்தனர். பாண்டிச்சேரியில் உள்ள தமது கப்பல் கட்டும் மையத்துக்கு அம்மரங்களைக் கப்பலில் ஏற்றினர். 13 நாட்கள் பயணத் தில் பாண்டிச்சேரியை அடைந்தனர். பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை 3 கப்பல்கள் பாண்டிச்சேரிக்கு வந்தன. ஒவ்வொன்றிலும் 3 தொன்மரங்கள். மாகேயில் இருந்து பாண்டிச்சேரி வந்தன. சில ஆண்டுகள் இந்நடவடிக்கை தொடர்ந்தது.

1770 - இல் மொரிசிய பிரெஞ்சு ஆளுநர், சீசெல்சுத் தீவுகளில் மக்களைக் குடியேற்றவும் வளம் பெருக்கவும் வருவாய் தேடவும் முடிவு செய்தார். 27 ஆவணி 1770 - இல் தெல்மார்க டி செண்ட் மாலோ என்ற கப்பல், பிரேயர் டி பர்ரே தலைமையில் புறப்பட்டுச் சில நாட்களுள் மாகேத் தீவை அடைந்தது. குடியேற்றத்துக்குத் தேவையான அத்தனைப் பெருள்களை யும் கொண்டு சென்றனர்.

28 பேர்கள் சென்ற முதல் குடியேற்றக் குழுவில் 15 வெள்ளையர், 7 கருப்பரான அடிமைகள், 5 தமிழர் சென்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐந்து தமிழர் களின் பெயர்கள், 1)ஆசாரி, 2) முத்தையா, 3) குமார் மீனாட்சி, 4) கோவிந்தன், 5) தொமினிக். வெள்ளையர் பெயர்களும் கருப்பர் பெயர்களும் பதிவாகி உள்ளன.

1774-இல் பாண்டிச்சேரியில் இருந்து ஒரு கப்பல் உணவு, உடை மற்றும் பொருள்களையும் தமிழர்களையும் சீசெல்சுக்குக் கொண்டு வந்தது. இவர் களின் எண்ணிக்கை பெயர் விவரங்கள் தெரியவில்லை.

1783-4இல் பாண்டிச்சேரியைச் சேர்ந்த இராமலிங்கம் தனது மக்கள் மற்றும் மருமக்களுடன் இறியூனியன் வழியாகச் சீசெல்சு வந்தார். இவர் சீசெல்சு ஆட்சித்தலைவருடன் நெருங்கிப் பழகினார். அவருக்கு வேண்டியதைச் செய்து கொடுத்தார். மகிழ்ந்த ஆட்சித் தலைவர் இவருக்கும் மருமக்களுக்கும் வழமைக்கு அதிக அளவு காணிகளைக் கொடுத்தார். இதனால் ஏனைய குடி யேற்ற வாசிகள் இராமலிங்கம் மீது அதிருப்தி கொண்டனர். தனது பிள்ளை கள் மற்றும் மருமக்களுள் சிலரைச் சீசெல்சில் விட்டு இராமலிங்கம் இறி யூனியன் திரும்பி விட்டார்.

இதற்குப் பின் தமிழர் தொடர்ச்சி யாகச் சீசெல்சு வந்து குடியேறினர். பெரும்பாலோர் மொரிசியஸ் இறியூனி யன் வழியாகவும் சிலர் நேராகப் பாண்டிச்சேரித் துறைமுகத்தினின்றும் வந்தனர்.

தமிழ் நாட்டில், இன்றைய தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே பாண்டிச்சேரித் துறைமுகத்தின் வழியாகச் சென்றனர். சிதம்பரம், மயிலாடுதுறை, காரைக்கால், கடலூர் முதலிய ஊர்களில் இருந்துதான் பாண்டிச்சேரி வழி சீசெல்சு சென்றனர்.

3. திருமணம் சீசெல்சில் இன்று உள்ள மொத்த மக்களுள் இந்தியர் எனக் கணிக்கப்படுவோர் 5%மட்டுமே. இவர்களுள் 10–15 குஜராத்திக் குடும்பங்களைத் தவிர எஞ்சியவர்கள் யாவரும் தமிழர்களே. ஆனாலும் தமிழ்ப்பெயர்கள் தாங்கிய சீசெல்சு மக்களின்தொகை 30% வரை இருக்கலாம். 1794-இல் இருந்து 1980 வரை ஏறத்தாழ 21,000 திருமணங்கள், சீசெல்சில் பதிவுசெய்யப் பட்டுள்ளன. இவற்றுள் 790 திருமணங்கள் தமிழ்ப் பெயர் உடைய மணமகனையோ, மணமகளையோ கொண்டன, 330 மணமகள், 490 மணமகன் ஆகியோர் தமிழ்ப் பெயர் கொண்டிருந்தனர்.

அட்டவணை : 1794இற்கும் 1980இற்கும்இடையே நடைபெற்ற தமிழ்ப்பெயர் கொண்ட திருமணப் பதிவுகளின் எண்ணிக்கை.

ஆண்டு	எண்ணிக்கை	ஆண்டு	எண்ணிக்கை
1794—1800	2	1881—1890	20
1801—1810	1	1891—1900	28
1811—1820	1	1901—1910	62
1821—1830	1	1911—1920	40
1831—1840	2	1921—1930	73
1841—1850	1	1931—1940	89
1851—1860	10	1941—1950	87
1861—1870	45	1951—1960	91
1971—1880	23	1961—1970	103
		1971—1980	126

சீசெல்சுத் தீவில் பிரஞ்சுக்காரருடன் குடியேறியவர்கள் காந்தர்வத்திருமணம், குடும்ப வரம்பற்ற காமம் என்ற பண்பாட்டுக்குரியவர்களாய் வாழ்ந்தனர். இதனால் பெண்கள் தான் குடும்பத்தின் அடித்தளமாய் சொத்துக்களின் வாரிசுகளாயினர். ஆண்கள் 'மேய்ச்சல் மாடுகளாயினர்'. இன்றுவரை சீசெல்சு தாய் வழி மரபுரிமைச் சமுதாயமாகவே உள்ளது.

தமிழ் நாட்டில் இருந்து ஆண்களே பெரும்பாலும் சென்றனர். ஆப்பிரிக்கப் பெண்களைக் காந்தர்வ மணம் புரிந்தனர். பெற்ற பிள்ளைகள் தமிழர் பெயரைப் பெறாமல், தாயின் அல்லது தந்தையின் பெயரைப் பெற்றனர். ஒரு சில தமிழர் முறைப்படி திருமணம செய்து கட்டுப்பாடான குடும்பம் நடத்தினர். அவர்களின் பிள்ளைகளோ வரம்புமீறிய காம வாழ்வு மேற்கொண்டனர்.

கடலாடிகளின் துறைமுகமாக இருந்தமையால், சீசெல்சில் இக்கடலாடிகளை வரவேற்கும் பரத்தையர் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. 1971-இல் இப்பொழுதுள்ள ஆட்சி வரும் வரை குடும்பப் பெண்களின் எண்ணிக்கை, வெள்ளையர்களின் கட்டுப்பாடான தமிழர்களின்றும், ஒரு சில கருப்பர்களின்றும் கூடுதலாகவே இருந்தது.

கிறிஸ்டீன் நல்ல தம்பி ஒரு பெண். பார்த்தால் வெள்ளைக்காரப் பெண் தான். பெயரில் மட்டும் நல்ல தம்பி. ஏன்? கிறிஸ்டீனின் தாயார் மேரி நல்ல தம்பி. தந்தையார் யார் எனக் கிறிஸ்டீனுக்குத் தெரியாது. மேரி நல்ல தம்பியின் தாயார் டிம்பின் நல்லதம்பி. மேரியின் தந்தையார் யார் எனத் தெரியாது? எனினும் நல்லதம்பி என்ற தமிழர் அங்கு வந்து மணம் செய்து கட்டுப்பாடான குடும்பம் அமைத்துச் சில தலைமுறைகட்கு முன் வாழ்ந்தவர் என்பதற்குத் திருமணப்பதிவுச் சான்றுகள் உள. பின்னர் வந்தவர்கள் வரம்பு மீற, பெண்வழிப் பெயராக நல்லதம்பி தொடர்கிறது. 6 டிசம்பர் 1879-இல் முத்துக்கருப்பன் நல்லதம்பி என்பவர் லோறெட் கிளெமன்டீன் என்ற பெண்ணை மணமுடித்தார். தொடர்ந்து, மூன்று திருமணப் பதிவுகள் 1930 வரை நல்லதம்பி என்ற பெயரில் உள்ளது. மூன்றும் பெண்களின் பெயர்கள். ஏனைய நல்லதம்பிகள் மணமுடிக்காமலே வரம்புமீறி வாழ்ந்தனர்.

நல்ல தம்பி குடும்பம் ஓர் உதாரணமே. மக்கள் தொகையின் 30% அதிகமானோர், தமிழ்ப் பெயர் கொண்டிருப்பதும், பாதிக்கு மேற்பட்டோர் மூதாதை உயிரணுக்களைத் தமிழரிடமிருந்து பெற்றிருப்பதும் கண்கூடு.

4. சாதி ஆசாரி, செட்டி, பிள்ளை நாயுடு, நாயக்கன், படையாட்சி என்ற பெயர் இறுதிகள் இல்லாத தமிழர் அல்லது தமிழர் வழிவந்தோர் எண்ணிக்கை மிகக் குறைவு. இவர்களுள் பிள்ளை, செட்டி இரண்டும் மிகவும் புழக்கத்தில் உள. நாயுடு, படையாட்சி என்பன அதிகமாக உள. தமிழர்கள் தாம் சென்ற நாடுகளில் சாதிப் பெயர்களை விதைத்து வந்துள்ளனர். கொழும்பில் சிங்களவர்களின் பெயர்களில் பிள்ளை உண்டு. செட்டி உரிமை மலாக்காவிலும் தாய்லாந்திலும், சாவகத்திலும் தமிழ்ச்சாதிப் பெயர்கள் உண்டு. மூதாதை உயிரணுக்கள் தமிழரிடமிருந்து பெற்ற சீசெல்சு மக்கள் சாதிப் பெயரையும் பெற்றுள்ளார்கள். ஆனால், தமிழராகக் கருதப்படாது கருப்பராகவோ, வெள்ளையராகவோ கருதப்படுவர்.

தலைமுறைகளின் பெருமை பேசும் சில வெள்ளைக்காரக் குடும்பங்கள்கூடத் தமது மூதாதைத் தமிழரின் சாதிப் பெயர்ப் பெருமையைப்பேசி, சாதிப் பராக்கிரமங்களைக் கூறி மெய் சிலிர்ப்பர்.

5. சமயம் தஞ்சாவூரின் வயல் நிலங்களில் ஆற்றுப்படுகையில் வாழ்ந்த சாதாரண தமிழர் பாண்டிச்சேரித் துறையில் விவரம் தெரியா அக்கரைச் சீமைக்குக் கப்பல் ஏறும் பொழுது, தனது ஊரில் வழிபட்ட கிராமத் தெய்வங்களையும், சைவ, வைணவக் கோவில்களையும்

நினைவில் நிறுத்தி வழிபட மறப்ப தில்லை.

சீசெல்சில் கத்தோலிக்க மதத்தவர் 1971 வரை வேறெந்த மதப் பிரிவின் வளர்ச்சியையும் உற்சாகப்படுத்த வில்லை. ஆப்பிரிக்கர் அனைவரையும் கத்தோலிக்கராக்கினர். ஆட்சியாளர் கூட மதகுருமார் மூலமாகப் பிறப்பு இறப்பு காணிப் பதிவுகளை மேற் கொண்டனர். வழக்குகள் விசாரித்தனர். கல்வியூட்டினர். எனவே, கத்தோலிக்க மதம் தவிர்த்த பிற மதங்கள் வேரூன்ற வாய்ப்பு இருக்கவில்லை. எனவே 1984 வரை தமிழர்கட்கான கோவிலோ, சமய அமைப்புக்களோ இருக்கவில்லை. 1984-இல் சீசெல்சு இந்துக் கோவில் சங்கம் முதன்முதலாக அமைக்கப் பட்டது. 1985-இல் கோவில் கட்டக் காணி வாங்கப்பட்டது.

குழந்தை பிறந்தால், சைவ, வைணவ சமயிகள் கூட கத்தோலிக்க குரு மாரிடம் சென்று ஞானஸ்நானம் செய் தனர். மதப் பெயரை மேலதிகமாக ஏற்றனர். ஞாயிறு தோறும் கத்தோலிக்கக் கோவிலுக்குச் சென்று வந்தனர். திருமணங்கள் சைவ வைணவ சமயிகளுக்கிடையே கூட கத்தோலிக்கக் கோவில் குருமாரின் ஆசியுடன் அம்மத முறைப்படியே நடைபெற்றது.

இறந்தவர்கள் தகனம் செய்யப் படாது, கத்தோலிக்க மதக் கிரியை களுடன் புதைக்கப்பட்டனர். சுடுகாடு சீசெல்சில் இல்லை. ஒன்றை ஏற்படுத்தச் சீசெல்சு இந்துக் கோவில சங்கம் இப் பொழுது முயல்கிறது. மொரிசியசிலும் இறியூனியனிலும் கிராமத் தெய்வங்கள், சைவ வைணவக்கோயில்கள் வேரூன்றித் தமிழ்ச் சமயம் என்ற பெயரில் வழங்கச் சீசெல்சில் கத்தோலிக்க மதத்தில் சேராமல் ஆனால் அந்த மதம் சார்ந்த வாழ்வைத் தமிழர் மேற்கொண்டனர்.

6. மொழி பிரஞ்சுக்காரர் தமது மொழியைப் பயன்படுத்தினர். கருப்பர் தமது மொழியைப் பயன்படுத்தினர். தமிழரோ, பிரஞ்சு மொழியை முதலில் பயன்படுத்தினர். பின்னர், கருப்பரின் மொழியும் பிரஞ்சு மொழியும் கலந்து பிறந்த கிறியோல் மொழியைப் பயன் படுத்தினர். தமிழ்ச் சொற்கள் அதுவும் வீட்டுப் பாவனைப் பொருள்களின் சொற்களான கறிவேப்பிலை, போன்ற சொற்கள் கிறியோல் மொழிக்குள் புகுந்தன.

தமிழ் மொழி, பேசுவோர் எழுது வோர் எண்ணிக்கை காலப்போக்கில் வெகுவாகக் குறைந்து வந்தது. பிற செருகலாகச் சென்ற கணிசமான எண்ணிக்கையுள்ள தமிழ்க்குடி மக்களைத் தவிர்த்த சீசெல்சின் மூத்த தமிழ்க் குடிமக்களின் வழிவந்தோர் உயிரணுப் பெற்றனர்; ஆனால், உயிரனைய தமிழை மறந்தனர்.

தமிழ் தமிழரிடையே செத்தது. சீசெல்சில் மட்டுமல்ல. மொரிசியசிலும், இறியுனியனிலும் இந்த நிலைதான் ஏற் பட்டது. மொரிசியசில் இன்றைய தலை முறையினராய், தமிழருள் மிக மிகக் குறைந்த எண்ணிக்கையினரே தமிழைப் பேசுகின்றனர். ஏனையோர் கிறியோல் பேசுகின்றனர் பிரஞ்சிலும், ஆங்கிலத் திலும் சமமான புலமை பெற்றுள்ளனர். இறியூனியனில் தமிழ் தெரிந்த தமிழர்

களை விரல் விட்டு எண்ணலாம். கிறியோலைச் சரளமாகப் பேசும் அவர்கள் பிரஞ்சு மொழியிலும் புலமை பெற்றுள்ளனர்.

7. பொருளாதாரம் சீசெல்சில் உள்ள வியாபார நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கையில், ஆகக் கூடியவியாபார நிறுவனங்கள் தமிழர் பெயரிலேயே உள. அதுவும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் குடியேறித் தமிழ் நாட்டுடன் தொடர்புகளைத் துண்டிக்காத, தஞ்சையில் இருந்து சென்ற பிள்ளை, நாயுடு, செட்டி, படையாட்சி, சாதிப் பிரிவுகளைத் தொடர்ந்தும் பேணுகின்றவர்களின் கைகளிலே இந்த வியாபார நிறுவனங்கள் உள்ளன.

எந்த ஊரிலும் கிராமத்திலும் உள்ள கடை தமிழரால் நடத்தப்படுவதாகத் தான் இருக்கும். ஆங்காங்கே சீனர்களும் நடத்துகிறார்கள். வீட்டுப் பாவனைப் பொருள்கள், உணவு, துணி ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் தமிழரால் செய்யப்படுகின்றன.

சில சீனர் மின்சார, மின்னணு, கார், படகு போன்றவற்றையும் மிகச் சில குஜராத்திகள், வீட்டுப் பாவனைப் பொருள்களையும், ஓரிரு பார்சிகள் கார், இறக்குமதி கப்பல் தொழில் போன்றவற்றிலும் ஈடுபட்டுள்ளனர். பிரஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும் கம்பெனிகளை நடத்துகின்றனர். சுற்றுலா, பயண விடுதி, கப்பல்,விமானம் போன்ற தொழில்களில் ஈடுபட்டு உள்ளனர்.

அரசு ஊழியத்தில் தமிழரை மூதாதையராகக் கொண்டவர்கள் ஏராளமாக உளர். காவல் தலைவராக ஒரு தமிழரும் படைப்பிரிவில் ஒரு தமிழரும் உள்ளனர். தொலைக்காட்சி வானொலி கல்வி, மருத்துவம் ஆகிய துறைகளில் தமிழர் வழி வந்தோர் தமிழ்ப் பெயருடையோர் முக்கியத் பதவிகளை வகிக்கின்றனர்.

8. கலை தமிழ்க் கலைகள் வாழவோ வளரவோ அந்த நாட்டில் எந்தவித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. தமிழர் கிறியோல் மொழி வளர்ச்சியில் பங்கு கொள்ளாத மாதிரி அங்குள்ள கருப்பர் இனத்தவர் மேனாட்டுக் கலைகளைத் தம்முடையதாக்கிக் கொண்டனரே அன்றித் தமிழ்க் கலைகளை ஏற்றுக் கொள்ளவில்லை.

9. அரசியல் மேனட்டாரிடமிருந்து விடுதலை பெற நடத்திய போராட்டத்தில் தமிழர் பங்கு பெறவில்லை. திரு. செட்டி என்பவர் தமிழ் நாட்டிற்கு வந்து கல்வி பயின்றார். பின் சீசெல்சு திரும்பினார். சுதந்திரம் பெற்ற பின் ஆட்சி செய்த அமைச்சரவையில் 1977இற்கு முன் அமைச்சராக இருந்தார். வேறு தமிழர் எவரும் அரசியலில் ஈடுபட்டதாகத் தெரியவில்லை.

தேசிய அரசியல் நீரோட்டத்தில் பங்கு பெறாமல், பார்வையாளராக இருந்து ஆட்சியில் இருப்பவரை ஆதரிக்கும் சிறுபான்மை மக்களுக்குரிய பச்சோந்தித்தனமும், அரசியல் ஆர்வத்தைத் தீர்க்க இந்திய, தமிழ்நாட்டு அரசியலை விவாதித்து நுனிப்புல் மேய்தலும் அண்மைக் காலத்தில் குடிபெயர்ந்த தமிழரின் போக்காக இருக்கின்றது. மேனாட்டவருக்கு அஞ்சுகின்ற

போக்கும் தாம் அந்நிலத்தவர்க்கு உரிய வரோ என்ற ஐயப்பாடும் தொடக்கக் காலத்தில் இருந்து வந்த தமிழரின் உள்ளத்தில் நிறைந்துள்ளது.

மேனாட்டார் வழிவந்தவர்களும் மிகச் சாதுரியமாகச் சுதந்திரத்துக்குப் பின்னரும் தமது கைகளிலேயே ஆட்சி இருக்குமாறு பார்த்துக் கொண்டு கருப்பர்களையும் தமிழர்களையும் கலப்பினத்தவரையும் கொள்கை அடிப் படையில் இணைத்தும் நடைமுறையில் தனிமைப் படுத்தியும் ஆட்சி புரி கின்றனர்.

சீசெல்சு தமிழர் நலம் பேணத் தமிழ் நாட்டின் பங்களிப்பு :
சில ஆலோசனைகள்

1) அடையாள உணர்வும் ஆளுமை யும் பேணப்பட அடிப்படைத் தேவைகளை மொழி, கலை, பண்பாடு, சமயம், சமூகநலம், கல்வி, என்பனவற்றில் தமிழ் நாட்டு அரசும், அரசு சார்பற்ற அமைப்புகளும் சீசெல்சுத் தமிழருக்கு உதவவேண்டும்.

2) குடியேறிய நாளில் இருந்து இன்று வரையான அத்தனைச் செய்திகள், பதிவுகள் கடிதங்கள் யாவும் அங்குள்ள ஆவணக் காப்பகத்தில் பெரும்பாலும் பிரஞ்சு மொழியிலும் சிறிதளவு ஆங்கிலத்திலும் உள. இவற்றைப் பயன்படுத்தி தமிழ்ப் பல்கலைக் கழகம், அங்குள்ள தமிழர் அந் நாட்டுக்குரியவர் என்பதை ஆதாரபூர்வமாக ஆராய்ச்சிக் கட்டுரைகளின் மூலம் கண்டறிய வேண்டும்.

3) விமானம், கப்பல் என்பன சென்னையில் இருந்தே தமிழர் மிகுந்து வாழும் மொரிசியசு, இறியுனியன், சீசெல்சு நாடு கட்குச் செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும்.

4) தமிழ்த் திரைப்படங்கள், இசை நாடாக்கள், ஒளிப்படநாடாக்கள் தமிழ் வெளியீடுகள், பெருமளவில் குவிக்கவும் இலவசமாக அடிக்கடி கிடைக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

5) கோவில் ஒன்று கட்டக் காணி வாங்கப்பட்டுள்ளது. தமிழக அரசே அக்கோயிலைக் கட்டிக் கொடுக்க வேண்டும்.

பீஜித்தீவில் தமிழ்

எஸ். நாகராஜன்

ஆஸ்திரேலியாவின் கிழக்கில் சுமார் 2000 மைல் தொலைவில் தென்பசிபிக் பெருங்கடலில் 7055 சதுர மைல் பரப்பில் சிதறிக் கிடக்கும் 300 தீவுக்கூட்டங்களைத்தான் பீஜித்தீவு என அழைக்கின்றோம். சுமார் 100 தீவுகளில் மக்கள் குடியேறி வாழ்கின்றார்கள். இத்தீவின் தலைநகரம் சுவா. பிரிட்டிஷ் குடியேற்ற நாடாக இருந்த பீஜித்தீவு 1970-இல் பூரண சுதந்திர நாடாயிற்று.

மக்கள் தொகை பீஜித் தீவின் மொத்த மக்கள் தொகை 6,78,000. இவர்களில் 40 விழுக்காடு மெலெநேசிய மரபு வழியில் தோன்றிய பீஜியர்கள் (Filjans); சுமார் 50 விழுக்காடு இந்தியாவிலிருந்து பீஜித்தீவுக்குச் சென்றுகுடியேறிய தொழிலாளர்களின் வாரிசுகள். எஞ்சியிருக்கும் 10 விழுக்காடு மக்கள் சீனர்கள், ஐரோப்பியர்கள், மைக்கிரோ நேசியர்கள் (Micoronesion) போலி நேசியர்கள் (Polynesions). பீ ஜி த் தீ வி ல் தமிழ் ஆலோசகராகப் (Tamil Advisor) பணியாற்றும் எம்.ஆர். பாலகணபதி பின்வரும் புள்ளிவிவரங்களை அளிக்கின்றார். பீஜித்தீவில் இருக்கும் பீஜியர்களின் தொகை 3,30.441. இந்தியர்களின் தொகை 3,47.445. ஐரோப்பியர்கள், சீனர்கள், மற்றவர்கள் 36,662; இந்தியர்களில் மூன்றில் ஒருபங்கு தென் இந்தியாவைச் சேர்ந்தவர்கள். அதாவது 1,16,000 மதறாசிஸ் (Madarasis) என அழைக்கப்படும் தென் இந்தியர்கள். இவர்களில் 70 அல்லது 80 ஆயிரம் ஆயிரம் பேர்கள் தமிழர்கள். இரண்டு அல்லது மூவாயிரம் பேர்கள் கேரளத்தைச் சேர்ந்த மலையாளிகள். மற்றவர்கள் தெலுங்கர்கள். தோராயமாக இப் புள்ளி விவரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. தென் இந்தியர்களைப் பற்றிய தனிப் புள்ளிவிவரம் எடுக்கவேண்டும் எனக் கேட்டபோது பீஜி குடிமதிப்புப் புள்ளிவிவரத் தொகுதி இலாகா (Census Department) இக்கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டது. பீஜித்தீவில் பேசப்படும் முக்கிய மொழிகள் பீஜியன், இந்தி (Hindustani), ஆங்கிலம், ஆகியவைகளாகும். தமிழர்கள் இத்தீவில்வாழ்ந்தாலும் தமிழ் ஒரு முக்கிய மொழியாகத் கருதப்படவில்லை.

குடியேற்றம் பண்டைய காலத்திலிருந்தே தமிழர்களும், பிற இந்தியர்களும் தென்,

தென்கிழக்காசிய, கிழக்காசிய நாடுகளுக் குச் சென்றதாகச் சான்றுகள் இருக் கின்றன. ஆனால் தென்கிழக்காசிய நாடுகளுக்கு அருகே இருக்கும், இந்தியா விலிந்து 12,000 மைல் தொலைவிலிருக் கும் பீஜித்தீவுக்குப் பண்டைய காலத்தி லே இந்தியர்கள் சென்று குடியேறிய தாகச் சான்றுகள் இல்லை. திரைகடல் ஓடி திரவியம் தேடிய பண்டைய, இடைக்காலத் தமிழர்கள் பீஜித்தீவுக்குச் சென்றதில்லை என்று கூறலாம்.

1874-ஆம் ஆண்டு பீஜித்தீவு பிரிட்டனின் முழுக்குடியேற்றமாக மாறி யது. கொப்பரைத் தேங்காய், சர்க்கரை முதலிய முக்கிய ஏறறுமதிப் பொருள்கள் மூலம் 1877-ஆம் ஆண்டளவில் அதிக செல்வம் கிடைத்தது. இதன் பயனால் கரும்புத் தோட்டம் அமைப்பதற்காக இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து, குறிப்பாக பீகார், வங்காளம், பஞ்சாப், தமிழ்நாடு முதலிய பகுதிகளிலிருந்து 1879-ஆம் ஆண்டில் இந்தியத் தொழி லாளர்கள் பீஜித்தீவுக்குக் கொண்டுவரப் பட்டனர், ஆள்பிடித்துக் கொணரும் கங்காணி முறை மூலம் 1879—1916-ஆம் ஆண்டுகளுக்கு இடையே 87 கப்பல்களில் 65,000 இந்தியத் தொழிலாளர்கள் வந் தனர். இந்த 38 ஆண்டுகளில் வந்து குடியேறிய தென் இந்தியர்களின் எண்ணிக்கை 16,615 ஆகும். அப்போது பீஜித்த்வில் மொத்த மக்கள்தொகை 60,5[illegible]3 ஆகும்.

1880-ஆம் ஆண்டிலிருந்து சுமார் 14,000 கரும்பு பயிரிடும் விவசாயிகள் (Cane Farmers) கரும்புத் தோட்டத்தில் பணிபுரிந்தார்கள். இவர்களில் 90 விழுக் காடு இந்தியர்கள்; இவர்களில் பாதிக்கு மேல் ஆங்கிலேயே வாணிகச் சங்கத்தின் குத்தகைக்காரர்களாகப் பணிபுரிந்தனர். பீஜித்தீவில் இருக்கும் மொத்த நிலத்தில் ஐந்தில் ஒரு பங்கு வேளாண்மை செய் வதற்குப் பயன்பட்டது. இதில் மூன்றில் ஒரு பங்கு நிலத்தில் கரும்பு பயிரிட்டா கள். வடக்குக்கரையிலும் விடி லெவு (Viti Levu) என்னுமிடத்திலும் கரும்பு மிகுதியாகப் பயிரிடப்பட்டது. பீஜித்தீவின் மொத்த ஏற்றுமதியில் பாதிக்கு மேல் சர்க்கரை ஏற்றுமதி செய்யப்பட்டது. மேலும் 1917-ஆம் ஆண்டு கொத்தடிமைச்சட்டம் ஒழிக்கப் பட்டவுடன் ஒருவிதக் கட்டுப்பாடும் இன்றி இந்தியர்கள் குடியேறத் தொடங்கினர்.

இன்றும் பல இந்தியர்கள் கரும்புத் தோட்டங்களில் பணிபுரிகின்றார்கள். சிலர் பணக்கார வாணிபர்களாகப் பணிபுரிகின்றனர் பெரும்பான்மையான வாணிபமும், தொழில்துறையும் இந்தி யர்கள் வசம் இருக்கின்றன. இந்தியர் களில் மூன்றில் ஒரு பகுதி தென்இந்தி யர்கள். தென்இந்தியர்களில் சுமார் 70 விழுக்காடு தமிழர்கள் என்று கூறலாம். அதாவது பீஜித்தீவு இந்தியர்கள் ஐந்தில் ஒரு பகுதிக்குமேல் தமிழர்கள் இருக்கின்றார்கள்.

கல்வி நிலை 1966-ஆம் ஆண்டிற்கு முன் பிரிட்டிஷ் அரசு பள்ளிக்கூடங் களை அமைத்தது. கல்வித்துறை பொது வாக சமயப்பரப்பாளர்கள் வசம் இருந்தன. சுவா (Suva) எனுமிடத்தில் இரண்டு இலக்கணப் பள்ளிகள் (Grammar School) இருந்தன. இப் பள்ளிகளில் பொதுவாக ஐரோப்பியர் களுக்கே வாய்ப்பளிக்கப்பட்டது. தவிர, லீவுகா (Levuka) எனுமிடத்தில் ஒரு பள்ளி (Public School) இருந்தது.

சுவா அருகே இருக்கும் ராணி விக்டோரியா பள்ளி (Queen Victoria School) பீஜியர்க்கு உயர் பள்ளிப்படிப்பு வாய்ப்பு அளிக்கின்றது. கல்வித்துறை அனுமதியுடன் பல்வேறு நிறுவனங்கள், சிறப்பாகச் சமயப்பரப்பாளர்கள், பீஜியர்களுக்குத் தொடக்கநிலைப் பள்ளிகளை நடத்துகின்றார்கள்.

1965-ஆம் ஆண்டிற்கு முன் பல்கலைக்கழகமோ, உயர்கல்வி நிறுவனங்களோ (Higher Educational Institutes) பீஜீத்தீவில் இல்லை. பல நடுநிலைப் பள்ளிப் படிப்பிற்குப் பின்னர் பயிற்சி பெறும் வசதிகளும் (Post Secondary Training Facilities), இறைமையியல் கல்லூரிகளும் (Theological colleges) தாம் இருந்தன.

நடுநிலைப்பள்ளியில் மூன்று அல்லது நான்கு ஆண்டு படித்தபிறகு நியூஜிலாந்து பள்ளிச் சான்றிதழ் தேர்வு (Newzealand School Certificate Exam) எழுதுகின்றார்கள். நான்காவது அல்லது ஐந்தாவது ஆண்டு படிப்பிற்குப் பிறகு நியூஜிலாந்து பல்கலைக் கழக நுழை உரிமைத்தேர்வு (Newzealand University Entrance Exam) எழுதுகின்றார்கள். மேலும் வேளாண்மைத்துறை, வாணிபம், ஆசிரியர்ப்பயிற்சி சம்பந்தமான பயிற்சி மேல்நடுநிலைபள்ளி அளவிலேயே (Secondary School Education) அளிக்கப்படுகின்றன.

தொடக்கத்தில் 8 ஆண்டுகள் தொடக்கநிலைப் பள்ளியும் (கல்வி வகுப்புகள் 1இலிருந்து 8 வரை) நான்கு ஆண்டுகள் நடுநிலைப் பள்ளி, யும் (பள்ளிப்படிவம் (Forms) 3 இலிருந்து 6 வரை) இருந்தன. ஆனால் தற்போது இம்முறை மாற்றப்பட்டதால் தொடக்கநிலைப் பள்ளி 6 ஆண்டுகளாகவும் (கல்வி வகுப்புகள் 1இலிருந்து 6 வரை) நடுநிலைப் பள்ளி 6 ஆண்டுகளாகவும் (பள்ளிப்படிவம் (Forms) 1இலிருந்து 6 வரை) செயல்படுகின்றன.

பீஜித்தீவில் இன்று 760 தொடக்கநிலைப் பள்ளிகளும் நடுநிலைப்பள்ளிகளும் இருக்கின்றன. இவற்றில் 32 பள்ளிகளைத்தவிர மற்ற எல்லாப் பள்ளிகளும் அரசு சார்பற்ற நிறுவனங்களால் (Non - Government Bodies) நடத்தப் படுகின்றன. இப்பள்ளிகளுக்கு எல்லாம் மிகுதியான அரசு உதவித் தொகை கிடைக்கின்றது.

பீஜிகுடிமக்கள் 6-ஆவது பள்ளிப் படிவம் தேர்வில் வெற்றி பெற்றால்தான் பல்கலைக் கழகத்தில் சேரமுடியும். அதாவது பீஜிமாணவர்கள் நியூஜிலாந்து பள்ளிச் சான்றிதழ் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். அல்லது கேம்பிரிட்ஜ் அயல்நாட்டுப் பள்ளிச் சான்றிதழ் தேர்வில் (Cambridge Overseas School Certificate) வெற்றி பெற்றிருக்க வேண்டும், இதற்குப்பிறகு தான் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பயில தகுதி உண்டு. 1968-ஆம் ஆண்டு தான் முதலாகத் தென்பசிபிக் பல்கலைக் கழகம் (University of South Pacific) சுவாநகர் அருகே அமைக்கப்பட்டது. இந்த ஒரே ஒரு பல்கலைக் கழகம் தான் பீஜித்தீவில் இருக்கின்றது. பல்கலைக் கழகத்தில் ஆங்கிலம் மூலம் கல்வி கற்பிக்கப்படுகின்றது. பொதுவாக, பல்கலைக் கழகம் பிப்ரவரியிலிருந்து நவம்பர் வரை ஒவ்வொரு ஆண்டும் இரண்டு செமிஸ்டர்களாக (Semester) செயல்படுகின்றது. இப் பல்கலைக்

கழகத்தில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 2082. பீஜித்தீவில் பல்கலைக் கழகம் அமைப்பதற்கு முன் பல்கலை கழகப்படிப்பிற்காக, அயல்நாடுகளுக்குச் செல்லவேண்டிய சூழ்நிலை நிலவியது. குறிப்பாக 1100 மைல் தொலைவிலுள்ள நியூஜ்லாந்துக்குச் சென்று பட்டம் பெறுவது வழக்கத்தில் இருந்தது. இன்று 18-22 வயதுள்ள மாணவர்களில் 3 விழுக்காடே உயர்படிப்பிற்காக வருகின்றனர்,

பீஜி வேளாண்மைத்துறைக்கல்லூரி 1954 இல் அமைக்கப்பட்டது. இக்கல்லூரியில் 3 ஆண்டு வெப்ப மண்டலப் பகுதி வேளாண்மை டிப்ளமா (பல்கலைக் கழகப்பட்டச் சான்றிதழ்) கல்வி அளிக்கப்படுகின்றது. 1964 - ஆம் ஆண்டு Fiji Institute of Technology அமைக்கப்பட்டது. தவிர 1886லிருந்து பீஜி மருத்துவப்பள்ளி, Fiji School of Medicine) செயல்படுகின்றது.

கட்டாயமாகப் படிக்கவேண்டும் என்ற சட்டம் பீஜித்தீவில் கிடையாது. வீட்டிலிருந்து 5 கிலோமீட்டர் தொலைவுக்குள் பள்ளி இருந்தால் 6 வயதிலிருந்து 14 வயது வரை உள்ள மாணவர்கள் பள்ளிக்குச் செல்ல வேண்டும். சுமார்85 விழுச்காடு சிறுவர்கள் பள்ளிக்குச் செல்லுகின்றனர். இலவசத்தொடக்க நிலைப்பள்ளி வசதி அளிக்க அரசு முயற்சி செய்கின்றது. பீஜி வரவுசெலவுத் திட்டப்பட்டியலில் 19 விழுக்காடு கல்விக்காக ஒதுக்கப் பட்டிருக்கின்றது. உயர்கல்விக்காக 2 விழுக்காடு ஒதுக்கப் பட்டிருக்கிறது (1974). ஆனால் பீஜியில் தேவையான அளவு ஆசிரியர்கள் இல்லை.

தமிழ்க் கல்வி நிலை பெரும்பான்மையான பீஜியர்களும் இந்தியர்களும் தனித்தனிப் பள்ளிகளுக்குச் செல்கின்றனர், சுமார் 60 ஆண்டுகளுக்கு முன் 1926 - ஆம் ஆண்டு மெட்ராஸ் மகாசங்கம் அமைக்கப்பட்டது. இன்று இச்சங்கத்தைத் தென்இந்திய சன்மார்க்க ஐக்கியச் சங்கம் என்று அழைக்கின்றார்கள். இச்சங்கத்தை நாடி எனும் இடத்தில் சாதுசாமியார் என்பார் அமைத்தார். தென் இந்தியர்களின் பண்பாட்டையும், மொழிகளையும் பேணிப் பாதுகாத்து வளர்க்க வேண்டும் என்பது இச்சங்கத்தின் நோக்கமாகும். சமீப காலம் வரை இச்சங்கத்தின் பொறுப்பை ஏற்று நடத்தியவர் மயிலாடுதுறை அருகே இருக்கும் மணல்மேட்டைச் சேர்ந்த சுவாமிருத்ரானந்தர் ஆவார்.

இரண்டாம் உலகப்போருக்கு முன்பே பல பள்ளிகளை அமைத்த பெருமை சுவாமிருத்ரானந்தருக்கு உண்டு. பீஜி இராமகிருஷ்ண மடத் தலைவரான சுவாமி ருதிரானந்தர் சமீப காலம் வரை முப்பது பள்ளிகளை நிருவகித்தார். இன்று இப்பள்ளிகளில் பதினையாயிரம் மாணவர்களுக்குமேல் பயிலுகின்றனர். பீஜியில் உயர்தரப் படிப்பு உண்டாவதற்கு, சுவாமிஜி நாடியில் ஆரம்பித்த ஸ்ரீவிவேகாநந்தா உயர்நிலைப்பள்ளியே காரணமாக இருந்தது. இக்கல்லூரி 1949-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1981-ஆம் ஆண்டில் இப்பள்ளியில் 783 இந்தியர்கள் 168 பீஜியர்கள், 6 ஐரோப்பியர்கள் படித்துக் கொண்டிருந்தனர். இக் கல்லூரியின் முன்னால் பிரின்ஸிபாலாகப் பணியாற்றிவர் திரு பாலகணபதிபிள்ளை.

தற்போது ஜி. நாயக்கர் என்பவர் பிரின்ஸ்பாலாக இருக்கின்றார். பீஜியில் நடுநிலைப்பள்ளிக் கல்வியை அளித்த முதல் பள்ளி இப்பள்ளியே ஆகும். 1959-ஆம் ஆண்டிலிருந்துதான் இப் பள்ளிக்கு அரசு உதவித் தொகை கிடைக்கத்தொடங்கியது. பீஜியில் இன்று இருக்கும் ஒரே பல்கலைக் கழகம் ஏற்படுவதற்கும் சுவாமிஜியே காரண மாக இருந்தார்.

தென் இந்திய சன்மார்க்க ஐக்கியச் சங்கம் நடத்திய பள்ளிகள் (Sangam Schools) என்று அழைக்கின்றனர். இரண்டாம் உலகப்போருக்குமுன் இப் பள்ளிகளில், தமிழ், தெலுங்கு. மலையாளம முதலிய மொழிகள் போதிக்கப்பட்டன. 1950-ஆண்டுவரை இத்திட்டம் ஓரளவு நன்றாகவே செயல் பட்டது. தென்னிந்திய மொழிகளைச் சங்கப் பள்ளிகள் கற்றுத்தரலாம் என்று அரசு அனுமதி அளித்தபோதிலும் இம் மொழிகளில் பரீட்சை வைத்து மாணவர் களை ஊக்குவிக்க அரசு அனுமதி தரவில்லை. ஆனாலும் பொதுவாக இப்பள்ளிகள் அளிக்கும் வாய்ப்பினைப் பயன்படுத்தித் தமிழர்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தமிழ் கற்றுத்தர முன்வந்தார்கள்,

1940 ஆம் ஆண்டுகளிலே அரசு சங்கம் பள்ளி ஆசிரியர்களை அரசுப் பணியாளர்களாக ஏற்றுக் கொண்டது. ஆகையால், இவ்வாசிரியர்களுக்கு அரசு ஊதியம் அளித்தது; முன்புபோல் சங்கம் பள்ளிப் பொறுப்பாளர்கள் ஊதியம் அளிக்கவில்லை. இச்சூழ்நிலையில் ஆசிரியர்கள் தமிழை நன்றாகக் கற் பிக்கும் மனப்பான்மையை இழந்தார் கள். கல்வி அமைச்சும் தமிழ்க்கல்வியை ஊக்குவிக்கவில்லை. மேலும், பீஜியில் இருக்கும் வடஇந்தியர்கள் இந்தி மொழியைக் கற்பிக்க முனைந்தனர். வட இந்தியர்களைப் பார்த்துத் தாழ்வு மனப் பான்மையை உருவாக்கி கொண்ட தமிழர்கள், தமிழை மறக்க, இழக்கத் துணிந்தனர். இரண்டாம் உலகப் போரின்போது தமிழ்நாட்டுடன் இருந்த தொடர்பை இழந்ததாலும், பிரிட்டிஷ் அரசு தமிழ்க்கல்விக்கு ஆதரவு அளிக்க முன்வராததாலும், தமிழர்களின் தாழ்வு மனப்பான்மையாலும், ஆர்வமின்மை யினாலும், இந்தி தீவிரவாத இயக்கத் தின் வெற்றியினாலும் தமிழ்க்கல்வி 1950-ஆம் ஆண்டுக்குப் பிறகு பீஜித் தீவில் நலியத்தொடங்கியது.

1940—ஆம் ஆண்டளவில் ஓர் இலட்சம் தமிழர்கள் பீஜியில் இருந்தார் கள். ஆனால் 47 ஆண்டுகளுக்குப் பிறகு இவர்களின் எண்ணிக்கை 70,000 ஆகக் குறைந்துவிட்டது. இவர்களில் இன்று 5,000 அல்லது 6,000 தமிழர் களுக்கே தமிழில் எழுதப்படிக்கத் தெரியும். பெரும்பான்மையான தமிழர் களுக்குத் தமிழ் பேசக் கூடத் தெரியாது. தமிழர் என்று சொல்லிக் கொள்ளவும், தமிழில் பேசவும் பலர் வெட்கப்படு கின்றனர். கலப்புமணம் ஏற்படுவ தாலும் பலர் தமிழ்ப் பண்பாட்டை இழந்தார்கள். இவர்கள் இந்தி ஆங்கிலம் பேசுகின்றனர். ஓரே தமிழ்க் குடும்பத் தில் பல்வேறு இந்திய இனக்கலப்பு மணம் நடைபெறுவதால் இக்குடும்பத் தில் தமிழ் மறைந்து இந்தியே ஆட்சி செய்யும் நிலை தோன்றியிருக்கின்றது. குறிப்பாக இளமபரம்பரைத் தமிழர்கள் வீட்டில்கூட இந்திமொழிதான் பேசு கின்றார்கள்.

இச்சூழ்நிலையில், தமிழைப் பாதுகாக்க வேண்டும் என்ற மனப்பான்மை ஒரு சிலரிடையே தோன்றியிருக்கின்றது. 1985-ஆம் ஆண்டு அப்பாபிள்ளை தலைமையில் தமிழ்ப் பாதுகாப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. குறிப்பாகக் கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாகத் தமிழ், தெலுங்கு முதலிய மொழிகளைக் கற்பிக்கவேண்டும் என்று தென் இந்திய சன்மார்க்க ஐக்கியச் சங்கம் முயன்று வருகிறது. இம்முயற்சியின் முதுகெலும்பாக இருப்பவர் திரு எம். ஆர். பாலகணபதி. இவர் ஸ்ரீவிவேகானந்தா உயர்நிலைப் பள்ளியின் பிரின்சிபாலாக (Principal) பல ஆண்டுகள் பணியாற்றினார். இன்று அரசு ஆதரவுடன் இவர் தமிழ் ஆலோசகராக (Tamil Advisor) பொறுப்பேற்றிருக்கின்றார். தென் இந்திய சன்மார்க்க ஐக்கியச் சங்கத்தின் பொதுச் செயலாளராகப் (General Secretary) பணிபுரியும் என். கே. நாயுடு என்பாரும் தமிழ் மறுமலர்ச்சிக்காக சிறப்பாகப்பாடுபடுகின்றார். தமிழ், தெலுங்கு, மலையாளம் முதலிய மொழிகளை வளர்ப்பதற்காகச் சங்கம் மூன்று தொகுதிகளை (Units) அமைத்திருக்கின்றது. பல ஆண்டுகளுக்கு முன் அரசால் நியமிக்கப்பட்ட கல்விக்குழு (Education Commission) எல்லோரும் அவர் அவர் தாய்மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டும்; ஆகையால், தமிழர்கள் தமிழையும் கற்றுக் கொள்ள வேண்டும் எனப் பரிந்துரை செய்தது.

இன்று பீஜித்தீவில் 16 சங்கம் பள்ளிகளிலும், 3 சங்கம் அல்லாத பள்ளிகளிலும் (Non-Sangam Schools) தமிழ் கற்பிக்கப்படுகின்றது. சுமார் 1600 இலிருந்து 1800 மாணவர்கள் வரை தமிழ் படிக்கின்றனர். ஆகையால் பீஜி அரசு தொடக்கப்பள்ளிகளில் தமிழ், தெலுங்கு முதலிய மொழிகளைக் கற்றுத் தரலாம் என அனுமதி அளித்திருக்கின்றது. மேலும் எட்டாம் வகுப்புத் தேர்வின்போது (Class 8) தமிழ் பயிலும் மாணவர்களுக்குத் தமிழ்மொழித் தேர்வும் எழுத வாய்ப்பளிக்கப்பட்டிருக்கின்றது. இப்புதிய திட்டம் அறிமுகப் படுத்திய பிறகு 1989 -ஆம் ஆண்டில் தான் முதல் மாணவர் குழாம் தமிழ்த் தேர்வுக்காக உட்கார முடியும். இன்று (1987) 6ஆம் வகுப்பில் 250 மாணவர்கள் தமிழ் படித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

தமிழ்க் கல்வி அளிக்கவேண்டும் எனும் ஆர்வம் சில தமிழர்களிடையே பீஜியில் இருந்தாலும் அதற்குத் தேவையான வசதிகள் குறைவாகவே இருக்கின்றன. முதலில் தமிழ்க் கல்வி கற்பிக்ககூடிய தகுதியுள்ள ஆசிரியர்கள் பலர் இல்லாத நிலை. ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கவேண்டும் எனும் முயற்சியை எடுத்த பெருமை தென் இந்திய ஐக்கியச் சன்மார்க்கத்திற்கு உண்டு. ஆசிரியர் பயிற்சிக்காக சமீபத்தில் 18 ஆசிரியர்களின் பெயர்களை இவர்கள் பரிந்துரை செய்தார்கள். அவர்களில் 5 பேருக்கு "High Recommendation" செய்தார்கள். பரிந்துரை செய்யப்பட்ட மற்ற ஆசிரியர்களுக்கு நன்றாகத் தமிழும் தெரியாது. உயர் தரப்பட்டமும் கிடையாது. சன்மார்க்கம் பரிந்துரை செயத ஐந்து Highly recommended ஆசிரியர்களில்4 ஆசிரியர்களை அரசு தேர்ந்தெடுத்து பீஜி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் அவர்களுக்குப் பயிற்சி அளித்து வருகின்றது. இப பயிற்சிக் கலலூரியில் உயர்தரமான பயிற்சி அளிக்கப்படுகின்றது என அறுதி

யிட்டுக் கூறமுடியாது. அரசால்நடத்தப் படும் நாசினு பயிற்சிக்கல்லூரியில் (NASINU's Training College), ஆசிரியர் களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

மேலும், தேவையான பாடநூல்கள் இல்லாததால் இன்று தமிழ்க் கல்வியின் வளர்ச்சி பாதிக்கப்பட்டிருக்கின்றது. பீஜி அரசு தமிழ் ஆசிரியர் பயிற்சிக்கு உதவி அளிக்கின்றது. மேலும், பலமுறை கள் மூலம் தமிழ் வளர்ச்சிக்கு உதவி அளிக்கின்றது. ஆனால், தேவையான தமிழ்ப் பாடநூல்கள் வெளியிடுவதற்கு யாரும் முழு உதவி செய்ய முன்வர வரவில்லை. பல ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் வெளியிடப்படும் பாடநூல் களையே பீஜி ஆசிரியர்கள், மாணவர்கள் நம்பி வாழ்ந்தனர். ஆனால் பிஜித்திவில் தமிழ்ப் பாடம் பயிற்சியளிக்கும் போது பீஜி சூழ்நிலைக்கு ஏற்றவாறு பாடப் புத்தகம் தயாரிக்கவேண்டியிருக்கின்றது. ஏனென்றால் பீஜித்தீவில் தமிழ் Second Language மொழியாக மட்டும் கற்பிக்கப் படுகின்றது.

ஆகையால், திரு பாலகணபதி போன்றவர்களின் இடைவிடா முயற் சியினால் பீஜித்தமிழ்ர்களின் தேவை கேற்பப் பாடநூல்கள் தயாரிக்க முயலு கின்றனர். எம்.ஆர்.பி.குருசாமிஅறிமுகப் படுத்திய 'ரோமன் தமிழ்' எழுத்து முறையை இன்று பீஜித்தீவில் பயன் படுத்துகின்றார்கள். ஏனென்றால் பீஜி யில் **உள்ள தமிழர்களுக்குக் கூட தமிழ் மொழி ஓர் அயல் நாட்டு மொழியாக இருக் கின்றது.** ஆங்கிலமொழியின் எழுத்துத் தொகுதிகளைப் பயன்படுத்தித் தமிழைக் கற்பிக்கும் முறையையே ரோமன் தமிழ் என அழைக்கின்றனர். ஆங்கில மொழி யின் எழுத்துத் தொகுதிமூலம் தமிழ் எழுதுவதற்காகவும் உச்சரிப்பதற்காக வும் தனி வழிகாட்டுங் குறிப்பு (Key) அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகை யால், ரோமன் தமிழ்த்திட்டம் மூலம் தமிழை வளர்க்க பீஜித்தீவில் முயற்சி எடுக்கப்பட்டிருக்கின்றது.

ரோமன்-தமிழ்த்திட்டம் அடிப் படையில் சங்கம் தமிழ்ப் பாட புத்தகங் களைத் தயாரித்துள்ளன. திரு ஜி. எஸ். நாயுடு, உயர் இயக்குநர் தமிழ் வளர்ச்சிக் கழகம் அவர்கள் தலைமையில் இருந்த தமிழ்த் தொகுதி (Tamil Unit) எடுத்துக் கொண்ட முயற்சியினால் இப்பாட நூல்கள் தயாரிப்பதற்குத் தேவையான சூழ்நிலை உருவாக்கப்பட்டது. தற்சமயம் புத்தகம்-1 (Book 1) புத்தகம்-2 (Book-2) மட்டும் தான் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டு புத்தகங்கள் வகுப்பு 4-5 வரை பயன்படும். இப்புத்தகங்களைத் தவிர ஆசிரியர்களுககு மட்டும் மேலும் கையெழுத்தில் மட்டும் இருக்கும் பாடங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டு புத்தகங்களையும் அச்சிட்டு வெளியிடுவதற்குத் தமிழ்நாடு அரசு உதவியிருக்கின்றது. ஒவ்வொரு பாடநூலிலும் 10, 000 படிகள் (Copies) அச்சிட்டுத் தமிழ்நாடு பீஜித்தமிழர் களுக்குக் கொடுத்திருக்கின்றது. இம்மாதிரி தமிழ்நாடு அரசு உதவியதால் தான் தமிழ் மறுமலர்ச்சி தோன்றி வளர்வதற்கான சூழ்நிலை இன்று உரு வாகியிருக்கின்றது.

புத்தகம்-3 (Book - 3), புத்தகம்- 4 (Book - 4) எழுதப்பட்டு அச்சிடப்படு வதற்காகத் தயாராக இருக்கின்றன. ஆனால் அவை அச்சிட்டு வெளியிடு வதற்குத்தான் ஆள் இல்லை. மதுரைக்

காமராசர் பல்கலைக் கழகம் புத்தகம் 4-ஐ அச்சிட்டு வெளியிடப்போவதாக செய்தி கிடைத்திருக்கின்றது. புத்தகம் 3-இன் நகல் மலேசியா தமிழ்க் கலைக் கழகம் தலைவருக்கு (Malaysian Tamil Arts Society, President) இரண்டு ஆண்டுகளுக்கு முன் அனுப்பப்பட்டது. தொடக்கத்தில் உதவி செய்வதாக வாக் குறுதி அளித்த போதிலும், தற்சமயம் வரை இவர்கள் உதவி கிடைக்கவில்லை. ஆகையால், தமிழ்ப் பல்கலைக் கழகம் புத்தகம்-3 - ஐ வெளியிட உதவி தர வேண்டும் என பிஜித்தமிழ்த் தலைவர் கள் கேட்கிறார்கள். இது சம்பந்தமாக திரு பாலகணபதி கூறுவதை ஆங்கிலத்திலே மேற்கோள் எடுத்து கூறு கிறேன் "We do need a lot of materials Books (esp Book 3-then 4) Other books, cassettes, Teaching Aids like charts etc etc. could you help us First with Book 3 Sir. Save our souls. Save and serve the cause of reviving Tamil. This is not a more academic matter for disscussion, debate, thesis etc. I need not add Sir This is an urgent call from the otherside of the world The Tamilians here will lose all touch with Tamil if the help does not come now Now or never is a fact. I hope I have conveyed enough about the the plight of Tamil and Tamilians here" . . . If Tamil Nadu and Tamil University do not come to our aid where else can we go?" ஆகை யால் தேவையான பாடநூல்கள் இல்லாததால் தமிழ்க்கல்வியின் வளர்ச்சி பீஜித்தீவில் தடைப்பட்டிருக்கின்றது. புத்தகம்-3 கூடிய விரைவில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் உதவியுடன் வெளி வர இருக்கின்றது.

தமிழ்க்கல்வியின் வளர்ச்சி இந்தி தீவிரவாதிகள் மூலமும் பாதிக்கப் படு கின்றது என்றுதிரு பாலகணபதி கூறு கிறார். சமீபத்தில் பீஜித்தீவில் வாழும் இந்தி மொழிப்பிரிவினர் அகில பீஜி இந்தி பேராண்மைப் பேரவை (All Fiji Hindi Convention) ஒன்றைக் கூட்டினர். இக்கூட்டத்தில் இந்தி மொழி ஒரு கட்டாயப் பாடமாகப் போதிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. ஆனால், பீஜி அரசு இத்தீர்மானததை இதுவரை செயல் படுத்தவில்லை. இச்சூழ்நிலை தமிழ் வளர்ச்சியைத் தடுக்கும் சூழ்நிலை யாகவும் இருக்கின்றது என்று சில பீஜி தமிழர்கள் கூறுகிறனர்.

பீஜித் தமிழர்களின் தாழ்வுமனப் பான்மையும் (Inferiority complex) தமிழ் மொழியின் வளர்ச்சியை மிகுதியாக பாதித்திருக்கின்றது. தமிழ்மொழியைக் கற்றுக் கொள்ளவேண்டும், தமிழ் மொழியை வளர்க்கவேண்டும் என்ற ஆர்வம் போதிய அளவில் இவர் களிடையே இல்லாததால் தமிழ்மொழி வளர்ச்சி அடைய முடியவில்லை.

மேலும், சுவாமி ருத்ரானந்தா போன்ற தமிழர்கள் பரந்த மனப் பான்மையுடன் இந்தியப் பண்பாட்டைப் பாதுகாக்க முயற்சியெடுத்தார்கள். தமிழ்ப்பண்பாட்டையும் ஓரளவு பாது காத்து வளர்க்க இவர்போல சிலர் முன்வந்தபோதும் தமிழுக்கு மட்டும் பாடுபடும் தலைவர்கள் தோன்றவில்லை எனத் தெரிகின்றது. ஆனால், சுவாமி ருத்ரானந்தா தமிழ் மொழியின் வளர்ச்சி யில் பெரும் பங்கு கொள்ளவில்லை எனக் கூறுவது தவறு எனத் திருபாலகணபதி கூறுகின்றார்.

தற்சமயம் திருபாலகணபதி தமிழ் ஆலோசகராகப் (Tamil Advisor) பணி புரிகிறார். இவருக்கு பிஜிஅரசு ஆதரவு உண்டு. மேலும் தமிழ், தெலுங்குமொழி வளர்ச்சிக்காக ஓர் உயர்நிலைக் கல்வி அதிகாரி Curriculam Development Off.cer பீஜி அரசால் விரைவில் நியமிக்கப் படப்போகிறார் என திரு பாலகணபதி கூறுகின்றார். ஆகையால்' திரு பாலகணபதி, என் கே. நாயுடு மூலம், குறிப்பாகத் தென் இந்திய சன்மார்க்க ஐக்கியச் சங்கம் மூலம் மீண்டும் தமிழ்மொழி மறுமலர்ச்சி தோன்றக் கூடிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கின்றது. இச்சூழ்நிலையைப் பாதுகாத்து தமிழைப் பீஜியில் வளர்ப்பதற்குத் தமிழக அரசும், தமிழ்ப் பல கலைக் கழகமும் மதுரைகாமராசர் பல்கலைக் கழகமும் மேலும் சில தமிழ் அறிஞர்களும் இணைநது செயல்பட வேண்டும்.

ஆனால் தமிழ் நலிவு தோன்றியிருக்கும் இச்சூழ்நிலையில் நாம் உணர்ச்சி வசப்படாமல் தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகப்பாடுபடவேண்டும். இன்று இருக்கும் தமிழ்மொழி சூழ்மையில் தமிழ்மொழியை இரண்டாம் நிலை மொழியாக (Second Language) மட்டும் தான் பீஜித்திவில் கற்பிக்கமுடியும். பீஜித்தமிழர்களுக்கே தமிழ்மொழி ஓர் அயல்நாட்டு மொழியாக மாறிவிட்டது. ஆகையால், தமிழ்மொழி மூலம் எல்லாக் கல்வியையும் அளிக்க முடியாது. ஆனால், தமிழ்மொழியை இரண்டாம் நிலை மொழியாகக் கற்பிக்கும் முயற்சியில் தயக்கமோ, தளர்ச்சியோ, ஆர்வமின்மையோ தோன்றக்கூடாது. தமிழ் மொழி வளர்க்கும் ஆர்வம் தமிழ்மொழி வெறியாக மாறி மற்ற மொழிகளின் வளர்ச்சியினைக் தடுக்கக்கூடாது. தமிழும் வளரவேண்டும்; பிற இந்திய மொழிகளும் வளரவேண்டும்; பீஜியன் மொழியும் வளரவேண்டும். ஆகையால், பீஜித் தமிழர்கள் இந்தி பேசுவதை எதிர்க்கக்கூடாது. "நாங்கள் இந்தி பேசுகிறோம். எல்லா இந்தியர்களும் ஒற்றுமையாகவும், சந்தோஷமாகவும் இருக்கிறோம். எங்களுக்குள் வேறுபாடு இல்லை" என்று சமீபத்தில் ஒரு பீஜித் தமிழ் மாணவர் மதுரையில் என்னிடம் கூறினார். இந்தி மொழியை எதிர்த்து, இந்தி மொழியை வெறுத்து, இந்தி மொழியை அழித்து, தமிழர்களிடையே தமிழை வளர்க்க வேண்டும் என நினைப்பது சரியன்று. இந்தி-தமிழ்-பீஜியன்-பிற இந்திய மொழிகளின் கூட்டு வளர்ச்சிக்காகப்பாடுபடுவதே நல்லது. இம்மாதிரியாகப் பணிபுரியும் காலக்கட்டத்தில் இந்தி மொழி பேசும் தமிழர்களுக்குத் தமிழ் மொழியின் மேல் பற்றுதோன்றி வளரும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும். தமிழின் மேல் தோன்றியிருக்கும் தாழ்வு மனப்பான்மையை நீக்கப்பாடுபட வேண்டும். தமிழ் வளர்ச்சியடைந்தமொழி. இந்திக்கு முன் தோன்றியஇனிமையான பண்டைய மொழி எனும் விழிப்புணர்வைப் பீஜித் தமிழர்களிடையே ஊட்டவேண்டும். தமிழர்களின் தாழ்வு மனப்பான்மையை அழிக்கும் தமிழ் மொழிப்பற்றை, தாகத்தை உருவாக்கவேண்டும். தமிழ்த்

மூலம்: திரு எம். ஆர். பாலகணபதி, பி,ஏ.,எல்.டி., தமிழ் ஆலோசகர், பீஜி, அவர்கள் எனக்கு எழுதிய கடிதங்கள்.

தாய் பாலூட்டி தமிழ்மொழிமறுமலர்ச்சி பூத்துக்கு லுங்கும் சூழ்நிலையை அமைக்கப்பாடுபட வேண்டும். இந்தி, பீஜியின் மொழியுடன் தமிழுக்கும் சம வாய்ப்பளித்து, தமிழ் மொழியை வளர்க்க முயலவேண்டும். பீஜி அரசும், தமிழக அரசும், இந்திய அரசும் இவ் வளர்ச்சிக்கு வேண்டிய ஆதரவும் ஊக்கமும் அளிக்கவேண்டும்.

1987-ஆம் வருடம் பீஜித்தீவில் ஓர் குழப்பமான சூழ்நிலை உருவாகியது. இச்சூழ்நிலை தொடர்ந்து நீடித்ததால் தமிழர்களைப் பாதிக்கும் 1987-ஆம் ஆண்டு ஏப்ரல் 11ஆம் நாள் பீஜித் தீவில் தேர்தல் நடந்தது. இத்தேர்தலின் முடிவின்படி இந்தியர்களுக்கு மிகுதி யான செல்வாக்கு உள்ள அரசு முதன் முதலாக பதவிக்கு வந்தது, பீஜித்தீவின் பொருளாதார அமைப்பில் இந்தியர் களுக்கு செல்வாக்கு அதிகம் இருக் கின்றது. பீஜித்தீவில் உள்ள பெரிய வாணிப அமைப்புகள் எல்லாம் 10 விழுக்காடு இந்தியர்கள் வசம் இருக் கின்றன. பீஜித்தீவின் சிவில் சர்வீஸ் அமைப்பிலும், படைப்பிரிவிலும் தாயக பீஜியர்களின் பெரும்பான்மை இருக் கின்றது. இந்தியர்களின் அரசியல் செல்வாக்கு ஓங்கியதை விரும்பாத சில பீஜியர்கள் கர்னல் ராபுகா (Col Rabuka) என்பவர் தலைமையை ஏற்றுக் கொண்டு 1987-ஆம் ஆண்டு மே 14ம் நாள் சட்டப்படி தேர்தலில் பெரும் பான்மை பெற்று பதவிக்கு வந்த இந்தி யர்களின் செல்வாக்கு உள்ள அரசை கவிழ்த்தது. ராணுவ ஆட்சி அமைக்கப் பட்டது. தொடர்ந்து பேச்சுவார்த்தை கள் நடந்து கொண்டிருக்கின்றன. கர்னல் ராபுகாவின் மனப்பான்மையில் எந்தவித மாற்றமும் இல்லை. பீஜியர் களின் பெரும்பான்மையுள்ள ஓர் அரசை அமைக்கவும், அதன் தொடர் பான ஓர் அரசியல் அமைப்பை உரு வாக்கவும்தான் அவர் விரும்புகின்றார். இவ்வாறான குழப்பமான சூழ்நிலை தொடர்ந்து நீடித்தால், கர்னல் ராபு காவின் ஆட்சி வலுவடைந்தால் பீஜித்தீவில் உள்ள தமிழர்களையும், தமிழர்களின் வருங்காலத்தையும் ஓரளவு பாதிக்கும் என்பதில் ஐயமில்லை: சிலத் தமிழர்கள் இம்மாற்றத்திற்கு பிறகு ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து முதலிய நாடுகளுக்கு வேலைத் தேடிச் சென்று குடிபெயர்வு செய்யத் தொடங்கியிருக் கின்றனர்.

கயானாவில் தமிழர்கள்

ஈ.ச. விசுவநாதன்

கயானாவில் உள்ள தமிழர்களைப் பற்றி ஆய்வதற்குமுன், இந்நாட்டைப் பற்றிச் சில அடிப்படைத் தகவல்களை அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். தென் அமெரிக்காவில் ஆங்கிலேயர்களுக்கிருந்த ஒரே காலனித்துவ நாடு கயானாவாகும். இந்த நாடு 1966-ஆம் ஆண்டு, மே மாதம் 26-ஆம் தேதி, அந்நிய ஆட்சித் தளையிலிருந்து விடுபட்டுச் சுதந்திர நாடாயிற்று.

கயானாவின் வடக்கில் அட்லாண்டிக் மாக்கடலும்; கிழக்கில் சுரினாமும் (Surinam); தெற்கு, தென்மேற்கில் பிரேசிலும் (Brazil); மேற்கு, வடமேற்கில் வெனிசூலாவும் (Venezuela) உள்ளன. இந் நாட்டின் கடலோரப் பகுதியின் நீளம், கிழக்கு மேற்காக 260 மைல்களாகும். இந்தப் பகுதியில் தான் நாட்டின் பெரும்பான்மையான மக்கள் வாழ்கிறார்கள். விவசாயம், தொழில் யாவும் இந்தப் பகுதியில் தான் அதிகம்; நாட்டின் பெரு நகரங்களும், முக்கிய ஊர்களும் இங்கே தான் உள்ளன. இந்த நாட்டின் பரப்பளவு சுமார் 83,000 சதுர மைல்களாகும்.

கயானாவில் தற்போது அமெரிந்தியர், கிழக்கிந்தியர், ஆப்பிரிக்கர், போர்த்துக்கீசியர், சீனர் என்னும் ஐந்து இனத்தவர் (Racial groups) வாழ்கின்றனர்.

அமெரிக்கர் - இந்தியர் என்னும் இரு சொற்களின் சுருக்கமே அமெரிந்தியர் ஆகும். இவர்கள் வட, தென் அமெரிக்கா என்னும் இரு பெரும் கண்டங்களின் பழங்குடி மக்களாவர். இவர்களுடைய எண்ணிக்கை கயானாவின் மக்கள் தொகையில் மிகக் குறைவாக இருந்த போதிலும், அமெரிந்தியப் பண்பாட்டின் முத்திரையினை நாடு முழுவதும் காணலாம். இந்த நாட்டின் பெயரான கயானாவே ஓர் அமெரிந்தியச் சொல் தான். இதன் பொருள் "நீர் நிறைந்த நாடு" என்பதாகும்.

ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட காலனியாக இருந்த போது இந்த நாட்டின் பெயர் கயானாவாகும் (Guiana); நாடு அரசியல் விடுதலை

* தமிழர்கள் என்று கூறும்போது தெலுங்கர்களையும் நினைவில் கொள்ள வேண்டும். தெலுங்கர் எண்ணிக்கை மிகக் குறைவு.

பெற்றதும், அமெரிந்தியச் சொல்லான கயானாவை (Guyana) நாட்டின் பெயராக மாற்றினர்.

Modern Guyana



Source : Vere T Daly, *A Short History of the Guyanese People*, p. 30,.

"கயானா" என்னும் சொல்லின் பொருளை உணர்ந்து பாராட்ட வேண்டுமனால், இந்த நாட்டில் உள்ள எசிக்யூபோ (Essequibo) டெமராரா (Demerara) பெர்பீஸ் (Berbice), கொரன்டீன் (Corentyne) என்னும் நான்கு பெரிய நதிகளைப் பார்த்தால் தான் தெரியும். இவைதவிர பல கிளை நதிகளும், சிற்றாறுகளும், ஓடைகளும் நிறைந்து கயானவை ஓர் இயற்கை எழில் நிறைந்த நாடாக மாற்றியுள்ளன. கடலில் செல்லும் கப்பல்கள் நாற்பது மைல் முதல் நூறு மைல்கள் வரை உட்செல்ல இயலுமென்றால் இந்த நான்கு பெரிய நதிகளின் ஆழத்தையும், அகலத்தையும் எளிதில் உய்த்துணரலாம்.

கயானவில் உள்ள மிகப் பெரியநதி எசிக்யூபோ ஆகும். நீளத்திலும். அகலத்திலும் மிகப் பெரிய நதியான இதனுடன், ரூபுநூனி (Rupununi), பொடாரோ (Potaro), மசரூனி (Mazaruni) குயூனி (Cuyuni) என்னும் கிளை நதிகள் இணைந்து, நாட்டின் நிலப்பரப்பில் ஏறக்குறைய பாதிக்கு மேற்பட்ட பகுதியில் பாய்ந்து, இந்த நாட்டின் இயற்கை வளத்தை மேம்படுத்தி வருகின்றன.

நாட்டின் முக்கிய நதிகளில் முதலிடத்தைப் பெறுவது டெமராராவாகும். இதன் முகத்துவாரத்தில்தான் நாட்டின் தலைநகரான ஜார்ஜ்டவுன் உள்ளது. இதுவே நாட்டின் முக்கியத்துறைமுகமுமாகும். நாட்டின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பு போன்ற இந்த நதியின் இரு கரைகளிலும் கரும்புத் தோட்டங்களும், நெற்பண்ணைகளும் நிறைந்து அந்நியச் செலாவணியை வாரி வழங்குகின்றது. டெமராராவிலிருந்து ஏற்றுமதியாகும் சர்க்கரையும், இதனைக் கொண்டு தயாரிக்கப்படும் "ரம்" என்னும் மதுவகையும் உலகப் புகழ் பெற்றவை.

பெர்பீஸ் நதியின் முகத்துவாரத்தில் இந்த நாட்டின் இரண்டாவது பெரிய நகரமும், துறைமுகமுமான நியூ ஆம்ஸ்டர்டாம் (New Amsterdam) உள்ளது.

கொரன்டீன் நதியின் மேற்குப் பகுதி கயானாவிற்கும், கிழக்குப்பகுதி சுரினாமிற்கும் உரிமையானது. பெர்பீஸ் கொரன்டீன் ஆகிய இருநதிகளுக்கும் இடைப்பட்ட பகுதியில் நெல் வயல் களும், கரும்புத்தோட்டங்களும் நிறைந் துள்ளன. இந்தப் பகுதியே கயானவின் "நெற் களஞ்சியம்" என வருணிக்கப் படுகின்றது. இங்குத்தான் தமிழர்கள் அதிகமாகக் குடியேறியுள்ளனர். நாட்டிற்குக் கணிசமான அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தரும் அரிசி யையும், சர்க்கரையையும் பெருவாரி யாக உற்பத்திச் செய்கின்றனர். அந் நியச் செலாவணியை நாட்டிற்குப் பெற்றுத் தரும் பிறபொருள்கள் பாக்சைட் (அலுமினியம்), தங்கம் பல வகை உயர்தர மரங்களாகும்.

இந்த நாட்டின் பழங்குடி மக்க ளான அமெரிந்தியர்கள் தற்போது மக்கள் எளிதில் புக இயலாத காடுகளின் நடுவிலும், குன்றுகளின் அடிவாரத்தி லும், ஆற்றோரங்களிலும் வாழ் கின்றனர்.

அமெரிந்தியர்களினின்று வேறு படுத்த இந்தியர்களைக் "கிழக்கிந்தியர்", என அழைக்கின்றனர். இவர்கள் நாட்டின் மக்கள் தொகையில் ஏறக் குறைய பாதிக்குமேல் உள்ளனர். இவர் களில் பெரும்பான்மையானோர்இன்றும் கரும்புத் தோட்டங்களிலும், நெற் பண்ணைகளிலும் தொழிலாளி களாகவே வேலை செய்து வருகின்றனர். சிலர் தனியார் நிறுவனங்களிலும், பாங்குகளிலும் பணியாற்றுகின்றனர். கயானாவின் பொருளாதார வளர்ச்சிக் கும் செல்வாக்கிற்கும் இவர்கள் ஆற்றி வரும் பணி மிகச் சிறப்பானது.

இந்தியர்களுக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணத் தக்கவர்கள் ஆப்பிரிக்க வம்சாவளியினர். இந்த நாட்டிற்கு அடிமைகளாக வந்த இப் பெருங்குடி மக்கள், இந்த மண்ணில் இரவு பகலாக இருநூறு ஆண்டு களுக்கு மேல் உழைத்து நாட்டை வளப் படுத்தி இருக்கிறார்கள். இவர்கள் உழைப்பால் உருவானதே இந்த நாட்டில் உள்ள பல்லாயிரக் கணக்கான கரும்புத் தோட்டங்கள். இவர்களில் பலர் இன்று உயர்தர அரசாங்க அதிகாரிகளாகவும், பல அரசாங்க நிறுவனங்களை நடத்து பவர்களாகவும் உள்ளனர். நாட்டின் அரசியல் தலைமையும், ஆட்சிப் பொறுப்பும் இவர்களிடம் உள்ளன.

கரும்புத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக மெடிரா (Madeira) என்னும் தீவிலிருந்து வந்த போர்த்து கீசியரும், கிழக்காசியாவிலிருந்து வந்த சீனர்களும் தற்போது நாட்டில் குறை வாக உள்ளனர். எனினும் போர்த்துக் கீசியரில் பலர் பெரும் வியாபாரிகளாக உள்ளதோடு, தொடர் வியாபார நிலையங்களையும், வணிக நிறுவனங் களையும் நடத்தி வருகின்றனர். கப்பல் போக்குவரத்து, வாணிபம் இவற்றில் பெரும்புள்ளிகளாக இப்பகுதி யில் உள்ள யாவரும் போர்த்துக்கீசியர் களே. சீனர்களில் பலர் வியாபாரிகளாக வும், உணவு விடுதிகளை நடத்துபவர் களாகவும் உள்ளனர். இவர்களில் சிலர் கணிதம், விஞ்ஞானம் போன்ற துறை களில் வல்லுநராகக் கயானாப் பல் கலைக் கழகத்தில் பணியாற்று கின்றனர்.[1]

தமிழர்களின் வளமான பாரம் பரியத்தை அறிய வேண்டுமானால்

தென்னிந்திய வரலாற்றைப் படிப்ப தோடல்லாமல், தென்கிழக்கு ஆசிய வரலாற்றையும் நன்கு படிக்க வேண்டும். குறிப்பாகக் கம்போடியா தாய்லாந்து இந்தோனேசியா போன்ற நாடுகளின் வரலாற்றை ஆழ்ந்து படித்தால்தான், தமிழர்கள் பண்பாடு, கலை, சமயம் போன்ற துறைகளில், பெற்றிருந்த சிறப்பை அறிய இயலும்.[2]

சிறப்பான பாரம்பரியத்தைப் பெற்ற தமிழர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டு முதல் ஒப்பந்தக் கூலி களாக (Indentured labourers) உலகத்தின் பல நாடுகளுக்குச் சென்றார்கள். இந்தக் கட்டுரையில் அவ்வாறு சென்ற நிகழ்ச்சியை வரலாற்றுப் போக்கில் காண்பதோடு, கயானாவிற்குத் தமிழர்கள் வந்த விதத்தையும், இந்நாட்டுச் சமுதாயத்தில் அவர்கள் இன்று பெற்றுள்ள இடத்தையும், பொருளாதாரம், சமயம போன்ற துறைகளில் அவர்கள் ஆற்றி வரும் தொண்டையும், கள ஆய்வு மூலம் நான் பெற்ற விளக்கத்தின் துணை கொண்டு விளக்கியுள்ளேன்.

பதினாறாவது நூற்றாண்டு முதல் ஐரோப்பியர்கள் உலகின் பல நாடுகளுக்குச் சென்று, அந்த நாடுகளைத் தங்கள் அரசியல் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தார்கள். பிறகு அந்த நாடுகளில் வியாபாரப் பயிர்களான புகையிலை, கரும்பு, ரப்பர், காப்பி, தேயிலை போன்றவற்றைப் பெருமளவில் உற்பத்தி செய்ய ஆரம்பித்தார்கள். இத்தோட்டங்களில் வேலை செய்வதற்காகப் போர்த்துகீசியர் கி.பி. 1530-ஆம் ஆண்டு தொடங்கி, மேற்கு ஆப்பிரிக்கா, காங்கோ, அங்கோலா போன்ற ஆப்பிரிக்கக் கண்டத்தின் பல வேறு பகுதிகளிலிருந்து ஆயிரக் கணக்கான ஆப்பிரிக்க மக்களை விலங்குகள் போல் பிடித்து வந்து அமெரிக்கச் சந்தைகளில் அடிமைகளாக விற்கத் தொடங்கினர்.[3] இவர்களின் உழைப்பால் வடஅமெரிக்கா, தென் அமெரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள் போன்ற பகுதிகளில் இருந்த புகையிலை, கரும்பு, காப்பி. ரப்பர் தோட்டங்கள் வளம் பெற்றதோடல்லாமல் ஐரோப்பியர்களின் பொருளாதாரமும் விருத்தியடைந்தது.

இந்த அடிமைகள் தான் கி.பி.1634 முதல், கயானாவில் உள்ள எசிக்யூபோ நதிக்கரையிலிருந்த டச்சுக்காரர்களின் தோட்டங்களில் வேலை செய்ய ஆரம்பித்தார்கள்.[4]

Early European Areas of Settlement



அப்போதிலிருந்து தொடங்கிய ஆப்பிரிக்கர்களின் அடிமை வாழ்வு 1834ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் தேதியோடு ஒழிந்தது.[5] அடிமைத் தலையை அறுத்தெறிந்த ஆப்பிரிக்க மக்கள் அதற்குப் பிறகு கரும்புத் தோட்டங்களை விட்டுப் பெருவாரியாக வெளியேற ஆரம்பித்தனர். அவர்களில்

பலர் தோட்ட வாழ்க்கையையே ஓர் அடிமையின் சின்னமாகக் கருதினர். ஆதலின் தாங்கள் பல தலைமுறைகளாக உழைத்து வளப்படுத்திய கரும்புத் தோட்டங்களை விட்டு வெளியேறி நகர்ப் புறங்களில் குடியேற ஆரம்பித்தனர். இதன் காரணமாகக் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்ய நிறைய ஆட்களைத் தேட வேண்டிய நிலை ஏற்பட்டது.

கூலியாள்கள் மலிந்த நாடு இந்தியா என்னும் கருத்து அந்தக் காலத்திலேயே வெள்ளைக்காரத் தோட்ட முதலாளிகளின் மனத்தில் குடிகொண்டிருந்தது. அதற்கேற்ப இந்தியாவும் அந்தச் சமயத்தில் மொரிசியஸில் (Mauritius) உள்ள கரும்புத் தோட்டங்களில் வேலை செய்ய ஆள்களை அனுப்பிக் கொண்டிருந்தது. அதே சமயத்தில் இந்தியக் கூலிகள் குறைந்த சம்பளம் வாங்கிக் கொண்டு நன்றாக உழைக்கக் கூடியவர்கள் என்ற கருத்தும் பரவியிருந்தது. ஆதலின் கயானாவிலிருந்த இரண்டு பெரிய தோட்டங்களின் முதலாளியான ஜான் கிளாட்ஸ்டோன் (John Gladstone) என்பவர், அப்போது காலனிகளின் செயலராகப் பணியாற்றி வந்த கிளினெல் பிரபுவின் (Lord Glenelg) துணையோடு இந்தியாவிலிருந்து ஒப்பந்தக் கூலிகளைக் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டார். அவர் முயற்சியால் 1838-ஆம் ஆண்டு மே மாதம் 5-ஆம் தேதி இந்தியாவிலிருந்து 156 ஒப்பந்தக் கூலிகளை ஹெஸ்பரஸ் (Hesperus) என்னும் கப்பல் கயானாவிற்கு ஏற்றி வந்தது. அதே மாதத்தில் விட்பை (Whitby) என்னும் கப்பலும் 263 கூலிகளைக் கொண்டு வந்து இறக்கியது.[6]

முதற் கப்பல் கொண்டு தந்த கூலிகளைத் தோட்ட முதலாளியான கிளாட்ஸ்டோன் டெமராரா நதிக்கரையில் உள்ள வீ. என்—ஹூப் (Vreed-en-Hoop) வீடஸ்டீன் (Vriedestein) என்ற தோட்டங்களுக்கும் எசிக்யூபோ நதிக்கரையில் உள்ள அன்னாரிஜீனாவிற்கும் (Anna Regina) அனுப்பி வைத்தார். விட்பை ஏற்றி வந்த கூலிகளை டெமராராவில் உள்ள பெலிவ்யூ (Belle Vue) என்னும் தோட்டத்திற்கும், எசிக்யூபோ நதிக்கரையில் உள்ள ஹைபரி (Highbury) வாடர்லூ (Waterloo) என்னும்தோட்டங்களுக்கும் அனுப்பி வைத்தார். இவ்வாறு 1838-ஆம் ஆண்டு தொடங்கிய, இந்தியக் கூலிகளின் கயானா வருகை 1917-ஆம் ஆண்டோடு முடிவடைந்தது.[7] இந்த எண்பது ஆண்டுகளில் இந்தியாவிலிருந்து வந்த கூலிகளில் பலர் மேற்கிந்தியத் தீவுகளான டிரினிடாட் (Trinidad) ஜெமெய்கா (Jamaica) செயின்ட் லூசியா (St Lucia) குவாடிலோப் (Guadeloupe) மார்டினிக்கிற்கும், (Martinigue) கயானாவின் கிழக்கில் உள்ள சுரினாமிற்கும் அனுப்பப்பட்டனர். 1838-ஆம் ஆண்டு தொடங்கி 1917-ஆம் ஆண்டு வரை கயனாவிற்கு மட்டும் வந்த இந்தியர்களின் தொகை 2,38,979 ஆகும்.[8]

இவர்களில் சென்னையிலிருந்து வந்தவர்கள் எத்தனை பேர் என்பதனைத் தற்போது கணக்கிட வழியில்லை. எனினும் 1845 முதல் 1862 வரை இந்த நாட்டிற்கு வந்த தமிழர்களின் எண்ணிக்கை கணிசமாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் 1845-ஆம் ஆண்டு முதல் 1848-ஆம் ஆண்டு வரை ஒப்பந்தக் கூலிகளை ஏற்றி வந்த நாற்பத்தைந்து கப்பல்களில், இருப்பத்

தோரு கப்பல்கள் சென்னையிலிருந்து வந்ததாக அறிகின்றோம்.[9] மேலும் 1845—1862 வரை கயானாவிற்கு வந்த இந்தியர்களில் ஏறக்குறைய ஐம்பது சதவிகிதத்தினர் மதறாசிகள் எனக் கணக்கிட்டுள்ளர். ஆதலின மேற்குறிப்பட்ட காலக்கட்டததில் சென்னையிலிருந்து வந்தவர்களின் தொகை சுமார் ஓர் இலட்சத்திற்குக் குறையாமல் இருக்கலாம் என ஊகிக்க முடிகின்றது. இந்த நிலை நீண்ட காலத்திற்கு நீட்டிக்கவில்லை. குறிப்பாக 1860-ஆம் ஆண்டிற்குப் பிறகு தமிழர்களின் எண்ணிக்கை படிப்படியே குறைய ஆரம்பித்தது என்றும், அதற்கான காரணங்கள் பல என்றும் அறிகின்றோம். அக்காரணங்களைப் பிறகு காண்போம். 1874-ஆம் ஆண்டு அறிக்கையின் படி கயானாவிற்கு வந்த இந்தியர்களில் நாற்பத்து நாலாயிரம் பேர் கல்கத்தாவிலிருந்தும், இரண்டாயிரத்து ஐந்நூறு பேர் சென்னையிலிருந்தும் வந்தவர்கள் என அறிகின்றோம். இதற்குப் பிறகு சென்னையிலிருந்து அதிகமான கூலிகள் இந்நாட்டிற்கு வரவில்லை என்றாலும், மறுபடியும் மதறாசிகளின் வருகை 1913-ஆம் ஆண்டு முதல் தொடங்க ஆரம்பித்து 1917-ஆம் ஆண்டோடுமுடிவடைந்தது.[10] இந்த ஆண்டுகளுக்கிடையில் வந்த தமிழர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்திருக்க முடியாது என்பதனைத் தற்போது இந்நாட்டில் வாழும் தமிழர்களைக் கொண்டும், என்கள ஆய்வினால் பெற்ற தகவல்களைக் கொண்டும் உய்த்துணர முடிகின்றது.

இந்தியாவிற்தும் கயானாவிற்கும் உள்ள தூரம் ஏறக்குறைய பன்னிரெண்டாயிரம் மைல்கள் ஆகும். இந்தத் தூரத்தைப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கப்பல் மூலம் கடந்து வர நான்கு மாத காலமாகும். குறிப்பாக 1838 ஆம் ஆண்டில் விட்பை என்னும் கப்பல், இந்தியாவிலிருந்து ஒப்பந்தக் கூலிகளை ஏற்றிக் கொண்டு கயானாவிற்கு வர நூற்றுப்பதினான்கு நாட்களானதாகப் பீடர் ருயூமோன் (Peter Ruhomon) கூறியுள்ளார். பயண வசதிகள் குறைந்த அந்த நாள்களில் இத்தகைய நீண்ட பிரயாணத்தை மேற்கொள்ள நல்ல உடல் வலிமை வேண்டும். ஆனால் அத்தகைய உடல் வலிமை கல்கத்தாவிலிருந்து வந்தவர்களை விடச் சென்னையிலிந்துவந்தவர்களுக்குஅதிகமிருந்ததாக வரலாற்று ஆசிரியர்களின் குறிப்புகளிலிருந்து அறியமுடிகின்றது. கல்கத்தாவிலிருந்து வந்த கப்பல்களில் உயிர்ச்சேதம் அதிகமென்றும், சென்னையிலிருந்து வந்த கப்பல்களில் அது மிகக் குறைவென்றும், கயானாவில் உள்ள கிழக்கிந்தியர்களின் வரலாற்றை எழுதிய துவாரக நாத் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாகச் சென்னையிலிருந்து காயானாவிற்குக் கூலிகளை ஏற்றி வந்த நெஸ்டர் (Nester) என்னும் கப்பலில் உயிர்ச்சேதம் அறவே இல்லையென்றும், இது அந்தக் காலத்தில் ஓர் வரலாற்றுச் சாதனை என்றும் டென்னிஸ் பாஸ்யிர் (Dennis Bassier) குறிப்பிட்டுள்ளார்.[12]

சென்னையிலிருந்து வந்த கூலிகளில் பலர் நகர்ப் புறங்களில் வேலை செய்த தொழிலாளிகள் என்றும், ஓரளவுஎழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் என்றும் நம்பஇடமுள்ளது. குடியேற்றச் செயலரின் ஆண்டறிக்கை ஒன்று, ''மதறாசிகள் திறமையாக வேலை செய்யக் கூடியவர்கள்'' எனக்கூறுகின்றது[13] அதேசமயத்தில் தமிழர்களைப் பற்றி மற்றோர் கருத்தும்

இந்த நாட்டில் நிலவி வந்தது; இன்றும் நிலவி வருகின்றது. இதற்குச் சான்றாகக் குடியேற்றத் தலைமைச் செயலரின் 1916 ஆம் ஆண்டறிக்கையைக்குறிப்பிடலாம். சென்னையிலிருந்து வந்த ஒப்பந்தக் கூலிகள் கடுமையாக உழைக்கக் கூடிய வர்கள், ஆனால் கட்டுக்கடங்காதவர்கள் அளவிற்கு மீறிய குடிபோதையில் சண்டையிட்டு ரத்தக் களரியை உண்டாக்கக் கூடியவர்கள்··· ஆதலின் பெரும் பான்மையான கரும்புத்தோட்ட முதலாளிகள், கல்கத்தாவிலிருந்து வந்த கூலிகள் வேலைக்குக் கிடைக்காதபோதே சென்னைக் கூலிகளை வேலைக்கு அமர்த்த ஒத்துக் கொண்டனர்''.[4] இதே கருத்தை 1918-ஆம் ஆண்டு அறிக்கையும் மறுபடியும் வெளியிட்டு உள்ளது. மேலும், பிரிட்டிஷ் கயானா வின் வரலாற்றை எழுதிய ஹென்றி டால்டன் (Henry G Dalton)அவர்களும், தமிழ்க்கூலிகளைப் பற்றி மிக இழிவாகக் கூறியுள்ளார்; இவர்கள் தங்களையும், தங்கள் சுற்றுப்புறத்தையும் தூய்மை யாக வைத்துக்கொள்வதில்லை. தாங்கள் வேலை செய்யும் தோட்டத்தை விட்டு நகர்ப் புறங்களுக்கு ஓடி, அங்கெல்லாம் பிச்சையெடுத்து வாழ்வதோடு மிகக் குறைந்த கூலிக்கே குற்றேவல் புரிந்தும் வாழ்கின்றனர்''[15].

தமிழர்களைப் பற்றி இவ்வாறான மாறுபட்ட கருத்துகள் நிலவுவதற்கான காரணங்கள் யாவை? தற்போது இந் நாட்டில் வாழும் தமிழர்களிடம் மேற் குறிப்பிட்ட கருத்துகளை எடுத்துக் கூறி னால் அதற்குச் சில பொருத்தமான காரணங்களைப் பின் வருமாறு கூறு கின்றனர். சென்னையிலிருந்து வந்தவர் களில் பெரும்பான்மையானோர் நகர்ப் புறங்களிலிருந்து வந்த காரணத்தினா லும், அடக்குமுறை நிறைந்த தோட்ட வாழ்க்கையை விரும்பாத காரணத்தி னாலும், ஒப்பந்தத்தில் குறித்த ஊதியம் கயானா வாழ்க்கைக்குப்போதுமானதாக இல்லாத காரணத்தினாலும், தோட்டத் திலிருந்த வாழ்க்கை வசதிகள் எதிர் பார்த்து வந்ததை விட மிகமோசமான நிலையில் இருந்தகாரணத்தினாலும், தாங்கள் வேலை செய்து வந்த தோட்டங் களை விட்டு நகர்ப் புறங்களுக்கு ஓடி வந்தார்கள்.[16] நகர்ப் புறங்களில் வேலை வாய்ப்பு அந்தக் காலத்தில் நிறைய இல்லாத காரணத்தினால் பலர் எடுபிடி வேலைகளைச் செய்யத் தொடங்கினர். சிலர் வெள்ளைக்காரரின் வீடுகளில் வேலைக்காரர்களாகப் பணிபுரிந்தனர். இன்னுஞ்சிலர் ஒட்டுக்கடைகள் (Kiosks) வைத்து வாழ்க்கை நடத்தினர். வேறு சிலர் நகரத் துப்புறவுத் துறையில் பணி யாற்றத் தொடங்கினர். மற்றும் சிலர் எந்த வேலையும் கிடைக்காத காரணத் தினால் பிச்சை எடுத்து தம்வாழ்க்கையை நடத்தினர். எவ்வாறு இருந்தபோதிலும் நகரங்களுக்கு வந்த தமிழர்கள் பொது வாகச் சுகாதார வசதிகள் நிறைந்த பகுதிளில் வாழ இயலவில்லை அதோடு மிகக்குறைந்த ஊதியத்தில் வாழ்க்கை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்ட காரணத்தினால் தரமான உணவை உண்ண இயலாமற்போய்விட்டது. மேற் கூறிய காரணங்களினால் நகரத்தற்கு வாழ வந்தவர்களில் சிலர்காசநோயால் இறந்து விட்டதாக அறிய முடிகின்றது.[1]

நகரங்களில் ஒட்டுக்கடைவைத்தவர்[7] களில் பலர் படிப்படியே பணவசதியைப் பெருக்கிக் கொண்ட தோடல்லாமல், தம் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திக் கொண்டனர். அதேபோல் நகரத் துப் புரவுத்துறையில் வேலை செய்தவர்களும்

வசதியோடு வாழ ஆரம்பித்த தோடல் லாமல் தம் மக்களையும் படிக்க வைத்து வாழ்க்கையில் முன்னேற்றியதாக அறி கின்றோம். இவ்வாறு பணவசதி பெற்ற இரண்டாவது மூன்றாவது தலை முறையினர் இந்தியாவிற்கே திரும்பி விட்டதாக லெஸ்லி பாட்டர் என்பவர் தாம் நிகழ்த்திய டாக்டர் பட்ட ஆய் வுரையில் கூறியுள்ளார். 1921-ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்தியாவிற்குத் திரும்பிய, "கிழக்கிந்தியர்களின் எண்ணிக்கை 69,970 ஆகும். இவர் களில் பெரும் பான்மையானோர் சென்னை மாநிலத்திலிருந்து வந்தவர் என்பதனை பெயர்ப்பட்டியலைக் கொண்டு அறிய முடிகின்றது" என அவர் கூறியுள்ளார்[18]

தற்போது இந்த நாட்டில் வாழும் தமிழ் வம்சாவளியினரை இருவகை யாகப் பிரிக்கலாம் : 1) 1921-ஆம் ஆண்டிற்கு முன் இந்தியாவிற்குத் திரும்பியவரைத் தவிர எஞ்சியிருந்த ஏறக்குறைய 1,500 தமிழர்—தெலுங்கர் குடும்பங்களின் சந்ததியினர்; 2) 1913-17ஆம் ஆண்டுகளுக்கிடையில் வந்த சென்னை வாசிகளின் வழித்தோன்றல் கள். இவர்களின் எண்ணிக்கை தற் போது 80,000திற்குமேல் இருக்க முடியா தென என் கள ஆய்வின் மூலம் பெற்ற குறிப்புகளின் மூலம் அறியமுடிகின்றது.[1], இவர்கள் யாவரும் தற்போது இந் நாட்டில் உள்ள நான்கு பெரிய நதிகளை அடுத்துள்ள கரும்புத் தோட்டங்களிலும்[9] நெற் பண்ணைகளிலும், நகரங்களிலும் வேலை செய்கின்றனர். இவர்கள் தங்கி வாழும் நகரங்களும், பேரூர், சிற்றூர் களும் இந்த நதிகளுக்கிடையிலேயே உள்ளன.

கயானவில் உள்ள தமிழர்களில் பெரும்பான்மையோர் தோட்டப்புறங் களிலும், சிற்றூர்களிலும் இருந்த போதிலும், குறிப்பிடத் தக்க சிலர் ஜார்ஜ்டவுன், நியூ ஆம்ஸ்டர்டாம் போன்ற பெரு நகரங்களில் சிறப்புடன் வாழ்கின்றனர். மருத்துவத் துறையில் புகழ்பெற்று விளங்கும் ஒரு சிலரில் லெஸ்லி முத்து என்னும் தமிழர் குறிப் பிடத் தக்கவர். இவர் ஜார்ஜ்டவுன் மருத்துவமனையில் பணியாற்றுகிறார். தற்போதுள்ள அரசாங்கத்தில் மிகுந்த செல்வாக்கோடுள்ளார். திரு. சாமி என்பவர் வியாபாரத்துறையில் சிறந்து விளங்குவதோடு, இந்த நாட்டிலுள்ள இலட்சாதிபதிகளில் ஒருவராகத் திகழ் கின்றார். இவரும் ஜார்ஜ்டவுனிலேயே உள்ளார். கல்வித் துறையில் புகழோடு விளங்குபவர் டாக்டர் ஜே. ஆர். ராம்சாமி. இவர் கயானப் பல்கலைக் கழகத்தில் உயிர் நூல் துறையில் பணி யாற்றுகிறார், இவருடைய தம்பி ஹெர்னன் ராம்சாமி என்பவர் மருத்து வராகக் கொரன்டீன் பகுதியில் உள்ள ஆல்பியன் என்னும் ஊரில் பணியாற்று கின்றார். அரசாங்கத்தில் உயர்ந்த அதிகாரிகளாக உள்ள தமிழர்கள் மிகக் குறைவு. இதுவரை ஆய்வு நிகழ்த்தியதில் நான் அறிந்த ஒரே அரசாங்க அதிகாரி ஜேம்ஸ் நாயுடு ஆவார்கள். இவர் நியூ ஆம்ஸ்டர்டாமில் கமிஷ்னராகஉள்ளார்.[20] நம் நாட்டிலுள்ளமாவட்டகலெக்டருக்கு ஒப்பான பதவி இது. இவர்களைத் தவிர சிலர் ஆசிரியர்களாகவும், நர்சுகளாகவும் பொறியியலாளர்களாகவும் பணி புரி கின்றனர். இத்தகையோர் தற்போதுள்ள தமிழர்களில் ஐந்து முதல் பத்து சத விகிதத்திற்கு மேல் இருக்கமாட்டார்கள். மற்றவர்கள் யாவரும் நெற்பண்ணை

களிலோ கரும்புத் தோட்டங்களிலோ பல்வேறு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

மருத்துவர்களாகவும், ஆசிரியர் களாகவும், பொறியியல் நிபுணர்களாக வும், நர்சுகளாகவும் இருந்த தமிழர் களில் பலர் 1960-ஆம் ஆண்டிற்குப் பிறகு நாட்டில் நிலவி வரும் அரசியல், பொருளாதாரச் சூழ்நிலைகளின் காரண மாக அமெரிக்காவிற்கும், பிரிட்டனுக் கும், கனடாவிற்கும் சென்று விட்ட தாக இங்குள்ள தமிழர்கள் கூறுகிறார் கள்.[21] அவர்கள் கூறுவதில் உண்மை இருப்பதாகத் தெரிகிறது. நான் பேட்டி கண்ட தமிழ்க் குடும்பங்களில் குறைந் தது ஒருவராகிலும் மேற்குறிப்பிட்ட நாடுகளில் வாழ்ந்து வருவதாக அறிந் தேன்.

தமிழர்கள் தற்போது ஏறக்குறைய அறுபது ஊர்களில் வாழ்ந்து வருகின்ற னர். அவை சிலவற்றில் ஒரு சில குடும் பங்களே உள்ளன. ஆனால் கொரன் டீன் பகுதியில் உள்ள கங்காராம் குடி யிருப்பு, ஆல்பியன், ஹாம் ஷயர், வில்லி யம் பர்க், ரோஸ்ஹால், விம், போர்ட் மொராண்ட், பெல்விடீர் போன்ற ஊர் களிலும், டெமராரா நதியின் மேற்குப் பகுதியில் உள்ள லெனோராவிலும், ஸ்டூவர்ட் வில்லிலும், கிழக்குக் கரையில் உள்ள ஹெர்ஸ்டெலிங்கிலும், டெமராரா நதியின் கிழக்குப் பகுதியில் உள்ள என்மூர், மய்கோனி போன்ற ஊர்களிலும் சுமார் அறுபது முதல் நூறு குடும்பங்கள் இருக்கலாமென என் கள ஆராய்ச்சி மூலம் தெரிய வருகின்றது.[22]

மேற்குறிப்பிட்ட ஊர்களின் பெயர் களில், கங்காராம் குடியிருப்பு, மய் கோனி, போர்ட் மொராண்ட் என்பவை தவிர, மற்றவற்றில் பல இங்கிலாந்தி லும், சில ஹாலந்திலும் உள்ள ஊர் களின் பெயர்களாகும். மய்கோனி, போர்ட் மொராண்ட் என்பவை அமெரிந்தியச் சொற்களின் வழி பிறந் தவை. கங்காராம் என்பது மட்டும் இந்தியப் பெயராகும்.

இங்குள்ள தமிழ்க் குடும்பங்களில் பெரும்பான்மையானவை தனிக் குடும்பங்களாகவே உள்ளன. கூட்டுக் குடும்பங்களை (Extended family System) அதிகமாக இந்த நாட்டில் எந்த இனத்த வரிடமும் காணமுடியாது ; தமிழர்களும் இதற்கு விதி விலக்கானவர்கள் அல்லர். சம்பாதிக்கும் திறமை ஏற்பட்டுத் திருமணம் செய்து கொண்டவுடன், தம்பதிகள் தம் தாய்தந்தையரின் வீட்டை விட்டு வெளியேறித்தனிக் குடும்பங்களாக வாழ ஆரம்பித்து விடுகின்றனர்.

இந்த நாட்டில் கணவனும் மனைவி யும் ஏதாகிலும் ஒரு வேலை செய்துவாழ் கின்றனர். அவ்வாறு சம்பாதிக்காமல் இங்குக் குடும்ப வாழ்க்கையைப் பொது வாக யாரும் செம்மையாக நடத்த முடி யாது. ஏனெனில் நாட்டின் வாழ்க்கைத் தரமும், வாழ்க்கை முறையும் மக்களின் வருவாய்க்கு ஏற்ப அமைந்திருக்க வில்லை.

கயானாவில் குடும்பக் கட்டுப்பாடு அதிகம் இல்லை ; அதற்கான தேவையும் இன்னும் பல ஆண்டுகளுக்கு இருக்காது. பெரும்பான்மையான தமிழ்க் குடும்பங் களில் ஐந்து முதல் பத்து குடும்பங் களைச் சாதரணமாகக் காணலாம். நான் பேட்டி கண்ட மாரியாய் என்ப வரின் தந்தை மட்ரை முத்து (மதுரை

முத்து) என்பவருக்கு இரண்டு ஆண் களும் ஒன்பது பெண்களும் பிறந்ததாக வும் அவர்களில் ஓர் ஆண் குழந்தை மட்டும் இறந்து விட்டதாக அறிந்தேன்[23] அவருடைய மக்களின் பெயர்கள் பின் வருமாறு :

1. ராம்சமி சின்னபேன் — ராமசாமி சின்னப்பன்
2. வெள்ளினீ — வள்ளி ?
3. வெளைமா — வெள்ளையம்மா
4. சிரொமணி — சிரோன்மணி
5. லசுமி — லட்சுமி
6. சிந்தமணி — சிந்தாமணி
7. திரௌதி —திரௌபதி
8. அழகுயாலு — அழகுக்குயில் ?
9 நயினி — நளினி ?
10. மரியாய் —மாரியம்மா என்பதன் சுருக்கம்.

இங்குள்ள தமிழர்களின் பெயர் களைக் கேட்கும்போது சில சமயங் களில் இவை தமிழ்ப் பெயர்களா என்னும் ஐயம் ஏற்படுவது இயல்பு. கீழ்வரும் பெயர்களைக் காண்போம்.[24]

1. களிச்சரன் — காளீஸ்வரன்
2. சோன்முக் — சண்முகம்
3. ராம்நெரீன் — ராமநாராயணன்
4. கார்ப்பேன் — கருப்பண்ண கவுண்டர்
5. வீர்மா — வீரம்மா
6. கோப்பால் ஓர்யன் — கோபால் உடையார்
7. ராம்சமி — ராமசாமி
8. லக்மா — லட்சுமி அம்மா
9. பூனாய் — பொன்னையா

இவ்வாறு சில பெயர்கள் உருத்தெரி யாமல் சிதைந்து போனதற்குக் காரணம் ஐரோப்பியர்களே. தமிழ்ப் பெயர் களைச் சரிவர உச்சரிக்கத் தெரியாமல் தடுமாறிய டச்சுக்காரர்களும், பிரெஞ்சுக் காரர்களும், ஆங்கிலேயர்களும் தங்களால் உச்சரிக்கக் கூடிய வகையில் கூப்பிட்டதோடல்லாமல் அதேபோலத் தோட்டத்துப் பதிவேடுகளிலும் எழுதி விட்டார்கள். ஆதலின் ஒப்பந்தக் கூலி களின் சந்ததியினரும் மேலே குறிப் பிட்டது போன்ற தவறான உச்சரிப் போடு கூடிய பெயர்களையே தங்கள் பெயராகக் கொண்டனர். ஆனால் இந்தப் பொதுவிதிக்கு மாறான தமிழ்க் குடும்பங்கள் இந்த நாட்டில் சில உள்ளன:

அவற்றில் மிக முக்கியமாகக் குறிப் பிடத் தக்க குடும்பம் திரு. ஜொனாஸ் ஜான் (Jonas John) என்பவரின் குடும்ப மாகும். இவர் இந்த நாட்டிற்கு 1910-ஆம் ஆண்டில் வந்ததாக அறிய முடிகின்றது. இவர் இன்றும் தமிழை ஓரளவு தெளிவாகப் பேசுகிறார். தமிழ் நாடகங்கள் சிலவற்றையும் அவ்வப் போது தெருக்கூத்துகள் போல் நடத்திக் காட்டியுள்ளார். அவர் நடத்திய நாடகமான வெளைமா நாட்கும் (வள்ளியம்மா நாடகம்), மட்ரை நாட் கும் (மதுரைவீரன் நாடகம்), தேசாங்கு நாட்கும் (தேசிங்குராசன் நாடகம்) போன்றவை இங்குக் குறிப்பிடத்தக்கவை

ஜொனாஸ் ஜான் அவர்களின் மகன் சின்னபேன் ஜான் ஆகும். இவர் தற்போது மான்ரி போஸ் எனனும் ஊரில் வாழ்கின்றார். தலைநகரான ஜார்ஜ் டவுனிலிருந்து இந்த ஊர் ஏறக்குறைய பன்னிரெண்டு மைல் தொலைவில் உள்ளது. இவரும் தமிழை ஓரளவு தெளிவாகப் பேசுகிறார்; ஓரளவு சரளமாகவும் படிக்கின்றார். இவர் தம் மக்களுக்கு வைத்திருக்கும் பின் வரும் பெயர்களின் மூலம் இவருடைய தமிழ்ப் பற்றையும், சமயப் பற்றையும் தெளிவாக அறியலாம்.

1. வேதவல்லி ஜான் — முதல் மகள்
2. வேங்கடேஸ்வரன் ஜான் — முதல் மகன்
3. விஜயலட்சுமி ஜான் — இரண்டாவது மகள்
4. கணேசன் ஜான் — இரண்டாவது மகன்
5. மாணிக்கவாசகர் — மூன்றாவது மகன்

ஜோனாஸ் ஜான், சின்னபேன் ஜான் போன்ற பெயர்களைக் கேட்டதும் இவர்கள் கிறித்துவர்களா என்னும் ஐயம் ஏற்படும். ஆனால் இவர்களில் ஒருவரும் கிறித்துவர் அல்லர்; யாவரும் இந்துக்களே.25

தமிழ் நாட்டிலிருந்து இந்த நாட்டிற்கு வந்த கூலிகளைப் பல்வேறு தோட்டங்களுக்குப் பிரித்து அனுப்பினார்கள் என்று முன்பு கண்டோம். அவ்வாறு அனுப்பிய பல தோட்டங்களில் மாதாகோயிலும், கிறித்துவ சமயப் பிரசாரமும் இருந்தன. அவற்றில் வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமைகளில் முறையாக நடைபெறும் பிரார்த்தனைக் கூட்டங்களுக்குச் சென்று வர ஆரம்பித்ததின் காரணமாக மதம் மாறியவர்கள் சிலருண்டு. புதிதாக வந்த தமிழர்களைப் படிப்படியாகத் தங்கள் பிரசாரத்தின் மூலம் பாதிரியார்கள் திட்டமிட்டுக் கிறித்துவ சமயத்தைத் தழுவும் படியும் செயதிருக்கிறார்கள். இந்துக்களுக்குள் இருக்கும் சாதிவேறுபாடு, பல கீழ்ச் சாதிகள் எனக் கூறப்படுகின்ற தமிழர்களைக் கிறித்துவ சமயத்தைத் தழுவும் படியும் செய்துள்ளது. அவ்வாறு மதம் மாறியவர்களில் பலர் காலப் போக்கில் தம் பழைய சமயத்தின் பாரம்பரியத்தையும், மேன்மையையும் அறிந்து மறுபடியும் இந்து சமயத்திற்கே திரும்பியவர்கள் பலருண்டு. அவ்வாறு இந்து சமயத்திற்குத் திரும்பிய தமிழ்க் குடும்பத்தினரின் இயற்கையான இந்து சமயப் பெயர்களோடு ஜான், ஜோசப் போன்ற கிறித்துவப் பெயர்களும் இணைந்திருப்பதனைக் காணலாம். இந்தக் காரணத்தினால்தான் சின்னப் பேனோடு ஜான் என்னும் பெயரும் இணைந்துள்ளது.

இந்த நாட்டிற்கு வந்த மதராசிகளில் பெரும்பான்மையானவர் இந்துக்களாக இருந்த போதிலும், ஏறக்குறைய முப்பத்தைந்து சதவிகிதத்தினர் தற்போது கிறித்துவர்களாக உள்ளனர். இவர்களில் சிலர் நன்றாகப் படித்து வாழ்க்கையில் முன்னேறியுள்ளனர்.

பெரும்பான்மையான தமிழர்கள் இன்றும் தெய்வ நம்பிக்கையும், தெய்வ வழிபாட்டில்உறுதியும் உடையவர்களாக உள்ளனர். பலர் தம் இல்லங்களிலேயே ஒரு சிறு பகுதியைப் பூசை அறையாக ஒதுக்கித் தினமும் வழிபாடு செய்து

வருகின்றனர் தெலுங்கர்களில் சிலர் பெருமாள் வழிபாட்டில் ஈடுபட்டு உள்ளனர். அத்தகையவர்களின் இல்லங்களின் வாயிலில், சுற்று மிதலை ஒட்டி, ஒரு கல்லை நாட்டி, அதற்கு ஓர் நாமமும் இட்டுத்தினமும் வழிபாடு நிகழ்த்துகின்றனர். இத்தகைய கடவுள் வழிபாடு இல்லங்களில் நடைபெறுவதோடல்லாமல், கோயில்களிலும் வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமைகளில் முறையாக நடைபெற்று வருகின்றது.

இறைவனிடம் வேண்டுதல் செய்து கொண்டு, அந்த வேண்டுதல் நிறைவேறியதும் தம் இல்லங்களிலேயே தாம் வழிபடும் கடவுளுக்குச் சிறப்புப் பூசைகள் செய்தல் உண்டு. அத்தகைய பூசைகள்சிவனுக்கும்,காளியம்மனுக்கும், மாரியம்மனுக்கும், மட்ரை வீரனுக்கும், சூர்ய நாராயண் ஜிக்கும், அனுமன் ஜிக்கும் செய்வதுண்டு. பூசை முடிந்ததும் எந்தக் கடவுளுக்குப் பூசை செய்தார்களோ அந்தக் கடவுளுக்குரிய கொடியை வீட்டின் சுற்றுச் சுவரின் ஓர் மூலையில் நடுவார்கள. மேற்கோளாக அனுமன் ஜிக்குப் பூசை செய்வோர் சிவப்புக் கொடியை நடுவார்கள். சூர்ய நாராயண் ஜிக்குரிய கொடி வெள்ளை; மட்ரை வீரன் சாமிக்கும், அம்பாளுக்கும் உரிய கொடி மஞ்சள்; மாரியம்மனுக்குரியது மஞ்சள் அல்லது சிவப்பு நிறக்கொடி; சிவனுக்குரியது பச்சை; காளிக்குரியது கருமைநிறக்கொடியாகும்.[26]

சிறப்புப் பூசைக்குப் பிறகு வீட்டின் முற்பகுதியில் கொடி நடும் பழக்கததைப் பீகார் மாநிலத்திலிருந்து வந்தவர்களிடம் காணலாம். இப்பழக்கத்தை இந்நாட்டில் உள்ள தமிழர்களும் காலப்போக்கில் தம்முடையதாக்கிக் கொண்டனர். இதுபோலவே வங்காளத்தில் விமரிசையாகக் கொண்டாடப்படும் காளி பூசையையும் இந்நாட்டுத் தமிழர்கள் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

கிறித்துவர்களைப் போலவே, தமிழர்களும் ஞாயிற்றுக் கிழமைகளில் கோயிலுக்குச் செல்லும் பழக்கத்தை நடைமுறையில் கைக்கொண்டுள்ளனர். இந்துக் கோயில்களையும் கிறித்துவ முறைப்படியே ''சர்ச்'' என்று அழைக்கின்றனர். சில சமயங்களில் ''இந்து சர்ச்'' என்று கூறுவதும் உண்டு. இத்தகைய இந்து சர்ச்சுகளைத் தமிழ் நாட்டில் உள்ள கோயில்களோடு எந்த வகையிலும் ஒப்பிட முடியாது. உயர்ந்த கோபுரங்களையோ, பெரிய திருச்சுற்று மதில்களையோ, கற்சிலைகளையோ படிமங்களையோ இந்தக் கோயில்களில் காண இயலாது. பெரும்பான்மையான கோயில்கள் நம் வீட்டுப் பூசை அறை போலப் பெரிய அளவில் உள்ளன. தெய்வச் சிலைகளுக்குப் பதிலாகக் கடவுளரின் படங்களை வைத்து வழிபடுகின்றனர். பெரும்பான்மையான கோயில்களில் லட்சுமி, சரசுவதி படங்களையும், கணேசர், கிருஷ்ணன், ராமன் படங்களையும், வேங்கடேசப் பெருமாள் சிவபெருமான் படங்களையும் காணலாம். சில கோயில்களில் படங்களோடு களிமண்ணால் சிலைகளைச் செய்து அழகிய வண்ணங்களைத் தீட்டி வழிபாட்டிற்குப் பிரதிஷ்டை செய்து வைத்துள்ளனர்.

இத்தகைய கோயில்களில் பல பெரிய வீடுகள் போல் நாற்பதுக்கு மேற்பட்ட ஊர்களில் உள்ளன. இக்கோயில்களை இந் நாட்டு மக்கள்

'காளிசர்ச்''சுகள் என அழைக்கின்றனர்· இவை கொரன்டீன்—பெர்பீஸ் பகுதிகளில் பதினாறு ஊர்களிலும், கிழக்கு டெமராாராவில் இருபதுக்கு மேற்பட்ட ஊர்களிலும், மேற்கு டெமராராவில் இரண்டு ஊர்களிலும், எசிக்யூபோவில் மூன்று ஊர்களிலும் உள்ளன. இக்கோயில்களின் பட்டியலைக் கீழே, காணலாம்.

கயானாவில் உள்ள காளிகோயில்களின் பட்டியல்

இக்கோயில்கள் யாவற்றிலும் முழுமுதற் கடவுளாக இடம் பெறுவது காளியோ மாரியம்மனோ ஆகும். இந்நாட்டில் உள்ள தமிழர்களில் பலருக்கு வழிபடும் தெய்வமாக உள்ளது. இக்கடவுள்களில் ஏதாகிலும் ஒன்றாகும். மேலும் மட்ரை வீரன், முனேஸ்வரன் (முனீஸ்வரன்), மாயன் பெருமாள் போன்ற கடவுள்கள் இடம் பெறுகின்றன. ஆல்பியனில் உள்ள காளி கோயிலில் சூர்ய நாராயண்ஜிக்கும் ஒரு முக்கியம் கொடுத்துள்ளனர் பலகோயில்களில் கிராம தேவதைகளும் உற்சவ மூர்த்திகள் போல முக்கிய இடம் பெறுகின்றன.



இந்தக் கோயில் ட்ரையம்ஸ் அணைக்கட்டுக்குப் பக்கத்தில் உள்ளது. இங்கு வழிபாட்டிற்குச் சிலைகள் இல்லை, ஆதலின் படங்களை மட்டும் வைத்துப் பூசை செய்கிறார்கள். படத்தில் இருப்பவர் சின்னபேன் ஜான், வேங்கடேன் சுவரன் முதலானோர்.

Kali Churches in Guyana

Berbice	*Demarara*	*Essequibo*
Corentyne	East Coast Demarara	
1. Black Bush Polder	1. Good Faith Mahaicony	1. Essequibo Coast
2. Rose Hall	2. Huntley	2. Zeelugt East Bank Essequibo
3. Rose Hall Church (Run by blacks)	3. Cane Crove	
4. No. 43 Village	4. Mon Repos Squatting area	

5. Letter Kenny	5. Lusignan
6. Whim	6. Triumph (Agriculture Dam)
7. Hampshire	7. Triumph : Miller St
8. Nig Settlement	8. Better Hope
9. Bloomfield	9. Better Hope
10. Port Mourant	10. Liliendaal
11. Albion	11. Kitty
12. Albion Front	12. Independence Boulevard
13 Misphobi Canje & Wept Berbice	13. Greater Georgetown
13. Gangarm (Canje)	
14. Canje Rose Hall	14. Eccles
15. Blairmont	15. Grove squatting Area
16. Cotton Tree (West Berbice)	16. Herstelling
	17. Soesdyke *West Demerara*
	18. Stewartville

Souyce : Interview with Mr. Chinapen John on 25 January, 1987; Dennis Bassier, "Kali-mai in Guyana : Its Spatial Distribution and Divisions' in *Release*, Vols 3 & 4, Guyana, 1978, p. 73.
According to Mr. John the list is not complete.

காளி கோயில்கள் பற்றிய ஒரு சிறு குறிப்பு

மேலே குறிப்பிட்ட கோயில்களில் மிகப் பழமையானவை பெர்பீஸில் உள்ள மிஸ் போமியும், ஆல்பியன் பிரண்டும், டெமராராவில் உள்ள ஹெர்ஸ் டெலிங்கும் ஆகும.

கொரன்டீனில் உள்ள பிளாக் புஷ் போல்டரில் உள்ள கோயிலை நிறுவியவர் கனராய்[1](கனக ராஜ்) ஆவார். போர்ட் மொராண்டில் உள்ள கோயிலை கிஷ்டின் நாயுடு[2] (கிருஷ்ணன் நாயுடு) அவர்களும், ஆல்பியன் கோயில்களை நிறுவியவர்கள் ஜேம்ஸ் நாயுடு[3] அவர்களும் டோமி நாயுடு[4] அவர்களும் ஆவர். டெமராராவில் உள்ள மில்லர் தெரு ட்ரையம்ஸ் கோயிலைத் தோற்று வித்தவர் ஜோனாஸ் ஜான் ஆவர்[5], இவர் சின்னப்பேன் ஜான் அவர்களின் தந்தையாவார். பெட்டர் ஒப்பில் உள்ள இரண்டு கோயில்களையும் கட்டியவர்கள் டோராவும்,[6] புத்தியும்[7] ஆவர். அதுபோலவே சோஸ்டைகில் உள்ள கோயிலை டோராவும், ஜார்ஜ்டவுனில் உள்ள கோயிலை சுக்ரீம்[8] அவர்களும், க்ரூவில் உள்ள கோயிலை மென் ஜி[9] அவர்களும் தோற்றுவித்தவர்கள். எசிக்யூபோவில் உள்ள கோயிலை நிறுவியவர் ஜான்[10] ஆவார்கள்.

1) Kanarai
2) Kistin Naidoo
3) James Naidoo
4) Tommy Ramsammy Naidoo
5) Jonas John
6) Dora
7) Buddy
8) Sugrim
9) Benjie
10) John

(திரு. சின்னபேன் ஜான் அவர்களுடன் 15—12—1986 அன்று நடத்திய பேட்டியின் மூலம் பெற்ற தகவல்கள்)

இறைவனுக்குரிய படையலை வாழை இலையில் வைத்துள்ளனர். இளநீர், தேங்காய், ஆரஞ்சு,வாழை இவற்றைப் படத்தில் காணலாம்.

இந்தக் கோயில் டெமராரா பகுதியில் உள்ள ஸ்டுவெர்ட்வில் என்னும் ஊரில் உள்ளது. இந்தப் படத்தில் உள்ள சிலை முனேஸ் வரனுடையது. படத்தில் உள்ள இருவரும் கோயில் பணியாளர்கள்.

தமிழர் கோயில்களை இரண்டு வகையாகப்பிரிக்கலாம்; 1.காளியம்மன், மாரியம்மன் போன்ற தெய்வங்களையும், கிராம தேவதைகளையும் உள்ளடக்கிய கோயில்கள்; 2. மேற்கூறிய கடவுள்களோடு சிவன், பெருமாள், லட்சுமி, சரசுவதி போன்ற தெய்வங்களையும் உள்ளடக்கியகோயில்கள்,

முன்னதை மதராசிகளின் கோயில்கள் என்றும். இரண்டாவதை இந்துக் கோயில்கள் என்றும் அழைக்கின்றனர்.

மேலும் இதே கோயில்களை உயிர்ப் பலி (கோழி, ஆடுபோன்ற உயிர்களைப் பலியிடல்) கொடுக்கும் கோயில்கள் என்றும், உயிர்ப்பலிஇடாத கோயில்கள் என்றும் இருவகையாகப் பிரிக்கின்றனர். அந்தக் கோயில்களின் பட்டியலைக் கீழே காணலாம்.

ஆண்டுதோறும் இக்கோயில்களில் திருவிழா நடைபெறுவதுண்டு. ட்ரையம் பில் உள்ள கோயிலில் அப்போது அம்மன் சிலையை வீதியில் வழிபாட்டிற் காக எடுத்துச் செல்வதுண்டு. அதோடு தீ மிதித்தலும் நடக்கும். அம்மன் வீதி வலம் வருவதைக் கீழேயுள்ள படத்தில் காணலாம்.

உயிர்ப்பலி கொடுத்துப் பூசை செய்யும் கோயில்களைப் பிற இந்தியர் கள் இழித்துப் பேசுகிறார்கள். இந்து சமயத்திற்குப் புறம்பான காரியங்களைச் செய்பவர்கள் மதராசிகள் என்றும், தூய்மையற்றவர்கள் என்றும் இழி வாகப் பேசும் வழக்கம் இன்றும் நடை முறையில் உள்ளது.

இங்குள்ள சில கோயில்களில் சாதிப் பாகுபாடு பாராட்டுகிறார்கள். ஆனால் உயர்ந்த சாதியினரையும் தாழ்ந்த சாதி யினரையும் எவரென்று தனித்தனியே பாகுபடுத்திக் காட்டும் தெளிவு இங் கில்லை. இந்த நாட்டிற்குக் கவுண்டர் களும், நாயுடுகளும், நாயக்கர்களும், உடையார்களும் (குயவர்கள்), கரை

Madras Oriented Vs. Non Madras Oriented Churches

Madras Oriented	Hindu Oriented	General
1. Black Bush Polder— South Mibicuri	Cotton Tree	Rose Hall (NegroKali)
2 Rose Hall	Good Faith	
	Mahaicony	Blairmont
3. No. 43	Cane Grove	Essequibo
4. Letter Kenny	Mon Repos Squatting Area	
5. Whim	Triumph Agri. Dam	
6 Hampshire	Better Hope-Dora	
7. Nig Settlement	Better Hope-Buddy	
8. Bloomfield	Liliendaal	
9. Port Mourant - K. Naidoo	Eccles	
10. Albion- J. Naidoo	Grove-Benjie	
11. Albion - T. Ramsammy	Soesdyke	
12. Gangaram	Black Bush Polder North Mibicuri	
13. Canje Rose Hall	Zeelugt-West Coast Dem.	
14. Triumph — Jonas		
15. Ind. Boulevard GrG/Town		
16. Groue - Bertie		
17. Herstelling		
18. Stewartville		

Table shows Life-killing Vs. non Life-killing churches

Known life-killing churches	*Known non life-killing churches*
1 Albion-Naidoo	Port Mourant-Naidoo
2. Albion-Ramsammy	Herstelling
3. Rose Hall	Nig Settlement
4. Mon Repos	Cotton Tree
5. Mibicuri North B.B P.	Gangaram
6 Ind. Boulevard	Stewartville
7. Grove H. Scheme	Liliendaal
8. Grove Squatting Area	Mibicuri South B.B.P.-Joseph Kempadoo
9. Cane Grove	
10. Better Hope—Dora	
11. Better Hope--Buddy	
12. Soesdyke	
13. Zeelugt	

SOURCE: Bassier, P. 74.

யாளர்களும் (மீன் பிடிப்போர்) வந்து உள்ளதாக என் கள ஆய்வின் மூலம் அறிந்தேன்.

1940-ஆம் ஆண்டில் வில்லியம்ஸ் பர்க் என்னும் ஊரில் ஆசிரியராக இருந்த கார்பேன் டீச்சர் (Karpen Teacher) (உண்மையான பெயர் கருப்பண்ண கவுண்டர்) என்பவர் தமிழ் கற்பித்து வந்ததோடல்லாமல் இராமாயணம், கைவல்யம் போன்ற நூல்களைக் கொரன்டீன் — பெர்பீஸ் போன்ற பகுதியில் உள்ளவர்களுக்குப் படித்துக் காட்டி அவர்களிடம் தமிழ்ப் பற்றையும், இந்து சமயப் பற்றையும் 1940-ஆம் ஆண்டு வரை வளர்ந்து வந்ததாக அறிகின்றேன். அதோடு சோதிடம், ரேகை சாத்திரம் போன்ற துறைகளில் வல்லவராக இருந்தாரென்றும், தற்போதுள்ள சில கோயில் பூசாரிகளுக்குக் குருவாக இருந்தவரென்றும் என் கள ஆய்வின் மூலம் அறிந்தேன்.[27]

ஆல்பியன் காளிகோயிலில் பூசாரியாகப் பணியாற்றி வரும் பாஸ்கர் நாயுடு அவர்கள் ஆல்பியனில் உள்ள முக்கியமான தமிழர்களில் ஒருவர். இவரிடம் சாதிப் பிரிவு பற்றிக் கேட்ட போது, அவரால் தெளிவான விளக்கம் எதையும் கூற முடியவில்லை. அவர் கருத்துப்படி ராம்சமி (ராமசாமி), வெங்கட்சலம் (வேங்கடாசலம்) நாரயண்சமி (நாராயணசாமி), மூன்சமி (முனுசாமி), கோவிண்ட்சமி (கோவிந்தசாமி), போன்றோர் உயர்சாதியினர், மற்றையோர் தாழ்ந்த சாதியினர். அதோடு சில குடும்பங்களின் பெயர்களைக் கூறி அவர்கள் யாவரும் தாழ்ந்த சாதியினர் என்றார். இந்தச் சாதிப்பாகுபாடு பெர்பீஸ் பகுதியில் அதிகம் இருப்பதாக என்கள ஆய்வின் மூலம் அறிந்தேன் நாயுடு அவர்கள் பூசை செய்யும் கோயிலில் சாதிப்பாகுபாடு பாராட்டுவல்திலை[28]

ஆனால் ஆல்பியனில் உள்ள மற்றொரு தமிழ்க் கோயிலில் பணியாற்றும் ரங்கசாமி ரங்கநாயகம் என்பவர் தன் கோயிலில் சாதிக்கட்டு உண்டென்றும், தாழ்ந்த சாதியினர் கோயிலுக்கு வெளியே நின்று பிரார்த்தனை செய்ய வேண்டும் என்றும் கூறினார். அவர் கருத்துப்படி, 'சாதிப்பாகுபாடு நம் பாரம்பரியத்தில் உள்ளதாகவும், அதை இந்த நாட்டிலும் கடைப் பிடிப்பதில் தவறொன்றுமில்லை' என்றும் கூறினார்.[29] எனினும் இந்தியாவில் உள்ளது போன்ற சாதிப் பிரிவு தெளிவாக இந்த நாட்டில் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்நாட்டுக் கோயில்களில் மூலவரான காளியம்மனுக்குப் பெரிய அறையும், மட்ரை வீரன் போன்ற கிராம தேவதைகளுக்குத் தனித்தனிச் சிறிய அறைகளும் உள்ளன. கோயில் சிறியதாக இருந்தால் எல்லாக் கடவுளரையும் ஒரே அறையில் உயரமான மேடையில் வைத்திருப்பார்கள்.

ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமைகளில் நடக்கும் பூசையில் கலந்து கொள்ள அக்கம் பக்கத்தில் உள்ள ஊர்களிலிருந்து பக்தர்கள் பூசைத் தட்டில் வாழை, ஆரஞ்சு போன்ற பழங்களையும், பலவகை பூக்களையும், தேங்காயையும் கொண்டு வருவர். சிலர் வடை, சுண்டல், அரிசி மாவால் செய்த கேசரி போன்ற பொருள்களைச் சிறப்புப் படையலாகக் கொண்டு வருவர். வேண்டுதல் கைகூடிய போதும். துன்பங்கள் விலகிய போதும் சில

பக்தர்கள் இத்தகைய சிறப்புப் படையலைக் கொண்டு வரும் வழக்கம் இந்த நாட்டில் உள்ளது.

பூசாரி வந்தவுடன் கோயிலில் கூட்டுப் பிரார்த்தனை ஒரு மணி நேரத்திற்கு நடைபெறும். அப்போது 'மாரியம்மன் தலாத்து' (மாரியம்மன் தாலாட்டு). 'சிலக்குத்து' (சிலம்புக் கொத்து) போன்ற நூல்களில் உள்ள பாடல்களைத் தாளத்தோடு பாடுவர். வட இந்தியாவில் பாடப்படும் சில பஜனைப் பாடல்களையும் ஆங்கிலத்தில் எழுதி வைத்துக் கொண்டு பாடும் வழக்கமும் உண்டு. எத்தகைய பாடலைப் பாடுவதாக இருந்தாலும், பாடுபவர் முதலில் ஒரு வரியைப் பாட மற்றவர் அதே வரியைத் திரும்பப் பாடுவர் இந்த முறை எல்லாக் கோயில்களிலும் பின்பற்றப் படுவதால் கோயிலுக்கு வரும் பக்தர்கள் யாவரும் பல பாடல்களை மனப்பாடமாக அறிந்துள்ளனர்.

கூட்டுப் பிரார்த்தனை முடிந்ததும், பூசாரி தம் பூசையைத் தாம் அறிந்தபடி முறையாகத் தொடங்குவார். முதலில் பக்தர்கள் கொண்டு வந்த பூக்களைக் காளியம்மன் பாதத்தில் வைத்துவிட்டுத் தேங்காய்களை உடைத்துச் சாம்பராணி தூபம் காட்டிக் கற்பூர ஆராதனையோடு பூசையை பிடித்து விடுவார். பூசை நடைபெறும் காலத்தில் பக்தர்களில் பலர் பாடிக் கொண்டிருப்பர்; இருவர் பறை ஒலி எழுப்புவர், ஓர்ருவர் மணி அடிப்பர். பெருமாளுக்குப் பூசை செய்யும் போது சங்கு ஊதுவதும் உண்டு.

பூசை நிகழும் போது சில பக்தர்கள் ஆண் பெண் இருபாலரும், உணர்ச்சி வசப்பட்டு தெய்வம் ஆடுவதை நான் சென்ற எல்லாக் கோயில்களிலும் கண்டேன். இவர்களில் பெரும்பாலானோர் பத்து முதல் பதினைந்து நிமிடங்கள்வரை தம்மை மறந்து ஆடுகின்றனர். அத்தகைய பக்தர்களோடு நான் நீண்ட நேரம் பேசி, அவ்வாறு ஆடுவதற்கான காரணத்தை அறிய முயன்றபோது யாவரும் தங்களுக்கு என்ன நிகழ்ந்தது என்பதனை விளக்க இயலாமல் திகைப்பதை உணர்ந்தேன்.

பக்தர்களுக்கான பூசை முடிந்தவுடன் வேறோர் சிறப்புப் பூசை நடைபெறும். அப்போது கோயிலைச் சார்ந்த ஒருவர் உணர்ச்சி மேலீட்டால் தெய்வம் ஆடத் தொடங்குவார். இதனை ஒரு வகை வெறியாட்டு என்றே கூற வேண்டும். இந்த வெறியாடல் ஏறக்குறைய மூன்று மணிநேரத்திற்குத் தொடரும். அந்தத் சமயத்தில் பக்தர் வேண்டிக் கேட்கும கேள்விகளுக்குத் தக்க விடை தருவதோடு, நோய்க்கு நாட்டு மருந்தும், சில பரிகாரங்களையும் கூறி அனுப்புவார். ஆங்கில மருத்துவரால் தீராமல் கைவிடப்பட்ட பல நோய்களுக்கும், சில வகையான தோல் வியாதிகளுக்கும் இந்தக் கோயில்கள் மருத்துவ நிலையங்கள் போல் பணி புரிகின்றன. குணம் பெற்றோர் இக் கோயிலின் நிரந்தர பக்தர்களாதல் உண்டு.

ஹெர்ஸ்டெலிங் கோயில் வெளித்தோற்றம் ஹெர்ஸ்டெலிங் கோயிலுக்கு வந்து வழிபாடு செய்த பிறகு தம்முடைய தீராத நோயொன்று தீர்நத காரணத்தினால், இவர் இந்தக் கோயிலுக்கு வாரந்தோறும் தவறாமல் வருவதாகக் கூறினார். இத்தகைய கோயில்

களுக்கு மதறாசிகளைத் தவிர, பிற இந்தியர்களும், மற்ற சமயத்தவரும், ஆப்பிரிக்கர்களும் வருகின்றனர். கொரன்டீன் பகுதியில் உள்ள ரோஸ் ஹால் அம்மன் கோயிலை ஓர் ஆப்பிரிக்க பக்தர் நடத்துகிறார். ஹொர்ஸ்டெலிங் கோயிலில் பக்தியோடு குறி சொல்லும் இளைஞர் ஒரு முஸ்லீம். மதறாசிகள் நடத்தும் கோயில்களில் சில வழிபாட்டுக் கோயில்களாக மட்டும் இல்லாமல் நோய்தீர்க்கும் மருத்துவ நிலையங்களாகவும் பணிபுரிகின்றன.

தமிழர்களின் கோயில்களைத் தவிர கல்கத்தாவிலிருந்து வந்தவர்களின் கோயில்கள் நாடுமுழுவதும் உள்ளன. இக்கோயில்களில் சில வட இந்தியப் பாணியில் கட்டப்பட்டுள்ளன. இவை சிலவற்றில் சிவன் வழிபாடும், பல வற்றில் கிருஷ்ணன் வழிபாடும் நடை பெறுகின்றன. நம் நாட்டுக் கோயில் களைப் போன்று இந்நாட்டுக் கோயில் கள் நாள்தோறும் திறக்கப்படுவதில்லை; பூசைக்கான எந்த ஏற்பாடும் நிகழ் வதில்லை; பக்தர்கள் கோயில் பக்கம் திரும்பிப் பார்க்கும் வழக்கமும் இல்லை. சில கோயில்களில் வாரம் இருமுறையும் பல கோயில்களில் ஞாயிற்றுக் கிழமை மட்டும் பூசை நடைபெறும்.

இவ்வாறு கோயில்கள் வாரம் ஒரு முறை மட்டும் திறப்பதற்கான காரணம் யாது? நம் நாட்டில் உள்ளது போல் கோயில்களில் பூசை செய்ய இந் நாட்டில் ஒரு குறிப்பிட்ட சமூகம் இல்லை; கோயிற் பணியினை மட்டும் நாள் தோறும் செய்து கொண்டு அதன் மூலம் வாழ்க்கை நடத்துவதற்கான வழியும் இல்லை. மேலும் இந்தக் கோயில்களில் நாள்தோறும் பூசை நடைபெறுவதற் கான மானியங்களை யாரும் வழங்க வில்லை; அந்தப் பழக்கம் இன்னும் நடை முறையில் வரவில்லை.

இந்நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கையைக் கூர்ந்து கவனிக்கும் போது மற்றோர் காரணமும் தெளி வாகின்றது. இந்திய வம்சாவளியினரில் பெரும்பான்மையானோர் இன்னும் தோட்டப் புறங்களிலேயே தொழிலாளர் களாக உள்ளனர். அவர்கள் கரும்புத் தோட்டத் தொழிலாளிகளாக இருந் தாலும் சரி, நெற்பண்ணைகளில் பணி யாளர்களாக இருந்தாலும் சரி, அந்த வாழ்க்கை மிகக் கடுமையாக உள்ளது. காலையில் எட்டு மணிக்குத் தொடங்கும் வேலை, மாலை நான்கு மணிக்கு முடிந் தாலும், அவர்கள் இல்லம் திரும்ப ஐந்து மணியோ ஆறு மணியோ ஆகும். அதற்குப் பிறகு வீட்டு வேலைகளைக் கவனிப்பதற்கே பெண்களுக்கு நேரம் சரியாக இருக்கும். ஆண்களில் கடமை உணர்ச்சியுடைய சிலர் தம் குடும்பப் பொறுப்புக்களைக் கவனிப்பதோடு தம் மக்களின் கல்வியிலும் நாட்டம் செலுத்து கின்றனர். இன்னும் சிலர் வீட்டில் தோட்டம் போடுவதோடு கோழிப் பண்ணை போன்றவற்றை வைத்து மேல் வரும்படிக்கு வழி செய்து கொள் கின்றனர். ஆனால் பெரும்பான்மை யானோர் வேலை முடிந்தவுடன் தம் நண்பர்களோடு பீர் பார்லருக்குச் **(Beer Parlour)** —சென்று ''ரம்'' என்னும் மதுவை வயிறு முட்டக் குடித்துவிட்டு அந்தப்போதையில் தம் இல்லம் திரும்பு கின்றனர். ஆதலின் கோயில் வழிபாடு பலருக்கு அன்றாட வாழ்க்கையில் இடம் பெற வாய்ப்பில்லாமல், ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாக அமைந்துள்ளது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஒப்பந்தக் கூலிகளாகக் கரும்புத் தோட்டங்களில் வாழ்க்கை தொடங்கியபோது அந்தத் தோட்டங்களில் சர்ச்சுகள் தான் இருந்தன. அவற்றில் விடுமுறை நாளான ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் வழிபாடு நிகழும். அந்தப் பழக்கத்தை இந்த நாட்டு இந்துக்களும் பின்பற்றத் தொடங்கியகாரணத்தினால் ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் கோயில் வழிபாடு நடைபெற்று வருகிறது.

இந்தியாவிற்கு மிக அருகில் உள்ள இலங்கை, பர்மா, மலேசியா, சிங்கப்பூர் மொரிசியஸ் போன்ற நாடுகளில் இந்தியப் பண்பாடு மிக ஆழமாக வேரூன்றியுள்ளது. இந்நாட்டுத் தமிழர்கள், தமிழ் நாட்டுத் தொடர்பை அறுபடாமல் பாதுகாத்துவருகின்றனர். அந்த வாய்ப்பு இந்தியாவிற்கு மிகத் தொலைவில் உள்ள மேற்கிந்தியத் தீவுகளிலும், கயானாவிலும் வாழும் தமிழ்வம்சாவளியினருக்கு இல்லாமற்போய்விட்டது. மேலும் ஆங்கில - அமெரிக்கப் பண்பாட்டின் ஈர்ப்பாலும் இங்குள்ள தமிழர்களில் பலர் தம் பாரம்பரியப் பண்பாடு முழுவதையும் பேணிக்காக்க முடியாமற் போய்விட்டது. எனினும் அந்தவளமான பாரம்பரியத்தின் ஒரு சில கூறுகளையாவது மறவாமல் இன்னும் போற்றி வருவது பாராட்டத் தக்கதாகும்.

பொதுவாகக் கயானாவில் வாழும் இந்தியர்களின் கல்வி மொழிபாகவும், அரசியல் மொழியாகவும், பேச்சு மொழியாகவும் ஏன் சமய மொழிபாகவும் விளங்குவது ஆங்கிலமே. பலருக்குத் தம் தாய்மொழி அறவே தெரியாது, ஓரளவு தெரிந்திருந்தாலும் முழுவதும் விளங்காது. இந்த நாட்டு வரலாற்றுப் பேராசிரியையாக உள்ள நோயல் மெனீஸ் (Noel Menezes), "எவரொருவர் தம்தாய் மொழியை மறக்கின்றார்களோ அவர் தம் பண்பாட்டையே மறக்கின்றனர்", என்று கூறியதற்கிணங்க[30] இந்த நாட்டு மக்களுடைய வாழ்க்கையில் இப்பண்பாட்டு வரட்சியைப் பொதுவாகக் காணலாம். அதோடல்லாமல் இந்த நாட்டிற்கு அடிமைகளாக வந்த ஆப்பிரிக்கர்களும், கூலிகளாக வந்த போர்த்துகீசியர்களும், இந்தியர்களும், சீனர்களும் தம் குடும்பத்தை உடன் அழைத்து வரவில்லை. ஆதலின் இந்த நாட்டுச் சமூகத்தில் பதினாறாம்நூற்றாண்டு முதல் பெண்கள் தொகை மிகக் குறைவாக இருந்தது, அதனால் இந்த நாட்டு மக்களுக்குள் இனக்கலப்புப் பெருவாரியாக நிகழ்ந்துள்ளது. இந்த இனக் கலப்பை இந்தியர்களைவிட, மற்ற இனத்தவரிடம் அதிகம் காண முடியும். மதறாசிகளில் பலர், கல்கத்தாவிலிருந்து வந்தவர்களோடு கொள்வினை கொடுப்பினைத் தொடர்பை அதிகம் ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

இந்த நாட்டில் வாழும் இந்தியர்களின் நடையுடை பாவனைகள் யாவும் பொதுவாக ஆங்கிலோ அமெரிக்க நாகரிகத்தைப் பின்பற்றியவை. அங்க அழகை வெளிப்படுத்தும் வகையில் வண்ண ஆடைகளை அமெரிக்க பாணியில் அணிவதில் யாருக்கும் ஈடு இணை மற்றவர்கள். அன்றாட வேலை முடிந்ததும் 'ரம்' குடித்துக்களிப்பதோடு மாமிச உணவுகளைச் சுவைத்து உண்பதில் ரசனை உள்ளவர்கள். இந்த நாட்டின் பொதுப் பண்பாடு இவ்வகையில் அமைந்திருந்த போதிலும், இந்தியர்

களில் சிலர் இன்றும் தம் பாரம்பரியத்தை மறக்காமல் உள்ளனர்; சிலர் அப்பாரம்பரியம் பண்பாட்டுக் கூறுகள் சிலவற்றை உறுதியாகக்கடைப்பிடித்தும் வருகின்றனர். அக்கூறுகளில் ஒன்று தான் கடவுள் நம்பிக்கையும் கோயில் வழிபாடுமாகும்.

இந்நாட்டுத் தமிழ் இளைஞர்களில் சிலர் தம் பாரம்பரியச் சிறப்பை அறியவும், தமிழ் மொழி, கலைகள் ஆகியவற்றைக் கற்கவும் ஆவலோடு உள்ளனர். ஆனால் அந்த ஆவலைத் தணித்துக் கொள்ள வழி தெரியாமல் திகைக்கின்றனர் மலேசியா, சிங்கப்பூர்த் தமிழர்களைப்போலத் தங்கள் கைப்பணத்தைச் செலவுசெய்து கொண்டு தமிழகம் வந்து, தமிழ் மொழியையும், கலைகளையும், பண்பாட்டுக் கூறுகளையும் கற்க இயலாத நிலையில் உள்ளனர். இத்தகையோர்க்கு ஆர்வமும், துடிப்பும் உள்ள தமிழ் இளைஞர்களுக்கு, உதவத்தமிழக அரசாங்கமும், இந்து சமய நிறுவனங்களும், முன் வரவேண்டும் என்பதே என அவா.[31]

1. Vere T Daly 1985. *A Short History of the Guyanese people,* reprint, Hong Kong : Macmillan

2. G. Coedes (1966) *The Making of South East Asia,* California : University of California Press, and *The Indianized States of South East Asia,* Honolulu, 1968.

   Also read, J,F. Cady (1964) *Southeast Asia : Its Historical Development,* New York.

3. Daly, op:cit-, p:52

4. ibid., p 53.,

5. ibid., pp. 168—69.

6. Ibid., p. 176. Also refer Roy Arthur Clasgow, *Guyana : Race and Politics among Africans and East Indians,* The Hague, Martinus Nijhoff, 1970, p. 73. and Dennis Bassier, "Kali-Mai in Guyana : Its Spatial Distribution and Divisions", in *Release vols.* 3 & 4, Guyana, 1978, p.61.

7. Daly. op. cit., p. 176., Clasgow, *Guyana.* p 73.

8. Daly, op. cit., pp. 176—183. Bassier, "Kali-Mai in Guyana'., p.61.

9. Ship register of immigrants from Madras and Culcutta; Office of the General Registrar G P.O., and Bassier, p 63.

10, Bassier, pp 63-64: Immigration Agent General's Annual Repor' G.P.O., p.269.

11. Peter Ruhomon. (1947- *Centenaryt History of the East indians iu British Guiana* 1838-1938, Georgetown : The Daily Chronicle Co.p. 25.

12. Bassier, p. 62., Dwarka Nath, *A History of East Indians in British: Guiana,* London Thomas Nelson and sons, p.32.

13. Administration Report, 1916, Repoıt of the Immigration Agent General, p. 262.

14. Ibid., p.262.

15. Henry G. Lalton (1855) *The History of British Guiana*, 2 vols. London, p. 472.

16. திரு. சின்னபேன் ஜான் அவர்களோடு 15-12-1986 அன்று நடத்திய பேட்டியின் மூலம் பெற்ற தகவல்கள்.

17. Bassier, p.64.

18, Leslie Potter, *Internal Migration and Resettlement of East Indians in Guyana* 1870-1920, unpublished ph.D. dissertation, August 1975, p.39 See also Bassier, p 64.

19. Notes from my field work from December 1986 onwards.

20. திரு. வேங்கடேஸ்வரன் ஜான் சேகரித்த குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டது.

21. திரு. ராம்சமி ரெங்கநாத நாய்க்கேன் அவர்களோடு ஆல்பியன் நகரில் 9-6-1987 அன்று நடத்திய பேட்டியின் மூலம் பெற்ற தகவல்கள்.

22 Notes from my field work from December 1986 onwards.

23. Notes from my field work from December 1986 onwards. திருவாட்டி மாரியாய் அவர்களோடு ஆல்பியன் நகரத்தில் 9-6-1987 அன்று நடத்திய பேட்டி மூலம் அறிந்த தகவல்.

24. Notes from my field work from December 1986 onwards.

25. Notes from my field work from December 1986 onwards. திரு. சின்னபேன் ஜான் அவர்களோடு 15-12-1986 இல் நடத்திய பேட்டி மூலம் பெற்றதகவல்கள்.

26. திரு. சின்னபேன் ஜான் அவர்களோடு 15-12-1986 இல் நடத்திய பேட்டி.

27. Notes from my field work from Decembere 1986 onwards. திரு ராம்சமிரெங்கநாத நாய்க்கேன் அவர்களோடு 9-6-1987 அன்று நடத்திய பேட்டி மூலம் அறிந்த தகவல்கள்.

28. திரு. பாஸ்கர் நாயுடு அவர்களோடு 9-6 1987 அன்று நடத்திய பேட்டி. மூலம் பெற்ற தகவல்கள்.

29. திரு. ராம்சமி ரெங்கநாத நாய்க்கேன் அவர்களோடு நடத்தியபேட்டி

30. நோயல் மெனீஸ் என்பவர் கயானாப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறையில் பேராசிரியையாக உள்ளார். 16-4-1987, அன்று நடந்த ஆராய்ச்சித் தொடர் பேச்சில் கூறிய கருத்து. இவர் போர்த்துக்கீசிய வம்சாவளியைச் சார்ந்த கிறித்துவத் துறவி.

31. 1) இந்திய அரசாங்கம் உலகில் உள்ள நான்கு நாடுகளில் (கயானா, சுரினாம், பிஜீ, மொரிசியஸ்), "இந்தியப் பண்பாட்டு மையம்" (Indian cultural Center) என்பதனை நிறுவி அவைகளின் மூலம் இந்தி மொழி, பண்பாடு, கலைகள் ஆகியவைகளை மட்டும் பரப்பி வருகின்றது. அத்தகைய மையங்களில் ஒன்று கயானாவில் பல ஆண்டு

களாகச் செயற்பட்டு வருகிறது. இத்தகைய மையங்களுக்குத் தமிழக அரசும் தன் செலவில் ஓர் அறிஞரை. அனுப்பித் தமிழ் மொழி பண்பாடு கலைகளைப் பரப்ப முன் வரலாம். குறிப்பாகக் கயானா, பிஜீ, மொரசியஸ் போன்ற பகுதிகளுக்குத் திண்ணமாக ஒருவரை அனுப்புவது நல்லது.

2) தமிழக அரசு அமெரிக்காவில் உள்ள நியூயார்க் அல்லது மியாமி நகரத்தில் உள்ள பல்கலைக் கழகங்களில் ஏதாகிலும் ஒன்றில் தமிழ்துறையை நிறுவினால் கயானாவில் உள்ள தமிழர்களும், அமெரிக்கா, மேற்கு இந்தியத் தீவுகளில் உள்ள தமிழர்களும் அங்குச் சென்று தமிழையும், தமிழ நாட்டுக் கலைகளையும் படிக்க வசதியாக இருக்கும். அதே போல் சிங்கப்பூரிலும், ஆஸ்திரிலியாவிலும் தமிழ்த் துறையினை நிறுவுவது அவசியமாகும். ஆஸ்திரேலியாவில் சிட்னி, பெர்த் போன்ற இடங்களில் உள்ள பல்கலைக் கழகங்களில் தமிழ்த்துறையைநிறுவினால்நல்லது. ஏனெனில் இந்த இரு நகரங்களிலும் கணிசமான அளவு தமிழர்கள் குடியேறி உள்ளனர்.

3) பொருளாதாரத்தில் பின் தங்கிய நாடான கயானாவில் உள்ள தமிழ் இளைஞர்களில் ஒருவருக்கு ஒவ்வோர் ஆண்டும் உதவிப்பணம் கொடுத்துத் தமிழகத்திற்கு வரவழைத்து ஆறுமாத காலம் அடிப்படைத் தமிழையும், கலைகளையும், இந்து சமயக் கோயில் வழிபாட்டு முறைகளையும் கற்பதற்கான வாய்ப்பை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனமோ, தமிழ்ப் பல்கலைக் கழகமோ ஏற்படுத்தித் தருவதற்கான பண வசதியினைத் தமிழக அரசு செய்தால் மிகப் பயனுடையதாக இருக்கும். இவ்வகையில் அரசுக்கு உதவியாகத் தமிழகத்தில் உள்ள சைவ, வைணவ ஆதீனங்களும், மடங்களும் பொருளுதவி செய்ய முன் வந்தால் நாயன்மார்களும், ஆழ்வார்களும் வளர்த்த சைவ வைணவ சமயங்களைத் தமிழர் வாழும் கடல் கடந்த நாடுகளிலும் அழியாமல் காக்கலாம்.

4) இலண்டன் பல்கலைக் கழகத்தில் தற்போது டாக்டர் ஜான் மார் என்பவர் தமிழைக் கற்பித்து வருகிறார். அவர் ஓய்வு பெற்றால் அங்குத் தமிழ் நீட்டிக்குமா என்னும் ஐயம் உள்ளது. அந்தப் பல்கலைக் கழகத்தில் உள்ள School of Oriental and African Studies-இல் ஓர் சிறப்பு அறக்கட்டளையை ஏற்படுத்தி அங்குத் தமிழ் என்றும் கற்பிக்கப்படுவதற்கான ஒரு வழியைத் தமிழக அரசு ஏற்படுத்தியாக வேண்டும். இங்கிலாந்தில் தற்போது நிறைய தமிழர்கள் குவிந்துள்ளனர் என்பதனை நினைவில் கொண்டு அறக்கட்டளை நிறுவுவதற்கான முயற்சியில் தமிழக அரசு ஈடுபடுதல் வேண்டும்.

தமிழர்கள் வாழும் சில நாடுகளில் பணியாற்றியதோடன்றித் தமிழர்கள் வாழும் பல நாடுகளையும், உலக நாடுகள் பலவற்றையும் சுற்றிப் பார்த்த

அனுபவத்திலும், தமிழுணர்வுள்ளவன் என்னும் நிலையிலும் மேற்கூறிய கருத்துக்களை மிகப்பணிவோடு தமிழக அரசு கவனிக்க வேண்டும் என்னும் நோக்கத்தில் இககட்டுரையின் குறிப்பில் இணைத்துள்ளேன்.

தமிழ்க் கலை
தமிழ் 5, கலை 3,4

ராபர்ட் பென் வாரன் அமெரிக்க அரசவைக் கவிஞர் அறிமுக ஆய்வு

த கிருஷ்ணராஜ்

அரசவைக் கவிஞர் மரபு இங்கிலாந்தினுடையது. அமெரிக்காவிலும் சமீபத்தில் ஒருவர் அரசவைக் கவிஞர் (**Poet Laureate**) என அழைக்கப்பட்டுள்ளார். அமெரிக்காவின் சட்ட சபையான காங்கிரஸின் நூலகத்திற்கு (**Library of Congress**) ஆலோசகராக இருப்பவர்தான் அரசவைக் கவிஞராகவும் மேம்படுத்தப் பட்டுள்ளார். "இங்கிலாந்தின் மரபுகள் இடப்பெயர்ச்சி செய்யப்பட்டு அமெரிக்காவில் வளர விடுவதா?" என்று சிலர் கேட்டனர். டெமொக்ரேடிக் கட்சியின் உறவாய் மாநிலப் பிரதிநிதியான ஸ்பார்க் மாஸ்டுங்கா என்பவர், காங்கிரஸின் நூலகத்திற்குப் பணம் ஒதுக்கும் குழுவின் நபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபொழுது, 'அரசவைக் கவிஞர் அவசியம்' என்போரையும், 'இங்கிலாந்தின் மரபு வேண்டாம்' என்போரையும், புதிய ஒரு திட்டத்திற்கு இணங்க வைத்தார். இங்கிலாந்திலுள்ளதைப் போன்று, 'உயிரோடுள்ள வரை' என்றிருக்காமல், அமெரிக்காவில், ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்குக் காங்கிரஸின் நூலகத்துக் கவிஞர்-ஆலோசகரே, 'அரசவைக் கவிஞர்' எனப் பட்டமளிக்கப் படவேண்டும் என அவர் தெரிவித்த கருத்து, ராபர்ட் பென்வாரன் (**Robert Penn Warren**) ஆலோசகர்-அரசவைக்கவிஞர் ஆனதிலிருந்து அமுலுக்கு வந்தது.

காங்கிரஸின் நூலகத்துக் கவிதை ஆலோசகர் பதவி 1937 முதல் இருந்து வருகிறது. அரசவைக் கவிஞர் என்னும் புதிய பட்டம் அங்கீகரிக்கப் பட்டிருப்பதன் விளைவு, ஒரு தனி நபரின் புகழை உயர்த்த மட்டும் உதவுமா அல்லது காங்கிரஸின் நூலகத்திற்கு உண்மையிலேயே உயரிய ஆலோசனை கிட்டுமா என்பது சர்ச்சைக்குரிய விஷயமாயிருக்கிறது.[1] ஆஸ்தானக் கவிஞர்-ஆலோசகர் பதவியின் காலக் குறுகலினால், வயது முதிர்ந்தோர் மட்டும் தேர்ந்தெடுக்கப்படுவார்களா அல்லது திறன் படைத்த இளைஞர்களும் ஏற்கப்படுவார்களா என்னும் வினாக்கள் எழுப்பப் பட்டுள்ளன. அரசவைக் கவிஞர்கள் என்றொரு புதுக்கும்பல் அமெரிக்காவில் அறிமுகம் ஆகலாம் என்றும் சிலர் ஏற்கெனவே ஏளனம் செய்யத் துணிந்து உள்ளனர். 1965-66இல், இங்கிலாந்தின்

ஸடீஃபன் ஸ்பென்டர் (Stephen Spender) காங்கிரஸின் நூலகத்திற்கு ஆலோசகர்-கவிஞராக இருந்தார். அது போன்று, 'டெட்ஹியூஸ்' (Ted Hughes) அழைக்கப் பட்டு, இரு நாடுகளுக்கும் ஒரே சமயத்தில் அரசவைக் கவியாக ஆக்கப் படுவாரா? என்று சிலர் வினா எழுப்புகின்றனா.

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் காலம் தான் பதில் சொல்ல இயலும். எனவே, எண்பது வயதைத் தாண்டிய, தற்போதைய அரசவைக்கவிஞரான ராபர்ட் பென் வாரனைப் பற்றி இனி, இங்குச் சிந்திப்போம்.

தமது முதுமைக்கேற்பப் படைப்புகளால் பெருமை பெற்றிருக்கும் ராபர்ட் பென் வாரன் 1905-இல் பிறந்தார். கவிதைத் தொகுப்புகள். நவீனங்கள், சிறுகதைகள், நாடகங்கள், சமூக இலக்கியக் கட்டுரைகள், திறனாய்வுகள் எனப் பல்வேறு வகைகளில் ராபர்ட் பென் வாரனின் எழுத்துகள் புகழ் பெற்றுள்ளன.

தான் பிறந்த கென்டகி (Kentucky) மண்ணுடன் கொண்டிருந்த ஆழமான தொடர்பாலும், அமெரிக்கத் தெற்கின் மேம்பாட்டினை மையம் ஆக்கி அமைக்கப்பட்ட இலக்கியக் குழுவொன்றின் ஊக்குவிப்பாலும், வாரன் வரைந்த முதல் நூல்கள் வட்டாரப் போக்கைப் பெரிதாய்ப் பிரதிபலித்தன. வேன்டர்பில்ட் (Vanderbilt) பல்கலைக் கழகத்தில் பயிலும்போது, ஜான் க்ரோ ரேன்ஸம் (John CroweRansom), ஆலன் டேட் (Allen Tate) மெரில் மூர் (Merrill Moore), லாரா ரைடிங் (Laura Riding) ஆகிய கவிஞர் - திறனாய்வாளர்கள் நடத்திய தி ஃப்யூஜிடிவ் (The Fugitive) என்னும் இதழுடன் தொடர்புகொண்டு, தெற்கின் பெருமிதத்தை மிகைப்படுத்தும் கவிதைகள் சிலவற்றைப் புனைந்தார். ஆயினும் வாரனின் மையக் கருத்துக்கள் எந்த ஒரு வட்டாரத்தாலும் வளைக்கப்பட்டு விடவில்லை. வாரன், கலிஃபோர்னியா (California), யேல் (Yale), ஆக்ஸ்ஃபோர்ட் (Oxford) ஆகிய பல்கலைக் கழகங்களிலும் பயின்றுள்ளார். பின்பு, பேராசிரியராக லூஸியானா (Lousiana), மின்னிஸோடா (Minneso'a), யேல் (Yale) ஆகிய பல்கலைக் கழகங்களில் பணிபுரிந்துள்ளார்

புலிட்ஸர் பரிசு (Pulitzer Prize) பெற்ற **ஆல் தி கிங்ஸ் மென்** (All The King's Men), 1946-இல் அவர் எழுதிய நவீனம் **அட் ஹெவன்ஸ் கேட்** (At Heaven's Gate -1943), **பேன்ட் ஆஃப் ஏன்ஜெல்ஸ்** (Band of Angels -1955), **வில்டர்னெஸ்** (Wilderness-1961) ஃப்லட் (Flood-1964), ஆகிய நாவல்களும் வாரனின் படைப்புகள்தாம்

செக்ரகேஷன்: தி இன்னர் கான்ஃப்லிக்ட் இன் தி ஸௌத் (Segregation: The Inner Conflict in the South-1956), **தி லெகஸி ஆஃப் தி சிவில் வார்** (The Legacy of the Civil war-1961), **ஹூ ஸ்பீக்ஸ் ஃபர் தி நீக்ரோ** (who Speaks For The Negro-1965) ஆகிய அரசியல் சமூக நூல்கள் சர்ச்சைக்குரியவையாயினும் பிரசித்தமானவை.

இக்கட்டுரையில் வாரனின் கவிதைப் படைப்புகளை மட்டும் பரிசீலிக்க முயன்றுள்ளேன். 1935-இல் வெளியான **முப்பத்தாறு கவிதைகள்** என்ற தொகுப்பு (Thirty six Poems) அவரது புலமைத் திறனை உலகுக்கு அறிவித்தது. உலகி

யலுக்கு அப்பாற்பட்ட உணர்வுகளும் எண்ணங்களும் அவரது கவிதைகளில் காணப்பட்டமையால், கவிதைப் படைப்பின் எளிமை விரைவில் வாசகர்களுக்குப் புலனாகவில்லை. 'பொழுது போக்கு' இலக்கியத்திற்குப் பெருந்தொலைவில் வாரன் இருந்தார் என்பது உண்மை தான். அதே பொருளைப் பற்றி பதினொரு கவிதைகள் (Eleven poems on the same Theme - 1942) என்னும் தொகுப்பில் தாமாக எழுதும் முறையை எளிமையாக்கினார். 1944 - இல் வெளிவந்த செலக்டட் போயம்ஸ் 1923-43 (Selected Poems 1923 43) என்னும் தொகுப்பு வாரனின் சிந்தனை ஆழத்திற்கு எடுத்துக்காட்டாக அமைந்தது.

மனிதனின் உண்மை இயல்பையும் வாழ்வின்/சாவின் இரகசியங்களையும், மனித இதயத்தில் நற்பண்புகளோடு இரண்டறக் கலந்திருக்கும் தீயவைகளையும் அலசி ஆய முயன்றமையால் வாரனின் எழுத்துக்களில் கடினம் தென்பட்டதில் அதிசயமில்லை. முப்பத்தாறு கவிதைகள் கொண்ட அவரது முதற்தொகுப்பு முழுமைபெற பத்து ஆண்டுகள் ஆயின[2] என்றால், தனது கவிதைத்திறனை எவ்வளவு கூர்மையாக்கியிருப்பார் என்று ஊகிக்கலாம்.

எந்த ஓர் அரிய எழுத்தாளனைப் பற்றியும் 'இப்பொருளைப பற்றித்தான் எழுதுகிறார்' என்று அறுதிட்டு உரைப்பது கடினமாகும்; தவறுமாகும். எனினும், இவ்விந்த கோணங்களில், இக்கவிஞர் மனித வாழ்வை ஆழ்ந்து நோக்கினார் என்னும் திறனாய்வின் வழியில் வாரனைப் பற்றியும் எடுத்தியம்பலாம். எமர்சனுக்குப் புகழனி; நியூயார்க்கிற்குப் பறக்கையில் (Homage to Emerson On Flight to New York) என்னும் கவிதையின் உரையாடுபவன் நமக்குத் துணைபுரிகிறான். விமானம் முப்பத்தெட்டாயிரம் அடி உயரத்தில் இருளினூடே பயணம் செய்து கொண்டிருக்கிறது. அவனுக்கு, உலகியலுக்கு அப்பாற்பட்ட உணர்வுகள் ஒருபுறம், வெறுமையுடனான போராட்டம் இன்னொருபுறம். அவற்றிற்கிடையில் என்றோ நடந்த நிகழ்ச்சியொன்று மனக்கண் முன்பு நிழலாடுகிறது. அது எந்த ஊரில் நிகழ்ந்ததென்று வினா எழும்போது நிகழ்ச்சியின் தொடர்சசி மனக்கண் முன்பு அறுபட்டுப் போகிறது சிந்தனையை மீண்டும் ஒரு நிலைப் படுத்தும்போது நியூ ஆர்லியன்ஸ் (New Orle·n·) தெருவொன்று தெரிகிறது. மதுவுண்ட முடவ னொருவன் அளவுக்குமேல் குடித்திருந்ததால் தடுமாறி விழுகிறான். (எதன மேலென்று உங்களுக்குத் தெரியும்.) அவன் வைத்திருந்த ஊன்றுகோல்கள் பல பங்கங்களில் சிதறுகின்றன. ஒரு விளக்குக் கம்பத்தின்மேல் சாய்ந்து நிற்க, அநத முடவனுக்குக் கவிதையின் உரையாடுபவன் துணை புரிகிறான். முடவன் மீண்டும் இடறி விழுகிறான். கிடைக்கவிருக்கும் உதவியையும் மறுத்துவிடுகிறான். "நட்சத்திரங்களைப் பற்றிக் கருத்தோட்டம் செய்திட, தன்நிலை, வேறு எந்த மனிதனைவிடவும் குறைந்து போகவில்லை-அது காவலர் வரும்வரை தான் என்றாலும்"[3] என்று தற்பெருமை பேசுகிறான்.

வலியை உணரும் மனிதன்தான் வாழ்வின் பொருளற்ற நிலையையும் உணர்கிறான். எங்கு என்று அறியாத போதிலும், எல்லாவற்றையும் கடந்து செல்லலாம் என்றொரு முயற்சி. சிக்கல்

கள் அடுக்கடுக்காய் வந்தபோதிலும் தொலைநோக்கில்தொய்வெதுவுமில்லை. இப்படிப்பட்ட நிலையைத்தான் மீண்டும் மீண்டும் வெவ்வேறு வழிகளில், வாரன், தன் கவிதைகளில் கொணர்ந்துள்ளார்.

நுணுக்கமாக எடையிடப்பட்ட உணர்வுகளைக் கச்சிதமாக ஒருங்கிணைத்துச் சிறிதே கடுமையான அமைப்பு முறைகளுக்குள் அடக்கிப் பெரிதும் சிந்திக்க வைக்கும் வாரனின் கவிதைகளில், மூளையின் பணி அவ்வப்போது அளவு கடந்து போகிறதென்று சிலர் எண்ணுகின்றனர். கூர்மையான எண்ணங்களால்தான் உணர்வுகளின் ஆழத்தை அறிய இயல்கிறதென்று வேறு சிலர் வாதாடுகின்றனர். இவ்விரு தரப்பினரும் சேர்ந்து வாரனின் கவிதைகளைப் பற்றிய திறனாய்வை ஒரு பெருந்தொழில்போல வளர்த்துள்ளனர்.

அமெரிக்கத் தெற்கை ஆழமாக அறிந்த வாரன், தனது கவிதைகளில் தெற்கினைப் பற்றிய தனித்வம் நிறைந்த குறிப்புச் சேர்க்கைகளை வளமாக வழங்கியுள்ளார். 'மனித இனத்தின் நிலையைப் பற்றித் தத்துவம் பேசும் கவிதைகளில், ஒரு தனி வட்டாரத்தின் பிரத்தியேகக் குறிப்புகளுக்கு இடம் எங்கே?' என்பது இயல்பான கேள்வி. முரண்பாடான இவ்விரு நிலைகளை இணைத்திருப்பதுவே வாரனின் தனிச் சிறப்பாகும். வாரன் வழங்கும் தெற்குக் குறிப்புகள் சிலிர்க்க வைப்பவை-கற்பனை உலகிலிருந்து பெயர்த்தெடுக்கப்படாதவையெனினும்.

சொற்களை மிச்சப்படுத்தும் நவீனத்துவத்தின் வழியில் வெகுதூரம் நடந்த வாரன், நீண்ட கதைசொல்லும் கவிதைகளையும் புனைந்துள்ளார். மனித மனத்தின் ஏதோ ஒரு மூலையில் மறைந்திருந்த எப்பொழுது, எவ்வாறு வெளிப்படும் என்று யாரும் அறியாத அசுர குணத்தை அலசியறியும் வகையில் **ப்ரதர் டு ட்ரேகன்ஸ்** (Brother to Dragons) என்னும் கவிதைக் கதையை எழுதினார்.

வாரன்படைத்தவற்றுள் மிகச்சிறந்ததென ரேன்டால் ஜேரல் (Randal Jarrel) என்னும் கவிஞர் / திறனாய்வாளரால் புகழப்பட்ட[4] இந்நீள் கவிதை 1811-இல் கென்டகியில் (Kentucky) நடந்த ஒரு படுகொலையை மையமாகக் கொண்டது. தான் வேலை செய்த வீட்டில் ஒரு சிறு ஆபரணப் பொருளைக் கை தவறி உடைத்துவிட்டான் என்பதற்காக, ஒரு நீக்ரோ கொலை செய்யப்பட்டான். அதற்குக் காரணமாயிருந்தவன் புகழ் பெற்ற ஜெஃப்பர்ஸனின் மருமகன். 'அமெரிக்காவின் அடிப்படைக்கொள்கைகளிலோ, மனிதனின் படைப்பிலோ எக்குறையுமில்லை' என ஓயாது உலகுக்கெலாம் ஜெஃப்பர்ஸன் (Jefferson) எடுத்துரைத்தார். ஆனால், தீவினை (evil) எந்த வடிவில், எந்த வேளையில் வெளிப்படும் என்று எவருமே அறிந்திருக்கவில்லை. வன்முறை திடீரென எப்படியோ உருவெடுத்து மனிதனின் தனித்துவத்தைப் பாழ்படுத்துகிறது. இக்கருத்தைத்தான் லில்பர்ன் லீவிஸ்(Lilburn Lewis) புரிந்த கொலையின் வாயிலாக வாரன் நமக்கு வழங்கியுள்ளார். (நோபல் பரிசு பெற்ற கோல்டிங்கின் **தி லார்ட் அஃப் திஃப்லைஸ்** (The Lord of the flies) சிலருக்கேனும் நினைவிற்கு வரலாம்). இந்நூல் வெள்ளையர்களால் அவதிப்பட்ட கருப்பர்களின் கதையாக

மட்டும் அமைந்துவிடவில்லை: அல்லது அமெரிக்கத் தெற்கின் அவலத்தைக் கூறும் கதையாகமட்டும் இருந்துவிடவில்லை. மாறாக, மனித இனத்தின் புரியாத புதிர்களை வெளிப்படுத்தியது.

தீவினை விளைவதை வாரன் ஆயும் விதத்தை எண்ணி ரேன்ஸம் (Ransom), அது மூல முதல் பாவத்தைப் பற்றிய வாரனின் உணர்வுகள்என்று குறிப்பிட்டு உள்ளார். மூல முதல் பாவம் (Original Sin) வாரனின் கவிதைகளில் புது விளக்கம் பெறுகிறது. [2]'மனிதன், பகுத்தறிவு வளர்ச்சியின் பொருட்டுத் தனது இயல்புகளுக்கெதிராய் செய்யும் செயல்கள் தான் அந்த முதல் பாவம்[5] என்றும் ரேன்ஸம விளக்கியுள்ளார். வாரனின் சிந்தனைகள் தீவினையெய்ப் பற்றித் தீவிரமாகச் செலுத்தப்பட்டன. முதல் மனிதன் ஆதாம் செய்த பாவமும் அவனது ஆவியும்உலகிலிருந்து மாய்க்கப் படுவதில்லை என்பது வாரனின் கருத்து. அதனால்தான் மனிதனின் தனித்துவம் அவ்வப்போது பறிபோகிறது. எனினும், அத்தனித்துவத்தைத் தக்கவைக்கும் வழியும் உண்டு. அதுதான் அகிலத்தோடு இரண்டறக் கலந்து விடும் முயற்சி (Osmosis of being) முரணுரையாய்த் தென்படும் இக்கூற்றிற்கு விளக்கம் காண இன்னொரு பெருங் கவிஞரின் அறிவுரையை இங்கு நாம் நினைவு கூறலாம்: பாழ்நிலத்திலிருந்து விடுபடவேண்டுமென்றால் 'கொடு, பரிவிரக்கம் கொள், கட்டுப்படுத்து'' [6] என்றார் எலியட் (T. S. Eliot). விவிலியத்தில் (The Bible) சொல்லப்படுவது போல, தன்வாழ்வைக் காண்பவன் இழந்துவிடுவான், தன் வாழ்வை இறைவனுக்காக இழந்து விடுபவன் அதைக் கண்டுபிடிப்பான்.[7]

யேட்ஸ் (W.B. Yeats), எலியட் (T.S. Eliot) ஆகிய இருவருக்குப் பின், இருபதாம் நூற்றாண்டில் ஏற்றசை செந்தொடைப்பாவில் (Blank Verse) முதன்மைத்திறன் பெற்றவர் வாரன் என்பது பல திறனாய்வாளர்களின் கருத்து. நவீனக் கவிதைகளின் ஒரு தனிச் சிறப்பு கவிஞர்கள் தங்கள் மொழித்திறத்தால் சொற்களைக் கையாளும் விதமாகும். தனது மொழித் திறனைப் பற்றிக் கூறும் முகமாக, வாரன், நகைச் சுவையுடன் ஓர் உரையில் ஆங்கிலக் கவிஞர் ஏ.இ. ஹீஸ்மேன் (A E Housman) ஒரு வாசகருக்கு எழுதிய கடிதத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். அந்த வாசகர் வாரனின் நண்பரான ஆனல்ட் ஸ்டெயின் (Arnold Stein) என்பவர். அவர் ஹீஸ்மெனைப் பாராட்டி எழுதிய கடிதம் ஒன்றில் "எவ்வாறு உங்களால் எப்பொழுதும் மிகப் பொருத்தமான சொற்களையே உங்கள் கவிதைகளில் தேர்ந்தெடுக்க இயலுகிறது?" என்று வினாவெழுப்பியிருந்தார். ஹீஸ்மேனிடமிருந்து வந்த பதில்: "அன்புள்ள திரு ஸ்டெயின், நான் சரியான சொற்களைத் தேர்ந்தெடுப்பதில்லை, சரியில்லாதவைகளை ஒழிக்கிறேன், முற்றுப்புள்ளி. உங்கள் அன்புள்ள ஹீஸ்மேன்.''[8]

இப்பொழுதும் அப்பொழுதும்: கவிதைகள் 1976 78 (Now and Then: Poems 1976-78) என்னும் வாரனின் தொகுப்பு, அவர் எழுபது வயதைத் தாண்டிய பின் வெளியாகியது. அதன் துவக்கத்தில் விவிலியத்தின் இரண்டாவது இசியாசிலிருந்து (Isiah II) குறிக்கோட் குறிப்பு இரண்டு தரப்பட்டுள்ளன: 1) ஆண்டவனுக்குப் புதிய பாடல் ஒன்றைப் பாடு.

2) அவர்கள் மலை மேல் நின்று கூக்குரல் எழுப்பட்டும்.

வாரனின் உயரிய கோட்பாடுகளும், அரிய கவிதைத் திறனும் ஆழமான சிந்தனையும் கூர்மையான மொழி வன்மையும் மேற்குறிப்பிட்ட குறிக் கோட்குறிப்புகளுக்கு (Epigrams). இணக்கமானவை எனின் மிகையாகாது.

மகிழ்ச்சி – நம்பமுடியாது[9]
(Delight - Not to be trusted)

மகிழ்ச்சியை நம்பமுடியாது.
அது உனக்கு வஞ்சனை செய்யும்
மகிழ்ச்சி உன் கரங்களின் பணியை
இரகசியமாய் அழிக்கும். நீ

மகிழ்ச்சியை நம்ப முடியாது.
நான் சொல்லியதைப் போன்று,
அது இளமையின் ஆசையை அழிக்கும்
முதுமையின் விவேகத்தையும் கொல்லும்
நீ

விதிவிலக்காக மாட்டாய் - இதுவரை
அது உன்னை அழிக்கவில்லை யென்றாலும்.
அதோ ! அந்தப் புதரில் ஒநாய் – நச்சுப்
பல் வெள்ளை மகிழ்ச்சி
குனிந்திருக்கிறது யாருக்காகவோ ;
உனக்காகத்தான் !

கண்ணாடியின் இயல்பு[10]
(The Nature of a Mirror)

ஆகாயம் கண்ணில் கொலையைக்
கொண்டுள்ளது,
என் இதயத்தில் கொலையைக் கொண்டு
உள்ளேன் ஏனெனில் நான்
ஒரு மனிதன் தான்.
ஒருவரையொருவர் பார்க்கிறோம்,
ஆகாயமும் நானும்
ஒருவரை யொருவர் புரிந்து கொள்
கிறோம், ஏனெனில்
கோடையின்கதிர்த்திருப்பம்தோய்ந்தது,
நான் நிற்கிறேன்,
காத்திருக்கிறேன். பண்பிற்கும் பரிசு
உண்டு, அதுதான்
கொடுங்கனவு, நான் சொல்லியாக
வேண்டும் :
வெகு விரைவில் பகல் ஒளி காக்கும்
காலத்திலிருந்து,
மேற்கின் முகப்பில், சுறாமீனின் பற்
களைப் போன்று
பைன் மரக்கறுப்புகளுக்கிடையில் பகல
வன் வெறுமைப் பிழம்பாய்
ஓர் அன்னையின் சினத்திற்குமேல் சிவந்
திருக்கையில்,
எஃப்.டி.ஆர் பதவிக்குப் போட்டியிட
வில்லை என்பதுபோல், அல்லது
முதல் அல்குல் கனவின் இழையமைப்புக்
குளறியது
என்பது போல். காலம்தான்
நீ உற்றுப் பார்க்கும் கண்ணாடி.

சிறு பையனும் இழந்த புதைமிதியும்[11]
(Little Boy And Lost Shoe)

அச்சிறுபையன் தன் புதைமிதியைத்
தோட்டத்தில் இழந்தான்.
குதித்தே வீடுசேர்ந்தான், கவலையற்றுக்
கோலொன்றைப் பொற்கோல்போல்
வீசிக்கொண்டு
'போய் உன் புதைமிதியைக் கண்டுபிடி –
இப்பொழுதே' என்றேன்
அவன் சென்றான், பாடிக்கொண்டு.
தோட்டம் விரிவாயிருந்தது.

வானத்தின்கீழ் அவன் நடந்தான்,
வானம் பெரிதாயிருந்தது.
ஆதவனின் ஒளி பொற்கோலைத்
தொட்டது; அவன் முடியை
மஞ்சளாக்கியது.
ஆனால் ஆதவன் இப்பொழுது கீழே,
அவன் அதை அறிய வேண்டும்,
விரைய வேண்டும் தன் புதைமிதியைக்
காண. பகலவன் கீழிறங்குவான்.

ஓ விரைந்துசெல் சிறுவனே, புற்கள்
மரங்களைப்போல நீண்டுவிடும்.
சீக்கிரம் சந்திரனில் குருதி வழியும்,
பரிதாபப்படும் இதயம் போல்.
விரைந்து செல்; காலம் பணத்தைப்
போன்றது பகலவனும் கீழே;
சீக்கிரம், இழவே, புதைமெதி கொண்டு
வரவேண்டுமென்றுனக்குத் தெரியும்'.

நீ ஏன் இப்படிச் சோம்புகிறாய் என்
றெனக்குத் தெரியவில்லை
மலைகள் சாய்ந்து தம் தலைகளைச்
சேர்க்கின்றன, கவனி
எத்துணைதான் காலம் கடத்துவான்
இப்பையன் என நான் கேட்கிறேன்
வையோமிங்கிற்கு அப்பால் மலைகள்
சாய்கின்றன, கவனிக்கின்றன:
அவற்றுக்குத் தெரியும்.

மகிழ்ச்சி – ஒளிபடர்ந்த நாளை நோக்கி[12]

(Delight–Into Broad Daylight)

அமைதியிலிருந்து நடந்து வருகிறது
மகிழ்ச்சி.
மகிழ்ச்சி வருகிறது மிதியடியோசையின்றி
இரவின் அமைதிக்குள் அல்லது
ஒளிபடர்ந்த நாளை நோக்கி.

மகிழ்ச்சி வருகிறது அதிசயம் போல்.
மகிழ்ச்சி உன்னை என்றும் தயார்
படுத்துகிறது.
மகிழ்ச்சி உன் கண்வீச்சுக்கப்பால்
காத்துள்ளது,
அதிசயம் நிகழும் நேரம் வரை.

மகிழ்ச்சி தன் காரணத்தை அறியும்,
அக்காரணம் உனக்கொன்றும் புரியாது!
உன்னால் மகிழ்ச்சியைக் கொடுக்கவோ
பிடிக்கவோ
இயலாது-மகிழ்ச்சியின் காலம் அதற்குத்
தெரியும்.

நான் விடியல் உச்சியில் மகிழ்ச்சியைச்
சந்தித்தேன்.
புறாவின் வீழ்ச்சியில் மகிழ்ச்சியைச்
சந்தித்தேன-
ஆதவன் அதன் மார்பைச் சிவப்பாக்கும்
போது.
மீதியை நான் சொல்லுவேனோ:
அதை ஊகிக்கவும் இயலாது.

ஆபேய்ட் நம்பிக்கைக்கு[13]

(Aubade for Hope)

அதிகாலை : குளிர்ப் படிகளில் பதியும்
காலம்
அல்லது, அடுப்புக்கல்லில் அதிர்ந்து
விழும் விறகு;
எண்ணத்தொகுதியின ஓரத்தைப்
பற்றிய கருத்துரை,
அச்சுப் பக்கத்தில் அழுக்குப் பெரு
விரல் உரசிய படிவம்

அழுக்குப் பெருவிரலின் அச்சு :
இல்லை, வேறு, ஏனெனில்
அருள்பெற்ற ஒளிஉயர்த்தியது, அச்ச
முற்ற நாயின்

அரச உயர்வென. அவர்களை விழிக்கச்
செய்தது
குறியற்ற, முகமற்ற கனவுப் பசியி
லிருந்து:

இரவு முழுதும், பனி அறுப்பட்டழுகிய
கிளையைத் தேடியது :
உறக்கத்தில் அவர்களுக்குக் கேட்டது
இப்பொழுது,
கிழக்கு நிலத்துப் புறவுடிவ ஒளிக்கப்
பால் பகலவன்
அரசாற்றும் சிரம் மூடிய மலையைத்
தாக்கியுள்ளான்.

ஒளி : முனகும் ஏணிப்படி; தீக்குச்சி
ஒளிச்சுடரானது.
நீக்ரோ பெண்ணின் கை, குளிரில்
குறுகிச் சாம்பல் நிறமானது—
விறகை எறித்த கை — 'ஓ கருணையற்ற
பெருங்கடல்போல்
வெறுமை' - நான் பெயரிட்டழைக்கும்
கண்கள்.

இன்னொரு தள்ளிய அறையிலிருந்து
கேட்கும் குரல்களைப் போன்று
அடங்கியும், காலத்தையும் நம்பிக்கை
யையும் நமக்கெடுத்தளிக்கும்
ஏனெனில் நம்பிக்கை,அந்த அறிவிலிக்
கிழவி
எச்சிலுக்கும் சாம்பலுக்கும் மேல்
என்றும் எழுப்பும் கதறலைப்
போன்றது.

குறிப்புகள்

1 வில்சன் நூலகத்துப் பத்திரிகை, மே 1986 பக்கம் 31.

2 வில்லியம் பெட்ஃபோர்ட் கிளார்க் (ஆர்) **ராபர்ட் பென் வாரனைப் பற்றிய திறனாய்வுக் கட்டுரைகள்** (பாஸ்டன் ஜி.கே. ஹால், 1981) பக்கம் 23.

3 அதே நூலின் முன்னுரையிலிருந்து.

4 ரேண்டால் ஜேரல் **நியூயார்க் டைம்ஸ் புக் ரெவியூ** (23, ஆகஸ்டு 1953) பக்கம் 6.

5 ஜான் க்ரோ ரேன்ஸம் **ஸாடர்டே ரெவியூ** 20, மே 1944 பக்கம் 10.

6 "Datta Dayadhvam Damyata என்னும் ஸமஸ்கிருத சொற்கள். வேஸ்ட்லேன் டின் 433-வது வரி.

7 மத்தேயு 10-வது அதிகாரம். 39-வது வசனம்.

8 ஜான் க்ரோ ரேன்ஸம் ஸாடர்டே ரெவியு 20, மே 1944, பக்கம் 21.

9 ராபர்ட் பென்வாரன் **தேர்ந்தெடுக்கப் பட்டகவிதைகள் 1923-75** (நியூயார்க் ரேண்டம் ஹௌஸ்) பக்கம் 188.

10 அதே நூலிலிருந்து பக்கம் 21.

11 அதே நூலிலிருந்து பக்கம் 62.

12 அதே நூலிலிருந்து பக்கம் 183.

13 ஜான் க்ரோரேன்ஸம், வாரனின் புலமைக்கு எடுத்துக்காட்டாக, தன் திறனாய்வுக் கட்டுரையில் தந்திருக்கும் கவிதை (குறிப்பு 8).

மதிப்புரை :

சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் (முதலிரு தொகுதிகள்) பதிப்பாசிரியர், இரா. சாரங்கபாணி 1986, தமிழ்ப்பல் கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர்: பக்:16 + 562 + 603 = 1181 விலை : உரு 250×2.

சங்க இலக்கியத்திற்குப் பல சொல் லடைவுகள் எழுந்துள்ளன. எனினும் முறையாகத் தொகுக்கப்பெற்ற பொரு ளடைவுகளை நாம் இதுகாறும் பெற வில்லை. இவ்விலக்கியத்தின் பொருட்

கூறுகளையும் அகப்புற மரபுகளையும் வெளியிட்டு மரபுகளையும் தொகுத்து வழங்கும் பல பொருளடைவுகளை நாம் பல்லாண்டுகளுக்கு முன்னரே வெளியிட்டிருக்க வேண்டும். இச்சூழலில் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்ட சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம் குறிப்பிடத்தக்க முதன்மை பெறுகிறது.

சங்க இலக்கியம் தமிழின் தொன்மை இலக்கியம் மட்டுமல்ல இந்திய இலக்கிய வரிசையில் வடமொழி அல்லாத ஒரு மொழியில் தோன்றிய பழைய இலக்கியச் செல்வம். இந்தியப் பண்பாட்டு வரலாற்றுத் தத்துவ இலக்கிய வரலாற்றில் முதன்மை கொடுத்துக் கற்கப்பட வேண்டிய சிறப்பும் தொன்மையும் வாய்ந்த கருவூலம். ஏன், உலக அரங்கிலேயே தொன்மை இலக்கிய வரிசையில் இன்றியமையாத இடம் பெற வேண்டியது.

இந்தியாவின் மரபுச் செல்வத்தை பல்துறை அறிவுத் தொகுதியைப் பெரிதும் வடமொழியில் உள்ள இலக்கியங்கள், நூல்கள் இவற்றின் அளவில் வரையறுத்துவிடும் குறுகிய பார்வை அண்மைக் காலத்தில் தீவிரமாக விமர்சிக்கப்பட்டு வருகிறது. வடமொழி நூல்களுக்குஅமைந்தது போன்ற தகுதியான கருவி நூல்கள் சங்க இலக்கியங்களுக்கு அமையாமையும் அவை அனைத்திந்திய அனைத்துலக அரங்கில் தகுதியாக அறிமுகப்படுத்தப் பெறாததும் ஆகிய குறைகள் பெரிதும் இவ்விலக்கியச் செல்வத்தையுடைய நம்மைச் சார்ந்தவையே.

நமது இலக்கியச் செல்வத்தின் சிறப்பையும் அது உலக அரங்கில் பெற வேண்டிய இடத்தையும் தெளிவாக மனத்திற் கொண்ட நுண்மாண் நுழைபுலமே இவ்விலக்கியத்திற்கு ஒரு தகுதியான பொருளடைவை அமைக்கும் திட்டம் ஒன்றைத் தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் ஆரம்ப முயற்சிகளில் ஒன்றாக மேற்கொண்டுள்ளது என்பது கருத்தத்தக்கது. (சங்க இலக்கியக் கருத்தரங்குத் தொடக்கவுரை, தண்ணை வேந்தர் 1982)

சங்க இலக்கியங்கள் ஏட்டினின்று நூல் வடிவம் பெற்ற இந்நூற்றாண்டின் ஆரம்ப காலக் கட்டத்திலேயே சங்க இலச்கியம் பற்றிய ஆர்வம் தமிழறிஞர்களிடம் பரந்தது. இவ்விலக்கியத்தின் பல்வேறு அம்சங்கள் கற்கப்பெற்றன. இதற்குத் துணையாக சொல்லடைவுகள் எழுந்தன. பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை, டாக்டர் சாமிநாதையர் முதலியோர் பதிப்புக்களில் இணைத்துள்ள அகராதிகள் சங்க இலக்கியத்தில் பேசப்பெற்றுள்ள பொருள் நிலைகளைக் கற்க ஓரளவு துணை செய்யும் நோக்கத்துடன் அமைக்கப் பெற்றுள்ளன. எனினும் முழுமையாகச் சங்க இலக்கியங்கள் அனைத்திலுமிருந்து ஒரு செய்தியை ஒரே பார்வையில் பெறும் தகுதியுடைய ஒரு பொருளடைவை நாம் இதுகாறும் பெறவில்லை. தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள இச்சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம் இக்குறையைச் செவ்விதின் நிறைவு செய்கின்றது. இதனால் இப்பொருளடைவு நமது வரவேற்பிற்கும் பாராட்டிற்கும் உரியதாகின்றது. சங்க இலக்கியமும் தொல்காப்பியமும நமது மரபுச் செல்வங்கள். இவை பற்றிய எந்தக் கருவி நூலும் தமிழ்க் கல்விக்கு உரம் ஊட்டும் தகுதியுடையது. எனவே

தமிழறிஞர்கள் உவந்தேற்றுக் கொள்ளும் சிறப்புடையது.

இந்நூலை மதிப்பிடப் புகுமுன் சில செய்திகள் விளக்கப்பெற வேண்டும். பொருட்களஞ்சியம் என்ற பதம் (Subject Index) தன்னுட் கொண்டுள்ள பொருள் நிலைகள் வரையறுக்கப்பட வேண்டும். இப்பொருட் களஞ்சியத்தில் இப்பதம் கொண்டுள்ள பொருள் வரையறை மனத்திற்கொள்ளப்படவேண்டும். பொருட் களஞ்சியம் என்ற பதம் நம்மிடம் எழுப்பும் எதிர்பார்ப்பு விரிந்தது. சங்க இலக்கியத்தின் அனைத்துப் பொருள் நிலைகளையும் நாம் இந்நூலுள் எதிர்பார்க்கக்கூடும். பாடலில் பயிலும் ஒரு குறிப்பிட்ட கருப்பொருள் பற்றிய செய்தியைப் போலவே பாடலில் பரந்து நிற்கும் பாடுபொருளையும் பாடுபொருளமைதியில் பொருந்தும் மரபுகளையும் கூட நாம் எதிர்பார்க்கலாம்.

கவிதை சிக்கலான அமைப்பு பெற்றது. அது பல அமைப்புக்களால் ஆன ஓர் அமைப்பு. பல தளங்களாலான செறிவமைப்பு ஒவ்வொரு தளமும் உட்கொண்டுள்ள கூறுகள் பிறதளங்களோடும் அவற்றின் கூறுகளோடும் இயைபுற்று உருவான முழுமை. இதன் ஒவ்வொரு தளமும் பிற தளங்களைச் சார்ந்தமைவதே எனினும் ஒரு தளத்தின் பகுப்பாய்வால் பிற தளங்களின் கூறுகளைப் பெறுவது எளிமையன்று.

சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் இத்தகைய கவிதைத் தளங்களில் அடிப்படையான மொழித்தளத்தை அதிலும் குறிப்பாகப் பெயர்ச் சொல் என்ற இழையைப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தியுள்ளது. இப்பொருட் களஞ்சியத்தின் முதல் தொகுதியில் அமைந்துள்ள பதிப்பாசிரியர் முன்னுரையில் இப்பொருட் களஞ்சியத்தில் மேற்கொண்டுள்ள நெறிமுறைகளை எடுத்துரைக்கும் போது இச்செய்தி தெளிவு படுத்தப் பெற்றுள்ளது. 'பொருளை உணர்த்துவதில் பெயர்ச் சொற்களே பெரும்பாலும் முதன்மை பெறுதலின், சங்க நூல்களிலுள்ள பெயர்ச்சொற்கள் அகர வரிசைப்படி முறையாகத் தொகுக்கப் பெற்றன. பொருள், இடம், காலம், சினை, பண்பு தொழில் என்னும் அறுவகைப் பெயர்களும் முதலன நான்கும் செய்தி விளக்கத்திற்குத் துணை நிற்றலின் அவை பெரிதும் தேர்ந்தெடுக்கப்பெற்றன. பண்புப் பெயர் தொழிற் பெயர்களுள் அறம், பண்பாடு, நாகரிகம் முதலியவற்றைப் புலப்படுத்தும் பெயர்களே இடம் பெற்றுள்ளன'. இந்நெறிமுறையின் படி நாம் இப்பொருட் களஞ்சியத்தின் வாயிலாகச் சங்க இலக்கியத்தில் இடம் பெறும் மக்கட் பெயர், தெய்வப் பெயர், இடப்பெயர், காலப்பெயர், விலங்கு, தாவரம், ஏனைய அஃறிணைப் பொருட் பெயர், சினைப் பெயர், மேலும் குறிப்பிடத்தக்கபெயர்கள் ஆகியவற்றின் அடியாகச் சங்கப் பாடல்களில் இடம் பெற்றுள்ள இவைபற்றிய செய்திகளை அறிந்து கொள்ளும் வாய்ப்புப் பெறுகிறோம். இப்பெயர்கள் அகர வரிசையில் தலைப்பாகஅமைக்கப்பெற்று இவற்றின் கீழ் இவை இடம் பெறும் பாடற் பகுதிகளின் உரை விவரணம் பாடல் எண்' அடி எண் இவை பற்றிய குறிப்புடன் தொகை நூல்வாரியாகத் தொகுத்து வழங்கப் பெற்றுள்ளன. காட்டாகக் 'கடல்' என்ற சொல்லை எடுத்துக் கொண்டால் 'கடல்' என்ற தலைப்புச் சொல்லின் கீழ் இச்சொல் சங்க

இலக்கியத்ல் இடம் பெற்றுள்ள எல்லாப் பாடற்பகுதிகளின் (சுமார் 300) உரை விவரணமும் ஒவ்வொரு உரை விவரணத்தின் பின்னரும் அடைப்புக் குறியுள்பாடல் குறிப்பும் தொகை வாரியாகத்தொகுத்துவழங்கப் பெற்றுள்ளன.

தெளிவானதொரு அடிப்படையை வகுத்துக் கொண்டு செய்தியைத் தொகுக்கும் நெறிமுறையும், செய்தித் தொகுப்பிலும் உரை விவரணத்திலும் புலப்படும் கவனமும் முழுமையும் இப் பொருட்களஞ்சியத்தில் பாராட்டத்தக்க அமிசங்கள். இவ்வாறு தொகுத்து வழங்கப் பெற்றுள்ள செய்திகள் சங்க இலக்கியத்தை ஆதார மூலமாகக் கொண்டு பல்வேறு அறிவுத்துறைகளுக் குரிய செய்திகளைத் திரட்டுவோருக்குப் பயன்படுபவை. பழந்தமிழரின் பண் பாட்டு நாகரிகக் கருவூலமாக அமையும் இவ்விலக்கியச் செல்வத்தினின்று இது போன்ற முழுமையான செய்திவிவரணத் தொகுப்பை முதன்முறையாக வழங்கும் சிறப்பைப் பெறுகின்றது இப்பொருட் களஞ்சியம்.

இவ்விடத்து இப்பொருட்களஞ்சியம் இலக்கியப்பொருள் நிலைகளைக்காண விழைவோருக்கு எத்துணை அளவு பயன் படும் நிலையில் அமைந்துள்ளது என்பதைக் காண்பது ஏற்புடையது. சங்க இலக்கிய மரபில் இன்றியமையாத திணை, துறைப் பெயர்கள். தலைவன் தலைவியைச் சுட்டும் பெயர்கள் முதலியவை பெயர் என்ற நிலையில சிறப்புக் கொடுத்துக்கொள்ளப் பெற்றனவா என்று தேரும்போது இவை பெறு தற்குரிய அளவு இடத்தை இப்பொருட் களஞ்சியத்தில் பெறவில்லை என்பதைச் சுட்டவேண்டும். இதற்கு ஓரிரு அடிப் படையான காரணங்கள் அமைகின்றன. (1) சொற்களின் தேர்ச்சியில் சங்க இலக் கியத்தினின்று பெறப்படும் சமுதாய வரலாற்று பண்பாட்டுச் செய்திகளுககு வழங்கப்பட்டுள்ள சிறப்பு இலக்கிய ரீதி யான செய்திகளுக்கு வழங்கப்படாமை. (2) சங்கப்பாடல்களின் இலக்கிய மரபுக் கூறுகளை வழங்கும் பாடற்கொளுவைப் பகுப்பாய்விற்கு உட்படுத்தாமை. புலவர் பெயர்களுடன் புறப்பாடல்களின்கொளு வில் இடம்பெறும் பாடப் பெற்றோர் பெயர்கள் மட்டுமே பொருட் களஞ்சியத் தில் இடம் பெற்றுள்ளன. புறப்பாடல் களின் திணை, துறைப்பெயர்கள் கொள்ளப் பெற்றுள்ளதாகப் பதிப்பா சிரியர் தமது முன்னுரையில் (பக்.9) குறிப்பிட்டுள்ளார் எனினும் காஞ்சி (திணை) இயன்மொழி (துறை) முதலிய திணை, துறைப்பெயர்கள் இப்பொருட் களஞ்சியத்தில் இடம் பெறாமை அவரது கூற்றிற்கு முரணாக அமைகிறது. ஆப் பொருட் களஞ்சியத்தின் 'முதற் தொகுதிக்கு மதிப்புரை வழங்கிய பேரா. மாரா. போ. குருசாமி ஊரன் என்ற சொல் விடப் பெற்றுள்ளதைக் குறிப்பிட்டுள்ளார். மதிப்பீடு பற்றிய தமது கருத்துரையில் பதிப்பாசிரியர் "ஊரன் என்னும் சொல் விளக்கம் விடு பட்டது; அது பின்னிணைப்பில் சேர்க்கப்படும்" என்றும் குறிப்பிட் டுள்ளார். தலைமக்களைச் சுட்டிவரும் இதுபோன்ற பெயர்கள் எவ்வாறு தொகுக்கப்பெற்றுள்ளன என்பதைக் காண்பதற்காகக் காளை, கானவர் மகள், கொடிச்சி, கொண்கன் என்ற பதங்களை எடுத்துப் பார்க்கலாம். கொண்கன் என்ற சொல் நெய்தல் நிலத்தலைவனைச் சுட்டும் பதம். இது தொகுக்கப்பெற்று முழுமையான் உரை

விவரணமும் பாடற்குறிப்பும் பெற்ற மைந்துள்ளது. ஆயின் கானவர் மகள், கொடிச்சி, காளை (உவமை ஆகுபெயர்) என்ற பதங்கள் தலைமக்களைக் குறிக்க அமைவன போலவே நிலமக்களையும் குறிக்க அமையலாம். கானவர்மகள் தலைப்புச் சொல்லாகக் கொள்ளப் பெற வில்லை. கானவர் மகள் எனப் பிரிக்கப் பட்டுச் சிதறி விடுகின்றது. கொடிச்சி என்ற பதம் குறிஞ்சித் தலைவியைச் சுட்டும். இடங்களும் குறிஞ்சி நிலப் பெண்களைக் குறிக்க அமையும் இடங் களும் வேறுபடுத்தப்பெறாமல் ஒரே தலைப்பில் கலந்தமைகின்றன. 'காளை' பாலைத் தலைவனைக் குறிக்கும் சொல் வீரன் ஒருவனையும் சுட்டி அமையலாம். இவ்விரு பொருள் நிலைகளும் பிரித்துக் காட்டப்பெறாமல் 'காளை' என்ற தலைப்புச் சொல்லின் கீழ் கலந்தமை கின்றன. இவற்றினின்று ஒரு செய்தி புலப்படுகிறது. சொற்களின் தொகுப் பிலும் தலைப்புச் சொல்லின் கீழ் பொருளை வழங்குவதிலும் இலக்கிய மரபுக் கூறுகள் அழுத்தம் பெறவில்லை என்பது தெளிவாகின்றது,

கவிதையின் திட்டத்தில் அல்லது மரபில் செல்வாக்குச் செலுத்தும் பல செய்திகள் கவிதையில் பயிலும் சொல், தொடர் இவற்றின் தளத்தைப் பிரித் துணரும் அளவில் புலப்படுவதில்லை. இவை பெரிதும் வேறு பல தளங்களைச் சார்ந்தவை. கவிதையின் முழுக் கட்டு மானத்தில் நின்று உய்த்துக் கொள்ளப் பெற்றமைந்தவை. சங்க இலக்கியத்தைப் பொறுத்த அளவில் பாடலின் கொளு இத்தகைய கூறுகளை ஓரளவு இனங் காண வாய்ப்பாக அமைந்துள்ளது. திணை, துறை, களன், கிளவி முதலிய பாடலின் விளக்கத்திற்கு இன்றியமை யாத கூறுகளை இக் கொளுவினின்று நாம் பெறலாம். பாடலினின்று பெயர்ச் சொற்கள் தொகுத்துக் கொள்ளப் பெற்றதைப் போன்றே இக்கொளுக் களினின்றும் தொகுக்கப் பெற்றிருந்தால் இலக்கியப் பொருள் மரபு பற்றிய பல செய்திகளை நாம் இப்பொருட் களஞ்சியம் வாயிலாகப் பெற்றிருக்கக் கூடும். பாடல்களின் திணை, புறப்பாட லின் துறைகள் அகப்பாடலின் கிளவி கள், களன்கள் கூற்று, கேட்போர் என்றின்ன செய்திகளைப் பெயர்களைத் தொகுத்தல் என்றஅளவையினடியாகவே நாம் சென்றெட்ட இயலும். வினைப் பதங்களைப் பெயர்ப்படுத்தல் என்ற விதியை அமைத்து களன்களையும், கிளவிகளையும் தொகுக்கலாம். இதன் வாயிலாக 'அறத்தொடு நின்ற', 'வாயில் நேர்ந்தது', 'வெறியெடுத்த வழி' என்றின்ன தொடர்களினின்று 'அறத் தொடு நிலை', வாயில் நேர்தல்' 'வெறியெடுத்தல்' என்ற பெயர்களை வருவித்துக் கொள்ள இயலும். வினைப் பெயர்களாக அமையும் இவற்றை இவற்றிற்குரிய இலக்கிய மரபின் முதன்மையைக் கருத்திற்கொண்டு பொருட்களஞ்சியத்தின் உள்ளமைக்க லாம். இப்பொருட் களஞ்சியத்தில்பாடற் பகுதியினின்று கொள்ளப்பெற்ற 'அறத் தொடு நிற்றல்' என்ற தலைப்புச் சொல் பாடலில் அமைந்த 'அறத்தொடு நின் றேன் என்ற தொடரினின்று கொள்ளப் பெற்றதே.

இவ்வாறு கொளுவைப் பொருட் களஞ்சியத்தின் வரையறைக்குள் கொண்டு வருவதால் இலக்கிய மரபின் பாற்பட்ட சொற்களின் விடுபாட்டை ஓரளவு தவிர்த்து விடலாம். மேலும் கொளுவில் அமையும் பெயர்களை மேற்

சுட்டியவாறு தொகுத்துத் தக்கவாறு விளக்கம் வழங்குவதன் வாயிலாக விளக்கமுறும் செய்திகள் இலக்கிய மாணவனுக்குப் பெரும் பயனுடையவை யாக அமையும். காட்டாக, 'அறத்தொடு நிலை' என்ற பதம் அது அமையும் சூழல் பற்றிய கருத்தொடு தொகுக்கப் பெறும் போது விளக்கமுறும் செய்திகள் கீழ் வருமாறு அமையலாம் :

1. அறத்தொடு நிலைக்கு இடனாக அமையும் களன்கள் (வெறி, அலர் நொதுமலர் வரைவு என்றின்ன பிற)

2. அறத்தொடு நிலையில் இடம் பெறும் கூற்று (கூறுநர்), கேட்போர், கேட்ப உரைக்கப்பெறுவோர்.

3. அறத்தொடு நிலையின் பல்வேறு படி நிலைகள்: தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றல், தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல் என.

4. அறத்தொடு நிற்கும் உரை முறைகள்.

5. அறத்தொடு நிலையின் பாற் பட்ட பாடல்கள்.

கொளு பிற்காலத்தது என்ற ஐயப் பாடே கொளுச் செய்திகளை முழுமை யாகப் பொருட்களஞ்சியத்தில் உட் படுத்துவதில் தயக்கம் ஏற்படுத்தி யிருக்கக் கூடும். கொளுவினின்று பெறப்பட்ட செய்திகளைப் பாடற் செய்திகளினின்று வேறுபடுத்திக் காட்ட லாம். அல்லது இவற்றைப் பிற்சேர்க்கை யாக இணைத்துக் கொள்ளலாம்.

பொருட் களஞ்சியத்தில் இடம் பெற்றுள்ள தலைப்புப் பெயர்களையும் அவற்றின் கீழ் வழங்கப்பெற்றுள்ள பொருள் (உரை) விவரணத்தையும் கருவி நூலாகையால் ஒரு பொருள் குறித்த விவரங்களை வாசகன் எளிதில் எட்டுமாறு வழங்க வேண்டிய கட் டாயத்தையும் மனதிற் கொண்டு இப் பொருட் களஞ்சியத்தை அணுகும் போது இவ்வொவ்வொரு படி நிலை யிலும் இப்பொருட் களஞ்சியம் மேலும் செப்பம் பெற வேண்டியுள்ளது என் பதைக் கூறாது அமைய இயலாது.

1. ஒவ்வொரு தலைப்புச் சொல்லின் கீழும் அமையும் பொருள் விவரணம்:

ஏற்கெனவே எடுத்துக் காட்டியது போலப் பெயர்ச் சொற்களின் அடியாக பொருள் தொகுக்கப் படுகிறது. ஒரு பெயர் தலைப்பாக அமையும் போது அப்பெயர் இடம்பெறும் பாடலடியின் பொருட் சூழலைவிரிவாக உள்ளடக்கியே உரை விவரணம் தரப்படுகிறது. இப்பெயர் சங்க இலக்கியத்தில் எத்தனை இடங்களில் பயில்கின்றதோ அத்தனைப் பாடற் பகுதிகளின் உரை விவரணமும் தொகை வாரியாகத் தொகுத்துத் தரப் படுகின்றது.

இங்குச்சில அடிப்படையான வினாக் களை எழுப்புவது பொருந்தும். ஒரு பொருள் பற்றிய விவரணம் பாடலி னின்று கொள்ளப்படும் போது அதன் விவரணம் இவ்வளவு அமையவேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்குரிய வரை யறை என்ன? பல உரை விவரணங்கள் தேவைக்கு அதிகமாகநீண்டு செல்லுவன வாகத் தோன்றுகின்றன. முறையான திட்டமும் சுருக்கமும் அமைந்திருந்தால் இத்தகைய உரை விவரணங்களை

ஒவ்வொரு தலைப்பின கீழும் வகை செய்து வழங்கும் நிலையை எளிதாக வும் தெளிவாகவும் ஆற்றும் வாய்ப்பு அமைந்திருக்கக் கூடும். ஓர் எளிய எடுத்துக்காட்டு வழங்கி இக்கருத்தைத் தெளிவு செய்யலாம்.

ஒரு சொல் (பெயர்) பாடலில் அமையும் பாங்கிற்கு ஏற்ப அதன் உரை விவரணம் அமைய வேண்டும். பாடலின் அடிப்படைப் பொருளோடு அச்சொல் தொடர்புறும் நிலையை விளக்குவதாக உரை விவரணம் அமையலாம். கீழ் வரும் பாடலை எடுத்துக் கொள்ளலாம்.

நல்லவுந் தீயவு மல்ல குவியிணர்ப்
புல்லிலை யெருக்க மாயினு
முடையவை
கடவுள் பேணே மென்னா ஆங்கு
மடவர் மெல்லியர் செல்லினும்
கடவன் பாரி கைவண் மையே
புறம். 108.

இப்பாடலில் அமையும் இணர், இலை, எருக்கம், கடவுள் என்ற நான்கு பெயர்களையும் எடுத்துக் கொள்ளலாம்.

இணர் என்ற சொல் இப்பாடலில் எருக்கிற்கு அடையாக அமைகிறது, எனவே அது பற்றிய உரை விவரணம் எருக்கின் அடை அளவில் நிற்பதே தகுதி, ''இணர்; குவிந்த இணரை யுடையது எருக்கு'' என்றமைவது சாலும்.

இலை என்ற சொல்லும் அடை நிலையில் அமைவதே. எனவே ''இலை புல்லிய இலையையுடையது எருக்கு;' என்ற அளவில் இதன் உரை விவரணம் அமைந்தால் போதும்.

எருக்கு என்ற சொல் பாடலின் அடிப்படைப் பொருளோடு உவமை நிலையில் தொடர்புறுகிறது. இதுபற்றிய விவரணம் இதன் அடைகளை உட் கொண்டதாகவும் அதே வேளையில் அடிப்படைப் பொருளொடு இயைபுறும் உவமைநிலையை விளக்குவதாகவும் அமைய வேண்டும். இது இவ்வாறு அமையலாம்.

எருக்கு குவிந்த இணரையும் புல்லிய இலைகளையு முடையது. நல்லவை தீயவை என்றநிலை களில் வைத்து எண்ணப்படாத எருக்கம் பூவாயினும் ஒரு வனுடையவற்றைக் கடவுள் ஏற்றுக் கொள்ளுவது போல அறிவில்லாதவரும் புல்லிய குண முடையவரும் செல்லினும் பாரி அவர்களுக்குக் கொடுத்தலைக் கடப்பாடாக உடையவன். (உவமை) கடவுள் என்றபெயரும்

பாடலுடன் உவமை நிலையில் இயை கிறது. எனவே இதன் உரை விவரணம் உவமையைச் சுட்டி அமைய வேண்டும்.

கடவுள் எருக்கம் பூவாயினும் ஒரு வனுடையவற்றைக் கடவுள் ஏற்றுக் கொள்ளுவர். அது போன்றே பாரியும் கொடுத் தலைக் கடப்பாடாகவுடையவன் (உவமை). இப்பொருட்களஞ்சி

யத்தில் இந்நான்கு பெயர்களின் கீழும் இப்பாடற்பகுதியின் உரை விவரணம் எவ்வாறு அமைந்து உள்ளது என்பதைக் காணலாம்.

இணர் குவிந்த இணரையும் புல்லிய இலைகளையுடைய எருக்கம் பூ வாயினும் கடவுள் அவற்றை

விரும்பமாட்டேம் என்று கூற மாட்டா (புறம். 1061-3).

இலை குவிந்த பூங்கொத்தினையும் புல்லிய இலைகளையும் உடைய எருக்கம் பூவாயினும் கடவுள் விரும்பேம் எனக் கூறா (புறம் 106: 1–3).

எருக்கு நல்லனவற்றிலும் தீயனவற்றிலும் வைத்தெண்ணப்படாத குவிந்த பூங்கொத்தினையும் புல்லிய இலையினையுமுடைய எருக்கம் - எருக்குச் செடியின் -பூவாயினும் ஒருவன் உடையனவற்றை தெய்வங்கள் விரும்பேம் என்னா (புறம். 106:1-3)

கடவுள் புல்லிலை எருக்கம் பூவாயினும் ஒருவன் அன்புடன் சூடுவதைக் கடவுள் எற்றுக் கொள்வார் (106 : 1-3)

இவ்வாறு அமையும் உரை விவரணத்தில் முதலிரு பெயர்களைப் பற்றிய உரை விவரணமும் மேலும் சுருக்கமாக அமைந்திருக்கலாம். பின்னிரு உரை விவரணங்களிலும் தலைப்புச் சொற்கள் பாடலொடு தொடர்புறும் செவ்வி புலப்படவில்லை. அது புலப்படுமாறு விரிவு பெற்றிருக்க வேண்டும்.

ஒவ்வொரு சொல்லும் அமையும் பொருட் சூழலை மனத்திற் கொண்டு உரை விவரணங்கள் எழுதப்படும் போது தேவையற்ற விவரங்களைவிட்டு விடவும் தேவையானவற்றை இணைத்துக் கொள்ளவும் இயலும். ஒரு பாடலின் பொருள் சூழலை வைத்தே அப்பாடலில் அமையும் சொற்களின் உரை விவரணத்தின் எல்லை வகுக்கப்பட இயலும். முதலைச் சுட்டி அமையும் சினைகளின் உரை விவரணம் முதலுடன் இவை இயைபுறும் நிலையைச் சுட்டும் அளவில் அமைந்து விடலாம். அதே வேளையில் சினை உவமையாகவோ பாடலின் அடிப்படைப் பொருளை விளக்குவதாகவோ அமையும் போது அதன் உரை விவரணம் இத்தொடர்பு நிலையைப் புலப்படுத்துமாறு அமைய வேண்டும்.

2. ஒவ்வொரு தலைப்புச் சொல்லின் கீழும் வழங்கப்பெற்றுள்ள உரை விவரணத் தொகுப்பு வகை செய்யப் பெற்று ஒழுங்கு படுத்தப் பெற்று தக்க உட்தலைப்புக்களைப் பெற்று அமைந்திருத்தல் வேண்டும்:

இப்பொருட்களஞ்சியத்தில் இடம் பெறும் தலைப்புச் சொல் ஒன்றிற்கு மேற்பட்ட பொருளில் பாடல்களில் ஆட்சி பெற்றிருந்தால் இப்பொருள் வேறுபாடுகள் குறிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பொருட்குறிப்பின் கீழும் அவ்வவற்றின் உரை விவரணம் தொகுத்து அளிக்கப்படுகின்றது. சொல்லுக்குரிய பொருள் வேறுபாட்டைக் குறிப்பது போல ஒரு பொருள் வெளியிடப் பெறுவதில் அமையும் வேறுபாடுகள் கருத்தில் கொள்ளப்பெறவில்லை. காட்டாக, கடல் அடையாக அமையலாம் - கடல் சூழ உலகம்; உவமையாகவும் அமையலாம் கடல் போன்ற தானை. ஒரே விதமான வெளியீடுகள் பாடல்களில் பயின்று வரலாம். மேற்சுட்டிய இரு செய்திகளும் கடல் என்ற தலைப்புச் சொல்லின் கீழ் தொகுக்கப் பெற்றுள்ள உரை விவரணத்தில் பயின்றமைகின்றன. பொருட் கூறுகள், வெளியீடுகள், உரையமைதிகள் இவற்றில் வாய்பாடுகளின் செல்வாக்கு மிகுந்துள்ள சங்க இலக்கியம் போன்றதோர் இலக்கியப் பரப்பில்

இவ்வாறு கூறுகள் பயின்றமைவது இயல்பே. சங்க இலக்கியத்தின் இவ் வியல்பால் ஒருபொருள் பற்றிய விவரங்களை வகை செய்யும் வாய்ப்பு மிகுதி. இப்பொருட்களஞ்சியத்தில் உரை விவரணங்களை வழங்குவதில் இத்தகையதோர் வகைமுறை மேற்கொள்ளப்படாமை குறையே. இதன் விளைவாக, ஒரே செய்தி உரை விவரணத்தில் மீண்டும் மீண்டும் தரப்படுகிறது; பல இடங்களில் சிதறி அமைகிறது. காட்டாகக் கடல்போன்ற தானை என்ற குறிப்பு, கடல் என்ற தலைப்புச் சொல்லின் கீழ் சுமார்இருபது இடங்களில் பயிலுகிறது. இவ்வாறு ஒரே கருத்து உரை விவரணத்தில் மீண்டும் மீண்டும் அமைவதை, வகை செய்து வழங்கியிருந்தால் தவிர்த்திருக்க இயலும். இவ்வுவமையினால் குறிக்கப்படும் பரப்பு, முழக்கம், ஒளிர்தல், தடுத்து நிறுத்துதற்கருமை என்ற பொதுமைக்களனைப் புலப்படுத்தும் குறிப்புடன் உரை விவரணத்தை ஓரிடத்து வழங்கிப் பாடற்குறிப்புக்கள் அனைத்தையும் இணைத்திருந்தால் போதும். மேலும் வகை செய்து உட்தலைப்புத் தந்து வழங்குவதால் பொருட்களஞ்சியத்தினின்று எளிதாகச் செய்திகளைப் பெறும் வாய்ப்பும் அமையும். காட்டாக ஒருவர் பண்டை மணச்சடங்கில் எவ்வெவ் இலைகள் இடம் பெற்றன என்பதை அறிய விழைகிறார் என்று வைத்துக் கொள்ளுவோம். அவர் இப்பொருட் களஞ்சியத்தில் இலை என்ற தலைப்புச் சொல்லின் கீழ் அமையும் உரை விவரணத்தைப் பார்ப்பதாகக் கொள்ளுவோம். இத்தலைப்பின் கீழ் தரப்பெற்றுள்ள உரை விவரணம் நான்கு பக்கத்திற்கு மேல் நீண்டு செல்லுகின்றது. இந்நீண்ட விவரணத்தை முழுமையாக வாசித்தே இக்குறிப்பைப் பெற இயலும். இது போன்றதோர் கருவி நூலில் செய்திகள் வாசகனால் எளிதில் பெறத்தக்கனவாக அமைவது விரும்பத்தக்கது. செய்தி வகை செய்யப்பெற்று உட்தலைப்புக்களின் கீழ் தரப்பெற்றாலன்றி இவ் வெளிமை விளைவது அருமையே.

மேலும் இத்தகையதோர் பொருட்களஞ்சியத்தைத் தொகுத்துப் பதிப்பிக்கும்போது சங்க இலக்கியத்தின் காலப் பழமையும் பொதுவாக மொழியின் இயல்பும் குறிப்பாகக் கவிதை மொழியின் தன்மையும் கருத்தில் கொள்ளப்படவேண்டும். மொழி, பல் பொருள் ஒருசொல், ஒருபொருள் பல சொல் உருவகம், ஆகுபெயர், குழூஉக் குறி என்றின்ன பொருள் மயக்கத்திற்கு இடனான சொல் தொகுதிகளைத் தன்னுள் கொண்டது. சொல்லிற்கும் பொருளிற்கும் இடையமையும் தொடர்பு இத்தகைய சொற்களின் ஆட்சியால் நேரடியாகவும் எளிமையாகவும் இன்றி, குறிப்பு நிலையுடையதாகவும், சிக்கல் வாய்ந்ததாகவும் அமைகிறது. கவிதையில் இத்தகைய குறிப்பும் மயக்கமும் மிகுதி. மொழியின் இத்தன்மைகளோடு சங்க இலக்கியத்தின் காலப்பழமையையும் கருத்தில் கொள்ளும் போது இது போன்ற கருவி நூலில் தலைப்புச் சொல்லை அமைக்கும் போது கவனிக்க வேண்டிய ஓரிரு அடிப்படையானசெய்திகளை வலியுறுத்த வேண்டும்.

1. பரியாய பதங்கள் தக்க சுட்டுக் குறிப்புடன் (Cross reference வாசகன் எளிதாகக் கண்டு பிடிக்கும் முறையில் தாம் பெற வேண்டும்.

சங்க இலக்கியத்தில் சிறப்புப் பெயர் களின் ஆட்சியில் மட்டுமன்றி, எல்லாப் பெயர்த் தொகுதிகளிலும் இவற்றின் ஆட்சி மிகுதி. (கடல், பௌவம், முந்நீர்; அரும்பு, நனை, பிணி, போது, முகை.) பொருளடியாக அமைந்த இதுபோன்ற தோர் பொருட்களஞ்சியத்தில் (ஒரு பொருள்குறித்த) சொற்களைப் பொரு ளுக்கு நேராகஒருமுகப்படுத்தவேண்டும். பரியாய பதங்களைத் தக்க சுட்டுக் குறிப்புடன் வழங்கினாலன்றி இதை ஆற்ற இயலாது. பரியாய பதங்கள் பயிலுகின்றன. இந்திரனைக் குறிக்க இந்திரன் என்ற பதத்துடன் அமரர் செல்வன், ஆயிரங் கண்ணினான் ஐயிருநூற்று மெய்ந்நயனத்தவன, திருக்கிளர் செல்வன், புரந்தரன், வச்சிரத்தடக்கை நெடியோன், வச்சிரத் தான் என்ற எட்டு பதங்கள் ஆளப் பெறுகின்றன· சிவனைக் குறிக்க முப்பத்திரண்டு பதங்களும் திருமாலைக் குறிக்க முப்பத்தைந்து பதங்களும், முருகனைக் குறிக்க முப்பது பதங்களும் சங்க இலக்கியத்தில் இடம்பெறுகின்றன. (சிறப்புப் பெயர் அகராதி சங்க இலக்கியம் (பதிப்பு) எஸ். வையாபுரிப் பிள்ளை) இன்று வழக்கிலிருக்கும் பதங் கள் சங்க இலக்கியத்தில் இடம் பெறா தும் அமையலாம். காட்டாக, சிவன் என்ற பதம் சங்க இலக்கியத்தில் ஆட்சி பெறவில்லை. அகரவரிசையில் தலைப்புச் சொற்களை வழங்கும் இப் பொருட்களஞ்சியத்தில் இந்நிலையைக் கருத்திற்கொண்டு ஆங்காங்கு அமையும் பரியாய பதங்களை ஒரு பதத்தின் கீழ் அகர வரிசைப்படுத்தி வழங்குவதுடன ஒவ்வொரு பதத்தின் கீழும் இந்த பதத்தைப் 'பார்க்க' என்று குறிப்பு வழங்கியிருத்தல் வேண்டும். காட்டாக இந்திரனைக் குறிக்கும் பரியாய பதங் களை இந்திரன் எனப் பொதுவாக யாவரும் அறிந்த பதத்தின் கீழ் அகர வரிசைப்படுத்தி வழங்கி விட்டு, உரை விவரணமும் பாடற்குறிப்பும் பெற்று அகர வரிசையில் ஆங்காங்கு அமையும் இதன் பரியாய பதங்கள் ஒவ்வொன்றின் கீழும் 'பார்க்க:இந்திரன்' என்ற குறிப்பு வழங்குவது இன்றியமையாதது. இவ் வாறமைந்தாலன்றி இந்திரன் பற்றிச் சங்க இலக்கியத்துள் இடம் பெறும் குறிப்புகளை ஒருவர் முழுமையாகப் பெற இயலாது.

பரியாய பதங்களை இப்பொருட் களஞ்சியம் எவ்வாறு கையாண்டுள்ளது? பதிப்பாசிரியர், தமது முன்னுரையில் (நெறிமுறை -8) பரியாய பதங் களின் கீழ் பிற பரியாய பதங்களைக் காண்க எனக் குறிப்பு வழங்கப் பட்டி ருக்கும் எனவும் பின்னிணைப்பில் பரியாய பதங்களும் அவை வரும் பக்கங் களும் குறிக்கப்பெறும் எனவும் இரு நிலைகளைச் சுட்டுகிறார். பரியாய பதங்களின் கீழ் சுட்டுக் குறிப்பு வழங் கும் நிலை இப்பொருட் களஞ்சியத்தில் சரிவரப் பின்பற்றப்படவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டும். காட் டாக, இந்திரன் என்ற தலைபபுப் பெயரின் கீழ் அதன் பரியாய பதங்க ளான அமரர் செல்வன், ஆயிரங் கண்ணினான், ஐயிருநூற்று மெய்ந் நயனத்தவன் என்றின்ன பதங்கள் குறிக்கப்பெறவில்லை. எனவே இப பொருட்களஞ்சியம்வாயிலாக இந்திரன் பற்றிய சங்க இலக்கியக் குறிப்பைத் தொகுக்க விழையும் ஒருவர் இந்திரன் என்ற பதம் ஆட்சி பெறும் மூன்று பரிபாடற் குறிப்புக்களையன்றிப் பிற குறிப்புகளைப் பெறுதல் அருமை. அமரர் செல்வன், ஆயிரங்கண்ணினான்

ஐயிருநூற்று மெய்ந்நயனத்தவன் என்ற பரியாய பதங்கள் ஒவ்வொன்றும் அகர வரிசைப்படி அமையுமிடத்து ஒவ்வொன்றின் கீழும் இச்சொற்கள் இடம் பெறும் பாடற் பகுதியின் உரை விவரணமும் பாடற் குறிப்பும் தொகுத்து வழங்கப் பெற்றுள்ளன. தொகுப்பு செவ்வியின் அமைந்தும் தக்கவாறு சுட்டுக் குறிப்பு வழங்கப் பெறாமையால் இவை வாசகனால் பெறுவதற்கு அரியதாய்ப் புதைந்து கிடக்கின்றன.

பேரா. எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களது சங்க இலக்கியப் பதிப்பில் இணைக்கப்பெற்றுள்ள சிறப்புப் பெயர் அகர வரிசையில் பரியாய பதங்களை அவற்றில் ஏதேனும் ஒரு பதத்தின் கீழ் அகர வரிசைப்படுத்தி வழங்கும் முறை பின்பற்றப்பட்டுள்ளது. டாக்டர் உ.வே.சா. அவர்களது புறநானூற்றுப் பதிப்பில் வழங்கப்பெற்றுள்ள அரும் பொருள் முதலியவற்றின் அகராதி வாசகனது தேவையை நன்கு மனங் கொண்டமைந்துள்ளது. புறநானூற்றுப் பாடற் பகுதியில் இந்திரன் என்ற பெயர் இடம் பெறவில்லை. புறம் 241-ஆம் பாடலில் இந்திரன், 'வச்சிரத் தடக்கை நெடியோன்' என்ற பதத்தால் குறிக்கப்பெறுகிறான். புறநானூற்று அரும்பொருள் அகரவரிசையில் இப் பதத்துடன் இப் பாடலின் உரையில் இடம் பெறும் இந்திரன் என்ற பதமும் இடம் பெறுவதால் இந்திரன்பற்றிய குறிப்பை ஒருவர் எளிதில் பெறும் வாய்ப்பமைகிறது. ஒரு பொருள் பற்றி அமையும் சங்க இலக்கியப் பதங்கள் இன்றுப் பயிலாதனவாக அமையும் போது வழக்கிலுள்ள பதங்களையும் இணைத்துப் பரியாய பதங்களைத் தொகுப்பது (பின்னிணைப்பு) பயன் உடையதாக அமையும். சங்க இலக்கியத்தில்பயிலாத சொற்களை ஏதேனும் குறியீடிட்டு வேறுபடுத்திக் காட்டலாம்.

நூலின் முன்னுரை முழுமை பெற வில்லை ; பல தொகுதிகளைப் பெற்ற மையும் இதுபோன்றதோர் கருவி நூலுக்கு விரிவான முன்னுரை ஒன்று இன்றியமையாதது. பொருட் களஞ்சியத் தொகுப்பில் மேற்கொள்ளப் பெற்ற நெறிமுறைகளைச் சுட்டி அமைந்து விடும் இந்நூலின் சுருங்கிய முன்னுரை ஏற்புடைய பல செய்திகளை எடுத் துரைக்கவில்லை. ஒரு நூலின் உருவாக்க முயற்சியில் ஏற்படும் சிக்கல்கள் பல ; ஏற்படும் தெளிவுகளும் பல. இவை பற்றிய அறிவு ஆய்வாளர்களுக்குப்பயன் உடையது. எனவே ஆய்வுப் பணியிலும் ஆய்வு அனுபவத்திலும் விளையும் கருத்துக்கள் தகுதியாகப் பரிமாறப் பட வேண்டியது ஆய்வின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. புதிய ஆய்வு முறை கள் தழைக்கவும் நிலவும் முறைகளைச் சீர்ப்படுத்தவும் இததகைய கருத்துப் பரிமாறல் துணை செய்யும்.

இந்நூலின் முதலிரு தொகுதிகளும் மிகச் சுருங்கிய கால அளவில் செய்து முடிக்கப்பெற்றன. எடுத்துக் கொண்ட நெறி முறையில் நின்று செய்திகளைத் தொகுத்து வழங்கிய அரிய முயற்சியைச் செய்த பதிப்பாசிரியர்நமதுபாராட்டிற்கு உரியவர். எடுத்துக் காட்டப்பெற்ற குறைகள் இப் பொருட்களஞ்சியத்தின் நிறைவிற்கு துணை நிற்பவை. மேலும் வர இருக்கும் தொகுதிகளில் நிறை வேற்றப்படலாம். பின்னிணைப்பால்

நிறைவு செய்யப்படலாம். சங்க இலக்கியத்திற்குப் பொருளடிப்படையில் அமைந்த கருவி நூல் வரிசையில் முதலாவதாக அமைந்த இப் பொருட் களஞ்சியம், தொன்மை சால் இலக்கியத் தின் பொருளாய்விற்கு அடிக்கல் நாட்டி யுள்ளது. பொருளாய்வு என்ற பிர மாண்டமான கட்டடம் இன்னும் பல இதுபோன்ற கருவி நூல்களால் நிறைவு செய்யப்பட வேண்டும்.

இலா. குளோறியா சுந்தரமதி.

—X—

பல்கலைக் கழகத்தின் இதழ் வெளியீடுகள்

Tamil Civilization என்ற ஆங்கிலக் காலாண்டு ஆய்விதழ், திங்கள்தோறும் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவரும் செய்திமலர். News Bulletin போன்றவைகள் பல்கலைக் கழகத்தின் பிற வெளியீடுகள் ஆகும்.

உறுப்பினர் கட்டண விவரம்

தமிழ்க்கலை / Tamil Civilization	இந்தியா மற்றும் இலங்கை	வெளிநாடு	**செய்திமலர்** / News Bulletin	இந்தியா மற்றும் இலங்கை	வெளிநாடு
தனியிதழ்	உரு.15/-	$ 3			
2 இணைப்பிதழ்	உரு.30/-	$ 6	ஓராண்டு	உரு. 5/	$ 4
ஓராண்டு	உரு.60/-	$ 15	ஈராண்டு	உரு.10/-	$ 8
ஐந்தாண்டு	உரு.240/-	$ 60	மூவாண்டு	உரு.12/	$ 10

மேற்குறிக்கப்பட்ட இதழ்களைப் பெற விரும்புவோர் உறுப்பினர் கட்டணத் தொகையினை அனுப்பி வைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்க்கலை Tamil Civilization முதலாண்டு 4 இதழ்கள் தனித்தனியே தொகுக்கப்பட்டுள்ளன. ஒரு தொகுப்பின் விலை உருவா 70/-

---

கட்டணக் காலம் முடிந்ததும் அன்புகூர்ந்து புதுப்பித்துக் கொள்க.

பணவிடை, காசோலை

அனுப்ப முகவரி:

இயக்குநர்
பதிப்புத்துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் — 613 001.

பதிவு எண்: 5751 | 83 × -1

809

களஞ்சிய வெளியீடுகள்

1. வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி — 1	உரு	300/—
,, — 2	,,	300/—
,, — 3	,,	300/—
,, — 4	,,	300/—

2. அறிவியற் களஞ்சியம்

தொகுதி — 1	உரு	300/—

3. சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம்

தொகுதி — 1	உரு	250/—
,, — 2	,,	250/—

பாரதி பாடல்கள் 'ஆய்வுப் பதிப்பு'

பாரதி பாடல்கள் அனைத்தும் நிறைந்த முழுமை நூல். பாரதி எழுதிய கால அடுக்கில் பாடல்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்புரைகள், பாட வேறுபாடு, உரிய தலைப்புகள், பொருள் அகர நிரல், பல்வகைக் குறிப்புப் பின்னிணைப்புகள் கொண்ட நிறைவு நூல்.

பாரதியார் வாழ்வியல் நோக்கு, கவிதைப் போக்கு, பாட்டுத்திறன் முதலியவற்றை ஆய்வதற்கு ஏற்ற அமைப்புடைய புதிய பதிப்பு.

பக். 1300; அளவு: திம்மி 1/8; விலை உரு. 150/—

தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

1. அகத்தியர் குழம்பு
   — சே. பிரேமா
   — ப. வே. நாகராசன் 28/—
2. கடல் வாழ் ஆமைகளின் வியத்தகு வாழ்க்கை
   — அப்துல் ரகுமான் 11/—
3. பெரிய புராணச் சிறப்புப் பெயர் அகராதி—ஊர்ப்பெயர்கள்
   — தா. வே. வீராசாமி 53/—
4. இந்துத் திருமணச் சட்டம்
   — புலமை. வேங்கடாசலம் 34/—
5. பொது அறுவை மருத்துவம்
   — சு. நரேந்திரன் 105/—
6. தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு
   — கே. எம். வேங்கடராமையா 145/—
7. தமிழ் ஆட்சிமொழி ஒரு வரலாற்று நோக்கு
   — துரை. சுந்தரேசன் 67/—
8. தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள்
   — புலவர் செ. இராசு 84/—
9. தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் — தொகுதி — 1
   — ஆங்கிலம்; எட்கர் தர்ஸ்டன்
   தமிழில்; க. இரத்னம் 105/—
10. சூரிய ஆற்றலும் பயன்களும்
    — மெ. மெய்யப்பன் 15/—
11. பெரியபுராணம் - ஓர் ஆய்வு
    — அ. ச. ஞானசம்பந்தன் 73/—

தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்காகப் பதிப்புத்துறை இயக்குநர் அவர்களைப் பதிப்பாசிரியராகக்கொண்டு தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.